# சித்த வைத்திய சிகிச்சைக் கிரமம்

என்னும்

# தமிழ் வைத்திய நூல்




ஆக்கம்:

டாக்டர் V. முத்தையா ஜோன்

ஆசிரியர்

# சித்த வைத்திய சிகிச்சைக் கிரமம்

[ஓர் குறிப்பு வழிகாட்டி]

டாக்டர் கே. எஸ். கார்த்திகேசு
தலைமையில்

வடமராட்சி தமிழ் வைத்திய சங்கத்தால்
அங்கீகரிக்கப்பட்டது

ஆக்கம்:
டாக்டர் V. முத்தையா ஜோன்
*இளைப்பாறிய ஆசிரியர்*
*கற்கோவளம்—பருத்தித்துறை.*

1-10-72

முதற் பதிப்பு 1—10—72

உரிமைப் பதிப்பு

விலை

அச்சுப்பதிப்பு:
கலாபவன அச்சகம்—பருத்தித்துறை.

அமலனருள்

# காப்பு

ஆதி உரை ஆவிபரன் ஆனசரு வேசுபரன்
ஞான குரு தேசிகனும் நம்கிறீஸ்த்தின்—பாதமலர்
அர்ச்சித்துச் சித்தாடி பணிந்தேன் அருளீசா
இச்சிக்க ரட்சிப்பா யிங்கு.

*　　*　　*

பாருலகிற் பாவிகளைப் பாழடிக்கும் ரோகவகை
காலடியில் வந்து கழிவதற்கு—நேரடியாய்
ஆன சிகிச்சை அதிகிரம மாயெழுத
ஆர்வமருள் வாயென் னகத்து

*　　*　　*

## வேறு

படிமிசை மாந்தர்ரோகம் பார்த்தினி தறிந்து நன்று
வடிவுறு சிகிச்சைதன்னைக் கிரமமாயாய்ந்து கண்டு
மிடிதரு கருவில்ரோகம் மிகக்கொடுரோகம் மேகம்
குடிகொழு வாதசேடக் குறைதீர்க்க அருளுவீரே.

# முகவுரை

"குணம் நாடிக் குற்றமுந்நாடி அவற்றுள்
மிகைநாடி மிகக் கொளல்." —குறள்

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு." —குறள்

இந் நூலானது பொதுமக்களுக்கும் வைத்தியர்களுக்கும் வைத்தியங் கற்போர்களுக்கும் பெரிதும் பயன்படுமாறு என் அறிவுக் கெட்டியவரையில் எளிதில் விளங்கத்தக்க அரிய செந்தமிழ் நடையில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. இதிற் பலருமறியாதவையும் அவசியம் அறிய வேண்டியவையுமான பல விஷயங்களையும், எனது ஜீவிய கால ஆராய்ச்சி அனுபவங்களிற் கண்ட அரிய சிகிச்சை முறைகளையும் சுலபமான முறையில் எழுதியிருக்கிறேன். இதில் எழுதிய ஒவ்வொரு விஷயத்தையும் அனுபவத்திற் கண்டவர்களுக்கு இப்புத்தகத்தின் பயன் நன்கு விளங்கும்.

நம் நாட்டிற் சித்த வைத்தியம் நாளுக்கு நாள் குறைவடைந்து வந்தபோதிலும், கிராமப்புறங்களிலாவது நன்கு விருத்தியடைந்து வருவதை நாமில்லை என்று மறுத்துவிடமுடியாது. நகரமக்களுக்கோ பற்பல வைத்தியமுறைகளிலுள்ள வைத்திய வசதிகள் கிடைக்கின்றன. ஆனால் நாட்டுப்புறங்களிலோ என்றால் வேறுவைத்திய முறைகளைக் கையாளுபவர்கள் குறைவாயுள்ள காரணத்தால் அனேகர் சித்தவைத்திய முறைகளைக் கற்று ஆங்காங்கு செயலாற்றுகின்றனர்.

ஆனால் அவர்களெல்லோரும் ஒரேவிதமாய் ஒழுங்கான சிகிச்சை ரக்ஷை செய்வதைக் காண முடிகிறதில்லை ஏனெனில் மற்ற 'அல்லோபதி', 'ஹோமியோபதி' வைத்திய முறைகளில் சிகிச்சை கிரமமென்றொன்றிருப்பதும் சித்த



வைத்தியரிடையே சிகிச்சைக் கிரமமென்றொன்றில்லாமையுமே முக்கிய காரணமென்று கொள்ளலாம். நமக்குமோர் சிகிச்சைக் கிரமமிருக்க வேண்டுமென்பதின், அவசியத்தை நம் தமிழ் வைத்திய சங்கங்களில் பலதடவைகளில் முறையிட்டுச் சொல்லிவந்தும், அதற்காகிய ஒழுங்குகளைச் செய்துகொள்ள எவரும் முன்வந்திலர்.

இப்படியே நாளாவட்டத்தில் தாமறிந்து அநுபவித்துவந்த அபூர்வமானவற்றை, மற்றவர்களுக்கும் வெளிப்படுத்தாது மறைத்துவைத்துத் தாமும் மறைந்து விடுமியல்பினரான தம்முன்னோரைப் பின்பற்றி இதையிட்ட நடவடிக்கை எதுவும் எடாமல் விடுபட்டிருக்கலாமென நம்பப்பட்டமையாலும், இப்படியே பல அரிய அபூர்வமான வைத்தியச் சுவடிகள், மறைந்தும் திரிந்தும் அழிந்தும் போயின என்ற காரணத்தினாலும், வைத்திய சாஸ்திரம் வழக்கத்திலுள்ள, தொன்றே அது பல்லோருக்கும் பயன் தரக் கூடியது, பயன் தரவேண்டியது என்ற காரணத்தினாலும், அடியேனாவது அதை என் அனுபவமறிவு ஆற்றலுக்குத் தக்கவாறு சுருதி யுக்தி அனுபவத்திற்கிசைவாகச் செய்து நிறைவேற்ற வேண்டுமென விரும்பி இந்நூலை எழுத முனவந்தேன்.

இதை எழுதும்போது, ஒரு விஷயம் என்ஞாபகத்திற்கு வந்தது அஃதாவது சித்தர்கள் ஆராய்ச்சி முறைகளில் சிறந்த நிபுணர்களாயிருந்தனரென்பது; இயற்கைத் தத்துவங்களைப் பற்றி அவர்கள் எழுதுஞ் சமயங்களில் அவர்களுக்குள்ள (Science) விஞ்ஞான அறிவின் ஆராய்ச்சியும், மூலிகை, நோய், நிதானம், மருந்து, செய்முறை இவற்றை நுணுகி நோக்குமிடத்து அவர்களின் விஞ்ஞான ஆராய்ச்சியின் முதிர்ச்சியும் தெளிவாக விளங்குகின்றன. ஆகவே, அசைக்கமுடியாத நம் சித்த விஞ்ஞானிகளின் சாஸ்திரங்களின் தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டும்

டாக்டர். சந்திரசேகர், கும்பகோணம் வைத்திய வித்துவான் கண்ணுச்சாமிப்பிள்ளை, வைத்திய பூபதி கிருஸ்ணராவ், வைத்திய மேதை டாக்டர். ஹரி, டாக்டர். மே. மாசிலாமணி ஆகியோரின் கொள்கைகளை அனுசரித்தும் கல்வி, வைத்தியன், அமுது முதலாம் பத்திரிகைகளின் உதவியைக் கொண்டும் மற்றும்பல வைத்தியமேதைகளின் கட்டுரை, கவிதைகளின் உதவியைக் கொண்டும்; கலாநிதி டாக்டர் ஏ. வீ. ஜீவநாயகம் எம். பீ. பீ எஸ் அவர்களின் மேற்பார்வையில் சிற்சில அறிவுரைகளின் உதவியைக் கொண்டும்; டாக்டர் கே. எஸ். கார்த்திகேசு அவர்களின் தர்க்கரீதியான - விஞ்ஞானரீதியான அறிவுரைகளைக் கொண்டும், என் ஐம்பது வருட அனுபவத்தைப் பின்னணியாகக் கொண்டும் அடியேன் இந்நூலை எழுதியுள்ளேன்.

இதிலுள்ள குற்றங் குறைகளை எழுதி எனக்குநேரில் அறிவிப்பின் எனக்கேயன்றி என்போன்ற பலர்க்கும் மிக்க நன்மை பயக்கும் என்று தங்கள்பால் விநயத்துடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

"அரியகற்று ஆசற்ருர் கண்ணும் தெரியும்கால்
இன்மை அரிதே வெளிறு."
—குறள்

டாக்டர் V. முத்தையா யோன்
ஆசிரியர்

# பதிகம்

சித்த வைத்திய தேசிகன்
## வ. ஜோன் முத்தையா

ஆக்கம்:
**கற்கை சரவணஞர் (*J. V.* சரவணமுத்து)**

கார்கொண்ட கண்டத் தரன்பணி கொண்டு கலைகளெண்ணெண்
பேர்கொண் டிலங்க வைத்தான் தமிழ்நந்தபே ராழியுண்டோன்
சீர்கொண்ட சித்தர்கள் ஈரெண் பதின்மர்கள் சிந்தைகொண்டு
பார்கொண் டிடவளித் தார்கள் வைத்திய பாசுரமே.

சித்தர்க ளோதிச் சிறந்துள சித்த வைத்தியத்தில்
மெத்திய சேவை பரம்பரை யாக மிளிரவைத்த
உத்தமர் தம்வழி உற்றமுத்தைய உயர் வைத்தியன்
புத்தகமா யளித் தான்சிகிச் சைக்கிர மம்புவிக்கே.

ஆன்ற அறிஞர் அருங்கவி வாணர்கள் ஆட்சிநெறி
சான்றசிங் காரியர் தம்வழிச் சார்ந்தநற் சால்பினர்கள்
தோன்ற வுயர்வுறு கற்கோ வளமெனுந் தொல்பதியோர்
ஈன்றபெருந் தகையாளன் தலைமை உபாத்தியனே.

தேகத் திறமவை செய்தொழில் அவ்வழிச் செய்திலதேல்
ஆகப் பெறும்பிணி அப்பிணி நீக்கும் அருநெறிகள்
யூகத்தொடு பிணி ஊற்றிவை யாவும் துணிந்துணர
பாகப்பட வுரைத்தான் தமிழ்மக்கள் பயன்பெறவே.

வாடும் பயிருக்கு மாமழை போலவும் வாட்டுமிடி
நீடுங்கதியற்கு நீணிதி போலவும் நின்றிலங்கக்
கூடும்பிணியர்க் குடற்சுகங் கூட்டிடுங் கொள்கைகளைத்
தேடும்படி தெரித்தான் சித்தவைத்திய தேசிகனே.

# அணிந்துரை

பண்டைக் காலந் தொட்டுப் பண்பாடு, கலை, சாஸ்திரம் என்பவற்றால் பிரசித்தி பெற்று விளங்குவது பாரதநாடு; மேனாட்டு விஞ்ஞான மேதைகளும், கலாரசிகர்களும், தத்துவ சாஸ்திரிகளும், சமய விற்பன்னர்களும் அவற்றை இன்றும் பலபடப் பாராட்டிக் கொண்டே இருக்கிறார்கள். அவற்றுள் வைத்தியசாஸ்திரம் பாரத நாட்டின் பழங் கருவூலம்; இன்று, நேற்றுப் பெற்ற புதுச்சரக்கன்று அது; சதுர்யுகங்களுள், முதல்யுகத்தில் நிகழ்ந்ததாகக் கருதப்படுஞ் சரித்திரங்களிலும் வைத்தியசாஸ்திரத்தின் மகிமை ஆண்டாண்டுக் காணப்படாமல் இல்லை;

பாரதநாட்டு வைத்திய சாஸ்திரம் சித்தர்களாலும், முனிவர்களாலும் உலகுக்கு அருளப் பெற்றவை; இறைவன் அருளால் உண்மையறியப் பட்டவை; சித்தத்தை ஒருமுகப்படுத்தி ஞானத்தைப் பெற்று உதவப் பெற்றவை; மலைகுகைகளும், காடுகளும் தனியிடங்களுமே அவர்களின் ஆராய்ச்சி நிலையங்கள்; அனுபவரீதியாலும் சரிபார்க்கப் பட்டவை; காலம் பல கடந்தும் கைவிடப்படாதவை; இன்றைய மேனாட்டு விஞ்ஞானிகளாலும் அறிய முடியாத பல அரிய இரகசியங்களைப் பொதிந்துள்ளவை.

நாகரிகம் அல்லாதவற்றை நாகரிகம் என்று கொண்டாடித் தடுமாறுவது இன்றைய உலகம்; கானல் என்னும் பேய்த்தேரைத் தண்ணீர் என்று விபரீதமாக எண்ணிக் குடிப்பதற்கு ஓடும் மான் போல, ஓடுகின்றது இன்றைய உலகு; அதனால், வைத்திய சாஸ்திரத்திற் சிறந்த சித்த வைத்திய முறைகளும் கவனிப்பாரற்றுக் கை விடப்பட்டு வருவனவேயன்றி, இகழப்பட்டு வருதலும் கவலைக்கும் வெட்கத்துக்கும் இடமானதொன்றே.



மூலிகைகளுட் பல குறைவடைந்து வருகின்றன. சில மூலிகைகளின் பெயர்களையேயன்றி அவற்றை நன்கறிந்து கொண்டவர்களும் இன்று அருகி வருகின்றனர். போலி சக்களத்திப் பூண்டுகளைக் கையாளுவதும சித்தவைத்தியம் மங்கிப்போவதற்கு ஒரு காரணமாகும். பாஷாணங்களைப் பதஞ் செய்தல் நன்கறியப் படாமையாலும் சித்தவைத்தியப் பெயருக்கு இழுக்கு உண்டாகிறது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட (Ready made) மருந்துகள் இன்மையாலும, சித்தவைத்தியம் தேய்வு பெறுகின்றது: பழமையை இகழ்ந்து, புதுமையைப் புகழ்ந்து கொண்டாடுவோரும் சித்த வைத்தியச் சிறப்பைச் சிதைப்பதற்கு உதவுவோர் எனச் செப்புதலும் மிகையாகாது.

சித்த வைத்தியம் அழியாமற் பாதுகாப்பதே பெரிய தர்மம் ஆகும்; பண்டையோர் பலகாலமாய்த் தம் வாழ்நாளையே அர்ப்பணித்து ஆராய்ந்து, எமக்கென்று தேடி வைத்துள்ள உண்மைகளைப் பாராமுகமாய் அழிய விட்டால், நாம் முதுசொத்தை அறிவின்மையால் அழித்துக் கொண்ட மூடர்கள் ஆவோம் அன்றோ? இவற்றை உயிர்ப்பிகக பல அறிஞர்களும் இன்றைய அரசாங்கமும் முன் வந்திருப்பது வரவேற்கத்தக்கதும் பாராட்டப்படத் தக்கதும் ஆகும்;

சிங்கைநகர் எனப் பண்டைக்காலத்திற் சிறந்து விளங்கியது. இன்று கற்கைநகர் எனப் போற்றப் படும் கற்கோவளமும் அதனை அடுத்துள்ள பாகங்களுமே என ஆராய்ச்சியாளர்கள் இன்றுகருதுகின்னர். அதற்கான ஆதாரங்களையும் அவ்வாராய்ச்சியாளர்கள் சிங்கைநகரைத் தலைநகராகக் கொண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வைத்தியம், சோதிடம் என்னும் கலைகளை வளர்த்து வந்தமை யாவராலும் அறியப்பட்ட உண்மையே.

அந்நகர் வாசரும், தலைமையாசிரியராக ஈழத் திருநாட்டிற் பலவிடங்களில் கலைப்போதனையாகிய அரிய சேவையைச் செய்தவரும் மேனாட்டு வைத்திய முறையில் கல்விகற்று வல்ல வைத்தியநிபுணர் பலரும் கைவிட்ட பல பிணியாளர்களின், பிணிகளை உள்ளவாறறிந்து குணப்படுத்திச் சிறந்த தொண்டைச்செய்தவரும், வைத்திய நூல்களிலேயே தம் காலம் எல்லாம் போக்கி, அவற்றில் ஊறிக்கிடந்து, கனிந்து தாடனம் செய்து அவற்றை ஆராய்தலையே பொழுது போக்காகக் கொண்டவரும், முகமலர்ச்சியாலும், உவகை நகைப்பாலும் கள்ளங் கபடமில்லாத உள்ளத்தை என்றும் காட்டி எம்மிடையே உலாவுபவரும் வைத்திய பூஷணம் எனத் தகுதி வாய்ந்தவரும் ஆகிய பெரியார், திரு ஜோன் முத்தையா ஆசிரியர் அவர்கள், சித்த வைத்தியம் எனும் சிறந்த பொக்கிஷத்தை அழியவிடாது பேணுதற்கு 'சித்த வைத்திய சிகிச்சைக் கிரமம்" எனப் பெயரிய இந்நூலை இன்று வெளியிடுகின்றார். வைத்தியர்களிடத்து மாத்திரமேயன்றி, ஒவ்வொருவர் வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டிய நூல் இது; இவரது இத் தொண்டைப் பாராட்டுவதோடமையாது, இன்னும் பல அரிய நூல்களை வெளியிட்டு உலகிற்கு அளிக்க, பல்வகையாலும் உதவுதல் தமிழுலகிற்கும், அரசாங்கத்திற்கும் உரிய பெருங்கடப்பாடாகும்.

**வாழ்க ஆசிரியர்!** **வாழ்க சித்த வைத்தியம்!!**

**வாழ்க தமிழ் மொழி!!!**

தும்பளை
28-9-72

வித்துவான் பண்டிதர்
க. கிருஷ்ணபிள்ளை

# பாயிரம்

## டாக்டர் கே. எஸ். கார்த்திகேசு

L.M.S.&M.D. A.Y.U.R.L.R.C.P. (Cal.)
Regd Medical Practtioner.
F.F.B.A. London Astrologer
Student Ajlawetc Etc

பண்டை நாட்டொடங்கி ஜீவர்கள் தமக்குறும் பல வகைப்பட்ட பிணிகளால் நலிவுறாது திடகாத்திரமுடையோராய் வாழுதற்கு மகரிஷிகளும், சித்தர்களும் இணையற்ற அருளும் புகழும் பெருமையும் பெற்று உலகமெங்கணும் உள்ள நலியுங், கிலியுங் நீங்க விளங்குவது சித்த ஆயுள் வேதமென்னும் அரியசித்தாந்தமே. அவர்கள் தேககூறுபாட்டையும் நோய்களின் பாகுபாட்டையும் மாறுபாட்டையும் அனுபவ சித்தமாயறிந்து உலகுக்கு அளித்துள்ளார். இத்துணைப் பெருமைவாய்ந்த ஆயுள்வேத இரகசியங்களைத் தேகதேச பராயகால பேதங்களுக்கிணங்க தக்கோரும் மற்றோருங் கற்றோரும் பயின்றோரும் நெறிமுறையாக உணர்ந்து இவ்வரும் பெருநூலை எழுதிற் கையாளுமாறு இவ்வாக்கியோன் இனிது முடித்துள்ளார்.

பெரும்பாலானோர் தற்போது நம் தொன்மையைப் பாராட்டிச் சீராட்டாது போலி ஆங்கில மோகத்துக்குட்பட்டு பிறநாட்டுமுறைகளை கையாண்டுவருவது வருந்தத்தக்கதே. ஏனையோர் சிலர், எதையுமே உணரமுடியாது ஆன்றோர் நூல்களை அறியாது அனுபவமென்பதை அடையாது, கற்றறிந்தோர் பாற்கணமேனுந் தரியாது தவறெதென்று செயலாற்றுவதை நிராகரித்தெழுதப்பட்டிருப்பது வரவேற்கற்பாலதே. சித்த வைத்தியம் அகத்தியர் ஆதிசித்தர் காலந்தொட்டு இந்நாள்வரை நம் நாட்டிலே நிலவிக் குலவி வருகிறது. அகத்தியர் புலத்தியர் மகரிஷிகளாலருளப்பட்டுப் பின் பதினெண் சித்தர்களாற் பாகுபாடு செய்யப்பட்ட அரியநூலைப் பொன்னே

போற் போற்றி மின்னைபோன்ற காயத்திற்கு நீண்ட ஆயுளுங் குறைவற்ற சுகமும் ஒவ்வொருவரும் அடைய ஆண்டவனருளைப் பெரிதும் வேண்டி எனது நண்பர் திரு வீ முந்தையாயோன் அவர்கள் எவருமெளிதிலுணருமாறு செய்துள்ளார். இது சித்தவைத்திய தேர்ச்சிபெற்ற வைத்தியரனைவருக்கும் சிகிச்சாஞானத்தை மேற்படுத்தற்குரிய தாயகமைந்துள்ளது. இது சிகிச்சைக் கிரமத்தையே பெருநலனுகக்கருதி வைத்தியருக்குக் கீர்த்தியையும் ரோகிகளுக்குச் சாந்தியையும் தருவதாயுமமைந்தது. வைத்தியர்களுக்கோர் ஒப்பற்ற குறிப்புவழிகாட்டியாகவும் மிளிர்வது குறிப்பிடத்தக்கது.

மேலும் அவர் நம்போன்ற சித்தவைத்தியரனைவரும் தேகக்கூற்றுத் தத்துவங்களையேயன்றி உடலுறுப்புக்களையும் அவைகளின் தொழில்களையும் அவ்வக்கருவிகள் தத்தம் தொழில்களைப் புரியமுடியாமை காரணமாயேற்படும் வியாதிகளையும் அவ்வியாதிகளுக்காகிய சிகிச்சைமுறைகளையும் நன்கறிந்து செயலாற்ற வேண்டுமென்னும் பெருந்தன்மையும் பரந்தநோக்கையும் பொது நற்சேவையையுமடக்கியிருப்பதையுங் காண்பது பெரிதுஞ் சந்தோஷிக்கத் தகுந்தது. இந் நூலைத் தமிழுணர்ந்த ஒவ்வொருவரும் வாங்கிவாசிக்க வேண்டியதவசியம். இது அவர்கள் தங்கள் நோயிநூறு (கிலி) நீங்கி ஆறுதலடையப் பெரிதுமுதவியாயிருக்கும் என்பது எனது அபிப்பிராயம். இப்பிரபந்தம் சித்தவைத்தியரிடையேயிருந்த ஒரு பெருங்குறையை நீக்குமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இது இரவி மதியுள்ளளவும் நிலவப் பரம்பொருள் அருள்புரிவாராக!

## பொருளடக்கம்


| | |
|---|---|
| சித்தர் ... ... | 1 |
| பெருமிதம் ... ... | 9 |
| சிங்கைநகரிற் சித்தவைத்தியம் ... ... | 10 |
| அண்டபிண்ட அமைப்பு ... ... | 12 |
| தமிழ்வைத்திய நூலாசிரியர் பதினெண்மர் ... | 17 |
| திருமூலர் தமிழ் செய்தமை ... ... | 22 |
| உடலமைப்பு ... ... | 24 |
| எலும்புக்கூடு ... ... | 30 |
| உடற்கூறுகள் தலை (*Head*) ... ... | 32 |
| மூளை, பெருமூளை, கண் ... ... | 221-33 |
| பட்சவாதம் (Parlysis) ... ... | 36 |
| சீரண உறுப்புகளும், தொழிலும் ... ... | 38 |
| அன்னாசயம் (*The Stomach*) ... ... | 50 |
| குன்மம் (*Cancer of The Stomach*) ... ... | 50 |
| சிறுகுடல் (*Small Intestine*) ... ... | 58 |
| கிராணி (*Dysentery*) ... ... | 68 |
| பித்தாசயம், கல்லீரல், பித்தப்பை ... ... | 65 |
| செங்கமாரி (*Janndice*) ... ... | 68 |
| செங்கமாரிச் சிகிச்சை ... ... | 71 |
| பித்தவாயு (*Deyshepsia*) ... ... | 75 |
| தலைவலி (*Headache*) சூரியகபாலம் ... ... | 77 |
| உபஅங்கம், பீலிகை (*Appendix*) ... ... | 80 |
| பெருங்குடல் (*Colon*) ... ... | 81 |
| குடகிரி குடல்வாதம ... | 83-85 |
| குடல்பிதுக்கம் (*Herneya*) அண்டவாயு ... | 86 |
| கணயம் (Pancreas) ... ... | 82 |
| நீரழிவு (*Diabetes*) ... ... | 92 |
| மேகம் மேகரணம் ... ... | 97 |
| ஆரம்ப மேகரணம் அல்லது கொறுக்கு ... | 108 |
| விருக்கம் (*Kidneys*) ... ... | 110 |
| சலாசயம் (*Bladder*) ... ... | 112 |
| இரத்தாசயம் (*The Heart*) மாரடைப்பு ... ... | 115 |
| இரத்த ஓட்டம் ... ... | 119 |
| மாரடைப்பு ... ... | 125 |
| சுவாசாசயம் (*Lungs*) ... ... | 127 |
| அசுத்த நிவாரணிகள் சம்பந்த நோய் ... ... | 129 |

| | | | |
|---|---|---|---|
| சயரோகம் குணங்குறிகள் | ... | ... | 131 |
| தொய்வு (*Asthma*) | ... | ... | 133 |
| இருமல் ரோக ஆரம்ப சிகிச்சை | ... | ... | 134 |
| சுவாதம், சளிச்சுரம் (*Pnumonia*) | ... | ... | 137 |
| சருமம் (*The Skin*) | ... | ... | 142 |
| சரீரத்தின் சீதோஷ்ணம் | ... | ... | 144 |
| சுரம் (*Fever*) | ... | ... | 145 |
| நோய்களின் ஒடுக்கம் | ... | ... | 162 |
| மண்ணீரல் (*Spleen*) | ... | ... | 163 |
| இரத்தஅழுக்கம் (*Blood Pressure*) | ... | ... | 164 |
| இரத்தவாதம், இரத்தபித்தம் | ... | ... | 166 |
| புற்று வல்மீகம் (*Cancer*) | ... | ... | 168 |
| புற்றின் வகை | ... | ... | 171 |
| புற்றுரோக நிவாரணம் | ... | ... | 177 |
| ஒளிச்சிகிச்சை | ... | ... | 187 |
| வாதம் றுமாற்றிசம் | ... | ... | 194 |
| சோர்வாதத்துக்கு எரிதைலம் | ... | ... | 208 |
| உதிரிவாதங்கள் | ... | ... | 212 |
| பஞ்சகர்மங்களாவன | ... | ... | 213 |
| பிடரி வாதம் | ... | ... | 214 |
| தோள்பட்டை வாதம் | ... | ... | 215 |
| இடுப்புவாதம் அல்லது இடுப்புபிடிப்பு | | ... | 215 |
| என்பது வாதத்திற்கும் சிகிச்சை | ... | ... | 216 |
| நடுக்குவாதம் | ... | ... | 217 |
| மவுனத்திற்கு மகாவல்லாதி குதிவாதம் | | ... | 218 |
| கால்கோ பூச்சு | ... | ... | 218 |
| அழல்வாதம் விறைப்புவாதம் | ... | ... | 219 |
| கைகால் எரிவிற்கு மகாவாத தைலம் | ... | ... | 219 |
| பொசிநேயப் பொட்டளி | ... | ... | 220 |
| கயஜ விதி | ... | ... | 221 |
| சிகிச்சைகுறை | ... | ... | 223 |
| குருடனும் பார்வைபெற | ... | ... | 225 |
| அறுசுவைப்பயன்கள் | ... | ... | 226 |
| நோயணுகாதிருக்க | ... | ... | 227 |


# சித்தர்கள்

சித்தவைத்திய சிகிச்சைக் கிரமமென்னும் நூலுக்குச் சித்தர்களே மூலகாரண கர்த்தாக்களாதலின் சித்தர்களை யிட்டுச் சிறிது கூறவேண்டியது தவிர்க்க முடியாததே.

சித்தத்தை அடக்கி சிவத்திடம் ஒப்படைக்கும் வாழ்க்கைமுறை நடைபெற்ற பாவ மறியாத கிருதாயுகத்திலே வாழ்ந்தவர்களே ஆதிசித்தர்கள்.

இவர்கள் எவரும் செய்தற்கரிய பல சித்துக்களையும் செய்தார்கள். தம் சுய சொரூபத்தையே சமயத்துக்கேற்ப தாம் விரும்பியபடி மாற்றித் தாம்விரும்பிய ரூபமெடுப்பார்கள்.

சூரனுமொரு சித்தன்தான். அவன் தான் விரும்பிய ரூபமெடுத்துச் சுவாமியோடு யுத்தஞ்செய்து அழிந்தான் இக்காலத்திற் தர்மதேவதை நான்கு கால் குத்தி இருந்ததாம். இது வேதகாலமென்று சொல்லப்படுகிறது. ஆயுர்வேதமும் அப்போ சித்தர்களால் ஓர் உபவேதமாக எழுதப்பட்டது. அக்காலமிருந்த வேதங்களில் ஆயுள் வேதமுமொன்று.

மனிதருற்பத்தியான காலமுதற்தொட்டு சித்தவைத்தியமுமிருந்துவருகிறது. இந்தயுகத்திற்தான் சூரபத்மனுக்கும் சுவாமிக்கும் யுத்தம் நடந்ததாக அறியக்கிடக்கிறது. அடுத்து வருவது திரேதாயுகம். இந்த யுகத்திற் தர்மதேவதை மூன்று கால்களில் இருந்ததாம். ராம ராவண யுத்தம் நடந்த காலம். அப்போது சஞ்சீவிமூலி கொண்டு வரச்சென்ற அநுமாருமொரு சித்தன்தான். மேற்படி சஞ்சீவியை எடுத்துவரப் பணித்தவருமொரு சித்தன்தான்.

அடுத்து வருவது துவாபரயுகம். தர்மதேவதை இரண்டுகால்களில் இருந்தகாலம். பஞ்சபாண்டவர் துரியோதனாதியோர்காலம் நச்சுப்பொய்கையில் பாண்டவர் மூர்ச்சித்தபோது சஞ்சீவி மூலிகையைக் கொண்டுவந்து எழுப்பியவரும் சித்தர்தான். வேதகால ரிஷிகளும் சித்தர்களும் தேவரருளாற் தெரிந்து சொன்னவை சித்தவைத்தியமெனப்படுகிறது. அக்காலத்திற் பதஞ்சலிமுனிவர்களால் யோக சாஸ்திரமுமெழுதப்பட்டது.

ஆகவே பாரதநாட்டுச் சித்த வைத்தியம் தொன்மை வாய்ந்ததே. ஆதிசித்தர்கள் தென்கயிலை எனப்படும் பொதிகைமலை காவிரிப் பிரதேசங்களையடுத்தும் வடக்கே வடகயிலை என்றழைக்கப்பட்ட இமயமலைச் சாரல்களை அடுத்தும் சஞ்சரித்து வந்ததாய் அறிகிறோம். அவர்கள் ஒருநாளிலேயே இரு இடங்களிலும் சஞ்சரிக்கவும் கூடிய சாதனை பெற்றவர்கள். அவர்கள் தம் நாவை வளைத்து உள்ளே தொண்டைக்குட் செருகிவைத்து சுவாசத்தை அடக்கித் தாம் நினைத்த இடத்துக்கு நினைத்தநேரமே ககனமார்க்கமாய்ச் சென்று வருவர். நினைத்தவுடனேயே பரகாயப்பிரவேசமுஞ் செய்வர். இவர்கள் இந்துக்கள் அதாவது இந்துமதத்தவர்-சிவபக்தர்கள். அவர்கள் தம்மைச் சிவத்திடம் ஒப்படைத்துத் தாம்விரும்பிய வரங்களைப்பெற்று வாழ்ந்தவர்கள். இவர்களிருந்த பூமி இந்துதேசமென்றழைக்கப்பட்டது.

சித்தர்கள் எதையுஞ் சித்தத்தால் அறிய வல்லவர்கள். (*Accult*) ஆத்ம சக்தி பெற்றவர்கள். ஒலியும் ஒளியும் ஒன்றுசேர ஓங்காரத்துள் நின்று அஞ்ஞானமாகிய இருளகலப் பெற்று மெஞ்ஞானமாகிய ஒலி, ஒளியை அடைந்து அந்த மெய்ப்பொருளோடு கலந்துறவாடிப்பெற்ற உண்மைத் திருவடி அருள வடிவாற் தம்மிலுண்டாய தெய்வீக சக்தியாற் கண்டு தூண்டப்பெற்று உருவாக்கியதே சித்தவைத்திய



மெனுமரிய பொக்கிஷமாகும். அவர்கள் தம் ஞானதிருஷ்டியால் எதையும் கண்டார்கள். உள்ளுறுப்புகளிலுள்ள குறைபாடு வேறுபாடுகளையெல்லாம் தம் சொந்த எக்ஸ்ரே (*X-Ray*) ஆகிய ஞானக்கண்ணாற் பார்த்தறிந்தார்கள். தங்கள் யோகசக்தியை உபயோகித்து மற்றெவரும் நேரிற்கண்டறியமுடியாத பலவித உண்மைகளையும் சித்தவைத்திய ஆசிரியர்களான ரிஷிகளும் சித்தர்களும் கண்டுபிடித்துள்ளார்கள். பிந்து நாதமே மூலப்பொருள். பிந்து நாதத்தை அநுபவிப்பதே காயசித்தியெனக் கண்டார்கள். பிந்து என்றால் பழச்சாறு. நாதமென்றால் இலைச்சாறு. பிந்து என்றால் இரதம். நாதமென்றால் கெந்தகம். பிந்து ஒளி நாதம் ஒலி எனக்கண்டார்கள். இலைச்சாறுகளும் பழச்சாறுகளுமே உலகத்திலுள்ள லோகப் பொருள்களையும் பாஷாணங்களையும் மாரணம் பண்ணி வேறொன்றாய் மாற்றும் திறமை உடையதென அறிந்தார்கள்.

மனிதர் நீடித்த ஆயுளையும் சுகதேகத்தையுமுடையவர்களாயிருப்பதற்கேற்ற மருந்துகளையும் அவைகளின் குண விசேடங்களையும் நோய்களுக்குக் கொடுக்கவேண்டிய முறைகளையும் அவர்கள் வியாதிகளின் மூல காரணங்களையும் எவ்விதம் அடியோடகற்றும் என்பதையும் தெட்டத்தெளிவாக அறிந்து கண்டு எழுதி வைத்துள்ளார்கள்.

சித்தருள்ளத்தில் சிவனடக்கமென்பர். சித்தர் முடிவே சித்தாந்தமெனவும் கூறப்படுகிறது. அவர்கள் தேகத்தைப் பற்றிக் கூறும்போது தேகத்துக்கு ஆதாரமாயிருப்பவை எவை, எவை; அவற்றின் தன்மைகள் எவை, அவற்றால் உருவானவை எவை; அவற்றால் நடைபெறுங் கிரியைகள் எவை, அவற்றைச் சமனப்படுத்த வேண்டிய மார்க்கங்களெவை என்பவைகளையிட்டு வெகு விரிவாகவும் நுணுக்கமாகவும் அறிவித்துள்ளார்கள்.

**அதில் தேகம்:** மனித உடலானது முக்குணங்களின் பிரதிபலிப்பும்! திரிதோசங்கள் சப்த தாதுக்கள் மும் மலங்களையுமாதாரமாயுள்ள தென்றும் விரித்து விளக்கியுமுள்ளார்.

**திரிதோஷங்கள்:** வாத, பித்த, கபம்

**சப்த தாதுக்கள்:** இரசம் அதாவது வெண்குருதி, இரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு, உட்கரு மேதை, உயிரணுக்களென்னும் ஏழும்.

**மும்மலங்கள்:** மலம், சிறுநீர், வியர்வை. பொதுவாய் நோக்குமிடத்து தோஷங்கள் ஊட்டப் பொருள்களாகவும் தாதுப்பொருள்கள் அணு அல்லது அணுக்கூட்டங்களாகவும் மலம் கழிவு பொருளாகவும் விளங்குகின்றன. இம்மூன்றின்மிகுதி குறைவால் ஏற்படுவதே நோயெனப்படுமெனவும்சிகிச்சையின் நோக்கம் அவற்றின் நிலைமையைச் சரிப்படுத்துவதே என்றுங் கூறியுள்ளார்.

ஆயுள்வேத முறைப்படியும் மனித தேகம் ஊட்டப் பொருள்கள், அணுக்கள், மலங்கள் எனமூவகையாய் வகுக்கப்பட்டுள்ளன. தோஷமென்பவை அணுக்களைச் சுற்றியுள்ள ஊட்டப்பொருள்கள். இவை அணுக்களின் உள் நுழைந்து பிராணவாயு உட்பட எல்லா உணவுப்பொருள்களையும் தந்து அவற்றைப் போசிக்கின்றன.

தாதுக்கள் என்பன அணுக்களும் அணுக்களின் கூட்டுறவாலுண்டாகும் சப்ததாதுக்களுமாகும். மலமென்பது அழிபொருளாகும். அதாவது உடலிலிருந்து வெளித்தளளப்பட வேண்டிய கழிபடு பொருள்களாகிய அழிவடைந்த அணுக்களாகும்.

ஊட்டப் பொருள்கள் வாதபித்தகபமென மூன்று வகைகளாகும். தாதுக்கள், இரசதாது, இரத்ததாது, மாமிச



தாது, மேதோதாது, அஸ்ததிதாது, மச்சைதாது, சுக்கில தாது (உயிரணு) என ஏழுவகைகளாகும். கழிவுப் பொருள்களாவன சிறுநீர், வியர்வை, மலம் என்னும் மூன்று பிரிவுகளாகும்.

பிருதிவி-மண், அப்பு-ஜலம், தேயு-அக்கினி, வாயு-காற்று, ஆகாயம்-வெளி என்று சொல்லப்படுகிற பஞ்ச பூதங்களும் சரீரத்திற்கு ஆதாரமாயிருப்பவை என்றும் வாதம் வாயுவின் தன்மையையொத்தும், பித்தம் தேயுவின் தன்மையை யொத்தும், சேடம் அப்புவின் தன்மையை யொத்தும் இருப்பதையும் சுரோணிதத்துடன் சுக்கிலம் சேரும்போது வாதபித்த சிலேற்பனங்களில் எவை அதிகரிக்கிறதோ அது சிசுவுக்குப் பற்றி வாததேகம், பித்த தேகம், சிலேற்பனதேகமென்று மூவகைத் தேகம் உருவாகிறதென்றும், நமது தேகம் 72000 நரம்புகளையுடையதென்றும், அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நோயாக எழுபத்தீராயிரம் நோய்களை மக்களுடையரென்றும் இவை யாவும் 4448 நோய்களிலடங்குமென்றும் அதில் மிருத்து ரோகம் 700 என்றும், கொடு நோய்கள் 800 என்றும் வைத்தியத்தாற் தீர்வன 2500 என்றும் அவர்கள் கண்டு கூறியுள்ளார்கள்.

உடல் நிலைக்க சித்தர்கள் மூலிகைகளுடன் பாஷாணங்கள் உப்பினங்கள் (Nalamens) சத்துக்கள் கற்பகங்கள் முதலியவற்றால் செய்யப்பட்ட மருந்துகள் மிருத்து நோய்களையும் கொடுநோய்களையும் போக்கி உடம்பை நிலைக்கச் செய்வதற்கும்,

**உயிரை நிலைக்கச் செய்ய:** இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகரம், தாரணை, தியானம், சமாதி, ஆகிய எண்வகை யோகாப்பியாசங்களையும் கூறியுள்ளார். அன்றியும் இரசவாதம், ஜாலம், மந்திர யந்திரம், தந்திரம் முதலியவைகளும் இவர்களால் அருளப்பட்டவைகளே.

நோய் நீக்க மார்க்கம் கருவிலே அழிக்கும் நோய்களை கருவுற்பத்தியாகு முன்னும் கொடு நோய்களைத் தொடங்கு முன்னும் அல்லது ஆரம்பத்திலும் நீக்கப்பட வேண்டுமென்றும் ஒருவனுக்கு வியாதிகண்டும் தக்க பரிகரிப்பு செய்யாதுவிடின் நோயொருபோதும் நீங்காது விருத்தியடைந்து பிராண சேதமேற்படுத்துமென்பதும் அவர்கள் முடிவு.

ஆத்ம சுத்தியாலடையுங் காயசித்தி என்பது வியாதிகள் உறுப்புகளில் அக்கிரமம் நடத்த இயலாதிருத்தல் ஆனால் ஆத்மா அல்லது பிராணனை யாக்கையினிடமாக யறிந்தோமேயன்றி வேறாய்க் காணமுடிகிறதில்லை. ஆகவே வியாதிகளின் பலனைத் தேகத்தின் பிரிவுகளால் ஆன்மா அனுபவிக்கின்றதென்பதே தீர்ப்பு ஆகையால் தான்,

"உடம்பாரழியின் உயிராரழிவர்
திடம்பட மெஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாயமறிந்தே
உடம்பை வளர்த்தேனுயிர் வளர்த்தேனே."

என்று திருமூலநாயனாரும் தம் திருமந்திரத்திற் கூறியுள்ளார். ஆகவே மேற்சொல்லிய கொடுநோய்கள் தேவமருந்துகள் என்று கூறப்படும் சிந்தூரம், பதங்கம் பற்பம், சுண்ணம் முதலாம சித்த மருந்துகளாற் தீர்த்தாலன்றி அவற்றை என்றாவது எவற்றாலாவது தீர்த்தல் அரிதென்றுங் கூறியுள்ளார். கொடுநோய்கள் பலவருடகாலம் உடம்பிலிருந்து பின்னரே தோற்றப்படுவன என்றறிந்து நோய் வருவதற்கு முன்னமே அதாவது பட்சம், மாதம், வருடங்களுக்கு முன்னரே அறிந்து கொள்ளும் மார்க்கங்களையும் மந்திரங்களையும் கூறியுள்ளார். அட்டவித பரீட்சை அதிலும் பிரதானமாய் நாடிகளின்மூலம் திட்டமாய்க் கண்டறியும் விதத்தையும் கூறியுள்ளார்.



நாடி இது ஒரு அபூர்வமான வித்தையெனலாம். இன்றும் "நரம்பொன்றில் நாடி மூன்றே...... என்னுஞ் சுலோகத்தை கேட்டவுடன் பிரமிக்கிறார்கள். மேல் நாட்டு வைத்தியர்கள் என்றாலுமவர்கள் நாடியைப் பரிசோதித் தறியாமலுமில்லை பார்க்கவே செய்கிறார்கள் அதில் நிமிஷத்திற்கு எத்தனை துடிப்பு; எத்தனை சுவாசம் என்று தவறாது பார்த்தே தீருகிறார்கள். ஆனால் நம்சித்தர்களோ வென்றால் அந்தளவில் நின்றுவிடாது வெகு நுணுக்கமாய்

"நாடி என்றால் நாடி அல்ல நரம்பிற்தானே
நலமாகத் துடிக்கின்ற துடிதானுமல்ல
நாடி என்றால் வாதபித்த சிலேற்பனமுமல்ல
நாடி எழுபத்தீராயிரந் தானுமல்ல
நாடியென்றாலண்ட பகிரண்ட மெல்லாந் நாடி
எழுவகைத் தோற்றத்துக்குள்ளாய் நின்ற
நாடியதை ஆராய்ந்து பார்ப்பாராகில்
நாடியுறும் பொருள் தெரிந்து நாடுவாரே"

என்று அதாவது குருவை நாடிக் கேட்டறி என்று சொல்லி வெகு விரிவாகவும் நுணுக்கமாகவும் பாடிவைத்துப் போயுள்ளார்.

இவ்வகை நாடிப் பரீட்சையை ஒருவன் தக்க குருவிடங் கற்க வேண்டுமென்றும் குருநாடி ஒன்றிருக்கிறதென்றும் அதற்கும் மற்ற நாடிகளுக்குமுள்ள பேதாபேத நுணுக்கங்களைக் குரு மூலமாகவும் அனுபவ மூலமாகவும் தெரிந்து கொண்டாலன்றி நோய் நிதானங்களைச் சரிவர அறிந்து கொள்ள முடியாதென்றும் வகையறுத்துக் கூறியுள்ளார்.

சித்த வைத்திய மருந்துகளின் ரகசியம்: சித்தமருந்துகளில் ஒரு அரிசி எடை நெல்லெடைப் பிரமாணம் கொடுப்

பதால் எவ்வகையான நோய்களும் தீர்வதுமன்றி உடலுரமும் பெற்று நோயாளியின் சீவியகாலம் வரை அந்நோய் மீண்டும் வராது நிரந்தர குணத்தை அடைய முடியுமென்றும் அணுசக்தி முழுவதுமுள்ள மூப்புக்குரு, ரசகுரு, இராசேந்திரகுரு, கருவழலைக்குரு போன்ற குருமருந்துகளும் சில கூறியுள்ளார்.

"முப்பைக் கண்டார் மூப்பைய கன்றார்
முப்பைக் கண்டார் மொய்வினை யற்றார்
முப்பைக் கண்டார் மோனக முற்றார்
முப்பைக் கண்டார் மொழிபரனாரே."

என்று நந்தி ஞானத்திற் கூறியுள்ளபடி நரை, திரை, மூப்பு, பிணி முதலியவைகளின்றி சுகானந்தராய் நீடூழி காலம் தெய்வத்தன்மை பெற்று வாழ்வார்களென்பதாம்.

அவர்களெழுதிவைத்த கிரந்தரங்களில் விஞ்ஞான வித்தையுமொன்றாகும். அது இன்று எங்கும் பரந்து வேறுவேறு ரூபங்களில் பல விதத்திற் பலன் தந்து கொண்டிருப்பதை உலகமெங்கணும் காண்கிறோம். உலகில் விசேஷமாய் வல்லரசுகளிடையே கூட முன்னேற்றமடைந்து வரும் விஞ்ஞான வித்தைகளும் நம் சித்த விஞ்ஞானிகளால் முன்பு ஏற்கனவே தயாரித்து அவர்களேடுகளில் எழுதிவைக்கப்பட்டவைகளே. அவர்கள் இன்னமும் இமாலயப் பிரதேசங்களில் புற்றுட் புதையுண்டு ஜீவன்முக்தராய் மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனரென்றும் சில ஆராய்ச்சியாளர்களும் தெய்வீக பக்தர்களும் கூறுவதுண்டு. அடுத்தபடியாகக் கலியுகம் இப்போ நடப்பது கலியுகம். இதில் தர்மதேவதை ஒற்றைக்காலில் நின்று நடமிடுகிறாள்.

# பெருமிதம்

உன்னதமான சித்த வைத்தியத்தைக் குறித்து, உத்தமமான, உச்சிதமான வாக்குகளில் உலகுக்கெடுத்தியம்பிய சித்தர்களின் பெயர்களையும் அவர்கள் யாத்துத் தந்துள்ள நூல்களின் பெயர்களையும் நினைத்துப் பார்க்கும் போதே புனிதமுங் கம்பீரமுங் கொண்ட ஆனந்த முண்டாகிறது. ஆகா! நாம் இப்படிப்பட்ட சித்தவைத்திய முதல்வர்களின் வாரிசுகளா? என்று எண்ணிப் பெருமிதங் கொள்ள வைக்கின்றது. வேதகாலந் தொட்டு இச்சித்த வைத்தியத்தை உலகுக்களித்த மகான்கள் யாவரையும் பற்றியும் இந்நூலிற் குறிப்பாகக் காண்கிறோம். சித்த வைத்தியத்தையிட்டு எவ்வளவோ நூல்கள் புத்தக வடிவிலும் ஏட்டுச் சுவடிகளிலும் வாழாவிருக்கின்றன. இவற்றை விளங்கிக் கொள்ளும் அறிவுத்திறமையும் அறிந்தவற்றை அனுபவத்திற்குக் கொண்டு வருமாற்றலும் அதைப் பலருமறியச் செய்யும் பரோபகார சிந்தையுமுடையோரைக் காணமுடியாதிருப்பதுமே தற்போதுள்ள குறைபாடெனலாம்.

அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி அரும்பசி எவற்கு மாற்றி
மனத்துளே பேதாபேதம் வஞ்சனை களவும் பொய்யும்
சினத்தையுந் தவிர்ப்பாயாகில் செய்தவம் பின்வேறுண்டோ
உனக்கிதை உறுதியாக உபதேசித்தேன் கண்டாயே.

# சிங்கை நகரிற் சித்த வைத்தியம்

நம் நாட்டு வைத்திய சாஸ்திரங்களெல்லாம் அகஸ்தியராற் செய்யப்பட்டதென்றால் அதற்கு அக்காலத்தில் ஓர் தனி மதிப்பிருந்து வந்தது. யாழ்ப்பாணத்திலும் முதன் முதல் பருத்தித்துறைக்கும் வல்லிபுரத்துக்கும் இடையிலிருந்த கற்கோவளம் தெற்கே வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கும் கடலுக்குமிடையிலிருந்த பாகம் சிங்கை நகரென்னும் பெயரால் அழைக்கப்பட்டு வந்தது.

அவர்களப்பகுதியில் நன்னீர்ச் சுனையுள்ள நிலப்பரப்பைத் தெரிவு செய்து சிங்கை நகரைக்கட்டி கனகசிங்க ஆரியன் தலைமையில் அரசாண்டனர். அவர்கள் சந்ததியினரே ஆரியச்சக்கரவர்த்திகளென அழைக்கப்படுவர்.

அக்காலத்திலங்கு வசித்துவந்தோர் வைத்தியத்திலும் சோதிடத்திலும் இலக்கண இலக்கியங்களிலும் வல்லுநராய் இருந்தனரென்பதை இன்றுமதன் பக்கலிலுள்ள அனைவரும் ஒத்துக்கொள்கின்றனர். தற்பொழுதும் அழியாப் புகழோடு நம்பாவனையில் வாழ்ந்து கொண்டிருப்பதே பிறிதோர் சிறந்த எடுத்துக் காட்டாகும். இன்னும், அங்கு காலகதியிற் கண்டெடுக்கப்பட்ட மணிமுடியும், அணி மணிகளும் அவர்கள் விருது பொறிக்கப்பட்ட பழைய நாணயங்களும், கட்டிடச் சிதைந்த உதிரிப்பாகங்களும் போதிய சான்றுகளாகும்.

கற்ற அரசர்கள் வளம்படுத்தி வாழ்ந்த இடம் கற்கோவளமென்று வளங்கப்பட்டு வந்தது. அப்போ இங்கு சகல கலை வல்லுநரும் வாழ்ந்து வந்தனர். அவர்களாலும் வைத்தியங்கள் செய்யப்பட்டும் சேகரித்தும் சேர்க்கப்பட்டும் வந்தன. அதுவே தற்போதும் நம் பாவனையில் நிற்பது. யாழ்ப்பாணத்திற் சிங்கை நகரிற்தான் சித்த வைத்தியம் முதன்முதல் அபிவிருத்தி அடைந்து வந்தது.

பின்பு நல்லூரை இராசதானியாக்கிய பின் சிங்கை நகர் அங்கே ஸ்தாபிக்கப்பட்டு அங்கு தமிழ் வைத்திய பண்டித சபையும் ஸ்தாபிக்கப்பட்டு அவர்களாற் தொடர்ந்து வைத்திய சாஸ்திரங்களைத் தேடி அவைகளை ஒருங்கு திரட்டிச் சேகரித்துச் சேர்க்கப்பட்டு அவ்வக் காலத்து அரசு புரிந்த மன்னர் சபையில் அவர்கள் நாமத்தில் வைத்திய சங்கத்தாராலியற்றப்பட்டு அரங்கேற்றப்பட்டு வழி நூலாய் வந்தவைகளே பரராசசேகரம் செகராசசேகரம் என்னும் பிரபல தமிழ்வைத்திய நூலென அறியப்படுகின்றது. இவ்வரசர்கள் காலத்தில் வெளிவந்தமையால் அவர்கள பெயர்களே அந்நூலுக்குமிடப்பட்டதென்பது வெள்ளிடைமலை.

இச் சரித்திர விரிவைப் போர்த்துக்கீசரின் பாஷையைக் கற்று, அவர்களது றிப்போட்டுகளை ஆராய்ந்து வெளியிடப்பட்ட யாழ்ப்பாண வைபவ விமர்சனத்திற் காணலாம். ஷை வைத்திய சாஸ்திரங்கள் நம் தமிழர்களுக்குக் காலத்துக்காலம் நடைபெற்று வந்த யுத்தத்தில் உதவி செய்துதவி வந்த தஞ்சாவூர் சிவாசி மகாராசாவின் வைத்தியசாலைக்கும் அனுப்பப்பட்டதென அறியக் கிடக்கிறது.



# அண்ட பிண்ட அமைப்பு

**பழமை அறிவிப்பது:—**

ஈழமுஞ் சேர்ந்த **இந்து தேசமே** பூர்வகாலந் தொட்டு கல்வி, அறிவு, ஒழுக்கம், மதம், கமத்தொழில், கைத்தொழில், வாணிகம், வீரம் முதலியவைகளில் மேம்பாடமைந்திருந்தது ஜீவகாருண்யம், நீதி, சாந்தம், பொறுமை முதலிய குணசீலங்களுக்குப் பிறப்பிடம் இந்த **இந்துதேசமே** மற்றெந்த ஒரு நாட்டிலும் இங்கிருப்பதுபோல் அன்பும் அறனும் இருந்ததில்லை. எல்லாச் சமயத்தவர்க்கும் எவ்வித இடரும் விளைவிக்காது எம்மதமும் சம்மதமாய் ஏற்று நடத்துவதும் தமிழ் மரபின் பண்பே எல்லா நாகரீகங்கட்கும் பிறப்பிடமுமிதுவே. க்ஷேத்திரம், சாத்திரம், சூத்திரம், யோகம், வாதஞ்ஞானம், ஜாலம், மந்திரம் தந்திரம் முதலிய சகல திறன்களுமுள்ளது. பண்டைக்கால இந்துதேசமே என்பர். அவர்கள் செய்தற்கரிய பல சிகிச்சைகளையும் பலசாதனைகளையும் செய்துள்ளனர். பண்டைக் காலத்திற் தேவர்களே வைத்தியத்தை செய்து வந்ததாக அறியக்கிடக்கிறது.

பொருப்பவும் நினைப்பவும்
கொல்லும் நோயுங் குணமும் மருந்துடன்
வல்லி கேட்ப வகுத்தனராதியே.

ஆதி அம்பிகைக்குரைப்ப அதைநந்தி கேட்டுவந்து
வேதனுக்குரைப்ப வேதன் மேகநாதனுக்குச் சொன்னான்
போதிலிந்திரனும் வாசி மகவுக்குப் புகன்றான் பின்னும்
கோதிலா அசுவர்தன் மந்திரர்க்க நினைந்ததினைக் கூறும்



கூறுமாயுர் வேதத்தைக் குறுமுனி குறித்து நோக்கி
மாறுபாடில்லா வண்ணம் வளர்திராவிட மதாக்கி
வீறுயர் புவியில் மாந்தர்ப் பயிர் தழைத்திடமேகம் போல்
ஊறிய சாரந்தன்னை உலகினுக்குதவச் செய்தான்.

செய்ய தேனுமே தொந்திகள் கவிசில சேர்த்தான்
வையமீதினில் பூஞ்ஞைப்பாதரும் வகுத்ததுண்டே
தூய வெண்மலர் மாது தோற்ற நாவலர்கள் சாற்ற
வைய மிச்சுருதி நூலை அறைந்தனருலகுக்கம்மா.

## வெண்பா

மன்னுயிர்கட் கெல்லாம் வைத்திய நூற்கருந்நைச்
சொன்ன முனிவனடி தொழுது—பொன்னனையார்
முன் உரைப்போர் பொருள் முற்றும் பெலந்திடுமே
தேரையுரை பெற்றார் மற்றீங்கு

பாயிரமு தலாதாரத்திறைடு வாயுவும் பத்து நாடி
வரிசையிப்படியே, நோய் வரும்படி செயல் சாத்தியம்
மசாத்தியம் காயசூரணம் மதுவர்க்கம் தூயலேகியம்
நைய மாத்திரை துலங்கு செந்தூரமுஞ் சொல்வாம்.

சொன்னதோர் தைலமிக்க சுவாச வருக்கமல்லால்
அன்னபூ அட்டை கொம்பு அரிய சத்திரத்திறைடு
இன்னமுஞ் கௌாயரட்சை இதுமுதல் நயன ரோகம்
முன்னமே சர்ப்ப சாஸ்திரம் முதலிய மொழிகிறேனே.

செய்ய மாதுக்கிறைவன்முன் செப்பிய
துய்யவாயுள் மறையுட்டுலங்கிய
மெய்யை மாதவர்க்கோதிய மெய்ப்பொருள்
ஐயன் தன் மந்திரற்கருள் கூறினான்.

இவ்வேட்டுப் பிரதிகளைப் பார்ப்பதிலிருந்து பண்டைக் காலத்தில் தேவர்களே வைத்தியத்தைச் செய்துவந்ததாகவும் அறியக்கிடக்கிறது.

ஆதி அம்பிகைக்கு உரைப்ப அதை நந்திகேட்டிருந்து பிரமனுக்குரைப்ப பிரமனிந்திரனுக்குக் கற்றுக் கொடுக்க இந்திரன் சூரியனுக்குக் கொடுக்க அவர் தம் மைந்தர்களாகிய அஸ்வினி தேவர்களுக்குக் கற்றுக்கொடுக்க அவர்களிருவரும் வைத்தியமுணர்ந்து தேவ வைத்தியரானார்கள். அவர்கள் பிரமன் தலையை ஒட்டியும் இந்திரனின் பாரிச வாதத்தைக் குணப்படுத்தியும் அசுரர் தேவர்களுக்கிடையே நடந்த யுத்தத்திலுண்டான காயங்களை அந்த க்ஷணமே குணப்படுத்தியும் இன்னும் அனேக அற்புத சிகிச்சைகளைச் செய்தும் கீர்த்தியையும்புகழையும் அடைந்தனர். இதை அறிந்த தேவேந்திரன் அவர்களிடத்தில் ஆயுள்வேதத்தைக் கிரகித்துக் கொண்டான். இஃதிவ்வாறாக

இப்பூலோகத்தில் மனுஷர் வியாதியாற்படும் கஸ்டத்தை ரிஷிகளறிந்து பெரிதும் விசனப்பட்டு அவர்கள் கூடிய சபையிற் தீர்மானித்தபடி பரத்வாச முனிவரை இந்திரனிடம் சென்று ஆயுள்வேதத்தைக் கற்றுவருமாறு அனுப்பினர். அவர் இந்திரனிடம் சென்று ஓ! தேவ ராஜனே! மனிஷரை இரட்சிக்கப் பிறந்தவரே! உம்முடைய சகாயம் வேண்டி ரிஷிகளென்னை உம்மிடம் அனுப்பினர்கள். மனமிரங்கி ஆயுள்வேதத்தை எனக்கு உபதேசிக்க வேண்டும் என்று வினயமாய்க் கேட்க இந்திரன் மனமுவந்து வைத்தியசூத்திரங்களைக் கற்பித்தானெனவும் பின் ரிஷிகளிடஞ் சென்று அவர்களுக்குப் பரத்வாச முனிவரே அந்த வைத்தியத்தைக் கற்றுக் கொடுக்க அவர்கள் சிகிச்சை செய்ய ஆரம்பித்தார்களென்றும் பழைய கிரந்தங்கள் அறிவிக்கின்றன.



இப்படி நடந்து வருங்காலத்தில் ஆந்திரேயர் தமது சிஷ்யர்களிற் சிறந்த அக்கினிதேவர், பிலர், ஜல்கர்ணர் முதலியோருக்கு வைத்தியத்தைக் கற்றுக் கொடுக்க அவர்கள் ரோகநிதானம், குணபாடம் முதலியவைகளை நன்கு கற்றுப் பிரபல வைத்தியர்களாகிப் பின் அவர்கள் தத்தம் பேர்களுடனே நூல்களைச் செய்தார்களென்றும் அந்நூல்களை ரிஷிகள் முன் கொணர்ந்து அரங்கேற்றினரென்றும் அவர்கள் கொணர்ந்துள்ள ஆறு கிரந்தங்களுள்ளும், அக்கினிவேஷ தந்திரம் என்னும் நூலே மிகச் சிரேஷ்டமானதென்றும் பிரகடனஞ் செய்தனர். இந்நூலைச் சரகமுனிவர் திருத்தி "சரகம்" என்னும் ஒருநூலைச் செய்தாரென்றும், இச்சரகமே ஆயுள்வேதத்துக்குப் பூர்வத்திற் சிறந்த கிரந்தமாகுமென்றுஞ் சொல்லப்படுகிறது.

இரண்டாம் நூற்றாண்டில் தானே தமிழ் சிறப்புற்றிருந்தபோதிலும் நாலாம் நூற்றாண்டளவில் சமஸ்கிருதமே தலைசிறந்து விளங்கியது. ஆதலாற் சகல சாஸ்திரங்களும் சமஸ்கிருத பாஷையிலேயே எழுதப்பட்டு வந்தன என்றாலும் அகத்தியர் ஆயுள்வேதத்தை எவ்வித மாறுபாடுமின்றித் திராவிடத்தில் வெளிப்படுத்தினரென்று கூறப்படுகிறது. அக்காலத்திலிருந்த சமஸ்கிருத நூலாசிரியர்கள் அறுபத்தொருவரென்றும் அவர்களெழுதிய ஆயுள்வேதம் எட்டுப்பிரிவுகளாய் இருக்கலாம் என்றும் கூறுவர். அவை:

1. சல்லியஞ் சாஸ்திரீயம் Surgery
2. ஊர்த்துவாங்க ஸாலக்கியம்—இதிற் கழுத்துக்கு மேற்பட்ட உறுப்புகளையும் அவைகளுக்கு நேரிடும் வியாதிகளையுமறியலாம்.

**3. காயசித்தி** Practice of Elixir
இது சரீரத்திலெழும் வியாதிகளைத் தெரிவிக்கும்.

**4. பூதவைத்தியம்**—இது பேய் முதலியவைகளாலானதென்றும் மனோரோகங்களைத் தெரிவிப்பது.

**5. கௌமார பிரீத்தீயம்** Diseases of infancy
இதில் குழந்தைகளின் வியாதிகளை அறியலாம்.

**6. அகததந்திரம்**—இது விஷங்களைக் குறித்துச் சொல்வது

**7. இரசாயன தந்திரம்** Alchymy
இதில் வாதஞ் செய்கிற முறைகளையும் ஆயுசை விருத்தி செய்கிற முறைகளையும் அறியலாம்.

**8. வசீகரணதந்திரம்**—இது ஜனனேந்திரிய வியாதிகளையும் வீரிய விருத்தி செய்து கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிப்பது.

# தமிழ் வைத்திய நூலாசிரியர் பதினெண்மர்

**பார்த்திடவே நந்தீசர் மூலத்தீசர்**
**பண்பான அகத்தீசர் சட்டநாதர்**
**கார்த்திடவே இடைக்காடர் சண்டிகேசர்**
**கனராமர் போகர் சிவவாய்க்யசித்தர்**
**சேர்த்திடவே கோரக்கர் புண்ணுக்கீசர்**
**சிறப்பான மச்சமுனி பூனைக்கண்ணர்**
**வார்த்திடவே யூகி முனி கொங்கணர்பாணி**
**வரரிஷிகள் மலர்பதமும் காப்பதாமே.**

இவர்களே சித்த வைத்திய முதல்வராவர். அகத்தியர், திருமூலர், தர்மசௌமியர், காலாங்கிநாதர், போகர், கொங்கணர், சட்டமுனி, இராமதேவர், கமலமுனி, ரோமரிஷி, கருவூரார், கோரக்கர், இடைக்காடர், சுத்தானந்தர், பாம்பாட்டிச்சித்தர், அகப்பேய்ச் சித்தர், ஏற்றச்சித்தர், தேரையர் என்பவர்.

முற்கூறிய இருதிறத்தாரும் மானிடர்களுக்குண்டாகும் நோய்களை அசாத்தியம், சாத்தியம், கஷ்டசாத்தியம் என்று மூன்று வகுப்புகளாகக் கூறியிருக்கின்றனர். அவற்றுள் அசாத்தியமெனக் கூறியதே கர்மரோகங்களென்றும் அது தெய்வகடாட்க்ஷத்தால் அன்றி வேறு எவ்வகையாலும் தீராதென்றும் சாத்தியம் கஷ்டசாத்தியம் எனக் கூறப்பட்டுள்ள இரண்டுவித நோய்களுமே மனிதமுயற்சியால் தீரக்கூடியன என்றுங் கூறியுள்ளார்கள். இவ்விதம் வாசஞ்செய்யும் தமிழ்தேசத்தில் பூர்வத்தில் 'சித்த' ஆயுள்வேத வைத்தியங்கள் மிகவும் பிரபலமடைந்திருக்கின்றன. அக்காலத்தில் சித்தவைத்தியர்களும் சீவித்திருந்தனர்.

இத்திவ்விய வைத்திய வித்தையை அக்காலத்தில் அரேபியர், யூதேயர்’ கிரேக்கர், எகிப்தியர், சினேவியர், வெனிசியர் முதலானதேசத்தார் இவ்விடம் வந்து கற்றுத் தெளிந்ததாகச் சில சரித்திராசிரியர் கூறுவர். இவரன்றி சாலொமோன்ஞானி, கிறிஸ்து முதலானவர்கள்கூட இவ் வைத்தியத்தை கற்றவர்களென்றும் அமெரிக்க சாஸ்திரியும் ஆராய்ந்து எழுதியுள்ளார். முன்னரே இங்கு சொல்லியுள்ள வடமொழி தென்மொழிகளில் சிறந்த கர்த்தாக்களால் வரையப்பட்டுள்ள வைத்திய கிரந்தங்கள் சிறந்த செந்தமிழ் வசனநடையில் மட்டும் எழுதப்படாது விருத்தம், வெண்பா, தருகொச்சகம், அந்தாதி வர்ணம் முதலிய செய்யுள்களாலும் வரையப்பட்டிருப்பதை அவர்கள் பிரதிகளில் காண்கிறோம்.

இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன் மேல்நாட்டாருக்கு இந்தச்சாத்திரங்களேனும், விஞ்ஞான வித்தைகளேனும் ஏதுந்தெரியாது தந்தி, தபால், நீராவியந்திரங்கள் கைத்தொழில் முதலியவைகளைத் தாங்களே கண்டுபிடித்துள்ளோமெனக் கொட்டமடித்து வருமிவர்கள் நம்மவர்கள் எழுதிவைத்துள்ள “சூரியசித்தாந்தம்” என்னும் நூலைப் பார்த்தால் தருக்கடங்கி வாயிழந்து மௌனம் சாதிப்பர்.

அந்தக் காலத்தில் மின்தபாலென்றொன்றிருந்தது. ஆனாலதற்குத் தந்திக்கம்பிகளேனும் தூண்களேனும் இரசாயனப்பானைகளேனும் கிடையாது. (பற்றி) அன்றியுமிந்துக்கள் முற்காலத்தில் ஆகாயத்திற் பிரயாணஞ் செய்தார்கள். ஆகாயரதமும் நடத்தினார்கள். ஆகாயத்திற் சண்டைகளுஞ் செய்தார்கள். அதுமட்டுமா? இன்னுமிவர்கள் பரகாயப்பிரவேசம் முதலிய கலைஞானங்களைக் கற்றுச் சாதனையிலும் அவற்றைக் காட்டியுள்ளனர். இவைகள் போலியுரைகளல்ல.



மகாபாரதத்திற் கூறப்பட்டுள்ள மாயாசபையில் பூதக்கண்ணாடிகள் தூரதிருஷ்டிக்கண்ணாடிகள் கெடியாரயந்திரங்கள், நாளிகை வட்டங்களும், பாடுஞ் சூத்திரப் பட்சிகளும் பேசுஞ்சூத்திர மிருகங்களும் இருந்தன என்று சொல்லப்படுகிறது. வேறு நம்மவர் அட்ட வித்தியா என்று வேறோர் வித்தையுந் தெரிந்திருந்தார்கள். அவ்வித்தையிற் பாண்டித்தியமுள்ளவர்கள் சத்துருக்களுடைய சேனைகளை விஷமுள்ள வாயுக்களாலும் திகிலுண்டாக்கத்தக்க சத்தங்களாலும் நிறைந்த ஆகாயத்திற் சூழ்ந்துகொண்டு அழித்துப்போடுவார்கள். இன்னும் எத்தனையோ விதமான அற்புத வித்தைகளையெல்லாம் செய்துவந்தனர். இப்படியே நம் இந்து தேசத்தில் பல தொழில்களும் பிரகாசித்து வந்தது போல நம் ஆயுள்வேதமும் சித்தவைத்தியமும் சிறப்புற்று விளங்கின. பிணங்களை அறுத்துச் சோதித்து சரீரக்கூறுபாட்டையும், வேறுபாட்டையும் அறிந்து கொண்டதாகவும் “சுஸ்ருதம்” முதலிய நூல்கள் கூறுகின்றன. அதுவுமன்றி போசராஜனுடைய சிரசில் வியாதி ஏற்பட்டதால் நம் சித்தர்கள் தம் சொந்த “எக்ஸ்றே” யாகிய ஞான திருஷ்டியால் மூளையின் ஓர் பகுதியிற் தசைவளர்ந்திருப்பதைக் கண்டு சத்திர சிகிச்சை செய்ய வேண்டி மண்டையைத் திறக்க “சம்மோகினி” என்னும் மூலிகையினால் மயக்கமுண்டு பண்ணி கபாலத்தைத் திறந்து மூளையிலேற்பட்டிருந்த தசை வளர்ச்சியை அப்புறப்படுத்திப் பின் கணப்பொழுதில் மாற்றக்கூடிய மூலிகையாற் குணப்படுத்திப் பின் கபாலத்தை மூடிச் “சந்தானகரணியா”ற் பொருந்த வைத்து “சஞ்ஜீவகாரணியால்” உயிரடையச் செய்து அதாவது உணர்ச்சி வரச்செய்து “சல்லிய கரணியா”ற் பொருந்த வைத்து “சாவல்யகரணியால்” மண்டையை முன்போல் வரப்பண்ணிக் குணப்படுத்தியதாகவும் அறிகின்றோம்.

இந்துக்கள்தான் முதன் முதல் கண்ணைக் குத்திக் காசநீரை எடுத்ததாகவும் கெற்பப்பையிலிருந்து வெளி

யேற முடியாத பெண்ணின் வயிற்றை வெட்டிச் சிசுவை வெளியே எடுத்ததாகவும் அறியக் கிடக்கிறது. மேற்படி மருந்துகளில் உயிரைப் பிழைப்பிப்பதே முக்கியமாகையால் அதனைப் பாராட்டு முகமாக "ஈன்றவரிறப்பினுமாவிஈயும்" எனக் கூறியுமுள்ளார். மூவுலகையும் படைத்த பிரமதேவனிறந்தாலும் உயிர் கொடுக்குமென்கிறார்.

1. **சல்லிய கரணி**—அஸ்திர சஸ்திரப் புண்களை ஆற்றும் மருந்து.

2. **சந்தானகரணி**—சல்லியத்தை நீக்கியபின் மூட்டு விட்டிருந்தால் சஸ்திர அஸ்திர அடையாளங்களைப் புலப்படாமல் முன்போலச் சருமத்தைச் சேரப் பண்ணுவது.

3. **சஞ்சீவகரணி**—உயிரைத்தருவது.

4 **சாவர்ணியகரணி**—அடிபட்ட வடுவிருந்தால் அவ்வடுவை நீக்கிஉடலை முன்போலாக்குவது

**பரகாயப் பிரவேஷமென்பது:** பலருக்குப் புரியாதிருக்கலாம். ஆகையால் அதையிட்டு சிறுகதை ஒன்றை இங்கு தருவாம்.

அந்தக்காலத்தில் சகல கலை ஞானங்களுமுணர்ந்த ஞானி அதாவது அறிஞரொருவரிருந்தார். அவர் மேற்படி சாதனைகள் பலவற்றிலும் ஈடுபட்டுப் பயின்று பலவித சாதனைகளையுஞ் செய்துவந்தார். ஆனாலவர் முதிர்ச்சியடைந்து தளர்வடையும் காலமாயிருப்பதை உணர்ந்து



இளமைபெற (விரும்பினார்) நினைத்தார். அதற்குதவியாக ஒரு வாலிபனுடலை எதிர்பார்த்த வண்ண மிருக்கலானார். சிறிது காலஞ் செல்ல அவர் விரும்பியபடி ஒரு இஸ்லாமாள் இறந்து விட்டதை அறிந்து அதைப் பார்வையிட்டு அவ்வுடலிற் தம் உயிரைப்புகுத்தி இன்னுஞ் சில காலமிருந்து தாம் கற்ற வித்தைகளைத் தெரிவிக்க விரும்பித் தமது திட்டங்களைத் தம் சீடரிடந் தெரிவித்துத் தம் பூசைக்குரிய யாவுந் தருவித்து வேண்டியதைச் சீடரிடஞ் சொல்லித் தாமின்று இரவு மயானத்திற்குச் சென்று பரகாயப்பிரவேசம் செய்ய விருக்கும் நிகழ்ச்சியில் தன்னுடல் செத்து மற்ற உடல் உயிர்பெற்று வாயைத் திறக்குமென்றும் அத்தருணம் பூசையில் வைக்கப்பட்டிருக்கும் பாலை அதன் வாயில் சிறிது சிறிதாக ஊற்றி விடும்படியும் அங்கு நடைபெறும் எதையும் கண்டு பயந்து விடக்கூடாதென்றும் கட்டளையிட்டார். அவர் சொல்லியபடி அன்று இரவு பன்னிரண்டு மணிக்குப் பூசாதிரவியங்களுடன் மயானம் சென்றனர். அங்கு அன்று புதைக்கப்பட்ட இளமுடலை வெளியே எடுத்து வைத்து அதற்குரிய பூசாவிதிகளை எல்லாம் முடித்து அதனருகில் நெருங்கித் தாமும் படுத்து மந்திரித்துக் கொண்டிருந்தார். அத்தருணம் அவர் சொல்லி வைத்தபடியே குருவினுடம்பு செத்து மடிவதையும் மற்ற உடம்பு உயிரடைவதையும் கண்டு கொண்டிருந்த சீடன் அவர் கட்டளைப் பிரகாரம் மேற்படி பாலைச் சிறிது சிறிதாக அதன் வாயிலிட அவ்வுடல் உயிர் பெற்றுப் பல வருடகாலஞ் சீவித்ததாய் அறியக் கிடக்கிறது.

# திருமூலர் தமிழ் செய்தமை

**பரகாயப்பிரவேசம்:—**


சித்தவைத்திய முதல்வர்களிற் சிறந்தவரான திருமூலரும் பரகாயப்பிரவேசம் செய்தாரென்று அவர் திருமந்திரத்திலறிகிறோம். அவர் மூலனுடைய உடலுட் புகுமுன் சுந்தரநாதரென்பது அவர் பெயர். இவர் வடகயிலையிலிருந்து பொதிகையை நோக்கி ஆகமஞ் செய்ய அதாவது தமிழ் செய்யச் சென்று கொண்டிருந்தார். அப்போ இறைவன் சுந்தரநாதரைத் திருவாவடுதுறையிலேயே ஆகமத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று திருவருளாலுணர்த்தவும் அவர் பொதிகை மலையைநோக்கிச் செல்ல எத்தனித்தார். இறைவனவரைத் தடுத்துநிறுத்தித் தமிழ் நூலாகிய திருமந்திரத்தை இங்கு வெளியிடச் செய்தார். எவ்வாறெனில் அவர் திருவாவடுதுறையைக் கடந்து காவிரி நோக்கிச் செல்ல அங்கே எதிர்க்கரையிலுள்ள சாத்தனூரில் நிரை மேய்க்குமிடையன் மூலனென்பவன் அகஸ்மாத்தாயிறந்துபட ஆக்களெல்லாம் அவனைச் சுற்றிச் சுற்றி கதறும்படி செய்தார். அப்பசுக்களின் துயரினைக் கண்ட சுந்தரநாதர் அவைகளின் துயரினை நீக்கக் கருதி தம்முடலைக் காவிரிக் கரையிலிருந்த ஒரு மரப்பொந்திற் பத்திரப்படுத்தி வைத்துவிட்டு மூலனுடைய உடலிற் தம்முயிரைப் பவனவழியாகப் புகுத்தி மூலனாக எழவே ஆக்களின் துயரம் நீங்கியது. அன்று அவர் ஆக்களுடன் சாந்தனூர் சென்று பசுக்களை அவ்வவ்விடங்களில் விட்டு மறுநாள் வந்து தம்முடலைத்



தேடினார். அது இறையருளால் மறைந்துவிட்டது எனக் கண்டு அவர் திருச்சித்தம் இஃது என உணர்ந்து திருவாவடுதுறை சென்று திருக்கோவிலின் வடக்கு மூலையில் இருந்த ஆலமரத்தின் கீழ்த் தங்கி மூவாயிரமாண்டு தவஞ் செய்து;

"என்னை நன்றாக இறைவன் படைத்தான்
தன்னை நன்றாகத் தமிழ் செய்வதற்கே"
தந்திர மென்பது சார்பு மூவாயிரம்
சுந்தரனாகமஞ் சொல் மொழிந்தானே.

ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களைப்பாடி 'தமிழ் மூவாயிரம்' எனப் பெயரைச் சூட்டித் தம் மாணவர் எழுவருக்கும் அந்நூலைப் போதித்து வந்ததாக அறிகின்றோம்.



# உடலமைப்பு

மேல் நாட்டார் இந்த உலகத்தை

1. பொருள் — Matter
2. சக்தி — Energy

என இருபிரிவுகளாகப் பிரித்துப் பொருள்களை;

a. திடப்பொருள் — Solid
b. திரவப்பொருள் — Liguid
c. வாயுப் பொருள் — gass

பதார்த்தங்கள் என்றும்

சக்திகளை;

a. அசைக்கும் சக்தி — Moving Energy
b. உஷ்ணசக்தி — Heat ,,
c. ஒளிச்சக்தி — Light ,,
d. ஒலிச்சக்தி — Sound ,,
e. காந்த சக்தி — Magnetism ,,
f. மின்சக்தி — Electricity ,,
g. அத்துடன் சமீபகாலத்தில் வெளியுலகிலிருந்து வருங் கிரண சக்தி Ray Energy
h. அணுசக்தி atomic Energy என்பவைகளையும்கண்டுபிடித்திருக்கிறார்கள்.



மேலும் நமது சரீரத்தை:—

1. எலும்புக் கூடு — Skeleton
2. இரத்தகோசம்* — Circulatory System
3. சுவாசகோசம் — Respiratory System
4. ஜீரணகோசம் — Digestive System
5. ரசகோசம் — Alimentary System
6. தசைக்கோசம் — Muscular System
7. நரம்புக் கோசம் — nervous System
8. மலகோசம் } Excretory System
9. சல உற்பத்திக் கோசம் } Excretory System

எனப் பல கோசங்களாகப் பிரித்திருக்கிறார்கள்.

ஆனால் நம் சித்த ஆயுள் வேதங்களில் சித்தர் மகரிஷிகளாலாக்கப்பட்ட சாஸ்திரங்களில் அண்டத்தையும் பிண்டத்தையும் ஆராய்ந்திருக்கும் விதம் இதைக் காட்டிலும் எளிதாகவும் நுணுக்கமாவும் விரிவாகவும் விளக்கமாகவும் இருப்பதைக் காணலாம்.

இவ்வுலகத்தை ஐந்து விதங்களாகப் பிரித்து அவற்றிற்குப் பஞ்சபூதங்கள் அல்லது மூலப்பொருள்களென்றும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும் பஞ்சபூதங்களே அம் மூலப்பொருள்கள். இவ்வுலகம் நமது புலன்களால் அறியப்படுகிறது. நமது புலன்கள் ஐம்பொறிகளாலும உணரப்படுகிறது. ஆகவே நமது புலன்களும் ஐந்தாகியது.

---

* கோசம் — உறை

அவையாவன:

1. சத்தத்தை அறிதல்
2. பரிசவுணர்ச்சி
3. ரூபம் ஒளி அறிதல்
4. ரசம் சுவை அறிதல்
5. கந்தம் நாற்றமறிதல்

அவ்வைந்து புலன்களாலும் அறியப்படுவது:-

1. **ஆகாயம்:** செவிப்புலனால் அறியப்படுவது அதன் குணம் சத்தம்

2. **வாயு:** இது பரிச உணர்ச்சியால் அறியப்படுவது அதன் குணம் சத்தம் பரிசம்

3. **தேயு:** கட்புலனாலறியப்படுவது அதன் குணம் சத்தம், பரிசம், ரூபம்

4. **அப்பு:** சுவையினாலறியப்படுவது அதன் குணம், சத்தம், பரிசம், ரூபம், ரசம்.

5. **பிருதிவி:** இது மூக்கினால் அறியப்படுவது அதன் குணம் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், என்பன.

"சுவை ஒளி யூறோசை நாற்ற மென்றைந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு"

— என்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

இந்திய விஞ்ஞானிகள், இவ்வுலகம் பிருதிவி, அப்பு தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களாலாயதெனக் கண்டார்கள். இவ்விதமே உலகத்தை ஐந்து



விதங்களாகப் பிரித்து இவற்றிற்கு மூலப்பொருள்கள் எனப் பெயரிட்டனர்.

இவ்வுலகப் பொருள்கள் ஒவ்வொன்றையும் சந்திர அம்சம், சூரிய அம்சம், அக்கினி அம்சமெனப்பிரித்து, நம் சரீரத்தையும் சுவாசம் நாடிகளையுங்கூட இடைகலை, பிங்கலை, சுழிமுனை என மூன்றாகப் பிரித்துள்ளனர். இதன் விபரங்களை நம் நாடி சாஸ்திரத்திற் காணலாம்.

பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலுருவாய நம் உடலையும் காரண தேகம், சூக்கும தேகம், தூலதேகம் என மூன்று பிரதான பிரிவுகளாகப் பிரித்து விரித்துள்ளார்

**காரண தேகம்:** அட்டகாய மெனப்படும் மனம், புத்தி, சித்த மென்னும் முக்குணங்களும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்ற மென்னும் பஞ்ச தன்மாத்திரைகளும் சேர்ந்த கருவுடம்பே காரண தேகமெனப் படும்.

2. **சூக்கும தேகம்:** முப்பத்தாறு தத்துவங்களும் சேர்ந்த நுண்ணுடம்பே சூக்கும தேகம் என்றும்.

3. **தூல தேகம்:** தொண்ணூற்றாறு தத்துவங்களுஞ் சேர்ந்த பேருடம்பே தூல தேகமெனவுங் கூறி அதையும் உறுப்பியல், கர்ம பேதவியல், கருவுற்பத்தியியல் எனவும் விரித்து விளக்கியுள்ளார்

1. **உறுப்பியல்:** அதாவது அங்காதிபாதம், இதில் நமது சரீரத்தில் வேலை செய்யும் பற்பல உறுப்புகளையும் தனித்தனியாக கணக்கிட்டுக் கூறியுள்ளார்.

**கர்மபேதவியல்:** அதாவது "பரிணாமவிபாகம்" இதில் நாமுண்ணும் ஆகாரங்களுடம்பில் பல அம்சங்களாக எப்படி மாறுதலடைகிறது என்பதைத் தெளிவு படுத்திக் கூறியுள்ளார்.

3. **கருவுற்பத்தியியல்:** அதாவது "உற்பத்திவிபாகம்" இதில் நமது சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் கர்ப்பத்திலெப்படி உண்டாகிறது என்பதையும் விப்ரித்துள்ளார்.

மேலும் மனித உடலானது திரிதோஷங்கள், சப்த தாதுக்கள், மும்மலங்களையும் ஆதாரமாகவுடையது.

(i) **திரிதோஷங்கள்:** வாத, பித்த, கபமாகும்.

(ii) **சப்ததாதுக்கள்:** என்பவை இரசம் அதாவது வெண்குருதி, இரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு உட்கரு அதாவது மேதை உயிரணுக்கள் அதாவது சுக்கிலம் என்பன.

(iii) **மும்மலங்களாவன:** மலமென்பது தேகத்திலிருந்து கழியும் அசுத்தப் பொருள்கள் — இவை மூன்று பிரிவின அவை: A வாயுக்கழிவு, B. நீர்க் கழிவு, C. திடரூபக் கழிவு

A. **வாயுக்கழிவு:** கரியமலவாயு, அபானவாயு, தும்மல் வாயு, கொட்டாவி, செருமல் முதலியன.

B. **நீர்க்கழிவு:** சிறுநீர், வியர்வை, மூக்குநீர், கண்ணீர், நாசிநீர், செவிநீர் முதலியன.



C. **திடரூபக்கழிவு:** அபானமலம், நாமலம், சளி, கண் பீளை, காதுக்குடுமி, மேகவூறல், இந்திரியம், சுரோணிதம், காதுச்சீ, ஊத்தை முதலியன.

பொதுவாய் நோக்குமிடத்து தோஷங்கள் ஊட்டப் பொருள்களாகவும், தாதுப் பொருட்கள் அணு அல்லது அணுக்கூட்டங்களாகவும், மலங்கள் கழிவுப்பொருள்களாகவும் விளங்குகின்றன. இம் (1, 2, 3 ) மூன்றின் மிகுதிக் குறைவால் ஏற்படுவதே நோயெனப்படும். சிகிச்சையின் நோக்கம் அவற்றின் நிலையைச் சரிப்படுத்துவதே.

மேல் தத்துவங்கள் பஞ்சசக்தியும், நவஒளிகளுமாம்.

1. **பஞ்சசக்திகளாவன:** சிவன், சக்தி, நாதம், விந்து ஜீவன் முதலியன.


2. **நவ ஒளிகள்:** பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆதித்தன், சந்திரன், நட்க்ஷத்திர கிரகங்கள், மின்னொளி முதலியன.

ஆகவே இவைகளிலிருந்து நம் சித்த விஞ்ஞானிகள் எவ்வளவு நுணுக்கமாகக் கண்டறிந்திருக்கிறார்களென்பது புலனாகிறதல்லவா?

# எலும்புக்கூடு

**அஸ்திமண்டலம்:—**

எலும்புகள், மாமிசம், நரம்பு, தோல் இவைகளாலிச் சரீரம் அமைக்கப்பட்டிருக்கிறது. மூளையும் அதற்குச் சம்பந்தமான நரம்புகளும் இரத்த கோசமும் அது சம்பந்தமான நாடிகளும், ஈரல்களும் அது சம்பந்தமான ஏனைய கருவிகளும் தங்குவதற்கும் தொழிற்படுவதற்கும் பத்திரமான அதன் அதன் அறைகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன.



தேகத்திலுள்ள சப்ததாதுக்களில் எலும்புகள் கெட்டிபலமாகவும் அமைந்துள்ளது. இதுவே சரீரத்துக்கு அஸ்திபாரமாகும். அந்தத்தப்பாகத்தை அனுசரித்து எலும்புகள் வேறுபடும் சில நீண்டும் சில குறுகியும் சில தட்டையாயும் வளைந்தவையாயும் உருண்டையாயும் இருக்கின்றன. மாமிசங்களும் நரம்புகளும் இவைகளை மூடியிருக்கும். இவைகளின் உதவியால் எலும்புகளும் ஒன்றோடொன்று சேர்க்கப்பட்டு சரீரத்தின் உருவை பெறுகின்றது.

**தலையும் முகமும்:—**

தலை எலும்புகள் எட்டும் முக எலும்புகள் பதினான்கும் ஆக இருபத்திரண்டு எலும்புகளைக் கொண்டு தலையும் முகமும்நிர் மாணிக்கப் பட்டுள்ளது. உள்ளிருக்கும் மூளை நரம்புகள் கவசங்கள் ரத்த நாடிகள் இவைகள் தமது தொழிலைச் செய்வதற்காக அந்த அந்த ஸ்தானங்களில் உருவத்திற்கு தக்கவாறு வளைக்கப்பட்டுள்ளன. தலைக்குள்ளே சுத்த ரத்த நாடிகள் பிரவேசிக்கவும் அசுத்த ரத்தம் வெளிவரவும் எலும்புட்குட் துவாரமுண்டு. முன்புறத்தில் இரு கண்களும் இரு புறங்களில் இரு காதுகளும் தங்கும்படி மேற்படி எலும்புகள் வளைந்துள்ளன. மூக்குக்கும் வாய்க்கும் தகுந்தபடி மூன்று எலும்புகளும் இரு தாடை எலும்புகளும் அமைந்துள்ள கீழ்த்தாடை எலும்பு ஒன்றே. அது மேல்தாடையோடு சேர்ந்து அசையும். வாய் திறந்து மூடும்போது மேல்தாடை அசையாது. கீழ் தாடை மட்டும் அசையும்.

பின்புறத்தில் தலை முள்ளந்தண்டின்மேல் நிற்கிறது. இந்த எலும்பின் சகாயத்தினாலும் மார்பு, கழுத்து, முதுகு இவைகளுக்குள்ள மாமிச கோசங்களின் உதவியுமே தலையை முன்னும் பின்னும் பக்கங்களுக்கும் அசைக்கவும் திருப்பவும் கூடியதாக இருக்கிறது.

மற்றைய எலும்புகளின் கணக்கு விபரங்களை அங்காபாதத்திற் காண்க.

# உடற் கூறுகள்

## தலை (Head)

'எண் சாணுடம்புக்கும் சிரசே பிரதானம்'' என்று சொல்லுவார்கள். ஆனால் அது சாதாரணமான மொழியல்ல. அது மிகவும் அர்த்த புஸ்டியானதே. ஏனெனில் அது சரீரம் முழுமைக்கும் தலைமைக் காரியாலயமாய் அமைந்துள்ளது. அங்கிருந்துதான் சரீரம் முழுவதற்கும் கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. அதற்கு உணர்ச்சி நரம்புகளும் விசை நரம்புகளும் உதவுகின்றன. தலையில் முகமும் எலும்புகளாலாகிய ஒரு பெட்டியும், இவ்வெலும்புப் பெட்டியுள் மூளையும் வைக்கப்பட்டிருக்கின்றன.

உடலானது உட்புறத்தில் 'விதானம்' (Diaphragm) என்னுமோர் தசைத்தடுப்பினால் மேலறை கீழறைகளாய் முறையே அமைந்துள்ள நெஞ்சறை வயிற்றறை என இரு பாகமாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதன் மேல்ப் பாகமாகிய நெஞ்சறையில் சுவாச கோசங்களும் (Lungs) இருதயமும் (Heart) ஆகாரக் குழாயுமிருக்கின்றன. கீழ்ப் பாக அறையில் வயிறும் (Stomach) சிறுகுடல், பெருங் குடல் (Intestine) கல்லீரல் (Liver) பித்தப்பை (Gall Bladder) கணையம் (Pan Creas) குண்டிக்காய்கள் (Kidneys) மண்ணீரல் சலப்பை (Bladder) சுக்கிலாசயம் ஜனனேந்திரியம் முதலியவைகளுமுண்டு.

சீரணம், சுவாசம் அசுத்த நிவாரணம் முதலான சரீரத்துக்கு இன்றி அமையாத வேலைகள் ஒன்றோ



டொன்று நன்கு இணைக்கப்பட்ட பல உறுப்புகளால் நடை பெறுகின்றன. உதாரணமாக நாமுட்கொள்ளுமாகாரத்தை சீரணிக்கச் செய்து அதன் சத்தைக் கிரகித்து தேகத்தைப் பலப்படுத்தும் வேலையில் வாய், அன்னக் குழாய், வயிறு, சிறுகுடல், பித்தாசயம், கணையம் (Pan-Creas) முதலிய சீரண உறுப்புக்கள் ஈடுபடுகின்றன.

## மூளை [The Brain]

மூளை சரீரத்தின் மிகமுக்கியமான அதாவது மேலான பாகம். இது கிரேனியமென்னும் கபாலத்தினுள்ளே இருக்கிறது. ஒரு வாலிபனின் மூளை முன்பின் 50 அவு. நிறையிருக்கும். மூளையின் மேற்புறத்தில் மூன்று தசை மூடிகள் இருக்கின்றன. இம்மூன்றில் எல்லாவற்றிற்கும் மேலே இருப்பது கெட்டியான நார்களாற் பின்னப்பட்ட 'வைற்றுமி' என்பது இதற்கு "டியூரா மாட்டர்" (Dura-mater) என்று பெயர். அதற்குக் கீழ் இருக்கும் மூடிக்கு சிலந்தி வலைச் சவ்வு "அரெக்ஸ் நாயிற்" (Arachnaid) என்று பெயர். இது இடையிலும் அதற்குக் கீழே மென்றுமி "பயாமாட்டர்" (Piamater) என்னுந் தசையுமிருக்கின்றது. இதுதான் மூளைக்குச் சமீபமாயுள்ளது. இதில் அநேக இரத்தக் குழாய்களிருக்கின்றன. மூளையிற் பெருமூளை, சிறுமூளை "பாண்ஸ்வரோலி" மஞ்சாமுகம் என்பன சேரும்.

## பெருமூளை (Cerebrum)

இது ஓர் அர்த்த கோணவடிவமானது. இதுதான் மூளையின் பெரும்பகுதி. இதில் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என அநேக கருள்களிருக்கின்றன. இதுதான்

புத்திக்கு இருப்பிடம், அதுவன்றி ஞாபகம் இஸ்டம், விருப்பு, வெறுப்பு, சிந்தித்தல், நினைத்தல், சித்தசுயாதீனம், நடத்தை அபிப்பிராயம் ஆகிய இதெல்லாம் இதனுற்தான் நடைபெறுகின்றன. இதன் பல பாகங்கள் வேறு வேறு பல வேலைகளுக்காக ஏற்பட்டவை அதாவது சில விஷயங்களைக் கிரகிக்கும் இடங்களாகவும் வேறு சில உத்தரவிடுமிடங்களாகவும் இருக்கின்றன.

## சிறு மூளை (Cerebellum)

இது பெரு மூளையின் பின்பாகத்தில் சற்றே கீழாக போன்ஸ்வரேலி (Ponsvaroli) இது சிறுமூளையின் வலது பாகத்துக்கும் இடது பாகத்துக்கும் நடுவே ஒரு பாலம் போல அமைந்துள்ளது.

மஞ்சாமுகம் (Medulla Oblongata) இது பாண்ஸ்வரேலிக்குக் கீழே அதை முள்ளந்தண்டுடன் சேர்த்துக் கொண்டிருக்கும் பாகம். இது ஒரு ஸ்தம்பவடிவமுள்ள நரம்பு மண்டலம் அதாவது ஸ்தானம். இது சிறுமூளைக்கு நடுவே அதை வலது, இடது என்று பிரித்துச்சென்று கொண்டிருப்பது. முள்ளந் தண்டிலிருந்து எல்லா நரம்புகளும் இதன் வழியாயே மூளைக்குப் போவதால் இது ஓர் முக்கிய பாகமாகும். உடலின் அதிமுக்கிய விஷயங்களாகிய சுவாசம் இரத்தோட்டம் ஆதியன இதனுல் ஆளப்படுகின்றன. அதுவன்றி உடலின் பலபாகங்களிலுமுள்ள தசைகளின வேலைகளையும் இப்பாகமே ஆளுகிறது ஆகவே இதற்கு ஏதும் ஆபத்து நேரிடில் மரணமே சம்பவிக்கும் இதையே உயிர் முடிச்சென்றுஞ் சொல்வதுண்டு.



சரீரத்தின் வலது பாகத்தை மூளையின் இடது பாகமும் அப்படியே இடது பாகத்தை வலது பாகமும் ஆளுகின்றது ஏனெனில் சரீரத்திலிருந்து வரும் நரம்புகள் ஸ்பையினல் கோட் (Spinal Cord) அதாவது முள்ளந்தண்டு வழியாகத்தான் மூளைக்குச் செல்லுவதால் அதற்கு ஆபத்து நேரிடின் எந்த இடத்திற் கோளாறு ஏற்படுகிறதோ அதற்குக் கீழேயுள்ள அவையவங்களை அதாவது தசைகளை நம் இஸ்டப்படி அசைக்கவோ ஆட்டவோ முடிகிறதில்லை.

இப்பாகத்திற்தான் உடலின் சகல பாகங்களிலுமிருந்து மூளைக்கு வருஞ் செய்திகள் கிரகிக்கப்படுகின்றன. எல்லா உத்தரவுகளும் இங்கிருந்துதான் கொடுக்கப்படுகின்றன. அதற்காகத்தான் நமது சரீரத்தில் அநேக உணர்ச்சி நரம்புகளும் அநேக "மோட்டோர்" அதாவது விசை நரம்புகளும் இருக்கின்றன. இவைகளிற் சில உணர்ச்சி "மோட்டோர்" என்னும் இரு தொழில்களையுஞ் செய்யும் நரம்புகளுக்கு கலப்பு நரம்புகளென்று பெயர்.

மேற்படி இவ்விரு நரம்புகளும் ஒழுங்காக வேலை செய்தாற்தான் நமக்குச் சரீரத்திலேற்படும் உணர்ச்சிகளும் அதிர்ச்சிகளும நன்கு புலப்படும் ஆனுல் அவை செயலற்றுப்போக நேரிட்டால் அவ்வந் நரம்புகள் செல்லும் பாகங்கள் முழுமையும் செயலற்றுப் போகின்றன. அப்பொழுது ஊசியாற் குத்தினுலும் நமக்குத் தெரியாது. அதுபோல் ஒரு மோட்டோர் நரம்பு செயலற்றுப் போய் விட்டால் அந்நரம்பு செல்லும் பாகமுங் கெட்டுவிடும். அது செல்லும் பாகத்தை தூக்கவோ இஷ்டப்படி உப

யோகிக்கவோ முடிகிறதில்லை. பாரிசவாய்வு என்னும் (Paralysis) பட்சவாத வியாதியில் மோட்டோர் நரம்புகள் செயலற்றுப் போகின்றன.

## பக்ஷவாதம் (Paralysis)

இது பட்சவாதம் அதாவது பக்கவாதம், பாரிசவாதம், (Paralysis) "பறலிசிஸ்" என ஆங்கிலத்திலும் சொல்லப்படுகின்றது. பட்சவாத மென்பது தேகத்தின் மூளை நரம்புகள் சம்பந்தமான ரோகம் விசேஷமாய் உணர்ச்சி நரம்புகளும் விசை நரம்புகளும் ஒத்துழையாமை அல்லது வேலை நிறுத்தங் காரணமாகவே இவ்வியாதி ஏற்படுகின்றது. உணர்ச்சி நரம்புகளும் மோட்டோர் அல்லது விசை நரம்புகளும் மூளையில் இருபிரதான சேவகர்களெனலாம்.

உணர்ச்சி நரம்புகள் தேகத்துக்கு ஏற்படும் அதிர்ச்சிகளை உணர்ந்து சடுதியாய் மூளைக்குத் தகவல் கொடுக்கும் சேவகன். மோட்டோர் நரம்புகள் மூளைக்குத் தகவல் கிடைத்தவுடன் தேகத்துக்கு உத்தரவு அல்லது தகவல்களைக் கொண்டு சென்று அறிவிக்கும் சேவகன். அதாவது கட்டளை இடுகின்ற சேவகனெனலாம். இன்னும் தெளிவான முறையிற் கூறப்புகின், மூளைக்கு அதிர்ச்சித் தகவல்களைத் தெரிவிப்பது உணர்ச்சி நரம்பு மூளையிட்ட கட்டளைகளைத் தேகத்துக்கு அறிவிப்பது மோட்டோர் நரம்பு; ஆகவே இவ்விரு நரம்புகளும் ஒழுங்காக வேலை செய்வதாற்தான் நமக்குச் சரீரத்திலேற்படும் உணர்ச்சிகள் நன்கு தெரியும். அவைகள் செயலற்றுப் போக நேரிடில் அந்நரம்பு செல்லும் பாகமும் செயலற்றுப் போகிறது. ஏதோ ஒரு மோட்டோர் நரம்பு செயலற்றுப் போனால்



அந்த நரம்பு செல்லும் பாகமுஞ் செயலற்றுப் போகிறது அப்பாகத்தைத் தூக்கவோ, துடைக்கவோ, ஆட்டவோ அசைக்கவோ அதாவது இஷ்டப்படி உபயோகிக்கவோ முடியாது. பாரிச வாய்வு என்னும் பக்கவாத வியாதியில் விசை நரம்புகள் செயலற்றுப் போகின்றன. அதில் மூளையின் வலது பக்க நரம்பு செயலற்றுப் போனால் இடது பாரிசமும் இடது பக்க நரம்பு செயலற்றுப் போனால் வலது பாரிசமும் (வழங்க முடியாமற் போகிறது) செயலற்றுப் போகிறது.

## பக்ஷவாதம் ஏற்படக் காரணம்

அதிர்ச்சியை உண்டாக்கக் கூடிய மனவருத்தம், முக்கியமானதுமோர் விஷயத்தை இட்டதுமான ஆழ்ந்த யோசனை, பயம், கோபம், ஆற்றலுக்கு மிஞ்சிய தாம்பத்திய உறவு, கண்டபடி ஊசிகளைப் போட்டு (Injections) நரம்புகளைக் கெடுத்துக் கொள்வது போன்ற காரணங்களாற் பட்சவாத மேற்படலாம்.

## சிகிச்சை

இலிங்க செந்தூரம், ஆறுமுக செந்தூரம், நாராயண செந்தூரங்கள், பஞ்சசூதம், பட்டுக்கறுப்பு, பிரசண்டவாலை, வான்மெழுகு கனகலிங்க மெழுகு, வாலை மெழுகு, வீர மெழுகு, அஸ்வகெந்திச் சூரணம், மேகாதி அல்லது வாத ராச சூரணம், தாளங்காய் கிரந்தி எண்ணெய், தாளங்காயெண்ணெய், வீரமாணிக்க எண்ணெய், மகாவாத தைலம், வாதக் கஷாயங்கள், பூச்சு, ஒத்தணம் முதலியனவும் பொரிசினேகப் பொட்டளி முதலியவைகளும் உபயோகிக்கத் தகுந்தவை.

# சீரண உறுப்புகளும் அவைகளின் தொழிலும்

மனிதயந்திரத்தில் நாளாந்தம் நடைபெறும் நிகழ்ச்சிகளிலெல்லாம் மேலான நிகழ்ச்சி சீரண உறுப்புகளில் நடைபெறும் தொழில்களென்றே சொல்லலாம். இச்சீரணத் தொழில் நாமுண்ணும் வாய்தொடக்கம் கழியும் அபானம் வரை இரவு பகல் எப்பொழுதும் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. மேற்படி தொழில்கள் நடைபெறுவது தடைப்பட நேர்ந்தால் அதுவே நோயுறுவதற்குக் காரணமென்று சொல்ல வேண்டும். ஆகவே சீரணமென்றால் என்ன? சீரண உறுப்புகள் எவை? அவைகளின் தொழில் நிகழ்ச்சிகள் எவ்வகையில் நடைபெறுகின்றன. அவை தந்தம் தொழில்களை முறைப்படி செவ்வனே செய்ய முடியாது போவதேன்? அவை காரணமாக ஏற்படக் கூடிய ரோகங்கள் எவை? அவற்றைக் குணப்படுத்துவதற்கேற்ற சிகிச்சைக் கிரமங்கள் எவை? எவை என்று அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

வாய், தொண்டை, அன்னக்குழாய், இரைப்பை, சிறுகுடல், கல்லீரல், பித்தப்பை, கணயம், பீலிகை, (Appendix) பெருங்குடல் (Colon) குதம், அபானம், முதலியன வயிற்றறையில் இன்னும் மிகுதியாயிருப்பவை விருக்கம் (Kidneys) அதாவது குண்டிக்காய், சலப்பை (Bladder) மண்ணீரல், அதாவது பிளிகம் சுக்கிலாசயம் (Spleen) முதலியன.

மேற்படி அவயவங்களைப்பற்றிய விளக்கம் சிறிது கூற வேண்டியிருக்கிறது. கழுத்துக்கும் அபானத்துக்கும் இடையிலுள்ள பாகம் முண்டம் எனப்படுகின்றது. இதன் நடுவேயுள்ள விதானம் இதை மார்புக்கூடு வயிற்றுக்கூடு என இரு பிரிவுகளாகப் பிரிக்கிறது,



வயிற்றுக் கூண்டின் மேற்புறத்தின் வலது பக்கத்தில் கல்லீரலும் இடது பக்கத்தில் மண்ணீரலும் இவைகளுக்கு மத்தியில் இரைப்பையும் இவைகளின் பின்புறத்தில் இடுப்புக்கு நேராய் இரு மாங்காய்களும் (கிற்னிகளும்) கீழ்ப்புறம் கணயமும் இருக்கின்றது.

இவைகளுக்குக் கீழ்ப்புறம் சுற்றிலும் சிறு குடலும் பெருங்குடலும் இருக்கிறது. அடி வயிற்றின் முன்புறத்தில் மூத்திர கோசமும் இதன் பின்புறத்தில் மலகோசமும் இருக்கின்றது. ஸ்திரிகளின் அடிவயிற்றில் மூத்திரப்பைக்கும் மலப்பைக்கும் மத்தியில் கெற்பாசயமும் இருக்கின்றது.

வாய்தொடுத்துக் குதம் வரையிலுள்ள பாகம் “மகா சுரோதஸ்’ இதை ஆங்கிலத்தில் (Alimentary Canal) அலிமென்றறிக்கனால் என்று அழைக்கப்படுகின்றது.

## வாய் (Mouth)

மனிதயந்திரத்தின் முகப்பில் ஆறுவாயில்கள் இருக்கின்றன. அவற்றில் வாயே பெரிய வாயிலாக அமைந்துள்ளது. இது இரு தாடை எலும்புகளிற் கட்டப்பட்டுள்ளது. இதிற் கீழ்த்தாடை எலும்பு மாத்திரம் அசையும். மேலத்தாடை எலும்பு அசைவதில்லை. வாயைத் திறக்கவும் மூடவும் தோல்களும் நரம்புகளும் உதவியாக இருக்கின்றன. இவைகளின் முன்புறத்தில் உதடுகள் இருக்கின்றன. இது அன்ன பானங்கள் அருந்துவதற்கும் பேசவும் உதவுகிறது. இவ்வுதடுகள் பேசுங்கருவிகளில் ஓர் பாகமாகும். உதடுகளுக்கு நோய் வந்தால் பானம் பண்ணவும் போசன—மருந்தவும் பேசவும் முடியாது.

நாக்கு இது ஞானேந்திரியங்களிலொன்று. இதன் உதவியினாற்றான் ருசியை அறியக் கூடியதாயிருக்கிறது. நாக்கினுதவி கொண்டுதான் பேசவும் வேண்டும். நாக்கின்

சுகங்கெட்டால் ருசியை அறியமுடியாது. பேச முடியாது காரியங்கள் தடைப்படும். நாக்கின் ருசி எவ்வகையிற் ஞான கன்ம இந்திரியங்கள் கெட்டாலும் சுகங்கெட்டதென அறிய வேண்டும்.

உமிழ்நீர் வாயின் அடிப்பாகத்தில் மூன்று விதமான கோளங்களுண்டு, மேற்படி கோளங்களிலுள்ள உமிழ்நீருஞ் (Diyalin) 'டயலின்' சேர்ந்து மாப்பொருள்களைச் சாக்கரைத் தன்மை அடையச் செய்கிறது,

வாயிலேற்படும் வியாதிகள், கூவைக்கட்டு, வாய் விரணம, பல்வலி, முரசு தடித்து வீங்கிக் கரைதல், பல்ப் பேத்தை பயறியா முதலியன. பல்வியாதிகளிற் பயறியாவே கொடியது.

## கூவைக்கட்டு (Mumps)

காதடிச் சுரபிகள் அதாவது கோளங்கள் கட்டிநற் பெருத்து வீக்கம் கண்டு உண்டாவது. இதிற் சொற் கச்சல் கண்டு காதடியில் அதைப்புண்டாக்கி வரும் அலகை ஆட்டத் தொடரோகும். வீக்கம் படிப்படியாய் பரவும். நாலாந்நாள் அமரத் தொடங்கும். இந்நோய் பெரும் பாலும் ஒரு பக்கத்தில் வரும் பின் மற்றப் பக்கந்தாவும் இது ஒரு தொற்று நோயாகக் கருதப்படுகின்றது.

இதற்குச் சிகிச்சை:-

காரமற்ற உணவு கொடுக்கவும் சிறுகீரை அதாவது அறக்கீரை அவித்த நீர் பனங்கட்டி கூட்டிக் கொடுப் பது அன்றேல் அதன் கடையல் கொடுக்கலாம். இலகு விரேசனகாரி கொடுப்பதும் நன்று. கூடிய வேதனை செய் தால் கீழேயுள்ள பூச்சு கஷாயங்களாற் குணமடையலாம்

கூவைக் கட்டுப் பூச்சு:

செங்கத்தாரி, செஞ்சந்தனம், மத்தைஓடு, சமன் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றுலரைத்துப் பூசவும் கட்டிகரையும்.



**இதற்குக் கஷாயம்:**

கடுக்காய், கருஞ்சீரகம், நாயுருவி வேர் வகை சம னாய் எடுத்து பெரியோருக்கு வகைகள் 4 பன்னிரண்டு களஞ்சுக்கு ஒருபடி நீர்வைத்துக் காற்படி எடுத்துப பனங் கட்டி கூட்டிக் கொடுக்கவும். இதற்கு வயிற்றாலே போய் சுரமுந் தணிந்து அழற்சியும் நீங்கிக் குணமாகும். சிறு வருக்குப் பாதி.

## வாய் விரணம் (Sore mouth)

வாயினுள்ளே சிவந்து தடித்து நாவினருகுகள் சிவந்து அவியலாய் இருப்பது வாய்விரணம் எனப்படும், இஃது உஸ்ணங் காரணமாகவும் வாயிலரிப்பு உண்டாகக் கூடிய பொருள்களை வாயிற்போட்டுச் சுவைப்பதாலும். மலபந்தம், சீரணக் கோளாறுகள காரணமாகவும் சில சம யம் இரசம் வீரம், பூரம், சேர்ந்த மருந்துகளை உட் கொண்ட கெடுதலாலுமேற்படலாம்.

**இதன் சிகிச்சைக் கிரமம்:**

1. மேற்படி ரோகத்துக்கு வெங்கார பற்பத்தை அல்லது (*Borax*) "பொரக்ஸ்" சைத் தேனிற்கரைத்துப் பூசிவர வாய்விரணம தீரும்.

2. வெங்காரம் ஒரு 'டிருமோடு' தேன் ஒரு அவு. கூட்டி மேலுக்குப் போட வாய்விரணம், துத் திரோகம், அக்கி இவை தீரும்.

3. நாலு டிரும் வெங்கார பற்பத்தை எட்டவுன்சு சுத்த ஜலத்திற சிறிது தேனுங் கூட்டிக்கலந்து வாய் கொப்பளிக்க வாய் விரணம் இரசவேகம தீரும.

4. இதேபோல் "குளோறயிட்" அத்துடன் சிறிது கொண்டிஸ் ஒரு போத்தல் ஜலத்துடன் ஒரு மேசைக்கரண்டி தேனுங்கூட்டி நன்கு கலக்கி வாய் கொப்பளிக்க வாய்விரணம் தீரும் என்பாருமுளர்.

5. கருவேலம்பட்டை $1\frac{1}{2}$ அவு. அல்லது மாயாக்காய் $1\frac{1}{2}$ அவு. ஒரு போத்தல் கொதி நீரிற்போட்டு ஆறவிட்டு 2 டிரும் படிகாரத்தூள் சேர்த்து வாய் கொப்பளிக்க வாய்விரணம், ஈறு கரைதல் தொண்டைப்புண் உண்ணுக்குத் தளர்ச்சி முதலியன தீரும். அத்துடன் சிறிது தேனுங்கூட்டி வாய் கொப்பளிப்பது உசிதம்.

## பற்கள் (Tooth)

நாம உண்ணு முணவை அரைப்பதற்குப் பற்கள் உதவுகின்றன. இது கீழ்த்தாடை அசைவினுல் நடைபெறுகின்றது. சிறுவருக்குப் பாற்பற்கள் 5 வயதுக்கும் 7 வயதிற்கும் இடையில் விழுந்து 10 வயதிற்கும் 12 வயதிற்குமிடையில் அவைகளுக்குப் பதிலாக ஸ்திரப் பற்கள் முளைத்துக் கொண்டிருந்து 14 வயதிற்குள் முளைத்துவிடும். கடசிக் கடவாய்ப் பற்கள் மட்டும் 20, 22 வயதில் முளைக்கும். இவைகளுக்கு விவேகப்பற்கள் என்று பெயர்.

### பல்வலிக்கு

இது சிதோஷ்ண மாறுபாட்டாலும் சீரண அவையவங்களினதும் நரம்புகளினதும் கோளாறுகளினுலும் மலபந்தம், சொத்தைப்பல், வாயு முதலியவை காரணமாகவும் பல்வலி, பற்கொதி, முரசு தடித்து வீங்குதல் ஈறுகரைதல் முதலிய வியாதிகளேற்படலாம்.



### சிகிச்சைகள்

இவ்வியாதியிற் பல்வலியை உடனே நிறுத்துவதற்கு கறுவாத்தைலம் "கிறிசோல்ற்" "பிளாட்டகோ" கராம்புத்தைலம் முதலிய ஆங்கில மருந்துகளில் ஏற்ற ஒன்றைப் பாவித்தாற் குணமடையலாம் என்பர் சிலர். எனினும் நம் சித்தமருந்துகள் மிகநன்று.

### பல்வலிக்கு

1. வராகி மூலமென்ற நிலப்பனைக் கிழங்கைக் குப்பைமேனிச் சாற்றிலரைத்து அதை நல்லெண்ணெயிற் காய்ச்சி பல்வலிக்கும் பக்கங்களிற்துளி துளியாய் விட்டால் பல்வலி தீரும். பற்புழுசாகும் குணமுண்டாம்.

2. காசுக்கட்டி, படிகாரம், கொட்டைப்பாக்கு, இவைகளைச் சம எடை எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து காலை மாலை பல்துலக்கி வெந்நீரால் வாய் கொப்பளித்துவர பல்நோய் தீரும்.

3. செயக்கொட்டை பலம் 10, கறிஉப்பு பலம் 5 ஒரு கலசத்திற் போட்டு அவை முழுகும்படி எருக்கலம் பால்விட்டு வாயிலோடு போட்டு முடிச்சீலை மண்செய்து முளப்புடம் போட்டெடுத்துப் பொடித்துப் பல்துலக்கிவர தந்தசூலை தந்த வாய்வு பயறியா இவை தீரும்.

4. **பல்நோய்க்குத் தைலம்:** கண்டங்கத்தரிப்பழத்தை உமிக் காந்தலிற் சுட்டு பாகலிலைச் சாற்றுலாட்டி நல்லெண்ணெயிற் போட்டுச் சூரியபுடம் வைத்துப பல்லிற் தடவப் பூச்சிமாளும்

5 பல்வலி, பல் அசைவுக்கு அடசுமரக்காரம் பழத்தையும் செம்முள்ளி வேரையும் சூரணித்து

வேண்டும்போது கரண்டியிற் சிறிது நல்லெண்ணெயூற்றி அதிற் சிறிதளவு தூளைப் போட்டுக் கொதிக்க வைத்து பல்வலிகடும் பாகத்தில் அடைக்கவும் பல்வலி நீங்குவதுடன் பல்இறுகும்.

## தந்தசூலை (பற்பேத்தை)

இது பல்லுக்கும் சொக்குக்குமிடையிலேற்படுங் கட்டு அல்லது வீக்கம்.

1. இதற்கு அரசந்துளிர்' உப்பு, கொறுக்காய் 1. ½, ½ வீதங்கூட்டி அரைத்துத் தூதுளங்காய் அளவுருட்டி மெல்லிய வெண்துணியிற் பொட்டளிகட்டி நல்லெண்ணெயிலூறப்போட்டு அடசிவர வீக்கங் கரைந்துடைந்து குத்துவலி சாந்தமாகும் பின் மருத்து நெய், மருந்தெண்ணெய் அடசிப் பூசவும்.
2. சீனக்காரம், துரிசு, கறியுப்பு, கொறுக்காய் சமனாய் எடுத்து மெழுகுபதமாய் அரைத்து தூதுளங்காயளவு பொட்டளிகட்டி நோயுள்ள இடத்திலடசிவர வீக்கங்கரைந்து குத்துவலி சாந்தமாகும். கட்டுடைந்து விரணமிருந்தால் கடுக்காயை அவித்துச் சீனக்காரப் பொடியுமிட்டுக் குலுக்கி வாய் கொப்பளிக்க விரணந்திரும்

## ஈறு கரைதல்

உஷ்ணங் காரணமாகவோ மேக நீர் சம்பந்தமாகவோ ரசமருந்து காரணமாகவோ ஈறு அவிந்து கரைந்து அதிக வலியும் விண்விண் என்ற தெறிப்பு, சீழ்பிடித்தல், இரத்தக்கசிவு முதலிய குணங்களுமேற்படுகின்றன.

**அதற்குமருந்து:**

1. வெக்கிளுவம்பட்டை, கருவேலம்பட்டை களிப்பாக்கு, சீனக்காரம், கைம்பு இவை சரிசமன் எடுத்து தூள் செய்து பல்துலக்கவும் மேற்படி ஈறு கரைதல் குணமாகும். மேற்படி சரக்குகளை எட்டொன்றாய்க் கஷாயஞ் செய்து வாய் கொப்பளிக்க பல்நோய், பல்வலி, முரசு கரைதல் சீழ் இரத்தக்கசிவு இவைதீரும். பல் இறுகும்.



## முரசு வளரப் பற்பொடி

2. இருபத்தைந்து அல்லது 50 கடுக்காய்களைக் குத்தி அல்லது சீவிப் பொடித்து அதிற்போதிய காட்டாமணக்கம் பால் விட்டுக் குழைத்து வில்லை தட்டிக் காயவைத்து பொடித்து இப்படியே பத்துமுறை செய்தபின் அத்துடன் கறியுப்புச் சீனக்காரம் அளவாய்க்கூட்டிப் பல் துலக்கிவரத் தப்பாது முரசு வளரும்.

## பயறியாவுக்கு

3. ஒருபடி தண்ணீரில் அரைகால் இருத்தல் புங்கம் பட்டையை இடித்து அதிலிட்டு (¼) காலாய்க் கஷாயம் பண்ணி நாலு களஞ்சு கடுக்காய்த் தூளும் போட்டுக் '¼' படி நல்லெண்ணெயிற் காய்ச்சி வாய் கொப்பளித்துவர பயறியா உண்டாகாது.

## தொண்டை நோய்

தொண்டை இது வாயினுள் பின்புறமாக உடலுக்கு அன்னபானஞ் செல்கிற புனர்போன்ற ஒரு வாயிலாகும். இதனிருபக்கங்களிலும் இரு கோளங்களிருக்கின்றன. இதிலேற்படும் வளர்ச்சியைக் கோள வளர்ச்சி அல்லது தசை வளர்ச்சி என்பர். அஃதை ஆங்கிலத்தில் (Tonsillitis)

ரொன்சில் என்றழைக்கப்படுகிறது. இவ்வளர்ச்சி பெரும்பாலும் சிறுவர் சிறுமிகளை அதாவது குழந்தைகளையே பெரிதும் பாதிப்பதைக் காணலாம். அதிக உஷ்ணம் கணம், மலபந்தம் முதலிய காரணங்களால் மேற்படி கோளங்கள் அழற்சியுற்று வீங்கிப் பெருத்துக் கட்டியாகி அதாவது கட்டாகி சீழ்பிடிக்கவுஞ் செய்து விடுகிறது. அத்துடன் சிறிது காய்ச்சலுமிருக்கும். இது தொடக்கத்தில் தொண்டை நோகின்றது அன்னபானம் விழுங்க முடிவதில்லை. மெல்லிய காய்ச்சல் இவ்வளவுதான். ஆனால் வைத்தியர் வாயைத் திறந்து உள்த் தொண்டையைப் பார்த்தால் மேற்படி கோளங்கள் சிவந்து வீங்கி சிலருக்குச் சிறிய தேசிக்காயளவு பெருத்து சில சமயம் வெழுத்துமிருப்பதைக் காணலாம. சிலருக்குத் தொண்டையுள் மென்தசைகளிற் சளிகொண்டு வீங்கிச் சில சமயம் மூட்பருக்கள் போட்டு உபத்திரவமடைவதையுங் காணலாம். அதுகண்டக் கிரந்தியாகவும் கூடும்.

### கண்டக் கிரந்திக் குணம்

கண்டக்கிரந்திக் குணம் கேளீர்
காது மடைக்கும் வாய்மெலியும்
மண்டை முழுதும் பரந்தேறும்
வருந்த மிகவே உண்டாகும்
தொண்டை கனத்துச் சறளி கொள்ளும்
சொறியுங் கண்டம் வீங்கிடுமே.

என்றாகி விடுகிறது. இதற்கு ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்து வந்தாற் சில தினங்களிற் குணமடையலாம். அசாக்கிரதையாயிருந்து நோய் முற்றிய நிலைக்கு வந்துவிட்டால் தொண்டையுட் கட்டாக்கி சீழ்ப்பிடித்து தொண்டையிலிருந்து காது வரை நோவலிப்பு, காதடி வீக்கம், தலைவலி முதுகுவலி, வாயில்நாற்றம், தொண்டைக் கம்மல் தண்ணீர் கூட விழுங்கமுடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது இதில்



நாக்குத் தடித்து வீங்கினால் மூச்சேவிட முடியாமல் அகால மரணமுஞ் சம்பவித்து விடுகிறது. ஆனால் அத்தறுவாயில் மருதம்பட்டைத் தைலம் பூசி அடச உடனே நாக்குத் தடிப்பு எடுபட்டு விடுகிறது. கண்டம் விஷகலையின் இருப்பிடம் கண்டத்திலு மடிநாக்கிலும் பருக்கள் போட்டு கபமதிகரித்து இருமலுமேற்பட்டு சளி ஒட்டுக்கோளையாகி மாங்தையாவது முண்டு. இரும ஒட்டுக்கோளை வெளிவராது. மூச்சு முட்டி அவஸ்தைப்படுவதுமுண்டு. அது நாளடைவில் கிரந்திவாதம், ஆமம் விஷகலையிலுள்ள விஷம் அது வறண்டு கான்சராகி ஆபத்துக்குள்ளாவதுமுண்டு.

### தொண்டை நோநெய்

சீந்தில் பனரைப்பழம் இருசீர் சுக்கு காயம் உள்ளி துத்தம்துரிசு திற்பலி மிளகு வெண்காரம் வகைகளஞ் சு· க. வெற்றிலைச்சாறு பசுநெய் வகைபடி ¼ கால்நொடி பதங்காய்ச்சி பூசவும் அடசவும் மிடற்று நோ, சளி, இருமல் அவியல் சேடந்தீரும். முரசு வளர்தல் குறையும் ரொன்சில் கரையும்.

மிடற்று நோவில் வாந்திக்க புளரக்காயை உரைத்து பனங்கட்டி கூட்டிக்குடிக்க உவாந்தி உண்டாகி சளிக்கட்டு வெளியாகும். மிடற்று நோவுக்கு அடச காரரிசி பட்டுக் கொட்டை கடுக்காயிவை மூன்றையும் பொடித்துப் பொட்டளி கட்டி அடச கண்டமாலை, கழுகண்டமாலை, கண்டக்கரப்பன் முதலியன தீரும்.

### மிடற்று நோப் புகை.

கார்போகியும் கடுக்காயுஞ் சமன் சூரணித்து சுங்கானிலிட்டுத் தணல் போட்டுப் புகைகுடிக்கவும். இப்படி நாள் 3, 4 முறை குடித்து புகையை விழுங்க தொண்டை நோ அதிசயிக்கும்படி குணமாகும். கிரந்தி சளி காரணமாயின் 2, 3 தினத்திற் தீரும்.

## கண்டமாலை மிடற்று நோவுக்கு

வெள்ளறுகு காட்டாவரசு செருப்படி புங்கம்வேர் இடித்துத் தூளாக்கி அத்துடன் கோட்டம் மதுரம் பீனாறி செஞ்சந்தனம் நற்சீரகம் வெழுத்தல் உள்ளி வசம்பு தூளாக்கிப் பசுநெய் கொதிக்கவைத்து வெடிபதத்தில் முன்வேர்த்தூள் பின் சரக்குத்தூள் போட்டு வடித்து உள்ளே அடசவும் வெளியே பூசவும் மிடற்றிலுண்டாகும் எவ்வித வியாதியும் தீரும்.

## தொண்டை நோ நெய்

நெல்லிக்காய் வசுவாசி கராம்புதான்றி இருசீர் ஏலம் இலவங்கம் அக்கருகோரோசனை களிப்பாக்கு மாயக்காய் ஓமம் உலுவாமதுரம் சதகுப்பை கோட்டம் மல்லி செவ்வள்ளி செஞ்சந்தனம் நாகம்பூ உள்ளிவகை கள. க. நெய்படி ஒன்று வெற்றிலை வெடிபதம் வடித்து அடசப் பூச மிடற்றுநோ முட்டைப்பன் கண்டமாலை எவ்வித கட்டும் தொண்டை வியாதி சகலதும் தீரும்.

## மிடற்று நோவுக்கு வேப்பெண்ணெய், கோதி எண்ணெய்

காண்டை காற்றோட்டி பெருமருந்து தூதுவளை வட்டு ஆடாதோடை முருங்கை சீந்தில் கொடிவேலி இவைவேர் சீரகம் ஓமம் மதுரம் துத்தம் துரிசு கைப்பு களிப்பாக்கு வெண்காயம் வெளுத்தல் மல்லி உலுவா கெந்தகம் அக்கருபனரைப் பழம் வகை சமன் வேப்பெண்ணெயில் வெடி பதங்காய்ச்சி அடசப்பூச மிடற்றுநோ சகலதும் தீரும்.



## கன்னக் கட்டு காதடி வீக்கந்தீர

தேற்றுக் கொட்டை புற்றும்பழம் கோழிமுட்டை வடமஞ்சல் ஊர்மஞ்சல் தேற்றுக் கொட்டையை அவித்து கோழிமுட்டை விட்டரைத்து பின் இருமஞ்சலுங் கூட்டி பசுச்சாணியைப் புளிந்தெடுத்த சாற்றிலரைத்து கொதி பண்ணிப் பூசவும் கன்னக்கட்டு காதடி வீக்கம்தீரும்.

## வாய்க்குள் சொக்கிற் தடிப்புக்கு

புகையிலை கஞ்சாஇலை சமன் கூட்டி முடிதும்பைச் சாற்றாலரைத்து ரொட்டி தட்டி மேற்படி தடிப்பிலடசவும் தடிப்புக் கரைந்து சுகம் உண்டாகும். **இந்நோயைத் தொடக்கத்திற் கவனியாது அசாக்கிரதையாயிருந்து விட்டாற் கொடுப்புப்பீறி "கான்சர்" (*Cancer*) முதலியனவு முண்டாகலாம்.**

## கொடுப்புப் பீறி பல்லடி வியாதி ஆருக புண்ணுக்கு

துத்தம் துரிசு கைப்புக் களிப்பாக்கு இந்துப்பூ கடுக்காய் மதுரம் வேம்பாடல் வகை கள. 2. செங்கத்தாரி மருதம்பட்டை குமிளம்பட்டை ஒதியம்பட்டை கோடகசாலைஇலை (ஆவரசம் இலை) இவை எல்லாமிடித்துப் பிளிந்து வகைபடி $\frac{1}{4}$ கால் வேப்பெண்ணெய் $\frac{1}{4}$ நல்லெண்ணெய் $\frac{1}{2}$ அரை கூட விட்டுக் காய்ச்சி அடசப் பூசவும் கொடுப்புப் பீறிபல்லடி வியாதி ஆருதபுண் **சகலமும்தீரும்.**

## அன்னக் குழாய்

இதன் வழியாகவே நாமுண்ணும் ஆகாராதிகள் அன்னாசயத்தை அடைகிறது. இதன் முன்னால் மூச்சுக் குழாயும் உடன் செல்கிறது. ஆனால் ஆகாரம் அன்னக் குழாய் வழியாகச் செல்லும்போது அது காற்றுக் குழாய்க்குட் சென்று விடாது எபிக்கிளாடிஸ் (*Epiglotis*)

என்னும்மூடியால் காற்றுக் குழாயின்வாய் மூடப்பட்டு விடுகிறது. தவறிச் சிறிது ஆகாரம் சுவாசக்குழாய்க்குட் சென்று விட்டால் மூச்சு முட்டாக்கி இருமலோ, தும்மலோ, செருமலோ ஏற்பட்டு அவ்வாகாரம் வெளியேறி விடுகிறது. இதையே புரைக்கேறுதல் அல்லது புரைக்கடித்தல் என்கின்றோம்.

## அன்னசயம் (The Stomach)

இது ஒரு பைபோல் இருப்பதால் இரப்பை என்றுஞ் சொல்லப்படுகிறது. இது வயிற்றறையின் இடதுபாகத்திலிருக்கிறதெனலாம். இரைப்பைக்குளோருட்கவச (*linine*) மிருக்கிறது. இஃது ஆமாசயம் மியுகஸ் மென்ரேன் (***Muecous Mentorane***) என்று சொல்லப்படுகிறது. இது மடிப்பு மடிப்பாய் இருப்பதால் நாமாகாரமுண்டதும் விரிந்து சுருங்கித் தன் வேலையைச் செய்கிறது. அன்னப்பையின் உட்பாகத்தைப் பூதக்கண்ணாடியாற் பார்த்தால் அதிற் பல துவாரங்கள் இருப்பதைக் காணலாம். அவைவழியாகவே ஆமாசயப்புளிப்புநீர் (*Gastric Juice*) இரைப்பைக்கு வந்து உப்புத்தன்மையான வஸ்துக்களைச் சீரணிக்கச் செய்து உணவை அன்னப்பாகாக்குகிறது. அன்னப்பையின் தசைகளில் நுண்ணிய இரத்தக்குழாய்களும் நரம்புகளுமிருக்கின்றன. அவைவழியாகச் சில சத்துப்பொருள்கள் கிரகிக்கப்பட்டு நரம்புவழியாக உடலுக்குச் செல்கிறது. அன்னசயத்திலுண்டாகும் பிரதானரோகம குன்மம் எனப்படுகிறது.

## குன்மம் (Cancer of the Stomach)

**குன்மம் வரக் காரணம்:-**

அவரவர் செயுங் கர்மங்கள் காரணமாயும் கடுஞ்சூடு ஆகாஉணவு ஆகாரமுண்ணுங் காலபேதம மதுபானம் கடுங்கோபம் பிடிவாதம் அதர்மசிந்தை இவை காரணமா



கவும் உண்டாகலாம் அன்னசயம் ஈரல் சிறுகுடல் ஆகிய மூன்று உறுப்புக்களிலுமேற்படும் நீர்ச்சுரப்பு ரணவீக்கங்கள் காரணமாகவும் வயிற்றுவலி ஏற்படலாம்.

இரைப்பைக்கும் கல்லீரலுக்குமிடையிலுள்ள பாகத்திலும் இரப்பைக்கும் சிறுகுடலுக்குமிடையிலுள்ள "டியூடனத்திலும்" அதாவது முன் சிறுகுடலிலுமேற்படும் நீர்ச்சுரப்பு ரணவீக்கங் காரணமாகவும் குன்மமேற்படுவதாய் அறியக்கிடக்கிறது. ஈரல்வீங்குதல் ரணமுண்டாகுதல் காரணமாகவும் இரைப்பைவீக்கம் இரணமுண்டாகுதல் காரணமாகவும் குன்மமேற்படலாம். இவைகாரணமாய் அசீரணம் புளித்தேப்பம் நெஞ்செரிப்பு உவாந்தி வயிற்றுவலி வயிற்றெரிவு ஓங்காளம முதலிய குணங்கள் அவ்வப்போது தோன்றிமறையும். இவைகளே குன்மத்தின் ஆரம்பகுணங்குறிகள்.

இதில்வாதகுன்மம் பித்தகுன்மம் சேடகுன்மம் வலிகுன்மம் எரிகுன்மம் கொலைகுனமமெனப்படும். இவை வலப்புறத்திற் காணப்படின் ஈரலைப்பற்றியதென்றும், இடப்புறத்தில் வலி காணப்படின் இரப்பை குடல் வியாதிஎன்று அறிந்து கொள்ளவும். குன்மமுண்டாவதின் பிரதான காரணம பட்டினி எனலாம். பெரும்பாலும் வேளைக்கு ஆகாரம் ஒழுங்காக உண்ணாமல் பசிகிடந்து ஒருநாளைக்குப் 10 மணிக்கும் மறுநாளைக்கு 4 மணிக்கும் பசி அடங்கியபின்னும ஆகாரங்கொள்ளல்.

இப்படியாக ஆகாரங்கொள்ளுங் காலபேதத்தால் இரணமேற்பட்டு சில ஆண்டுகளாக இருந்து ரணமதிகரித்தபின்தான் கொடிய வயிற்றுவலி ஏற்படுகிறது அநிலைற்தான் குன்மவியாதியைக் குணப்படுத்துவது (நீக்குவது) சுலபமல்ல என்பர். மேற்படி குணங்களைத் தொடக்கத்தில் குணப்படுத்திக் கொள்ளாது விட்டால் ஒறுக்க

முடியாத ஓங்காளம் எதிரெடுப்பு பொறுக்கமுடியாத வயிற்றுவலி அடக்க முடியாத தாகம் மேல்வயிற்றில் வியர்வை ஏப்பம் நெஞ்செரிப்பு சாப்பிட முடியாமை பெலக் குறைவு முதலியகுணங்கள் உண்டாகிப் பெரிதும் வருந்துவர். இதுவே குன்மமென்றும்சொல்லப்படுகிறது.

இரைப்பையின் பிரதான வியாதி குன்மம் இரப்பைக்குங் கல்லீரலுக்கு மிடையிலுள்ள உறுப்பின் கீழ்ப்பாகத்தில் இரணமேற்பட்டிருப்பின் (*Pepticaleer*) அன்னவர்களுக்கு ஆகாரமுண்டவுடனே வயிற்றுவலி காணும், சிலருக்கு வாந்தியுமேற்படும். மேல்பாகத்தில் ரணமேற்பட்டிருப்பின் உண்ட அன்னஞ் சீரணிக்கும் காலத்தில் வயிற்றுவலிகாணும் சிலருக்கு வாந்தியுமேற்படும்.

குன்மம் (8) எட்டுவகைகளுண்டென்று சித்தர்கள்வெகு விரிவாயுந் தெளிவாயுங் கூறியிருப்பதை நாமறிவோம். அவைகளிற் பித்தகுன்மம் ஈரலிலேற்படுவது:

உண்டியை மறுக்கையாலும்
　　உவட்டி நெஞ்செரிக் கையாலும்
மண்டி நின்றெதிரெடுந்து
　　வயிற்றையே வலிக்கை யாலும்
பண்டுருன்பழ மலந்தை
　　பயித்தியஞ் செய்கை யாலும்
விண்டுநான் பித்தகுன்மம்
　　இதுவென வியம்பினரே.

### கோலை குன்மம்

மேல்வயிறதனில் வந்து மிடைபடவயிறெரிந்து
சாலவேவாய் நீருறிந்தறு கிடாதேப்பமுண்டாய்
சீலமார் குழலினளே சிறுக உள்வெதுப்புமென்னில்
கோலமாங் குழலினளே கோலைகுன்மவாயுவாமே.



ஆகாரமுண்டவுடன் வயிற்றுவலி காண்பவர்களுக்குக் கெதியிற் சுகப்பட்டுவிடும். ஆனால் உண்டபின் 4மணி நேரங்கழித்து வயிற்றிலாகாரங் குறைந்த காலத்தில் ஏற்படும்வயிற்றுவலியை நீக்குவது கஷ்டமாகும். இவர்களுக்கு ஏற்படும் இரணமானது ஆருத மேகரணமாகும். இதை ஆங்கிலத்தில் (*Cancer of the Stomach*) என்பர். அன்னாசயத்திலிருந்து குடலுக்குப் போகும்வழியில் "டியூடனத்திலும்" விரணமேற்படுவதுமுண்டு அதற்கும் வயிற்றுவலி உண்டு.

### சிகிச்சை.

சாதாரண மருந்துகளால் இவ்விரணத்தை மாற்றிவிட முடியாது ஆகையாற்தான் இதைக் கஸ்டசாத்திய ரோகமென்றும் கர்மரோகமென்றும் மதிக்கின்றனர். இதைநீக்க நம்சித்தர்கள் எண்ணிறந்த மருந்துகளை இந்நோய்க்காகக் கூறிவைத்துள்ளார். அவற்றுள் முக்கியமாக ஆருத ரணத்தையும்மாற்றக்கூடிய மருந்துகளே சிறந்தவை. அவையாவன மயில்துந்தபஸ்பம், தாம்பிரபஸ்பம், சிந்தூரம் உப்புச் சுண்ணங்கள் பூநீற்றுச்சுண்ணம் கொமட்டிக்காயுப்பு கல்ச்சுண்ணாம்பினுப்பு நவச்சாரஉப்பு அயகெந்திபற்பம் அல்லது ரணத்தைச் சீக்கிரம் மாற்றக்கூடிய மூலிகைகளாய மருந்துகளாலும் இந்நோய்தீரும். அவற்றிற்சில:-

### குன்மத்துக்கு.

"குமட்டிவேர் கற்றாளை சுக்கு குலக்கடுகு ரோகணியும்
சமமுறக் குளத்தின்பாலை அதிகமாய் மதுரங் கூட்டி
அமரிநாழிநீரும் உளக்கதாய்க் காய்ச்சி உண்டால்
குமுறியே குடல்மதுங்கும் குன்மங்கள் பலவும்போமே."

### அயகெந்தி பஸ்பம்

சுத்திசெய்த அரைபொடியுங் கெந்தகமும் சரிசமன் வகை கள கஎடுத்து குமரிச்சாற்றாலரைத்துப் பற்பமாக்கி

வெய்யிலில்வைத்துப்பின் அதிற்புகை எழும்பிஞல் அதுவே பதமென்றறிந்து எடுத்து அதைப் பற்பமாக்கி வைத்து ஒரு நாளைக்கொரு நேரம் வெருகடிகொள்ள புளித்தேப்பம் பீலிகை குடற் புரட்சி பாண்டுரோகம் முதலின திரும்.

## குன்மமெட்டுந் தீரச் சூரணம்

பன்னிய வாதபித்த பகர்ஐய குன்மமெல்லாம்
நன்னிய சத்திகுன்மம் நலந்திடுவாய் நீர்க்குன்மம்
கன்னிய எரியின்குன்மம் கதித்திடும் பிரட்டுகுன்மம்
குன்னிய குன்மந்தீரக் கூறங்கேள் மருந்துதானே.

கூறிய நாவிசூதம் கொடிய வெங்காரந்தாரம்
தேரிய இருஷலிங்கம் திகள்மனே சிலையுங்காரம்
காறிய கெந்தகந்தான்கள் திரிகடுகு கூட்டி
ஆறிய பொடியதாக்கி அதிற்தேன் விட்டருந்துவாயே.

அருந்திட வாதபித்த ஐயமோடிதற்குச் சத்தி
வருந்து வாதத்தில் நாலும்வளர்கல பித்தந்தானும்
பொருந்து மையத்திற்பத்தும் போகுமே இவைகளெல்லாம்
திருந்தியவாத பித்த சேடமுந் தீரலாமே

## மயில்த் துத்தபஸ்பம்

மயில்துத்தம் ஒரு பலம் வேப்பிலை நாலுபலம், கூட்டி அரைத்துப் பில்லைசெய்து ஒரு குடுவையிலிட்டு வாய் மூடிச் சீலமண்செய்து (20) இருபது விருட்டியிற் புடமிட்டெடுத்து அத்துடன் மறுபடியும் (4) நாலுபலம் வேப்பிலை சேர்த்து முன்போலரைத்துப் பில்லைதட்டி உலர்த்தி (2-ம்) இரண்டாம்முறையும் புடம்போட்டெடுத்து நெய் தேனிற் சாப்பிட தீரும். இக் கருமையாயிருக்கும் பற்பத்தைப் பதனம்பண்ணிக் காலை மாலை நெய்யில் அல்லது தேனில் ஒரு அரிசி எடை கொடுத்துவரச் சில வாரங்களில் ரணம்மாறி மேற்படி நோய்கள் நீங்கும். இப்பஸ்பத்தை எங்கு ஏற்பட்ட ஆருத ரணமாயிருந்தாலும் உபயோகிக்கலாம்.



## இந்துப்பு பற்பம்

இந்துப்பு ஒரு இருத்தல் ஒரு பாத்திரத்திலிட்டு ஒரு படி தேசிப்புளியில் (3.) மூன்று நாளூறியபின் எடுத்து அரைத்து தண்ணீர் காய்ச்சிப் பழகிய மட்பாண்டத்திலிட்டு நீர்சுண்ட வறுத்தரைத்து வைத்து அதில் ஒரு வெருகடிவாயிலிட்டு நீராகாரம் சாப்பிடவும். எரிகுன்மம் பித்த குன்மம் வாதகுன்மம் இவை தீரும். பசிதீபனமுண்டாம்.

## குரு பஸ்பம்

கடற்கற் சுண்ணம் (கடற்கரையிலொதுங்குங் கல்) இதை ஒரு பாண்டத்திலிட்டு சீலமண்செய்து கரிஅடுப்பில் ஒரு மணி நேரம் வைத்து ஊதி எடுத்துக் கொள்க. இது சமுத்திரத்திலிருந்து விளையும் ஒருவித உப்பு. இக் கல்லையே குருஉப்பு என்று தெரிந்து கொள்ளவும். இது தான் அண்டக்கல்

## பூ நீற்றுப்புச் செய்யும் விதம்

சித்திரை வைகாசி மாதங்களில் களர் பூமியில் உளமண் விளையுமிடத்தில் பௌர்ணமி தினத்தன்று அதிகாலை சூரிய உதயத்துக்குமுன் கதிர்போல் ஒரு அங்குலம் முதல் 6 அங்குலம் வரை பூத்துக் கிளம்பியிருக்கும் பூநீரை ஒரு பீங்கானில் மண்படாமல் எடுத்துக் கொண்டபின் அதை ஒரு பாத்திரத்திலிட்டு குருபஸ்பத்திலொரு சிட்டிகை எடுத்து அதிற்போட்டுக் கலந்து பகலிற் சூரியனிலும் இரவிற் சந்திரனிலும் காயவைக்க அதிலிருந்து எண்ணெய் போன்று ஒரு வஸ்து வெளிப்படும். அதை ஒரு புட்டியிற் பத்திரப்படுத்துக. மிகுதியான உப்பை இரண்டுநாட் காயவைத்து மறுபடியும் அதில் ஒரு சிறுசிட்டிகை குருபஸ்பமிட்டுச் சேர்த்துச் சாய்வாய் வைத்து ஒரு பாத்திரத்தில் விழும்படி சந்திரனில் வைக்க வேறுவித வர்ணத்தோடு நீர்பிரியும். மீண்டும் மிகுதி உப்பை இரண்டுநாட் காயவைத்

துக் குருபஸ்பம் போட்டுச் சந்திரனில்வைக்க வேறுவர்ண நீர்பிரியும் அதைப் பத்திரப்படுத்தவும். இப்படியே ஏழு முறை வைத்தல் வேண்டும். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு வர்ணத்தில் நீர் பிரியும். ஏழாவது முறை பிரியும் நீர் சுத்தமான நீராகக் காணப்படும், இதைச் சாஸ்திரங்களில் சுத்தகங்கை என்று கூறப்படுகிறது.

பூமியில் இருந்தெடுத்த பூநீர்உப்பை எதுவுங்கலக்காமல் அடுப்பிலேற்றாமல் குருபஸ்பத்தை மாத்திரம்கலக்கி சூரிய உஷ்ணத்திலும் சந்திரபிரகாசத்திலும் சூரியபிரகாசத்திலும் வைத்தெடுக்கும் ஏழுவர்ண நீருமே ஜெயநீரெனப்படும்.

ஏழுமுறையும் சுத்தநீரைப்பிரித்தபின் உள்ள நீரானது கசிவற்ற காரமுள்ள கோடா நீறைப்போற் காணப்படும் அந்த உப்பே பூநீறுப்பு என்று சொல்லப்படுவது.

குன்மவியாதிகளுக்கு ஒருபலம் மேற்சொன்ன உப்பும் ஒருவிராகனெடை வீரமுஞ்சேர்த்துக் கீழ்காய் நெல்லி கையாந்தகரை போன்ற சுண்ணஞ் செய்யக் கூடிய எம் மூலிகைச் சாறுவதொன்றாலரைத்து பில்லை தட்டி உலர்த்தி 50 விருட்டியிற் புடம்போட்டெடுத்து மீண்டும் ஓர் வராகனெடை வீரத்தைச்சேர்த்து மூலிகைச் சாற்றாலரைத்து பில்லை தட்டி 50 விருட்டியிற்புடம போடவும். இப்படியே ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விராகனெடை வீரஞ் சேர்த்து அரைத்து (10) பத்துத்தடவை புடமிட்டால் உயர்ந்த பூநீற்றுச் சுண்ணமாகும்.

இத்தகைய சுண்ணத்தால் சகலவித குன்மங்களும் நீங்கும். இவ்விஷயத்திற் சில வாதிகள் முப்பு என்பது மூன்றுப்பு என நினைத்து அதில் இதொருப்பென்றுங் கூறுவர்.



## கோம்மட்டி உப்பு

ஆற்றுத் தும்மட்டியைக் கொண்டுவந்து இரண்டாக அறுத்து வயிற்றிலுள்ள சோற்றை நீக்கி அதனுள் இந்துப்பை வைத்து மூடிக்கட்டி ஒரு குடுவையில் வைத்து 50 விருட்டியிற் புடம்போடப் பஸ்பமாகிவிடும். மறுபடியும் இந்துப்பைக் குமட்டிச்சாற்றாலரைத்துத் தும்மட்டியின் வயிற்றில் வைத்துச் சீலைமண்செய்து புடம்போடவேண்டும், இப்படியே நாலைந்து தடவை புடம்போட்டபின் பஸ்பத்தை எடுத்து வேளைக்கு ஒரு குன்றுமணிமுதல் மூன்று குன்றுமணி எடை பெரியோருக்குக் கொடுக்கலாம். இது குன்மநோயை போக்குவது மன்றி பெண்களுக்குக்காணும் சூதகவாய்வு என்னும் உதிரச்சிக்கலையும் போக்கும், மார்பு வலி தீரும். மலத்தைப் போக்கும், வயிற்றுவலிக்குமாகும். வெந்நீரிலும், மார்புவலிக்கு நெய்யிலும் சூதகக் கட்டுக்குத் தேனிலும் கொடுக்கவும்.

# சிறுகுடல் (Small Intestine)

**சிறுகுடல்:-**

இது சுமார் 20 அடி நீளமாக இருக்கிறது. வயிற்றின் பெரும்பாகத்தில் இக்குடல்கள் தங்கியுள்ளது. இங்கு சீரணத்திற்கு வேண்டிய சமானவாயு தங்கும். இது மூன்று பாகங்களையுடையது:- 1. பக்குவாசயம், 2. மத்தியாந்தரம், 3. தேசாந்தரம் என்பன. மேற்படி இரைப்பையிலிருந்துவரும் அன்னப்பாகானது பக்குவாசயத்தை அதாவது (*Duodenum*) டியூடனத்தை அடைகிறது இந்த முன் சிறுகுடலுக்கு அக்கினி ஆசயமென்றும் பெயருண்டு. அங்கு பித்தநீரும் அக்கினேரசம், மதுரசம் பங்கிரியாஸ் என்றழைக்கப்படும் கணையநீருஞ் சேருகிறது.

இதிற் பித்தநீர் வியாதிக்கிருமிகளைக் கொன்று உணவிலுள்ள கொழுப்புப் பொருள்களையும் சீரணிக்கச் செய்கிறது. **கணையநீர் என்ன செய்கிறதென்றால்;** பித்தநீர் ஆமாசயப்புளிப்புநீர் உமிழ்நீராகிய மூன்றின் கிரியைகளையும் ஒருங்கே செய்து பக்குவப்படுத்தி 2-ம் பாகமாகிய மத்தியாந்தரத்தை அடைகிறது. அங்கு உண்டாகுங் குடல் நீரானது உடலில் இதுவரை சீரணியாத எஞ்சிய பாகங்கள் அனைத்தையும் சீரணிக்கச் செய்து அன்னரசமாக்கி 3-ம் பாகமாகிய **கிரகணி**க்கனுப்புகிறது கிரகணியில் உள்ள உறிஞ்சிகள் அன்னரசத்திலுள்ள சத்துப்பொருள்களை உறிஞ்சித் தேகத்துக்கு வலுவைக் கொடுக்கிறது அதில் **எஞ்சியபாகமும் சீரண உறுப்புகளிலிருந்து வெளியாகும் காரிரத்தமுங்கலந்து பிரதிகாரணி என்னும் நாளம் வழியாக ஈரலை அடைகிறது.** இரைப்பையிற் சீரணமாகும் ஆகாரம் சிறுகுடல் வழியாகச் செல்லும்போது ஆகாரத்திலுள்ள சத்துப்பொருள்கள் கிரகிக்கப்படுகின்றன. "கைல்" அல்லது அன்னரசம் திரவரூபத்திலிருப்பதால்



சிறுகுடலின் உட்புறத்திலுள்ள மிகமிக நுண்ணிய பில்லைகளென்னும் உறுப்புகள் வாசனையை அறிந்து நீட்டிக்கொண்டிருக்கும் இந்தப் பில்லைகள் குடல்வழியே செல்லும் அன்னரசத்திலுள்ள உடல்வளர்ச்சிக்கும் "ககன" சக்தி ஆகியவற்றிற்கும் உதவக்கூடிய பகுதிகளை உறிஞ்சி எடுத்துக் கொள்ளுகின்றன. இப்படி உறிஞ்சப்படும் பகுதி இரசதாது அல்லது வெண்ரத்தம் எனப்படும். உறிஞ்சி எடுக்கப்பட்ட சத்துப்பொருள்கள் நிறைந்த ரசதாதுவானது அதற்கெனவுள்ள நுண்குழாய்கள் **மூலம் தேகத்திற் சென்று** பின் இரத்த அம்சமாகமாறி இரத்தக்குழாய்கள் மூலம் தேகம் முழுவதும் வியாபித்துக் குன்றாத வலிமையைக் கொடுக்கிறது.

### ஜீவ அணுக்கள்.

இரத்தத்திற் பிராணவாயுவைக் கொண்டு செல்லும் செஞ்ஜீவ அணுக்கள் இருக்கின்றன. அவை அன்றி வெண்ஜீவ அணுக்களுமிருக்கின்றன. அவை தோட்டி வேலை முதல் உடலைக்காக்கும் சிப்பாய்த்தொழில் வரையுஞ் செய்கின்றன. சரீரமாகிய கோவிலுக்குள் அசுத்த வியாதிக் கிருமிகள் புகாது உள்ளும் புறமும் சுத்தமாய் வைத்துக்கொள்ள அதற்காக வேலைசெய்யும் வெண்ஜீவ அணுக்கள் சிலசில வகையுள. சரீரத்தில் வியாதிக்குக் காரணமேற்படும்போது அவற்றைத் தடுத்துச் சரீரத்துட் புகாதும் புகுந்தாலும் நிலைத்துநில்லாதும் நாட்டைக் காக்கும் சிப்பாய்கள்போல் உடனே அவைகளை விரட்டி அடிக்கப் பணிஆற்றும் வெண்ஜீவ அணுக்களும் சில சில வகையுள.

செஞ்சீவ அணுக்களோவென்றால் தேகவளர்ச்சிக்குரியன. வேலைமுதலியனவற்றாற் தேய்வுறும் பாகங்களுக்குச் சத்துப் பொருள்களை ரசதாது மூலங் கொண்டு செல்கின்றன.

உயிருக்கு இன்றியமையாத அமிர்தம்போன்ற பிராண வாயுவை நாம் சுவாசிக்குங் காற்றிலிருந்து கிரகித்து தம்முடன் கொண்டு சென்று அங்கங்கே கொடுத்துதவுகின்றன. இவ்விதம் உடலுக்கும் உயிருக்கும் ஊட்டமும் உரமும் ஒருங்கே அளிக்கவல்ல சக்தி ரசதாது அடங்கிய ரத்தத்திற் தானிருக்கிறது. ஆகவே சிறுகுடலில் நீட்டிக் கொண்டிருந்து அங்குசெல்லும் அன்னரசத்தின் சத்துப் பொருளான ரசதாதுவைக் கிரகிக்கும் உறிஞ்சிகள் எவ்வளவு மகத்தான செயலை ஆற்றுகின்றன.

சிலசமயமிந்த உறிஞ்சிகள் தமது செயலைப் புரியாது இருந்துவிடுகின்றன. இந் நிலையைத்தான் உறிஞ்சிகளின் ஒத்துழையாமை அல்லது வேலைநிறுத்தம் என்று சொல்வது. அப்போது அன்னரசத்திலுள்ள சத்துப்பொருள் கிரகிக்கப்படாமற் போகிறது. அதனால் உடல்மெலிவு உண்டாகிறது. முன்சொன்ன மூன்று கிரியைகளாலுந் தான் சீரணம் பரிபூரணமாகிறது.

இதில் முதலிரு கிரியைகளாலும் ஆகாரஞ் செமியா விட்டால் அசீரணமும் பசிஇல்லாமையும் **அதிசாரமென்னும்** வயிற்றுப்போக்கும் ஏற்படுகிறது. இன்னொரு நிலையில் இரைப்பையிற் சீரணமாக வேண்டிய அன்னம் சரியாகவே செரியாது. ஆனால் அதிற் தொடர்ந்து நடைபெற வேண்டிய சீரணக்கட்டத்தின் திறமைக்குறைவினால் ஆகாரம் ஓரளவு செரித்தும் ஓரளவு செமியாமலுமிருக்கும். ஆகாரஞ் சரிவரச் சீரணமாகாது நொய்ப்பும் நுரையும் கட்டியுஞ் சில்லியுமாய் செரித்துஞ் செமியாமலும் மலம் பல தடவைபோகும். இந்நிலையில் உறிஞ்சிகள வேலை செய்யா. பசித்துச் சாப்பிட்டாலும் உடம்பில் ஒட்டாது சரீர மெலிவும், பலக்குறைவுமேற்படும். இந்நிலையிற் பட்டினி போட்டாலும் பசியும் பலக்குறைவுமதிகரிக்கும் ஆனால் வயிற்றுப்போக்கு நின்றுவிடும். இதைத்தான்



கிருணி என்பர். உறிஞ்சிகள் தத்தமக்குரிய செயலை ஆற்றும் வாய்ப்பில்லாமற் போகின்றன.

சீரண கோசத்திலுள்ள அழற்சி காரணமாக இரைப்பையில் ஆகாரம் போதுமான காலந் தங்குவதில்லை. சாப்பிட்டதும் சாப்பிடாததுமாக (மலங்கழிக்க) **வெளிக்குப்** போகப்பறப்பார்கள். இது காரணமாகவும் சத்துப்பொருள்கள்கிரகிக்கப்படுவதில்லை. உடல்மெலியும் அல்லது மெலிந்த உடல் புஸ்டியாகாது தடைப்படும்.

இதற்குச் சீரணகோசஞ் சரிவர இயங்குமாறு செய்து ஆகாரத்தில் நின்று சத்துப்பொருள்களைச் சரிவரக் கிரகிப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்த பிறகு தான் மற்றுமுள்ள சிகிச்சைகளைச் செய்யவேண்டும் அப்போதுதான் ஆகாரம் தன் முழுப்பலனையுமளிக்கும். மருந்தும் உள்ளே சென்று சுகத்தையும், ஊக்கத்தையும் கொடுக்கும்.

## கிருணி (Dysentery) வயிற்றுளைவு

இதைச் சிறுகுடல் வியாதிகளில் உச்சமான ரோகம் என்றே சொல்லலாம். சிறுவயதில் மாந்தம் முற்றி அக்கரமாகி வேறு அத்துடன் நெருப்புக்காய்ச்சல் முதலியவைகளாலும் சீரண உறுப்புக்கள் வலுவிழந்து, பெலவீனப்பட்டுக் கிருணி உண்டாகிறது.

இருந்தாற்போல் 5, 6 முறை செமியாக்குணத்தோடு அசீரணப்பேதியாய் வயிற்றாலேபோய் அடுத்தநாள் நின்று மறுபடியும் இப்படியே இடை இடையே போவதும் நிற்பதுமாகி சிலதருணங் கடுஞ்சுரங்கண்டு; மூலச்சூடு, வயிற்றுப் புண் காரணமாய் குடலில் அழற்சி உண்டாகிக் கடுத்து உளைந்து வயிற்றுளைவு ஏற்பட்டு வயிற்றுக்கடுப்போடு சீதம் இரத்தம் வீழ்வதையே "கிருணி" என்று சொல்வர்.

அதுபின் மூலக்கிருணி என்று சொல்வர். ரத்தக்கிருணி **அமிபிக் டிசென்றி** (*Amoebic Dysentery*) போன்ற ஆங்கிலப் பெயர்களையும் பெறுகிறது.

**மேற்படி ரோகத்திற்கு சிகிச்சைக் கிரமம்**

1. முதலாவது: சஞ்சீவித்தைலத்தை ஒருநாட்காலே, தேவைப்படின் மூன்றுநாட் காலை கொடுக்கலாம். மாலை அட்டசூரணமும் தேனிற்கொடுக்கலாம்.

2. பின் அட்டசூரணத்தையே தொடரலாம்.

3. கடுப்போடு சீதம், ரத்தம் வீழில் வயிற்றுளைவுச் சூரணங் கொடுக்க வேண்டும்.

4. வில்வப் பழத்தைத் தேன் கூட்டிக் கொடுப்பது

5. பின்னுங் கூடிய வயிற்றுப்போக்கிருப்பின் அதைக் குறைக்க கிருணிவேலாயுதம்; கோரக்கர்சிந்தாமணி நந்திசிந்தாமணி போன்றவற்றுள் ஏற்ற ஒன்றை 3நாட்களுக்குமட்டும் கொடுக்க நல்லகுணஞ் செய்யும், சஞ்சீவித்தைலம் கைவசமில்லாவிடில் 3 கடுக்காயைக் குத்தி காப்படி நீர்வைத்து நாளொன்று ஊறவைத்து அதை ஏழுதரம் வடித்து அத்துடன் ஓரவுன்சு ஆமணக்கெண்ணெய் கொடுக்கலாம்.

## அட்டசூரணம்.

சீரிய கிருவரும் சிறந்த மூவரும்
கூரிய நெருப்பருங் கொடிய காயரும்
ஆரிய வடகரை அமர்ந்த மோதரும்
நேர்படி லெண்மருந் நெருப்பொ டொப்பரே.

**ஆஃதாவது:** இருசீரகம், திரிகடுகு இந்துப்பு, பெருங்காயம் ஓமம் ஆகிய 8 மருந்துச்சரக்குகளுமாம். பெருங்காயத்தைச் சிறு சிறு துண்டுகளாய் நறுக்கி ஒரு சொட்டு நெய்யிட்டுப் பொரித்துக் கொள்ளவேண்டும். இந்துப்பையும் வறுத்துப் பொடித்துக்கொள்ளவேண்டியது. மிகுதி



யானசரக்குகளையும் இடித்து அரித்துக் கொள்ளவேண்டியது. இதிற் குழந்தைகளுக்கு ஒருசிட்டிகை சூரணமெடுத்து தேனில் அல்லது நெய்யில் கொடுக்கவும்.

ஆகாரத்துக்கு முன் ஓரவுன்சு மோரிற் கலக்கி சாப்பிடலாம். பெரியோருக்கு நோம் வெருகடிவீதம் காலை மாலை மதியம் தேனிற்கொடுக்கலாம். சாப்பாடு நன்கு சீரணமாகும். உறிஞ்சிகள் வேலை செய்யும் சத்துப்பொருள்கள் கிரகிக்கப்படும். வயிற்றுளைவுகளைப் போக்கும். வெந்நீரிலுண்ண வயிற்றிலுள்ள கரிவாயு "காஸ்" எல்லாம் வெளியாகிகுணமுண்டாகும்.

## அட்டசூரணம் வேறு

கடுஞ்சீரகம் களா2, நற்சீரகம் 6, சுக்கு 6, மிளகு 9, திற்பலி 5, இந்துப்பு 5, காயம் 8, ஓமம் 9 களஞ்சுகள் வீதம் மேலே உள்ள சூரணப்படி இதையும் இடித்து வஸ்திரகாயம் செய்து மேற்படி அனுமானங்களில் உபயோகிக்கலாம்.

**இரத்தக்கிருணிதீர வயிற்றுளைவுத்தூள்:-** சாதிக்காய் சீரகம், திற்பலிமூலம், ஓமம், இந்துப்பு, அதிவிடையம், கராம்பு, வகை களா. க மாங்கொட்டைப்பருப்பு களர்ச்சிப் பருப்பு, விளாம்பிசின் வில்வங்காய் இவை வகை களா. 4 (அல்லது 8 களஞ்சாயெடுத்து) இடித்து பற்பமாக்கி நோம் வெருகடி எருமைமோரில் அல்லது சீரகம் வறுத் தவித்த நீரிற் தேனுங்கூட்டிக்கொடுக்க மூலக்கிருணி, மூலக்கடுப்பு, மூலவாய்வு, அக்கினிமாந்தம், இரத்தக்கழிச்சல், பலவகையான சகலகழிச்சலும் காய்ச்சல் உவாந்தி வயிற்றழற்சி தாகம் வயிற்றுவலி மயக்கம், வயிறு கூப்பிடுதல் எதிரிட்டவாய்வு எல்லாந் தீரும்.

### சஞ்சீவித்தைலம்

ஏரண்டத் தைலத்தோடே யின் மணித்தக்காளிச் சாறு
ஓரொன்ருேர் நாழிகூட்டி யுருமுறையாகக் காய்ச்சி
பார்மெழுகாம் பதத்தில் பதனமாய் வடித்தாருமுன்
நேர்வரு நால்வராகனெடை கோரோ சனைத்தூள் தூவே.

தூவியோர் நாழியிட்டுத் துய்த்திடும் வகையைக்கேளு
மேவுறவோர் கரண்டி விடியற் காலத்திலுண்டே
பாவனையாக இச்சாபத்தியத் துடனே எண்ணெய்
ஓய்வற மண்டலந்தான் உண்டிட ஒழியுநோய்கேள்

மூலத்தின் வெட்டை பித்தமுதிர் வயுற்றுக்கடுப்பு
காலனேரென்புருக்கி கயம் பெரும்பாடு காந்தி
மேவு நீரழிவுடற்புண் மிக்க வக்கரப்புண் போக்கும்
வாலையாமுடலுந் தேறும் வலுவுண்டா மிருமலும்போம்.

கண்முத லங்கமெல்லாம் கவின்பெறக் குளிருமிக்க
புண்கணைக் காய்ச்சல் மேகம்போய்விடும் பேதியாகும்
எண்ணுறு சிறுவராதி எவர்களும் புசிக்கலாகும்
தண்மை சேரிதனி நாமம் சஞ்சீவித் தைலமாமே.

பிள்ளைக் கற்றுளைச்சாறு முன்பேசிய விதியேவிட்டு
எள்ளலின்முன்னே சொன்ன வியல்வதாய்க்காய்ச்சி உண்டால்
பிள்ளை களாதியாகப் பெரியவர் தமக்குமாகும்
விள்ளவே முடியாதிந்த மேம்படு மஹித மேன்மை.

### கிருணிக்கு வெற்றிவேலாயுதம்

சுக்குடன் சாதிக்காயும் துகளுறு கஞ்சா இஞ்சி
மிக்குட னபினுேரொன்று மிகாமலோர் களஞ்சு கூட்டித்
தக்கவெந் நீரரைத்துத் தறுகிடாக் குளிகை யாக்கி
ஒக்கவெந் நீரிற்கொள்ள ஓடிடும் வியாதிகேண்மோ

உண்டிடிற் சுரங்கழிச்சல் உறுசன்னி சிவாதம் வெப்பு
மிண்டிடுங் கிருணி எல்லாம் விடுமிதிற் கந்தன் கைவேல்
விண்டதாங் குளிகைதன்னை விரும்பியே முத்தற்காசு
கொண்ட சீரகத்திலூட்டக் கடுப்பொடு வலிப்புப்போமே.

# பித்தாசயம்.
# (Bile Duct & Gall Bladder)

### 1. கல்லீரல் 2. பித்தப்பை
### கல்லீரல் (Liver)

*இது சரீரத்தின் விசேஷித்த இராசகருவிகளில் ஒன்று. இது வயிற்றறையின் வலப்பாகத்தில் அமைந்து 7-ம் 11-ம் விலா எலும்புகளுக்கிடையேயுள்ளது. இதன் மேற்பாகங் குவிபாகவும் கீழ்ப்பாகங் கவிவாகவும் அழுத்தமாகவுமிருக்கிறது. இதிற் தக்ஷணபிண்டம் வாமபிண்டமென இருபாகங்களுண்டு. இதில் இடதுபிண்டம் சிறிது. இது இரைப்பையின் வலப்பாகத்தின் முன்புறத்தைச் சிறிது மூடுகிறது. இது தினமும் 2 பைந்து பித்தநீரைச் சுரக்கிறது. ஒரு வாலிபனின் ஈரல் 50 அல்லது 60 அவுன்சு நிறையுள்ளது இதன் நீளம் 18 அங்குலம் அகலம் 6 அங்குலம் தடிப்பு 6 அங்குலம் சிரணஉறுப்புகளிலிருந்து வெளியாகுங் காரிரத்தமும் அன்னரசமுங் கலந்து பிரதிகாரணி என்னும் நாளம் வழியாய் ஈரலை அடைகிறது.*

### ஈரலின் தொழில்
### ஈரலின் தொழில்கள் (3) மூன்று

1. *அன்னரசத்தைச் சுத்திசெய்கிறது.*
2. *சர்க்கரைத் தன்மையைச் சேர்த்துவைக்கிறது.*
3. *தினமும் 2. பைந்து பித்தநீரைத் தயார்செய்கிறது.*

*ஈரலுக்கு ஆகாரப்பரீட்சாதிகாரி என்னுமோர் பெயருமுண்டு. இது காரணமாகவே பிரதிகாரணியிலிருந்து வரும் இரத்ததாதுவைச் சுத்திகரித்து சுக்கிலதாதுவுக்கு அனுப்புகிறது. ஈரல் தன்தொழிலைச் சரிவரச்செய்ய முடியாதநிலை ஏற்படின் சுக்கிலாசயம் சலாசயம் பித்தாசயமெனும் பிறிது*

மூன்றுறுப்புகளும் பாதிக்கப்படநேரிடும். கல்லீரல் சம்பந்தமான வியாதிகளெல்லாம் பொதுவாகச் சரீரத்தின் வலது பக்கத்தைதத்தான் பாதிக்கிறது.

### முக்கியமான ஈரல் வியாதியின் குணங்குறிகள்.

வலது தோழ்பட்டையில் உளைவு வயிற்றின்வலது பாகத்தில் கல்லீரலுக்குமலாக வயிற்றில்வலி பொறுக்க முடியாதருத்து வயிறுகல்லுப்போலிருத்தல் தொடமுடியாதநோ வயிற்றில்முட்டு முதலியகுணங்களேற்பட்டு வருந்துவர்.

இதிற் சிலதருணம கல்லீரல்பருத்து வீங்கிக்கட்டியாகிச் சீழ்கொள்வதாலும் *Liver Upset* ஏற்படுகிறது (இதை அசாக்கிரதையாய் விட்டுவைத்தால் ஈரல்புற்றுஏற்படவுங் கூடும்.) வேறுபித்தப்பையில் கற்கள்தோன்றுவதாலும் ஏற்படலாம். *Gall Stones* ஈரலைப்பற்றிய வியாதிகள்: எகுத்து கோபிச்சூலை, பித்தசூலை, சுரோணிதம், அகுவை, கவுசி என ஆறு என்றும் சில பிரதிகளில் எகுத்து அகுவை கவுசி எனவுங் கூறப்படுகிறது.

### எகுத்தின் குணம்.

உற்றிடுமுலையின் கீழேஉன்னி அங்குலந் நால்விட்டு
மற்றொரு பழவூடாகி மயங்கிடக்குத்தி விம்மி
பற்றறவலித்துப்பின்னேபையவூன்கெடுத்துச்சோரில்
முற்றுமேஇதனை நீயும்மூன்றெகுத்தென்றுகூறே

இப்படி மூன்றெகுத்து மிருபழுச் சேருமாகில்
மெய்ப்படு பெலமுங்குன்றி மேனியுமெரிவு காட்டும்
மைப்படு குடலைக்கௌவி மரணமே யாகச்செய்யும்
தப்பறமருந்து செய்யச் சாற்றினர் முனிவர்தானே.

### அகுவையின் குணம்.

கல்லென ஈரலோடே கனத்திடும் புகைந்துகாட்டும்
புல்லிய அசனந்தானும் குறைந்திடும் பொருமலாகும்
பல்பலவலியேயாகும் பசிஇன்றி மந்தம் பற்றும்
வல்லியே மலருந்தீயும் அகுவையாம் வாயுவாமே.



### கவுசியின் குணம்.

ஈரலிற்கனத்தே உந்திஇருவிலாப் புடைய வீங்கி
கூரிய ஊதைமூலத் துள்ளினுங் குறுகிக்காணும்
சீரியஅசனந்தானும் வெறுத்திடும் வலியே வாங்கும்
மார்பது குளிந்துகாட்டும் கவுசியாம் வாயுவாமே.

இருபுற மார்புபற்றி எழுநரம் புதரமீது
பொருமிடும் வயிறுதானும் புடைத்தெழு நாபிச்சுற்றில்
மருவியவிலா விரண்டில் வருந்திடக் குத்திநோவாம்
இருகரங்காலும் வீங்கும் கவுசியின் குணமிதாமே.

ஈரலிலுண்டாகும் கட்டியைக்கரைக்க நாகபஸ்பம் சிறந்தது.

## பித்தப்பை. (Gall Bladder)

இது ஈரலின்வலப்பக்கத்துக் கீழ் அமைந்திருக்கிறது. கல்லீரலிலுண்டாகும் திரவத்திற்கு (*Bile*) பித்தநீர் என்று பெயர். இந்நீர் பித்தப்பையிற் சேகரிக்கப்படுகிறது. வேண்டியபோது இந்நீர் ஒருசிறு குழாய்மூலம் (*Duodenum*) டியூடனத்துக்கு அதாவது முனசிறுகுடலுக்கு வருகிறது. உணவிலுள்ள கொழுப்புப் பொருள்களைச் சீரணிக்கச் செய்வதும் வியாதிக்கிருமிகளைக் கொல்லுவதுமே பித்தநீரின் பிரதான தொழில்களாகும்.

### பித்தரோகங்கள்.

பித்தமே கதித்தபோது பெருந்திடும் வாதமுண்டாம்
பித்தமே கதித்தபோது பெருத்திடும் வயிற்றில்வாய்வு
பித்தமே கதித்தபோது பிதற்றிடும் பித்தேகேளு
பித்தமே கதித்தபோது பிறந்திடும் பிணிஅநேகம்.

கூறிடவே பித்தமது மீறிற்றுறல்
கொடுங்காந்தல் உடல்வரட்சி நடுக்க முண்டாம்
மீறிடவே அரோசியந்தான் நாவரட்சி
மேலான சோபமது விக்கல் மூர்ச்சை

தூறிடவே கிறுகிறுப்புக் காதடைப்பு
தோந்தமாங் கசப்புடனே மண்டைக் குத்து
மாறிடவே நெஞ்செரிவு அக்கினிமாந்தம்
மகத்தான குளிர்சுரமுங் காந்தலாமே.

ஆமேதான ஸ்திசுரம் பாண்டு சோகை
அழலான விடாச்சுரமும் பிரமேகந்தான்
போமேதான் காமாலை, பித்த வெட்டை
பொல்லாத பாண்டுடனே சிவந்தநீராம்
தேமேதான் சிவப்பாயும் மஞ்சளாயும்
சிறுசிறுத் திருண்டு வரும் குளிவிழுந்து
நாமேதான் சொன்னோமே பித்தக்கூறு
நவின்றிட்டார் வாசமுனி நவின்றிட்டாரே.

## பித்த ரோகங்களுண்டாகக் காரணம்.

மேற்படி பாட்டுகளின்படி பித்தமே கதித்தபோது பிறந்திடும் பிணி அநேகம் எனச்சித்த வைத்திய ஆசிரியரான அகத்தியர் கூறியிருப்பதையும்; வாசமுனிவரதை விபரித்திருப்பதையும் நாம் காண்கிறோம். ஆனால் இவற்றில் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கு விபரித்துக் கூறுவாம்.

அதிக சூட்டினாலும் மிதமிஞ்சிய தேகமுயற்சியாலும் வேறுநோய்களின் அதிர்ச்சி காரணமாகவும் பித்தம் பிரகோபமடைந்து கல்லீரலைத்தாக்கி பித்தநீர் ரத்தக் குழாய்களில் கலக்கநேரிடில் (*Jaundice*) செங்கமாரி என்னும் கொடிய வியாதி ஏற்படுகிறது. இதனதிர்ச்சி கணையநீர்ச்சுரப்பிகளையும் நிதானமாயியங்கமுடியாத நிலைமையையும் ஏற்படுத்திவிடுகிறது. இது காரணமாய் நீரழிவு இரத்தக்கொதி முதலிய ரோகங்களேற்படவுங் கூடும்.

## (செங்கமாரி Jaundice செங்காமாலை.)

இதில் சிறுநீர் மஞ்சளாகவோ தேநீர்நிறமாகவோ சிவந்தோ நிறம்மாறிப் போகத்தொடங்குவதே முதற்தொடக்க



அறிகுறி எனலாம். சிறுநீர் மஞ்சலாகப் போகத்தொடங்கிய சில நாட்களால் கண்களும் நகங்களும் நாக்கும் பொதுவாய்த் தேகமடங்கலுமே மஞ்சள்வர்ணமாகக் காணப்படும். இதையிட்டு **"காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்"** என்பார்கள். அதுபோலப் பார்க்கும்பொருட்களெல்லாம் மஞ்சலாகவே காட்சியளிக்கும். இது ஆரம்பத்தில் காய்ச்சலோடும் சிலருக்கு காய்ச்சலில்லாமலும் தொடங்குகிறது. காய்ச்சலோடு தொடங்குவது சற்று உக்கிரமமாகவே இருக்கும். காய்ச்சல் நின்றுவிட்டபோதும் மாலைநேரங்களில் மெல்லியசூடும் தேகக்கடுப்புமுளைவும் சாப்பாட்டுவெறுப்பும் வயிற்றெரிவு உடலழற்சி சிலருக்குக் கண்ணெரிவு உவாந்தி தலைக்கனம் தாகமென்பனவுமிருக்கும். கணைச்சூடுள்ள குழந்தைகளுக்கும் மேகச்சூடுள்ள பெரியவர்களுக்கும் வெகுசுலபமாய் இந்நோயேற்படுகிறது நோய்முதிர்ச்சி அடைந்துவிட்டால் இரத்தங்கெட்டு வீக்கமுண்டாகி,

"முகமுங் வீங்கிக் கண்வெளுத்து
மூச்சு நடக்க வொட்டாது
அகமுங் விம்மி நாவறண்டு
அணுகுந்தாது கெட்டு விடும்
மிகவு மசனஞ் செல்லாது
மேனி வறண்டு வெளுப்பேறும்
ஜெகமே சொன்னேங் காமாலை
செய்யுங் குணங்களிதுவாமே."

என்றாகி உயிருக்கே உலைவைத்து விடவுங்கூடும்.

இந்நோயுண்டாகிய சிலருக்கு தாங்கமுடியாத தினவு தோன்றும். இச்சொறிவு இரவுபகலாயிருந்து நித்திரைப் பங்கஞ் செய்வதால் சொறிவு நின்றாலேபோதும் என்றாகி விடுகிறது நோயாளி தவிப்பான். சிலருக்கு வயிறுகல்லுப் போலிருக்கும். வயிறுமுகம் தேகமடங்கலும் வீக்கம் இருப்

பிற் கடுமையான உழைவும் நெஞ்சிற் குத்தும் நோவும் முட்டுமிருப்பதாகக் கூறி மகோராதம்போல் வேதனைப்படுவர். சில தருணம் வயிற்றில்வலி வயிற்றிற்தொடமுடியாத நோ இருமலாகிய உபத்திரவங்களுமுண்டாகின்றன. இவர்களுக்குப் பித்தப்பையிற் கற்கள் காணப்படுவதுமுண்டு அது நாளடைவிற் "கான்சர்" (Cancer) புற்றுநோயாகவும் பரிணமிக்கலாம்.

செங்கமாரி வந்தவர்களுக்குச் சலம்வெண்மஞ்சலாகவும் தேயிலைச்சாயம்போலும் மாவுகரைத்ததுபோலும் போவதுமல்லாமல் நீரிறங்கும்போது எரிச்சலோடு கழிவதுமுண்டு. இது குண்டிக்காய் கணயம் சலப்பை முதலியஉறுப்புகளை பாதிக்கச்செய்துவிடுவதால் சலத்தையுமதிகமாய்க் கழியச் செய்து தேகத்தையும் மெலியப்பண்ணித் தலைச்சுழற்சி மயக்கம் தாகம் கடும்பசி ஆகியகுணங்களையுமுண்டு. பண்ணிச் சலரோகம் இரத்தக்கொதி முதலியனபோற் காட்சியளித்து செங்கமாரிச் சிகிச்சைக்கே வசப்படுவதுமுண்டு.

காய்ச்சலோடுகூடிய செங்கமாரிக்கு காய்ச்சல்நன்கு குணப்பட்டபின்பே குளித்து எண்ணெய்வைத்து வாரமொருமுறை முழுகவேண்டும். ஆனால் காய்ச்சலிருக்கும்போது தண்ணீரிற் தலைமுழுகப்பண்ணுதல் இளநீர்மூலிகைச்சாறு முதலியன குடிக்கச்செய்தல் ஆபத்தாய்முடியும். பொதுவாய்க் குளிர்மையான உணவுகளை உபயோகிப்பதிலும் குளிர்ந்தஜலத்திற் குளிப்பதிலும் வெகுஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இளவெந்நீரிற் குளிப்பதுநன்று நோய் விக்கினமின்றிக் குணப்பட அது உதவியாயிருக்கும். பத்தியம்:- உப்பு காரசாரமுள்ள வஸ்த்துக்கள் நெய்ப்புள்ள பொருட்கள் இந்நோய்க்கு ஆகா. பாசிப்பயறு, சிறுநெல் அரிசி, கோதுமை, பொன்னாங்காணி, வல்லாரல், அறக்கீரை, தேசிக்காய் சீனிசர்க்கரை, குளுக்கோஸ் இவை பத்தியத்துக்கு நன்று.



## செங்கமாரி சிகிச்சைக் கிரமம்.

1. வசதிகண்டு ஓர் இலெகுவிரேசனகாரி கொடுக்கலாம் அது பித்தசாந்திப் பேதியாயிருக்கவேண்டும்.
2. மூலிகைக் குடிமருந்துகளில் ஏற்றஒன்று
3. செங்கமாரித்தூள் நிலவாகைச் சூரணம்
4. கீழ்காய் நெல்லித்தைலம் அல்லது சீரகத்தைலம்
5. பின் கிச்சுக்கிட்டச் சூரணம், அயகாந்த செந்தூரம் இவைகளிலொன்றைக் கொடுத்துவர எவ்விதகெடுதலுமின்றிக் குணமடையலாம்.
6. இருவியைக் கோசலத்தில் இரண்டு நாளூறவைத்து இடித்து அரைத்துப் பற்மமாக்கி வேளைக்கு 2 பேன்பிடி தேனிற்கொள்ள ஈரலைப்பற்றிய வியாதிகள் தீரும்.

## பித்தப் பேதி

பாசிப்பயறு நற்சீரகம மிளகு கோட்டமிரதம் வகைகள். 1. நெற்பொரிகள. 2. பாசிப்பயறு நற்சீரகமிரண்டையும் சூரியகெவுளி இளநீரிலூறப்போட்டு மறுநாள் விடியற்காலை எடுத்து அரைக்கவும். இரதத்தை கெடுத்து நெற்பொரியை பசும்பாலில் ஊறப்போட்டு எடுக்கவும். தேசிப்புளிவிட்டரைத்துச் சீனி அல்லது சர்க்கரையும்சேர்த்துத் தேசிப்புளியிற் கொடுக்க செங்கமாரி பித்தவாயு பித்தப்பயித்தியம் உவாந்தி இவைதீரும். இத்துடன் சுத்திபண்ணிய வாளம் 2. களஞ்சுகூட்டி அரைத்துச் சிறியதூதுளங்காயளவுருட்டி இஞ்சியுஞ்சீனியுங் கூட்டி எவர்க்கும் பேதிக்கக் கொடுக்கலாம். பித்தசாந்தி அடைந்து பித்தவாயு பித்தத் தலையிடி தலைஅம்மல் இவை குணமாகும் டி ரோகிகளுக்குத் தேசிப்புளி குணந்தரும்.

## குடிமருந்துகள்

1 கொவ்வமிலையை அரைத்து கடுக்காயளவு நெல்லிக்காயளவுசிறிது தயிருடன் ஓரவுன்சு தயிருடன் தினமுங்காலையில் 3, 5 நாட்கள் கொடுக்கச் சாந்தியாகும்.

2 கீழ்காய் நெல்லியைப் பசுப்பாலிலரைத்து ஒரு கொட்டைப்பாக்களவு சிறிதுபாலுடன் 3 நாட்காலை முழுகிக் குடிக்கவும் குணமாகும் மோருஞ்சோறும் சாப்பிடவும்.

3 கையாந்தகரையும் இப்படியே உபயோகிக்கலாம்.

4 இயங்கந்துளிரை மெழுகுபோலரைத்து ஒரு நெல்லிக்காயளவு சிறிது பசுப்பாலிலரைத்து ஒரு கிறேயின் கஸ்தூரியும் கூட்டி 3 நாட்காலை தோய்ந்து குடிக்கவும்.

5 செவ்விளநீரைவெட்டி (சூரியகெவுளி) சிரட்டைமூடியைச் சிறிதுதிறந்து அதிற்சீரகம் பாசிப்பயறு இரண்டையுங் களஞ்சுவீதம் சிறிதளவு போட்டுமூடி இரவிற்தழலடுப்பிற் சுட்டுவைத்து விடியஎடுத்து அரைத்து ஒரு கொட்டைப்பாக்களவு அவ்விளநீரிற் கரைத்துச் சர்க்கரையுமிட்டு 3 நாள் காலை தோய்ந்து குடிக்கவும் செங்கமாரி குணமாகும்.

## செங்கமாரித் தூள்

நன்னாரி, கார்போகி, சுக்குமிழகு, வாய்விளங்கம், ஓமம், இந்துப்பு, கீழ்க்காய்நெல்லி இவை வகை களஞ் 4. நிலவாகை அரைரூத்தல் உலர்த்தி இடித்துத் தூள்பண்ணி வெருகடி காலை மாலை சர்க்கரைகூட்டி உண்டுவர செங்கமாரி தீரும். தேனிற் சாப்பிடவலுவுண்டாம் முதுகெலும்பு பெலப்படும் கற்கண்டிற் சாப்பிடசரீரம் பெலமாகும். தயிர்மோரிலுண்ண மலமகழியும் பசும்பாலிலுண்ண நெஞ்சுநோ தீரும். வெள்ளாட்டுப் பாலிலுண்ண வல்லமை உண்டாகும் மாதுளம் பழத்திலுண்ண நெஞ்செரிவுமாறும் பழச்சாற்றிலுண்ணக் கிருமி தீரும். சீனியிலுண்ணச் சூதகமவரும் தெங்கின் பாலிலுண்ண சூதகமவராது.

## தூள் வேறு

சாற்றிய மருந்துகோட்டம் தகுந்திரி கடுகுஏலம்
போற்றிய நெல்லிமாஞ்சில் பூரஞ்சந்தங் கராம்பு
மாற்றிய கந்தத்தோடே மருவிலவங்கஞ் சீந்தில்
பார்த்தசர்க்கரையுங் கூட்டிபரிந்து மண்டல மருந்தே.



## செங்கமாரிக்கு அயகாந்த பற்பம்.

ஊசிக்காந்தம் கிட்டம் அரைபொடி வெங்காரமிவை சரிநிறை எடுத்துப் பசுவின்மூத்திரத்தில் ஒரு சாமமூற வைத்து அரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்துப் பின் சட்டியுள்வைத்துமூடி ஏழுசீலைமண்செய்து பின் அதைப் பசுச்சாணியாற் பொதிந்து சுட்டெடுத்துப் பற்பமாய் அரைத்தெடுத்து ஒருபங்கும், பிரண்டையைநறுக்கிக் காயவைத்து இடித்தரித்ததூள் இருபங்கும் கூட்டிவெருகடி காலை சீனிகூட்டிச்சாப்பிடவும். தீரும்நோய்கள் உடம்பு மஞ்சளாய்போவது உடற்சொறிவு, காமாளை, சோகை இவை தீரும். இரத்தசுத்திஉண்டாம் பத்தியம்:- பசுப்பால், ஆட்டுப்பால், தோடம்பழம், இரதைவாழைப்பழம் முதலியன சாப்பிடவும்.

## கீழ்காய்நெல்லித் தைலம்.

கீழ்காய்நெல்லிசமூலம் காத்துலாம் எடுத்திடித்துப் பாண்டத்திட்டு 8 படி ஜலம்விட்டு ஒருபடி கஷாயமெடுத்துப் பசுப்பால், நல்லெண்ணெய் வகை. படி 2 விட்டு ஒரு பலஞ் சீரகத்தைப் பாலிலரைத்துக் கரைத்து மெழுகுபதம் வடித்து இருதினங்கட்கொருமுறை வைத்து ஸ்நானஞ் செய்துவர மஞ்சட்காமாலை, பித்தவெட்டை, வெள்ளை வாய் நீரூறல், மயக்கம், வாந்தி, தாகம், தாபம் கைகால், கண்ணெரிவு, அத்திசுரம், அவயங்களில் நடுக்கம் முதலியன தீரும்.

## வேறு கீழ்காய்நெல்லித் தைலம்.

காற்றுலாம கீழ்காய்நெல்லியை உலர்த்தி இடித்துத் தூணிநீர்விட்டு எட்டொன்றுயெடுத்து அத்துடன் நல்லெண்ணெய் படி 2 விட்டு சர்க்கரை பலம் 5. கடுக்காய், வேப்பம்பிசின் வகை. களஞ். க. ஆவின்பால் விட்டரைத்துக் கியாழன் செய்து காய்ச்சிவடித்து முழுகிவர பித்தக்கிறுகிறுப்பு, வாய்நீரூறல், இரத்தப்பித்தம், எய்ப்பிளைப்பு, கை

கால்காந்தல் உடல்வெளுப்பு, பித்தத்தாலெழுந்த சகலரோகமும் தீரும். (பஞ்சசீதளதைலம் நன்று)

### பித்தவாயு. (Deyspepsia)

உடலிலுள்ள பூந்தசைகளே அதாவது "மியூகஸ்மென்ப்ரேன்" களேகாற்றை உற்பத்தி செய்கின்றன. பித்தவாயுக் கோளாறுகள் பிரதானமாய் நமதுசீரண உறுப்புகள் சரிவர வேலைசெய்யாமலும் பித்தவாயுவை உண்டாக்கக் கூடிய பதார்த்தங்களை அதிகமாயுட்கொள்வதாலும் ஏற்படுகிறது.

### மேற்படி வாயுவின் குணம்.

பசிமந்தம், வயிற்றுப்பிசம், சத்திக்கவருதல், ஓங்காளம், ஏப்பம், கசப்பு, புளிப்பு, உப்பு முதலிய குணங்களேற்படல் நாக்குத்தடித்தும், அழுக்குபடிந்துமிருத்தல், வாயுவுஞ் சுவாசமும் நாற்றமாயிருத்தல், ஒவ்வொருமுறையும் ஆகாரமுண்டவுடன் வயிற்றுப்பிசம், மலப்பிரவிருத்தி சரிவர ஆகாமை, தலைவலி, பலக்குறைவு, ஒருவேலையுஞ் செய்யமுடியாமை, சிற்சிலருக்கு மார்புபடபடத்தல், ஆங்காங்கு இரத்தக்குழாய்களில் துடிப்பு முதலியகுணங்களுமேற்படும்.

### பித்தவாயு தலைக்கேறினல்.

தலைவலி மயக்கம் உன்மத்தம் சித்தப்பிரமை முதலிய குணங்களையுஞ் செய்யும். பித்தம்வீறுகொண்டால் பித்தப்பைத்தியம், பிதற்றல், மாருட்டம், அதிகாரமாய்ப்பேசல் முதலிய குணங்களையுஞ்செய்யும்

### பித்தவாயு சிகிச்சைக்கிரமம்.

1 பித்தப்பேதி அல்லது கொம்மட்டிக்காய் பற்பம்
2 பித்தவாயுக் கஷாயங்களிலேற்றவை.
3 பித்தவாயுச் சூரணங்கள் சஞ்சீவச்சூரணம், சீரகச்சூரணம் கொத்தமல்லிச் சூரணம, நிலவாகைச்சூரணம் போன்றவை.
4 பித்தவாயுத்தைலங்களிற் தகுந்ததை உபயோகித்தல்.



### ஷை சிகிச்சை.

### பித்தவாயுதீரக் கஷாயம்.

இஞ்சி, மல்லி, சீரசம், வகை. களா. 4 முடக்கொத்தான், எலுமிச்சமிலை வகை. பிடி. க. கூட்டி 2 படி நீர்வைத்து காற்படியாய்எடுத்து 3 நாட்காலை மாலை மதியம் 3 வேளையும் கொடுக்க பித்தவாயு, பிதற்றல், வெறிபித்தமிவை தீரும். சர்க்கரை அல்லது தேன் கூட்டிக் குடிக்கவும்.

### பித்தவாயுக் கஷாயம்

மல்லி, நெல்லி, சீரகம், மிளகு, பயறு வகை களா. 2 முடக்கொத்தானெலுமிச்சமிலை வகை. பிடி. 1 கூட்டி 2 படி நீர்வைத்து நாலொன்ருய்க் காய்ச்சி காலை, மாலை, சர்க்கரை அல்லது தேன் கூட்டிக் குடிக்கவும். பித்தவாயு பித்தப்பயித்தியங் தீரும்.

### பித்தவாயு மாருட்டம் பிதற்றல் தீரக் கஷாயம்

சீந்தில் கீழ்காய்நெல்லி திற்பலி சிறுதேக்கு செவ்வியஞ் சுக்குக் கடுக்காய் மிளகு தூதுவளை கண்டங்கத்திரி ஆடாதோடை வகை. களா. 2 இரண்டு படி நீர் வைத்து அரைப்படி எடுத்து 3 நாள் 9 நேரங்குடிக்க பித்தவாயு மாருட்டம் பிதற்றல் முதலியன தீரும். இத்துடன் அமிர்தசஞ்சீவி, பெரிய கோரோசனைமாத்திரை, மகாஏலாதி, இவைகளில் ஏற்றஒன்றைக் கூட்டிக் கொடுக்க மூர்ச்சை மயக்கம் பிதற்றல் அறிவுகேடு முதலியன தீரும்.

### பித்தசாந்திச் சூரணம்.

பஞ்சதாரை நாற்களஞ்சு பருத்தமதுர மெண்களஞ்சு
இஞ்சிதிற்பலி இருகளஞ்சு ஏலந்தானு மிருகளஞ்சு
அஞ்சுமொன்ருய்த் தான்கூட்டி ஆவின்பாலிற் கொள்வீரேல்
மிஞ்சும்பித்தம் நாற்பதும்விட்டே ஓடிப்போய் விடுமே.

(பஞ்சதாரை = சர்க்கரை)

## கொத்தமல்லிச் சூரணம்.

தீரவேசகல நோய் தீரக்கேளு
சீரகந்தோட திமதுரம் கராம்புகருஞ்சீர்
சாரமாஞ்சன்ன லவங்கம் சதகுப்பை
வகைபலந் தானென்று கூட்டேன்
கூரவேசரக்கெல்லா மாறுபலங் கூட்டு
கொத்தமல்லி பலமாறு பலமாக்கொள்ளே
சேரவே இவைவகைகள் பன்னிராண்டாச்சு
சீனிற்கற்கண்டு பலம் பன்னிரண்டே.

பண்பாக இடித்ததனைப் பதனம்பண்ணி
பாங்கானகாசிளன்னை மேருவிலே அடைத்து
உன்னியே வெருகடி தூளந்திசந்தி
உடனேகொள் ஒருநேரவெந்நீர் கொள்ளு
உண்டாக்கற் சரீரமது பெலமதாகும்
குளேரிவு நெஞ்சுவலி நெஞ்சுதிடமதாகும்
உள்ளவே சிரநோய்க ளெல்லாந்தீரும்
ஓடுமே பித்தமுடன் பிதற்றல்நீங்கும்.

கண்ணில் நீர்ப்பாய்ச்சலறும் பிரகாசமாகும்
கலங்காது புத்தியோடு துர்மாங்கிஷமுந்தீரும்
தீருமே நித்திரையுஞ் சுகமுண்டாகும்
தீராதபுழுக்கிருமி சோகம் போகும்
வாருமே இடுப்புவலி கல்லடைப்பு
வாய்கோணல் வாய்குன்றல் இரண்டுந் தீரும்
தீருமேசெவிநோயும் செவிடுமை சேட்டுமமும்
பில்லியொடு வஞ்சனையுந் தீரும்
மாறுமே தொண்டைப்புண் கண்டமாலை
சரீரத்தில் நீர்க்கட்டுச் சாந்தமாமே.

இத்துடன் மகிழங்கொட்டையும் தேற்றுக்கொட்டையும் வகைக்கு அரைப்பலங்கூட்டி இடிக்கச் சஞ்சீவியாகும்.



## தலைவலி கபாலக்குத்து. (Headache)

தலையிற்காணும் வலிக்குத் தலைவலி என்று பெயர் இதுவும் பித்தவாயுவினொரு பிரிவேதான் நெற்றியில் ஒரு புறத்தில் மட்டும் சங்கமப் பிரதேசத்தில் அதாவது சுளிப் பில் உண்டாகும் வலியை ஒருத்தலைவலி என்றுசொல்வது வழக்கம். இருபக்கமுமிருப்பின் அதைத்தலைவலி என்று மட்டுங்கூறுவர். நடுநெற்றியில் புருவந்தொடங்குமிடத்தில் ஒருபுறத்தில் மட்டுமேனும் இருபுறத்திலேனும் ஒருவகை வலிஉண்டாகும் இதைத்தான் பொதுவாகத் தலைவலி என்பர்.

### சூரிய கபாலம்.

இதேதலைவலியில் பொழுதேறுசூரியன் குத்துஎன்னு மொருவகையுண்டு. காலையிற் சூரியனுதையமாகும் நேரத் தை அடுத்து இத்தலைவலி தொடங்கும் வெயிலேறஏறத் தலைவலியும் அதிகரித்துக்கொண்டேபோகும் உச்சிவேளைக் குத் தலைவலியின் கடுமை உச்சநிலையை அடைந்து மூர்ச் சையுமாகலாம் பிறகு மேற்குத்திசையிற் சூரியன் இறங்க இறங்கத் தலைவலியின் கடிமையும் படிப்படியாகக் குறைந்து மாலை 4 5 மணிவரையில் இல்லாது நின்றுவிடும். மறுபடி யும் மறுநாட்காலை இப்படியேதொடங்கும் இதைத்தான் பொழுதேறு சூரியன் கபாலக்குத்து என்பர்.

### தலைவலி பல காரணங்களாலும் வருவதுண்டு.

1 காப்பித்தலைவலி வழக்கமாய்க் காலையிற் காப்பிசாப்பிடு பவர் தவறி ஒருநாட்குடியாது விடுவதாலேற்படுவது இது காப்பிசாப்பிட நின்றுவிடும்.

2 அளவுமீறி வெயிலிலலைவதாலும் தலைவலி வருவதுண்டு இதற்கு ஓய்வெடுத்துக் கொள்வதுதான மருந்து.

3 முழுக்குத்தவறுவதால் வருந்தலையிடி வாரந்தோறு மப் பியங்கனஞ்செய்பவர் முழுக்கைத் தவற விடுவதாலேற்

படுவது. இதற்குமிழகாய்த்தைதலம் அல்லது மிழகாய்ப் பழமும் சாப்பிருணியுமிட்டுக் காய்ச்சியஎண்ணெயை முன்சொல்லியபடி தேய்த்துக்குளித்து மேலேசொல்லிய பத்தியப்படி செய்ய இத்தலைவலி தீரும்.

4 உற்சவகால நெருக்கடி கும்பல் புகை தூசி உள்ள இடங்களிற் பழகுவதாலேற்படுந் தலைவலி இதற்குநல்ல சுத்தமான காற்றுள்ள இடத்தில் ஓய்வெடுத்து உறங்குவதாற் குணமுண்டாகும்.

5 இரவில் உறக்கங்குழம்பிய காரணத்தால் ஆகாரமுஞ் செரியாது விடுவதாலேற்படுந் தலையிடி இதற்குக் காலை புசியாது வெறுவயிருய்க்கிடந்து தூங்கிஎழுந்து வெந்நீரிற்குளித்து உடலைப்பேணிக் கொண்டாற்போதும்.

6 பனி மழைகளில் நனைந்தகாரணத்தால் ஜலதோஷம் சளி இருமல் சுரம் முதலியவைகளேற்பட்டுக் கடுந்தலைவலியுமேற்படுவதுண்டு. இதற்குச் சாம்பிருணி, கருஞ்சீரகம், மஞ்சள், புற்றுமண் கூட்டியரைத்து நெற்றி பொட்டு இவைகளிற் பற்றிடுக சுரத்துக்குச் சொல்லப்பட்ட கஷாயம் மருந்துகளுங் கொடுக்கலாம்.

ஷை கஷாயம் மிளகு, கடுக்காய், மதுரம், சித்தரத்தை, சுக்கு, மல்லி, தூதுவளை, கண்டங்கத்தரி துளசி சமன் வகைகள 2. கூட்டி ஒருபடி நீர்வைத்து நாளொன்ருய்க்காய்ச்சி கற்கண்டு கூட்டிக் குடிக்கச் சுரந்நீங்கிக் குணமுண்டாகும். மருந்துகள் :- சி. சிவப்பு,பெ. சிவப்பு, புனைவேர்க் குளிகை, அகத்தியர் கோரோசனை மாத்திரை, இவற்றில் ஏற்ற ஒன்றை மேற்படி கஷாயத்துடன் கொடுக்க கபசுரம் முதலாய் நீங்கும்.

7 இவ்விதமில்லாமல் திடீரென்று ஒருவகைத் தலைவலி வருவதுண்டு எப்போதுவரும என்ன காரணத்தால் வரும என்று நிச்சயிக்கமுடியாது. மிகக்கடுமையான தலைவலி நோவாயிருக்கும் சிலசமயம் ஒருபக்கமும் சில



சமயமிருபக்கமுமித் தலைவலி இருக்கும் அன்றுமுழுமையும் படுத்தபடுக்கையாயிருப்பர் மற்றநாள் பச்சையாய், மஞ்சலாய், வெள்ளையாய்க் கசப்பாய்ச் சத்தி எடுப்பர் பின் மற்ற நாட்படிப்படியாய்க் குறைந்து சமனமடைவதுண்டு.

8 சிலருக்கு வாந்திவரும் போலிருக்கும் வராது. வாந்தி எடுத்தாற் சுகமாகுமென்று தோன்றும் வயிற்றிலொரு வித அழற்சியும் உமிழ்நீர்சுரப்பும் குமட்டலுமாக இருக்கும் வாந்திவராது பலவந்தமாய் வாந்தி எடுத்தால் ஊரையே கூப்பிடுஞ்சத்தத்துடன் சிறிது மஞ்சல்நிறப் பித்தநீரும் வெளுத்தஎச்சியும் வெளிப்படும் இதுகாரணமாய்த்தலைவலி சிறிதுகுறையும் இன்னமுந் நன்ருயெடுக்கவிரும்புவர் ஆனல் உவாந்தி எடுத்தால் தொண்டைபுண்ணானதுபோலும் விலாப்புற மெல்லாங் கொழுக்கிபோட்டு விட்டதுபோல் வலிப்பும் பிடிப்புமேற்பட்டுச் சொல்லமுடியாது கஷ்டப்படுவர் இதற்குப் பித்தநீருங்கபமும் பித்தவாயுவின் காரணமெனலாம். இவைகளில் எவ்விததலைவலி யாயிருந்தாலும் அவை பித்தம், பித்தாசயம் பித்தவாயு ஆகியவற்றின் கோளாறிஞலேயே ஏற்படுகின்றன.

### ஷை சிகிச்சைக் கிரமம்

1 இதற்குத் தண்மையும் இனிப்புச் சுவையுமுள்ள மருந்துகளாற் பேதிக்கச்செய்து அதாவது பித்தப்பேதி கொடுத்து மலமிழகச்செய்தாற் தீரும். பித்தசாந்திக்கு மல்லிச்சூரணம் நிலவாகைச்சூரணம் இஞ்சிச்சூரணமிவைகளிலொன்றைக் கொடுக்கக் குணமாகும்.

2 தலைக்கு கபாலகுத்துப் புளிஎண்ணெய், சிரகத்தைதலம், கிழ்காய்நெல்லித்தைதலம், மிளகாய்யெண்ணெய், மெழுகு சந்தனதி இவைகளிலேற்றஒன்றைத் தலையிற்தேய்த்து முழுகத் தீரும்.

## பித்தக் கொதி.

பித்தம்மிதமிஞ்சி பித்தசகூடும் பித்தவாயுவுமதிகரித்து இரத்தக்குழாய்களிற் துடிப்புமேற்படுவதால் உண்டாகிறது இதனாற் தலைசுற்றல், தலைஅம்மல், மயக்கம், தலைவலி, உவாந்தி, முதலிய குணங்களேற்படுகின்றன. இதில் பித்தக் கொதி, இரத்தக்கொதி என இருவகைகளுண்டு. இதைப் பித்தசாந்திக்குச் செய்யுஞ் சிகிச்சைகளினாலேயே நிற்பாட்டி விடலாம் இதுதற்காலிகமானதே. அது இரத்தக்கொதியானால் இரத்தமாகவே சத்திக்கவுஞ்செய்யும் அதுஉடனடியாக நிற்பாட்டப்படவேண்டும்.

**"இன்பூற விருப்பதை அறியாமல்**
**இரத்தம் கக்கிச் செத்தானும்"**

இன்பூறவென்னும் மூலி ஓர்ரத்ததம்பணகாரி இதை அவித்தோ இலையைப் பிளிந்தோ வேறுமருந்துகளோடு துணை மருந்தாகவோ கொடுப்பதால் இரத்தவாந்தியை நிற்பாட்டி விடலாம். இதன் சாற்றை பசுப்பால் சர்க்கரை கூட்டிக் குடிப்பதும் நன்று.

## உப அங்கம் (Appendix) பீலிகை

இது சிறுகுடலும் பெருங்குடலும் சந்திக்குமிடத்தில் தொங்கிக் கொண்டிருக்குமோர் குடல்வால்போன்றது. இதனுட்சிலசமயம் சோற்றுக்கல் சிறிய எலும்புத்துண்டு முட்டைஓடு நெல்லுமி தலைமயிர் தகரத்துண்டின் சிறியபாகம் மண்ணோடு இவைபோன்ற சிறிய கடின வஸ்துக்கள் உட்புகுந்து தங்கியிருந்து கிருமிகளை உண்டாக்கி விடுவது காரணமாக அழற்சி ஏற்பட்டு அதன் மேற்பாகத்திலுள்ள மென்தசைகளிலும் அழற்சி ஏற்படுவதால் 'அப்பென்றிக்' உண்டாகிறது. அப்படியானோர்க்குச் சடுதியாய் வயிற்றிற் பிடிப்புப்போன்ற பொறுக்கமுடியாத குத்து, வலி ஓங்காளம், சத்தி, சிறிதுகாய்ச்சல் வயிற்றை அமத்தினால் நோமலபந்தம் முதலிய குணங்களுடன் நாடியுஞ் சற்றுத் தீவி



ரமாகலாம். இங்கிலீயிற் சி[illegible] வாயு[illegible]க கூடிய இஞ்சிக்குளிகை போன்ற[illegible] பேதிக்கச் செய்வதாற் சமனமடையலாம் அது[illegible] அதனுள்ளிருக்குங் கடினவஸ்த்துக்களும் வெளியேறிச் சமனமடையலாம்.

## சிகிச்சைக் கிரமம்,

1 குலைபோட்ட வாழையின் உள்த்தண்டை எடுத்துக் கறி ஆக்கி 3 நாட்சாப்பிட்டுவர உபஅங்கத்தினுள்ளிருக்குங் கல் மண்ஓடுகள் யாவும்வெளியாகிக் குணமுண்டாகும் உப்பு ஆகா.

2 வாழைத்தண்டைச் சிறிது சிறிதாக நறுக்கி இடித்துப் பிளிந்தசாற்றில் வேளைக்கு ஓரவுன்சு அல்லது 2 அவுன்ஸ்சு வீதம் 6, 7 நாட்கள் குடித்துவர கல் மண் முதலியன கரைந்து வெளியாகிக் குணமடையலாம்.

3 தித்திப்புக்கொவ்வை அல்லது இனிப்புச்சீந்தில் எனப் படுங் கொயிலாக்கிழங்கை மெல்லியதாய்ச்சீவிக் காய வைத்திடித்த தூளை நெய்தேனிவைகளிற் சாப்பிடக் குணமுண்டாகும்.

4 மேற்படி கொயிலாக்கிழங்கைக் கறிசமைத்துச் சாப்பிடுவதாற் குணமுண்டாகும்.

5 செந்நெல் அரிசியோடு மேற்படிகிழங்கைச் சேர்த்திடித்துக் களி, பிட்டாக உபயோகிப்பதாலும் அப்பென்றிக் குணமடையலாம.

மேற்படிநோயை ஆரம்பத்திற் கவனியாது அசாக்கிரதையாயிருந்துவிடுவதால் ஷை உறுப்புவீங்கிச் சீழ்பிடித்துவிடநேர்ந்தால் அது ஆபத்தானதே மேலும்அது அப்செற் ஆகி (*Upset*) வெடிக்க நேர்ந்தால் சடுதிமரணமுமேற்படலாம் அந்தநிலையிற்தான் சத்திரசிகிச்சை "ஒப்பிறேசன்" அவசியமாகிறது.

## பெருங்குடல். (Colon)

சிறுகுடலிலிருந்துவருங் கழிவுபொருட்கள் இருகுடல்களுக்குமிடையிலுள்ள கபாடம் வழியாய்ப் பெருங்குடலை

அடைகிறது. பெருங்குடலும் சிறுகுடலைப் போலவே மூன்று பாகங்களையுடையதாயிருக்கிறது.

அவை :- 1. ஆரோகணம் அதாவது ஏறுகுடல் 2. அனுப்பிரஸ்தம் அதாவது குறுக்கேசெல்லுவது 3 அவரோகணம் "இறங்குகுடல்" இப்பாகத்தில் "பிருகரந்திரம்" மலப்பை அதாவது குதம் அபானமென்பன அடங்கும். பெருங்குடல் விரிந்து சுருங்குவதால் கழிவுப்பொருட்கள் குதத்துட் சென்றுதங்கிப் பின் குதவழியாய் அபானவாயிலை அடைந்து மலமாகவே வெளிக்கழிகிறது.

வயிற்றிலுண்டாகும் நோய்கள் 108 அதில்வாததோஷ மதிகரித்துண்டாகும் நோய்கள் 56 இவற்றிற் பிரதான வியாதிகள்; மலபந்தம், மலவரட்சி, மூலவாயு, குடகரி குடல்வாதம், குடற்பிதுக்கம், அண்டவாயு குடலிறக்கம், அதாவது "கேணியா", கெற்பவாயு, சரோணிதவாயு, மேகம முதலியவுமடங்கும்.

### சிகிச்சைக்கிரமம்.

**"வகுத்தமுறைப்பாடு மந்தத்தால் வாய்வாம்"** என்பதனாலும் **மலமதுசிக்கி நின்றால் வாதமே அதிகமாகும்.** என்றவிதிப்படியும் வாததோஷ மதிகரித்துண்டாகும் எவ்வித ரோகமானாலும் மலசுத்திசெய்வதால் சமனமடைவது சகசமே. ஆகவே;

1 **மலபந்தம்;** நீக்கப்பட பேதி அவசியமாகிறது

2 **மலவரட்சி** இதற்கு அறுவடைச்சூரணம், சிவதைவேர்ச் சூரணம், நிலவாகைச்சூரணம், சூரத்தாலரைக்கஷாயம் போன்ற மலமிளக்கிப் பேதியாக்கும் மருந்துகள் கொடுப்பது நன்மைபயக்கும்.

3 **மூலவாயுவுக்கு:-** மூலவாயுப்பொடி, வேற்கொம்புச்சூரணம், மிளகுசூரணம், பஞ்சதீபாக்கினிச்சூரணம், அட்டசூரணம் போல்வன.



4 **குடகிரி:–** உண்டாவதற்குரிய காரணங்கள்; தேகவரட்சி அதிககுருணமுள்ள உணவுகளை உட்கொள்ளல் பரம்பரையான மூலச்சூடு, நித்திரைக்குறைவு, பசிஇருத்தல் ஆகாஉணவுகளை உட்கொள்ளல் முதலியகாரணங்களால் இந்நோயேற்படுகிறது.

### இதன் பூர்வ ரூபம்.

இந்நோய் தோற்றுவதற்கு சிலகாலங்களுக்கு முன்னதாகவே வயிற்றின் கீழ்ப்பாகத்தில் இன்னதென்று சொல்லமுடியாத ஒருவிதவேதனை காணப்படும். பின் அபானத்தின்மேல் இடப்புறமாவுள்ள மலப்பையை அடுத்து சுருக் சுருக்கென்ற குத்துவலிகாணும் இவற்றுடன் மலக்கட்டும் உணவில் வெறுப்பும் தேகவெழுப்பு முண்டாகும்.

### குடகிரியின் குணம்.

கடைக்குடல் முள்ளந்தண்டில் கலந்து கையடியிற்குத்தி
மிடைப்பட வலித்துப்பின்னும் மிகஅடிவயிற்றில் நின்றே
புகைந்துற எரிந்தழன்று புரண்டிடும் மறுகிநோகும்
இடப்புறந்தன்னில் நிற்கும் இதுகுடகிரி என்றேதே.

கடைக்குடல் முள்ளந்தண்டில் வலி குத்து உளைவு அழற்சி புரட்சி நோ வீக்கம் முதலிய குணங்களுண்டாகும் பின் இதுமேல் நோக்கிப் பரந்துசென்று இடப்புறத்தோள்ப் பூட்டில் உளைவு முதலிய வேதனைகளைச்செய்யும் சிலவேளை இப்படி உபத்திரவஞ் செய்துபின்னர் கீளிறங்கி முள்ளந் தண்டிலும் அடிவயிற்றின் இடதுபுறத்திலுந் நிற்கும் சாப்பிட்டவுடன் சிலருக்கு வேதனை அதிகரிக்கும் மலமிறுகிக்கட்டிக்கொள்ளும் மலத்தை வெளிப்படுத்தினால் இவ்வேதனை சிறிது சாந்தியாகும் அபானவாயுவெளிப்பட்டாலும் கொஞ்சம் சாந்தியாகும் நாளடைவில் நோயாளி இளைத்துப்போவான்: இவ்வருத்தகாலத்தைத் திட்டமாய் வகுத்துச் சொல்ல முடியாது. சிலருக்குச் சிகிச்சைக் குறைவினால் இரண்டு

மூன்று வருடகாலம் இந்நோய் தொடர்ந்துநின்று உபத்திரவஞ் செய்வதுமுண்டு இக்குடகிரி வாயுவைச் சிலர் குன்மநோயின்பாற் படுத்திக் கூறுவதுமுண்டு அப்படியுங் கூறுகின்றார்கள். ஆனால் குன்மத்துக்கு இரைப்பையில் வீக்கம் கட்டி அல்லது விரணமுண்டாகும். வாந்தி அசீரணமுண்டாகும். குடகிரியில் அவை உண்டாகா. குன்மம் இரைப்பையிலேற்படுவது குடகிரி கடைக்குடலிலுண்டாவது குன்மத்தில் இரைப்பை சிறுகுடல் ஈரல் இவைகளிலுமுவத்திரவமுண்டு. ஆனால் குடகிரியில் அடிவயிற்றினிடதுபுறமும் முள்ளந்தண்டும் கையின்மேற்புறமும் இவைகளில் வேதனை இருக்கும் இவைகாரணமாய்க் குடகிரி வேறு குன்மம் வேறு என்று எழிதில் அறிந்து கொள்ளலாம்.

## குடகிரியின் சிகிச்சைக்கிரமம்

இந்நோயினால் எரிவு, வலிப்பு, வயிறு கல்லுப்போலிருத்தல், நாரியைச்சுற்றிவலி இவைகளதிகரித்தால்; களற்சி மாத்திரை மேற்படி குளம்பு, கொடிக்களற்சிசூரணம், இஞ்சிக்குளிகை, அகத்தியர் குளம்பு, வாதசஞ்சீவி இவைகளில் ஏற்ற ஒன்றைப் பேதிக்கக்கொடுத்து பின்:-

1. சர்க்கரை கள. 4, இந்துப்பு கள. 2 இவைகளுடனோர் பெரிய கரண்டிதேனுங்கூட்டி அரைத்து மூன்றுகூறுகள்செய்து கொடுக்க அபானவாயு பறிந்து சிலதருணம் மலமுங்கழிந்து சுகமடைவர்.

2 உள்ளி, சுக்கு, இந்துப்பு வகை. கள 2 எடுத்து ஒருபடி நீர்வைத்துக் காலாய்க் கஷாயஞ் செய்து நேரமோரவுன்சு வீதம் நாள் 3 வேளைகொடுக்கத் தீரும். இதை துணைமருந்தாகவுமுபயோகிக்க நன்று.

3. இந்துப்பு, கடுகு, உள்ளி வகை கள. 1 இதனுடன் முடக்கொத்தானிலையும் ஒருபிடி கூட்டி முன்போல அவித்துக்குடிகக மாறும். மேற்படி மருந்துகளுக்கு வசப்படாது விடில்;



4, கறிமுருங்கைப் பட்டை, கொடிவேலிவேர், உத்தமாகாணி வேர், சாறணை, சுக்கு, காவிளாய்வேர் வகை கள. 3 எடுத்து 2 படி நீர்வைத்துக் காய்ச்சி வேளைக்கு ஒரு அவுன்சு வீதம் 3 குன்றி. எடை பெருங்காயப் பொடியும் போட்டுக் குடித்துவரக் குடகிரி தீரும்.

## இதற்கு எண்ணெய்

கொடிக்களர்ச்சிப் பருப்பு, இந்துப்பு, உள்ளி, காயஞ், சுக்கு, மிளகு, வாளம் வகை கள. 3 ஆமணக்கெண்ணெய் ஒருபோத்தல் விட்டு எண்ணெயை வெடிபதமாய்க் காய்ச்சிச் சரக்குகளைப் பொடித்துத் தூவி 4 நாள் ஊறவிட்டுப் பின் முறுகாமல் சூடுகாட்டி வடித்துக் காலையில் ஓர் பெரிய கரண்டிவீதம் 5 நாட்குடித்துவர சூலை, குன்மம், குடகிரி முதலிய வாயுக்கள் எல்லாம்தீரும். பின் கொடிக்களற்சிச் சூரணம் கொடுத்துவரத் தீரும்.

## குடல் வாதம்

உடலிடை யோடிமீண்டே உழைந்து கால் சந்து கைகள்
குடலிடை கூப்பிட்டோடிக் குமுறிடுங் குடலிற் தங்கும்
கடலிடைத் திரையேபோலக் கலக்கிடுங் கலங்கி நிற்கும்
நடமிடுகுடல் வாதத்தின் குணமென நவில்வதாமே.

இதுவும் குடகிரிக்கு அடுத்தபடியாக அதிலுங் கூடிய குணங்களையுடையது. இது கடைக்குடலிலும் நாபிக்குக் கீழ் நடுப்பெறவும் சிலசமயம் வயிறு முழுவதுமே குத்து, உளைவு, எரிவு, அழற்சி, புரட்சி, நோ, வயிற்றூதல், வயிறு கல்லுப்போலிருத்தல் முதலிய குணங்களுடனும், பின் இது மேல்நோக்கிப் பரந்து இடப்புறத் தோள்பட்டையில் உளையும், பேசமுடியாது இளைக்கும், காதடியில் நோவும், கைச்சிப்பிலுளைவு முதலிய உபத்திரவங்களையும் செய்யும். சில சமயம் கீழ்இறங்கி இடது முளங்காலிலும், முள்ளந்தண்டைப்பற்றி முதுகிலும், அடிவயிற்றின் இடது புறத்திலும் இருந்து உபாதைசெய்யும் பசி இராது, மலங்கட்டும், சில சமயம் உடலுக்கே உலைவைத்துவிடும்போலிருக்கும். அதா

வது மரணவேதனைபோலிருக்கும். நாளடைவில் நோயாளி பெலவீனப்பட்டு இளைத்துவிடுவான்; சிலருக்கு இது சிகிச்சைக்குறைவால் வருடக்கணக்கில் தொடர்ந்து நின்று உபாதை செய்யும்.

### ஷை சிகிச்சைக் கிரமம்

1. கொடிக்களர்ச்சி வடக்குவேரைப் பிடுங்கி ஒரு தேசிக்காயளவு அரைத்தெடுத்து பசுப்பாலில் கரைத்து 3 நாட்குடிக்கக் குடல்வாதந் தீரும்.
2. முருங்கை, வெள்ளுள்ளி, சாறணை, கொடிக்களர்ச்சிப் பருப்பு, சுக்கு, கொள்ளு வகை கள. 2 இருபடி நீர் வைத்துக் காற்படி எடுத்து அவுன்சு வீதம் குடிக்கத் தீரும்.
3. களர்ச்சி, உள்ளி, இந்துப்பு, முடக்கொத்தான் சாறு நொச்சியிலைச்சாறு இவைகளைக் கூட்டி அரைத்துக் காய்ச்சிக் குடிக்க குடல்வாதம், அண்டவாயு தீரும்.

### களர்ச்சிமாத்திரை

திரிகடுகு, இருசீர், இந்துப்பு, உள்ளி, காயம் வகை. கள. 1 கொடிக்களற்சிவிரை வாளம் வகை. கள. 2 முடக்கொத்தான் சாற்றில் மெழுகுபோலரைத்து தூதுளங்காயளவு கொடுக்க நன்கு பேதியாகும். வயிற்றுவாதம், குடல்வாதம், குடலெரிவு, அண்டவாயு, கழலேறுவாயு இவை தீரும்.

## குடற்பிதுக்கம் (Herneya) அண்டவாயு

இந்நோய் குடற்பிதுக்கம், அண்டவாயு "கேணியா" என அழைக்கப்படுகிறது. இதுகுடகிரி, குடல்வாதங் காரணமாக குடலிலோர்பகுதியில் இசிவுண்டாகி அது காரணமாகக் குடலிலோர்பகுதியில் பிதுக்க மேற்பட்டு நாபிக்குக் கீழ்நடுப்பெறவோ ஒரு பக்கமாகவோ சிலசமயம் இரு பக்கமும் கூடவோ நின்று உபாதைசெய்யும். சிலசமயமிது



களலேறுவாயுவாய்க் குடற்பிதுக்கமும் இறங்கு வாயுவாய் விதையிலுமிறங்கி குடலிறக்கமுமேற்படுகிறது. இது மலசலக்குடல்களை அழுத்தி மல சலங்களைத் தடைசெய்து குத்து, உழைவு, எரிவு, அழற்சி, புரட்சி, நோ. வயிற்றூதல் முதலிய குணங்களை உண்டுபண்ணி மனிதரை வதைசெய்யும் ஓர் கொடிய வியாதியாகிறது. இது மரணாவஸ்தையை உண்டுபண்ணிவிடுவதுமல்லாமல் சடுதி மரணத்தையும் உண்டுபண்ணி விடுகிறது. ஆகையால் இதில் அதிக நிதானமாகவும் தீவிரமாகவும் சிகிச்சை ரட்சை செய்யமுடியாதோர் ரோகிகளை நேரகாலத்தோடு சத்திரசிகிச்சை வல்லுனரிடம் ஆஸ்பத்திரிகளுக்கனுப்பிவிடுவது சாலச் சிறந்த முறையாகும். "கொடுநோய்களை ஆரம்பத்திலேயே ஆராய்ந்தறிந்துகண்டு குணப்படுத்த முடியுமென்பது" சித்த விஞ்ஞான நியதி.

ஆனால் மேற்படி குணங்கள் ஓர் கஸ்டசாத்திய நிலையாகும். இதையிட்டு நம் சித்த வைத்திய முதல்வர்கள் திட்டவட்டமாய் தெரிந்து ஆராய்ந்தறிந்து அதற்குத் தகுந்த சிகிச்சைமுறைகளையும் அருளியுள்ளார். கஷாயம், பூச்சு, ஒத்தணம் முதலாம் துணைமருந்துகளையும் தைலம், மெழுகு, சூரணம், பற்பம், செந்தூரம் முதலாமிணைமருந்துகளையும் தம் ஏடுகளில் எழுதிவைத்துப் போயினர்.

அப்படியிருந்தும் அவற்றைக்கையாளவேண்டிய வைத்தியர்கள் குருவிடஞ் சென்று விளங்கிக் கொள்ளும் முறையை விட்டு அதையிட்ட பூரண விளக்கமின்மையால் சிகிச்சை செய்யத் தயங்குகின்றனர். அதற்குத்தகுந்த ஊக்கங்கொடுக்க எவருமின்மையே காரணமெனலாம். இதற்கு அரசியலாரும் தகுதிவாய்ந்த அறிவாளிகளுமிதுவிஷயத்திற் கவனமெடுக்கக் கூடுமாயின் சித்தவைத்தியரால் இந்நோயைத் தீர்க்கமுடியுமென்பது எனது துணிபு.

## அண்டவாயுவுக்கு ஆரம்பசிகிச்சை

**கஷாயம்:—**

1. முருங்கைப்பட்டை களர்ச்சி இலை-வேர்-கொட்டை சாறணை முடக்கொத்தான் இவ்வாறும் சரிசமன் வகைகள். 4 கூட்டி 2 படி நீர்வைத்து அரைப்படி எடுத்து 3 நாட் குடிக்க அண்ட வாயு கழலேறு வாயு தீரும்.
2. குடகிரி, குடல்வாதம் இவைகளுக்குமேலே கூறப்பட்டிருக்கும் கஷாயத்திலேற்றதையுங் கொடுக்கலாம்.

**பூச்சு:—**

1. கழற்சி இலை, பிச்சுவிழாத்தி இலை ஒவ்வொருபிடி கஸ்தூரிமஞ்சல், உள்ளி வகை கள. 1 வெந்நீரிலரைத்து இளஞ்சூடாய்ப் பூசவும்.
2. பெருங்காயம், உள்ளி, உலுவா, களர்ச்சிப்பருப்பு, கரியபவளம், வேற்கொம்பு, விளைவுகற்பூரம், சாம்பிருணி இவை வகை கள. 1 கோழிமுட்டை வெண்கரு விட்டரைத்துப்பூசவும். இதற்குங் குணமடையாவிடின்;
3. குளவிந்தமஞ்சல் குக்கில், வேப்பம்பிசின், இவைகளை வெந்நீர்விட்டரைத்துப் பூசவும்.

**ஒத்தணம்:—**

1. களர்ச்சியிலை 4 பிடி, எருக்கன் பூ ஒருபிடி, கஸ்த்தூரி மஞ்சல், உள்ளி, சுக்கு, கழற்சிப்பருப்பு, வகைகள. 1 சரக்குத்தூளை பொடிசெய்து மேற்படி இலை-பூ சேர்த்திடித்து 3 பொட்டளிகள் செய்து வேடுகட்டி அவித்து தாங்கக்கூடிய சூட்டுடன் நோக்கண்ட இடத்தில் ஒத்தணமிட வலிப்பு, உழைவு, எரிவு முதலியன சாந்தியாகும்.

### களர்ச்சிச் சூரணம்

கொடிக்கழற்சி, அஸ்வகெந்தி, முடக்கொத்தான், நன்னாரி, மாவிலங்கை, சாறணை இவை வேர்; பெருங்காயம், முக்கடுகு, மாஞ்சில், சிறுதேக்கு, நாகம்பூ, ஈரரத்தை, 



உலுவா, வசுவாசி, உள்ளி, ஏலம், சாதிக்காய், வெளுத்தற்பிசின், காந்தம், இந்துப்பு, கல்நார், திரிபலை, செண்பகப்பூ, கராம்பு, செஞ்சந்தனம், கல்மதம், தாளிசபத்திரி வகை. கள. 2. கொடிக்களர்ச்சி விரை பலம். க. வாளம் 15. கொட்டை வறுத்திடித்துச் சூரணமாக்கி வெருகடி காலை மாலை தேனிற் சாப்பிட்டுவர விரைவாயு வாதம், பக்கவாயு, குடல்வாதம் இவை 7 நாட்களிற் சாந்தியடையும். 40 நாள் ஒரு மண்டலஞ் சாப்பிடத் தீரும்.

### அண்டவாயுக் குளிகை.

நொச்சி, களர்ச்சி, சாறணை, ஆடாதோடை, தயிர்வளை, வேலிப்பருத்தி, கோளியவரை, இவைகொழுந்து, எருக்கம்பூ, வகை. பிடி. க. வசம்பு, சித்திரமூலம், மிளகு, திற்பலி, ஓமம், வகை. கள. 3 கொடிக்களர்ச்சிப் பருப்பு, வெள்ளுள்ளி, வகை. கள. 5. காயம். கள. க. இவைகளை வேலிப்பருத்திச் சாற்றாலரைத்து ஒரு களஞ்சு வீதம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி இயங்கு, ஞெச்சி, உத்தமாகாணி, முருங்கை, சாறணை, கொடிவேலி வகை. பலம். ½. எடுத்துக் கியாளமிட்டு அதிலோருருண்டை கொடுக்கவும். இப்படிப் 13 நாள் புளி தள்ளிச் சாப்பிடவும்.

**வேறு குடிநீர்:-** கொடிக்களர்ச்சிக் கொடிப்பருப்பு, முடக்கொத்தான், கொடிபருப்பு, சுக்கு வகை. கள. 8 இடித்து எட்டொன்றுயவித்து நேரமொரு சிறங்கை வாதாரிகூட்டிக் கொடுக்கவும் நன்று.

### கணையம். (Pancreas)

இது முன்சிறுகுடல் வளைவில் இரப்பைக்குக் கீழாக முன்சிறுகுடல் அதாவது "டியூடன"த்திலிருந்து மண்ணீரல் வரையுங்நீண்டு ஓர் குழந்தை படுத்திருப்பதுபோல் காணப்படுகிறது. கணையத்திலுண்டாகும் ஆக்னேரசம் அதாவது "இன்சூலின்" என்னுங்நீர் நாமுண்ணும் உணவுப்பொருள்களிலுள்ள சர்க்கரைச்சத்தை உடம்பிற்சேரும்

படி செய்கிறது இப்பொருள் உற்பத்திக் குறைவினாலேயே சர்க்கரைச்சத்து உடம்பிற்சேர்க்கப்படாமல் சிறுநீருடன் கலந்துவிட நேரிடுகிறது. அறுசுவைகளில் இனிப்புச்சுவை தான்உடலுக்குப்புஸ்டியையும தாதுக்களுக்குச் சகிப்புத்தன்மையையும் அதிகபலத்தையும் கொடுக்கிறது. இவ்வினிப்புச்சுவை சரீரத்துக்குதவாது கழிவுப்பொருள்களாகிய சிறுநீரிற்கலந்து கழியுமாயின் சரீரபுஸ்டியை எப்படிஉண்டாக்க முடியும். நீரழிவு என்னும் மது மேகத்தில் இப்படித்தானாகிறது.

உணவுகளிலிருந்து கிரகிக்கப்படும் இனிப்புச்சத்து ரசதாதுமூலம் இரத்ததாதுவுக்குச்சென்று அதில் நின்று மாமிசதாதுவுக்குச் செல்கின்றன சர்க்கரைச்சத்தை அடுத்த தாதுவுக்கு அனுப்பாததால் அது ரத்தத்திற் தங்கிவிடுகிறது. அல்லது அனுப்பியதைச் சேமித்துவைத்துக் கொள்ளும் தன்மை மாமிசதாதுவுக்குப் போதாதிருப்பதால் இரத்தத்தில் நின்றுவிடலாம்.

இந்தநிலையில் இரத்தத்திலிருந்து குண்டிக்காயிற் பிரிக்கப்படும் சிறுநீரில் இச்சர்க்கரைச் சத்துச் சேர்ந்துவிடுகிறது. இரத்தத்திலுங்கூட இதுகாணப்படும். இவற்றை முறையே மூத்திரத்திலிருக்குஞ் சர்க்கரை என்றும் இரத்தத்திலிருக்குஞ் சர்க்கரை என்றும்சொல்வர்.

ஈரல் மேற்படிசத்துப் பொருளைத் தம்முள் வைத்துக் கொள்ளமுடியாமல் மேதோதாதுவிடங் கொடுத்துவிடுவதால் மேதோதாது அதிகரித்து தேகந்தொளதொளத்து ஊதி தன்னுடலே தனக்குப்பாரமானநிலை ஏற்பட்டுவிட்டால் மனிதன் ஊதிவிட்ட பலூனைபோல அல்லது ஆனைக்குட்டி போல ஆகிவிடலாம். இந்நிலையில் மூத்திரமதிகமாயிறங்குவதும் அதில்இனிப்புக் கலந்துபோவதும் சிறுநீரைக் கட்டெறும்புகள் மொய்த்துக் கொள்வதுமாகிய அறிகுறி[illegible] காணப்படும். இதைத்தான்முறையே வெகுமூத்திரம்



மதுமூத்திரம் என்றுசொல்லுவர். இதில் மதுமூத்திரமே இடர்தரும்வியாதி இது ஈரல் குண்டிக்காய் கணையம் முதலிய உறுப்புகள் வியாதிஉறுவதாலும் அளவுக்குமிஞ்சிய தாம்பத்தியஉறவு சரீரஉழைப்பு மதுபானம் கோபம் முதலியன அளவுமீறியிருப்பதாலும் தேகபயிற்சியில்லாமை இனிப்புப் பண்டங்களை அதிகமாயுண்ணல் முதலியகாரணங்களாலும் பரம்பரை காரணமாகவும் இந்நோய் ஏற்படுகிறது.

சுகதேகி ஒருவன் தினம் 40, 50 அவுன்சு வரை சிறுநீர் கழிக்கின்றான் ஆனாற்குடிக்குந்நீர் கழிக்கும்வியர்வையைப் பொறுத்தும் இவ்வளவுகளில் வித்தியாசமேற்படலாம். ஆனால் மதுமேகவியாதியால் பீடிக்கப்பட்ட ஒருவன் தினந்தோறும் நூற்றியிருபது (120) தொடக்கம் 400 அவுன்சு வரை சிறுநீர் கழிக்கின்றான்.

சர்க்கரையின்றி அடிக்கடி சிறுநீர் அதிகஅளவிற் கழிந்தால் அதற்கு 'டயபிற்றீஸ் இன்சிபிடர்' (*Diabetes Insipedar*) என்று ஆங்கிலத்தில் கூறுவர். மற்றது நீர்கனதியாகவும் சிறிதுமணமாகவும் சர்க்கரைச்சத்து கலந்ததாகவும் வெளிப்படுவது இதற்கு (*Diabetes Melletus*) 'டயபிற்றிஸ் மெலிற்றஸ்' என்றுங்கூறுவா.

## மதுபோகம் அல்லது நீரழிவினால் ஏற்படுவன.

நீரிழிவுக்கு அதிகமாக நீர்த்துஒழுகுதல் என்று பொருள். தேகத்திலுள்ள அதிமுக்கிய சாரமானவஸ்துக்கள் மூத்திரத்தோடுகலந்து மூத்திரத்தை அதிகரிக்கச் செய்து அதோடுவெளிப்படுகிறது. தேகத்தில் கொழுப்பும் மாமிசமும் அதிகரித்து உடம்புஇறுக்காது நொய்ந்து தொளதொளத்து விடுவதால் ஏற்படுகிறது. மேலுமதிகப்படின் பெருந்தாகம், பெரும்பசி, நடந்தாலும் வேறு சரீர சேஸ்டைகள் செய்தாலும் பெருமூச்சுவாங்குதல், தூக்கக் குறைவு, பெலவீனம், தலைசுற்றல், இரத்தஅமுக்கம், முதலிய தவறுகள் நீரிழிவுரோகத்திலேற்படுகின்றன. இன்

ணமுந் நோய்முற்றிவிட்டாலோ சத்துப்பொருள்கள் அதிகங் கழிவதால் பலவீனம், உடல்வாட்டம், உள்ளங்கால் உள்ளங் கைகளில் எரிவு சிலசமயங்களில் உடம்புமுழுவதுமே கூட எரிச்சல் சிலதருணம் எறும்பு மொய்ப்பதுபோன்ற உணர்ச்சி அல்லது கைகால்கள் விறைத்து இயற்கையான பரிசஉணர்ச்சியே இல்லாது போய்விடுதல் ஓய்ச்சல், உடம்பு கனத்தல், சோம்பல் முதலியஅறிகுறிகள் காணப்படும். நீக்கப்படாவிடில் இரத்தக்கட்டி, சூலே, பிளவை, தேகமழு குதல், முதலியனஏற்படும்.

மக்கள் சுகாதாரவாழ்க்கையை கவனியாது தம்மிஷ் டப்படி நவநாகரீக வாழ்க்கையில் ஈடுபடுதலாலிவ் வியாதி ஏற்படுகிறது. இதுகாரணமாய்த் தற்காலமக்களிற் பெரும் பாலோர் நீரழிவு என்னும் வியாதியாற் பீடிக்கப்பட்டு அவதியுறுகின்றனர்.

## நீரிழிவு (Diabetes)

நீரழிவுவென்பது சிறுநீர் சம்பந்தமான ரோகங்களேயே இதிற் பிரமேகநீர் அடிக்கடி போதல், அதிகமாய்ப் போதல், நீரிறங்காமை, கடுத்துபோதல், சிறுநீரிலினிப்பு, இரத்தத் திற் சர்க்கரை முதலிய குணங்களேற்படலாம் இதையே நீரழிவு, மதுமேகம், (*Diabetes*) டயபிற்றிஸ் என்பர் இதில் நீர் மேகம், மோர்மேகம், மதுமேகம், பிறமேகம், முதலிய 21 வகைகளுண்டென சித்தரேடுகள் கூறுகின்றன.

### நீரழிவுக்கு ஆரம்ப சிகிச்சை.

1 சிறுகுறிஞ்சா அல்லது சர்க்கரை கொல்லி என்று சொல்லப்படும் பச்சிலேயின் சூரணத்தைப் பசுப்பால் தேன்கூட்டிச் சாப்பிட குணமாகும்

2 சீந்திற் சர்க்கரை அல்லது குடுசியாதிக் கஷாயந் தேன் கூட்டிச்சாப்பிடலாம்.

3 கருவேலங்காயின் சூரணம் மேற்படி அனுபானங்களிற் சாப்பிடலாம்.



4 அகத்திவேர் கஷாயமுட்கொள்ள மதுமேகந்தீரும்.

மதுமேகம் முற்றியநிலேயிலுண்டாகுங் கைகால் தேக எரிவு, நீர்பிரியும்போதுண்டாகும் எரிச்சல், பெருந்தாக மிவைதீரும் என்று அகத்தியர் குணபாடம் தெரி விக்கிறது.

நல்லகத்தி வேரர்தனை நாடுங்கால் மேகமெனும்
செல்லகலுந் தாகமறும் சோம்கபோம் மெல்லமெல்ல
மெய்யெரிவு கையெரிவு மேகத்திலுள் ளெரிவு
ஐயெரியும் போமென்றறி; இதை ஓர் "ஸ்பெசிபிக்" என்கி ரூர்சித்தர்.

5 சீந்திற் சர்க்கரையைத் தேன்நெய் இவைகடனுட்கொண் டு வரக் கூடியபலனளிக்கும்.

"அமுதவல்லிக்கொடி அக்கார முண்டிடில்
திமிருறுமேகநோய் தீதெலாந் தீருமே" என்கிருர் குறுமுனி.

மேகமெனு மாதவத்தால் வெந்த உயிர்ப்பயிரை
தாகமடங்கத் தணித்தலால் — ஆகம
அமரரென இருக்க ஆதரித்தலாலே
அமுதவல்லி சஞ்சீவியாம். (அமுதவல்லி = சீந்தில்)

நீரிழிவிலுண்டாகும் பெரும்தாகத்தைத் தணிக்கும் அமரர்களேபபோல் நிலேயாய்வாழ உதவிபுரியும் அதாவது "சந்ததமுமிளமை யோடிருக்கலாம்" என்றவாறு.

6 கோவைக்கிழங்கின் சாற்றை 1, 2, 3, உச்சிக்கரண்டி வீதம் குடித்துவர மதுமேகந்தீரும். "இனிப்புநீரத்தனை யும் கூட்டோடகற்றும்" என்பது அகத்தியர் குண பாடம். மேலேகூறியவைகளைக் குடித்துவரத் தீரும். அல்லது அனுபானம் அல்லது துணைமருந்துகளாக உபயோகித்தாலுந் தீரும்.

7 ஆவரை இலை பூ, பட்டை, வேர்காய், இவை ஐந்தையும் ஆவரைப்பஞ்சாங்கம் அல்லது பஞ்சதாரை என்பர் இவைகளை இடித்துச் சூரணித்து கஷாயமாக்கிப் பாலு டன் குடித்துவர நீங்குமென்கிறார் **தேரையர்.**

**சொல்லுதற்கு மட்டுமோ தொலையாத மேகநீர்**
**"எல்லா மகற்றுமெரி வகற்று மாவாரை"** என்கிறார் அகத்தியர்.

**சலரோகக் கஷாயம்.**

8 ஆவரைப் பஞ்சாங்கம் 3. சீந்திற் பஞ்சாங்கம் 2 பங்கு அப்படியே தில்லைப்பஞ்சாங்கமும் ஒரு பங்கு கூட்டி வெதுப்பிப்பொடித்து அதில் ஒரு பிடிக்கு ஒருபடி நீர் விட்டு ¼ சாலாய் வற்றவைத்து அத்துடன் பசும்பாலுங் கூட்டிக் காலைமாலை குடித்துவர நீரழிவு தீரும். சர்க்கரையும் குறையும்.

**நீர்க்கடுப்பு நீரழிவு தீர.**

கடுக்காய், பச்சிலை, சிறுகாஞ்சோன்றி, சிறுநெரிஞ்சி, சிறுபீளை, சிறுகிரை வகை. கள. 2 நறுக்கி ஒருபடி நீர் விட்டு காற்படி எடுத்து 3 நாள 9 நேரங் குடிக்கவும இத்துடன் சுவாசத்துப் பறபமும தேனிற்சாப்பிட நல்லகுணஞ் செய்யும்.

**சலங் கழிய.**

இரேவல்ச்சின்னி, சருநாவி, சிறுநாகம்பூ, இலவங்கம், பறங்கிப்பட்டை, ஏலம், சீரகம், வெடியுப்பு, படிகாரம், சலோதரக்கல் ஒருபடிநீர் விட்டவித்து காற்படி எடுத்து உப்பை வறுத்துப் போடவும கல்லை உரைத்துக் குடிக்கவும ஜலம் தாராளமாயிறங்கிக் குணமடையலாம.

**நீரழிவுக்கு குடி நீர்.**

அத்தியுடனே நாவல் கடலிருஞ்சி
அதனிரட்டி கொன்றை ஆவரையின் பட்டை



இத்தனையுமிரா அடுப்பி லூறவைத்து
இதமாக அசனஞ்செய் திருக்கும் போது
மைதவழுங் குழலாளே சற்றுச் சற்றே
வடித்து வார்த்துக் குடிப் பிரேல்
கொத்தவிழும் பரமனுர் விதித்த நாளிற்
கொல்வதன்றி நீரழிவு கொல்லாதப்பா.

மேலேகூறிய கஷாயங்களுடன் கோமூத்திர சலாசத்துப்பற்பம், வங்கபற்பம், முறையான **அப்பிரகசெந்தூரம்** முதலியன சமயோசிதமறிந்து கொடுக்க மிகுந்த நற்பலனளிக்கும். **மருந்துகால் "மதிமுக்கால்"** அல்லவா?

**சிலாசத்துப் பற்பம்.**

கேளப்பா சீலாசத்தை யார்தான் காண்பார்
கிருபையுள்ள கர்ப்பூரச்சத்து வாங்கி
நாளப்பா சுத்திசெய்து கல்வத் திட்டு
நன்மைசிறு செருப்படியின் சாற்றாலாட்டி
கேளப்பா லேசாக பில்லை செய்து
குணமாகக் காயவைத்தே யோட்டில்வைத்து
தாளப்பா சீலைமண் பலமாய்ச் செய்து
தன்மையுடன் ஐம்பதெருப் புடத்திற் போடே
போட்டுமே ஆறவிட்டு முன்போற் போடு.
புண்ணியனே மூன்றுவிசை யரைத்துப்போடு
நாட்டுமே வெண்மையதாய்ப் பற்பமாகும்
நன்மையுடன் மேலெரிவு பித்தவெட்டை
பாட்டுமே பசுவெண் ணெய் தண்ணிலீய
கனமான நீர்க்கடுப்புக் காணுதோடும்
பாடுமே பத்தியங்க ளுண்டோ இல்லை
பாலகனே பற்பமுறை பரிந்துபாரே.

வேண்டிய அளவு சிலாசத்தை எடுத்து சுத்தித்து கல்வத்திட்டுப் பொடித்து சிறுசெருப்படியின் சாற்றால் நன்

ருக அரைத்து சிறுசிறு வில்லைகளாகச் செய்து காய வைத்து ஒட்டிவிட்டு சீலைசெய்து காயவைத்து 50 விருட்டியிற் புடம்போடவும். இவ்வாறு மும்முறை செய்யப் பற்பமாகும். இதைநோயினளவு கண்டுகொடுக்க உடலெரிவு, பித்தவெட்டை, நீர்க்கடுப்பு. இவையாவுந் தீரும். பத்தியமில்லை ஆனால் இச்சாபத்தியம் வேண்டும்.

### நீர்கடுப்புச் சூரணம்.

பாரப்பா முந்திரிகை பேரீச்சம் பழமும்
பகருநெல்லி அதிமதுரம் ஏலங்கல் நார்
நேரப்பாதிற் பலியுஞ் சிறுபீளைவேரும்
நேரான சந்தனமுங் கொத்த மல்லி
போமப்பா வெள்ளெரியின் விரையுங்கூட்டி
மீருமற் சமமாகச் சூரணித்து
வாமப்பா வெருகடிதூள் வெந்நீரிற் கொள்
மைந்தனே கடுப்பெரிவு கிரீச்சனமுந்தீரும்
ஆமப்பா அறிந்து சொல்வார் சித்தர் முத்தர்
அப்பனே மற்ருேர்க்குத் தெரிந்திடாதே.

### சலக்கழிச்சற் குளிகை.

துத்தநாகம்பற்பம், கற்காந்தம், விளாம்பிசின் வகை. களா. 4 இரசம் சாதிலிங்கம் வகை. க. 2 அபின் களா. க. ஒக்கக்கூட்டி மோர்வார்த்தரைத்து தூதுளங்காயளவுருட்டி ஆவரசுவேர்ப்பொடியும் குளிகையும் பொடித்துக் கூட்டி 7. நாட் தின்னவும் சலக்கழிச்சல் பிரமியம் 20-ந் தீரும். வெகுசலம், மூத்திரக்கிரீச்சனம், கல்லடைப்பு, இவையாவுந் தீரும். இவையேஅன்றி நெரிஞ்சிமுட் சூரணம், சந்தனச் சூரணம், சலக்கழிச்சல், நெய் முதலியனவும் கவனத்திற் குரியவை நல்லகுணந் தரும்.

# மேகம். (Gonorrhoea)

மேகம், ஜலம், பிரமேகம், சலரோகம், இதில்வகை மேகம், மச்சைமேகம், அஸ்த்திமேகம், மதுமேகமென நான்குவகைகள் பிரதான மென்று வடநூலோர் கூறுவர். இவை சலாசயம், சுக்கிலாசயம், குண்டிக்காய், கணையம் ஆதியாம் உறுப்புக்களைப்பற்றி உண்டாவது. தாதுக்களிலெல்லாம் முக்கியமானது இந்திரியமே. அதாவது சுக்கிலமே, சுக்கில அழிவினலேயே எல்லா மேகரோகங்களுமேற்படுகின்றன எல்லாரோகங்களுமென்றே கூறிவிடலாம். இதினலேயே குருநாடியுஞ் செயலற்றுப் போகவேண்டி ஆகிறதெனலாம் சுக்கில அழிவினலேயே வெள்ளை, வெட்டை, மதுமேகம், பிறமேகம், பிரமியம், அதாவது 'கொனேறியா" கான்சர், புற்று, முதலியபயங்கர நோய்கள யாவும் ஏற்படுகிறதாயறியக்கிடக்கிறது. அதையே புருஷரத்தினம் ஜீவரத்தினம் அமிர்தமென்று சொல்லப்படுகிறது. ஆகவே இதையிட்டுச் சிறிது ஆராயவேண்டியது அவசியமாகிறது. இந்நோயொன்றையே உலகிற் பெரிய நோயாகக் கருதல்வேண்டும் ஏனெனில் இந்நோயில்லாத மனிதர்களோ நாடோ இல்லை என்றே கூறலாம்.

மதுமேகம் நீரிழிவு என்பன ஒரு பொருட்சொற்கள் நீரிழிவு என்ருல் நீர்த்துஒழுகுதல் என்றுபொருள். எந்த வியாதி ஏற்படினும் வியாதிகளுக்கு முக்கியகாரணமாகிய வாத, பித்த, சேடம் மூன்று 3 தோஷங்களிலும் ஓர் குறிப்பிட்ட மாறுதல் ஏற்படவேண்டும். பிரமேகம், வாதப்பிரமேகம், பித்தப்பிரமேகம், சேடப்பிரமேக மென்று மூன்றுவகைகளாக வகுக்கப்பட்டு (21) இருபத்தொன்ருக விரிவடைகிறது.

இதில் பித்தமேகநீர் தித்திப்பும் துவர்ப்புங் கலந்து வரட்சியாயும், வெழுப்பாயும், போவதோடு ஷை நீர் அடிக்கடி

போதல், அதிகமாய்ப்போதல், நீரிறங்காமை, கடுத்துப் போதல், சிறுநீரில் இனிப்பு, இரத்தத்திற் சர்க்கரை, முதலிய குணங்களேற்படலாம். இதையே நீரிழிவு மதுமேகம் (*Diabetes*) "டயபிற்றிஸ்" என்பர்.

இதில் மனிததேகத்தின் கொழுப்பும் மாமிசமுமதிகமாகி உடம்புஊதி இறுக்கமின்றி நீர்த்து தொழதொழத்து விடுவதால் உண்டாகிறது. ஆகையால் உடம்பில் கொழுப்பும் மாமிசமும் இறுகக்கூடியதாக அவரவர் தேகநிலைக்குத் தக்கபடி சிகிச்சை செய்யப்பட வேண்டும் சுவாசத்து அப்பிரகம், பொடுதலை, கொன்றை, வல்லாரல் போல்வன உடம்பை இறுக்கத்தகுந்தவை.

பிரமேகமானது வாத பித்த கபங்களின் ஏற்றத்தினாலேயே ஏற்படுவதாகையால் அவற்றைச் சமப்படுத்துவதே சிகிச்சை எனலாம். இதற்கு மூன்றுவித சிகிச்சைகள் சரகத்திற் சொல்லப்படுகிறது. அவை:- சேதனம், சமனம் காரணம்.

**சேதனம்:** தோஷத்தை உடம்பிலிருந்து வெளிப்படுத்தல் **வாதமிகுதியை:** வஸ்த்தி (*Enema*) க்களாலும் **பித்தமிகுதியை:** பேதிகளாலும், **கபமிகுதியை:** வாந்தியினாலும் நீக்குதல் வேண்டும்.

**சமனம்:-** மெலிந்தவர்களுக்குப் புஸ்டியை விருத்தி செய்தும் பருத்தவர்களுக்குப் புஸ்டியைக் குறைத்தும் சமனப்படுத்த வேண்டும. அதிகமாயுள்ள தோஷத்தை மருந்து ஆகாரம் முதலியவைகளாற் குறைத்தும் சமனபடுத்துவது.

**காரணம்:** நோயுண்டாகுங் காரணகிரமத்தை வில்க்குவதுமே இதற்குரிய சிகிச்சைகளாகும் என்கிறார் யூகிமுனிவர். வைத்திய சிந்தாமணி என்னும் நூலில் பிரமியம் 21. வகை தனியாகவும், சலரோகம் 20. வகை வேறாகவும் பிரித்துவகுத்து அவற்றின் குணங்கள்விபரிக்கப்பட்டிருக்கிறது.

## யூகிமுனி வைத்திய சிந்தாமணிப்படி
### பிரித்து வகுத்தவை

**பிரமியம் 21:-**

1. வாதப்பிரமியம்
2. பித்தப்பிரமியம்
3. சேடப்பிரமியம்
4. வாதபித்தப்பிரமியம்
5. பித்தசேற்பம்
6. தொந்தப்பிரமியம்
7. கட்டிப்பிரமியம்
8. ஜலப்பிரமியம்
9. நாறுதந்தப்பிரமியம்
10. இரத்தப்பிரமியம்
11. சீழ்ப்பிரமியம்
12. ஒழுக்குப்பிரமியம்
13. அரித்திரப்பிரமியம்
14. மூத்திரக்கிரீச்சனம்
15. கரப்பன்பிரமியம்
16. கல்ப்பிரமியம் கிரிச்சனம்
17. தாதுப்பிரமியம்
18. நிச்சயப்பிரமியம்
19. வலிபபிரமியம்
20. மதுப்பிரமியம்
21. விரணப்பிரமியம்

**சலரோகம் 20**

வாதத்தினால் வருவது 4

1. ஆச்சியமேகம்
2. சுத்தமேகம்
3. பிரமியமேகம்
4. மாங்கிசசிறவிமேகம்

[பித்தத்தால்வருவது]

5. அப்பியம்
6. அபிரபிரமியம்
7. சாமாம்பிறினமேகம்
8. மதுமியமேகம்
9. சாத்தியமேகம்
10. ஆவிருதமேகம்
11. வாசாமேகம்
12. மச்சமேகம்
13. ஆகிகமேகம்
14. சுராரிமேகம்
15. சுக்கிலமேகம்
16. உதகமேகம்
17. பிஞனிமேகம்
18. லவணமேகம்
19. தைத்தியமேகம்
20. உத்தம மேகம்

பிரமேகத்தின் முதலறிகுறிகள் தண்ணீர்விடாய், வாய் நா, தொண்டைவரட்சி, கால் கை எரிவு, தேகமடங்கலுங் காந்தல், அங்கங்கள் விறைத்தும் மரத்தும்போதல், உடம்பில் எறும்பூருவதுபோன்ற உணர்ச்சி, மூத்திரத்தில் எறும்புமொய்த்தல், உடம்பில்நாற்றம், ஓய்ச்சல், உடம்பு கனத்தல், சோம்பல் முதலிய அறிகுறிகள் காணப்படும். இதைத் தொடக்கத்திற் கவனியாதுவிடின் சூலை, பிளவை, இரத்தக்கட்டி, சீழ்க்கட்டி, தேகமழுகல் முதலியன ஏற்படும்.

## பெண்களின் ஜனனேந்திரியங்கள்.

மேகத்தை இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம் அவை உள்ளுறுப்பு மேகம், வெளியுறுப்பு மேகமென்பன பெண்களின் ஜனனேந்திரியங்கள் இருக்குமிடங்களை பொறுத்தவரை உள் அவயவங்கள், வெளி அவயவங்கள் என இருவகைகளாகப் பிரிக்கப்படலாம். அவயவங்கள் ஸ்தனம், கடிதடம் (*Palus*), நிதம்பம், உதடு (*Labia*), மூத்திர தாரை (*Ureathra*), பூநரம்பு (*Cbloris*), யோனித்துவாரம், (*Vulva*) என்பன.

உள் அவயவங்கள் கருப்பை, (*Utrus*) சினைப்பைகள், (*Overies*), யோனி (*Vagena*), முதலியவைகளாகும். ஆகவே மேகத்தையு மிடங்நோக்கி இருபிரிவுகளாக பிரிக்கலாம், அவைமுறையே உள்ளுறுப்புமேகம், வெளிபுறுப்புமேகம். என்பன. உள்ளுறுப்புமேகம் சலசுக்கில சுரோணித சம்பந்தமானவை எனவும், வெளியுறுப்புமேகம் வாய், லிங்கம், யோனி, தனம், சருமம் சம்பந்தமானவை எனவும் இருபிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்.

## மேகமுண்டாகக் காரணம்.

உற்பவிக்கும் பால்நெய்யால் இறைச்சி கள்ளரல்
உரிசியாம் மீன்தன்னால் அருவருத்த



மற்பலிக்கும் பதார்த்தத்தால் மதுர வஸ்த்தால்
மந்தங்கள் தனிற்பொசித்தல் வேநாப்பண்டம்
குற்பலிக்குங் குளிர்ந்தஅன்ன மங்கைகோஷ்டி
குறித்த நித்திரை தவிர்த்தல் அக்கினிமந்தம்
உற்பவிக்குஞ் சரீரந்தான் மிகப்பருத்தல்
சஞ்சலந்தான் பயப்படுத்தல் தரிக்குந் நோயே.

மேகரோகத்தில் பித்தக்கொதியுஞ் சம்மந்தமானதே எனெனில் உக்கிரவெப்பம் கடுஞ்சூடு காரணமாகவும் மேகரோகம் ஆரம்பமாகிறது மேகம்சம்பந்தமான ரோகங்கள் 20, 21 எனச் சித்தரேடுகளில் சொல்லப்படுகிறது. அவற்றில் முக்கியமானவை வெள்ளை, வெட்டை, பிரமியம், நீர் மேகம், மோர்மேகம், மதுமேகம், மேகவெட்டை என்பன. இவை அனைத்தும் சலசுக்கில சுரோணித சம்பந்தமானதே. மேலுமிவை சம்பந்தமாய் மேகரணம், மேகவூறல், மேகப்படை, குஸ்ட்டம், சூலை, விற்புருதி, புற்று, (*Cancer*) "கான்சர்" முதலியனவும் சருமசம்பந்தமாகவுண்டு.

## வெள்ளை.

பித்தமேகமானல் மஞ்சள் போலவும் வாதசம்பந்தமானல் வெள்ளையாயும் சேடசம்பந்தமானல் மயிலிறகு நிறம்போலவும் உடுதுணிகளிற் காணப்படும் வாதமதிகரித்திடில் வெள்ளை அபரிமிதமாயிருக்கும்.

## வெட்டை

வெட்டையின் குணமுரைக்கில் மிகுதந்தம் போலவெள்ளை
பட்டிடுமதனில் நீரும்பாயுங், கோசத்திற் குத்தி
முட்டவே வலிகடுப்பு முதிந்திடு மெரிவுக்கட்டி
திட்டமாயுண்டாகுந் நாட்செல்லிற் கோசத்தின் நின்றே.

இரத்தமாய் விழுமிரத்தப் பிரமியமென்று முன்னோர்
உரைத்தன ரிதனிநாம மொக்கநாட் கழியிற்கோசம்
பெருத்துவீங் கிடுமுகப்பில் பேசரும்புண்ணாய் மிக்க
வருத்தமாமிதனுக் கேற்றமருந்து சீரகத்திற் செய்யே.

### சிகிச்சை.

செய்யுநோய் கண்டபோதே சீரகச் சூரணன்நற்
துய்யசஞ் சீவியாகும் சூரணமப் பேர்பெற்ற
பொய்யிலாத் தைலம்மொன்றைப் பொசுபிக்கமாறு மென்றே
ஐயுருச்சல ரோகத்தை அகற்றுசஞ்சீவி நெய்தான்.
வல்லையிலகற்றும் புற்றுமுக சிங்கி மருவிக்கேளு
சொல்லரு ணேதயப் பேர்சூரண மந்திதிசந்தி
வெல்லுந் நல்லனுபானத்தில் விரும்பியே பத்துப்போது
மெல்லவே யுண்ணமாறும் வெட்டைக்குப் புசிக்கநன்றே.

### மோர்மேகம் அல்லது மாவுமேகம்.

இந்நோயுள்ளோர் சலங்கழித்த இடத்தில் உலர்ந்து போனதும் வெள்ளை நிறத்தில் மாபோலக் காணப்படும் அதாவது சிறுநீரில் மாச்சத்துக் கலந்தது போலிருக்கும் "அல்புமின்யூரியா" "கயில்பூரியா" என்றும் மேல்நாட்டு வைத்திய சாஸ்திரத்தில் தெரிவித்துள்ளதுவே. மோர் மேகம். இந்த மோர்மேகத்தில் சிறுநீர் குறைந்த அளவில்த் தான்கழியும் இந்தநோய் முற்றமுற்ற இரத்த அமுக்கமுமதி கரிக்கும, உடலில்வீக்கமுமேற்படும். இவ்வீக்கம் முதன் முதல் முகத்திலும் அதிலும் கண்களின் கீழ்ப்புறத்திலேற் பட்டுச் சிறிது சிறிதாக உடல் முழுவதுமேபரவும் சொல்ல முடியாத அசதியும் ஆகாரத்தில் வெறுப்புமேற்படும். இரத் த அமுக்கமதிகரிப்பதோடு தலைசுற்றல், மயக்கம், தூக்க மின்மை முதலியனவுமேற்படலாம்.

இவ் வியாதியஸ்தரினுகாரங்களில் உப்பையுங் கொழுப் புள்ள வஸ்த்துக்களையும் நீக்கவேண்டியது அவசியம் இதற்குக் குளிர்ச்சியானதும் நீர்பெருக்கிகளுமான ஆகா ரம் மருந்து முதலியன உபயோகிப்பது சாலச்சிறந்ததா கும். இதற்கு அமுதசர்க்கரை, சந்தனச்சூரணம், சந்த னுதிச் சூரணம் போல்வன நன்று.



### அமுதசர்க்கரைச் சூரணம்.

சிந்தில், ஆவரைச் சமூலம் வகை. பல. க. அத் திப்பிஞ்சு, தாமரைப்பூ, சிவனார்வேம்பு, நீர்ப்புலாவேர், வகை. பல. ½, திரிகடுகு சந்தனபில்லை, சாதிக்காய், கராம்பு, வசுவாசி, கர்ப்பூரம், குளவிந்தம், வகை. பல. ¼ கூட்டி இடித்து வஸ்த்திரகஷாயஞ் செய்து வெருகடி வெண்ணெ யிலாவது பாலிலாவது காலை மாலை உட்கொண்டுவர மேகம் (21) இருபத்தொன்றுந் தீரும். பயித்தியம். பிரமியம் இளநீரிற் தீரும். பெரும்பாட்டிற்கு ஒதியம்பட்டைச் சாற்றி லிடவும், வெள்ளைவெட்டைக்கு அத்திப்பட்டைச் சாற்றிலி டவும் துவாலைக்குத் தேனிலிடவும், சலரோகம் ஊறுமூத் திரத்துக்கு ஈருள்ளிச் சாற்றிலிடவும், எலும்புருக்குக்கு பட்டுக்காவி சீனக்காரம் பொடிபண்ணிக் கூட்டவும், கிரணிக்குக் கோழிமுட்டை வெண்கருவிற் கொடுக்கவும்.

### சந்தனச் சூரணம்.

ஒருபலம் சந்தனம், இலாமிச்சு, ஏலம், சீரகம், சோம்பு, மதுரம், திரிமலை, தாளிசபத்திரி, இலவங்கபத்திரி, கச்சோ லம், சித்தரத்தை, சடாமாஞ்சில், செண்பகப்பூ, சதகுப்பை, கோட்டம், கூகைநீறு, அகில்கோரோசனை வகை. சமன் கள. க. கூட்டி இடித்து வெருகடி சீனியுங் கூட்டி வெண்ணெயிலாவது ஆவின்பாலிலாவது கொள்ள நீர்க் கடுப்பு, வெள்ளை, வெட்டை, தாகம், தொண்டைவரட்சி, இருமல், தேககாங்கை, அத்திச்சூடு, பிரமேகம், உட்காய்ச் சல், தாதுநட்டம், நெஞ்செரிவு, கெற்பச்சூடு முதலியன தீரும்,

### சந்தனுதிச் சூரணம்.

சந்தனபில்லை, அகில், ஏலம், இலவங்கம், கராம்பு, சோம்பு, மதுரம், கார்புகா, வெட்பாலை, தேற்றுவிரை, வெள்ளறுகு, சிற்றமட்டிவேர் வகை ருத்தல் வீசம் கூட்டி

இடித்து வஸ்த்திரகாயஞ் செய்து வெருகடி காலைமாலை சீனி கூட்டி உண்டு ஓரவுன்சு பால்குடிக்கவும் பித்தவகையால் வந்தமேகமெல்லாம் தீரும். இரத்தம் சலத்தோடு போதல் தேகஎரிவு, கைகாலெரிவு, தேகஉழைவு, முதலிய மேகம்யாவுந் தீரும்

மேகங்கள்யாவு முயர்வின் நீங்கி வேசையர்தம்
தேகங்களில் வாசஞ் செய்கையால் மேகமிசையால்
ஆசைக்குங் கார்காணுமவ் வேசையார் கொடுப்பார்
காசைக் கொடுப்பார்க்கே காண்ப என இதையிட்டோர் சிலே
[டைப்பாவுமுள

## மேகவெட்டை.

இதுஒரு தொற்று வியாதி இவ் வியாதி ஒரு ஸ்த்திரி பல்புருஷர்களுடன் போகிப்பதாலும் அல்லது ஒரு புருஷன் பலபெண்களுடன் போகிப்பதாலும் விஷநீருண்டாகி மேக நோயுண்டாகிறது. இந்நோய் பலவாகப்பிரிந்து பலமாறுதல்களடைந்து பலபெயர்களைப பெறுகிறது.

இந்நோய் ஒன்றையே உலகில் பெரிய நோயாகக் கருதுதல் மிகையாகாது. ஏனெனில் இந்நோயில்லாத மனிதர்களோ நாடோ இல்லை என்று கூறிவிடலாம் ஆகையாற்தான் எல்லா நாடுகளுமே இந்நோய்க்கு மருந்துகண்டு பிடிப்பதில் ஈடுபட்டுள்ளன இந்நோயை தடைசெய்து கொள்வதற்கு போகஞ்செய்யுங் காலத்துக்கு முன்னும் போகித்த பின்னும் வயிறுநிறையக் குளிர்ந்தநீரைப் பருகிக் கொள்வதால் ஓரளவு தடைசெய்து கொள்ளலாமென அறியக்கிடக்கிறது.

## வெட்டை வியாதி.

இவ்வியாதியானது நீரெரிச்சலையும் வெள்ளைநிறமான இந்திரியத்தையும் சிலசமயம் இரத்தத்தையும் வெளிப்படுத்துவதுந்தவிர நீர்த்துவாரத்தையுமடைக்கும் சிறுநீரடிக்கடி



குறைந்தஅளவாக இறங்கும், இறங்கும்போது தாங்கமுடியாத எரிச்சலையுமுண்டுபண்ணும் மலத்தைக் கட்டும்.

இது உக்கிர வெப்பம் கடுஞ்சூடு காரணமாய் இரத்தங் கெட்டுப் பெலவீனப்பட்டு ஒருமுறை வந்துவிட்டால் சீவிய காலம் முழுவதும் தொந்தரவுசெய்து உபாதிக்கும் வியாதி வகுப்பைச் சேர்ந்தது. இது அதிகமாய் வியாதிஉற்ற ஒருவருடன் வியாதிஅற்ற ஒருவர் சம்போகஞ் செய்வதால் இந்நோய் பரவுகிறது.

## இதன் குணங் குறிகள்.

இந்நோய் முதன்முதல் சிறுநீர் விடும்போது வலி ஏற்படும் ஆண்குறிநுனியிற் சொறிவு அதாவது தினவுஉண்டாகும் மேற்படி குறியிலிருந்து பால்போன்ற வெள்ளை ஒழுகும் அல்லது மஞ்சள் வெள்ளையுங் கலந்து சீழ்போற் கழியும் நாளடைவிற் பச்சை மஞ்சலாகவும் மாற்றமடையும். இந்நோய் திரும்பத் திரும்பவும்வந்து நீர்போலவும் ஒழுகும் இதற்குத்தான் "நீண்டவெள்ளைவெட்டை" என்று பெயர் (Gleet) "க்கிளிற்" என்று ஆங்கிலத்தில் கூறுவர். சில வேளைகளிற் பொறுக்கமுடியாத அடிக்கடி ஆண்குறியில் விறைப்புமுண்டு அத்துடன் ஆண்குறி வளைந்துமிருக்கும் இதற்குத்தான் "கார்டி" என்று ஆங்கிலத்தில் கூறுவர். சிலவேளை ஆண்குறியில் வீக்கங்கண்டு அதநுதட்டை விரிக்கவுஞ் சுருக்கவும் முடியாமற்போவதுமுண்டு. இதற்கு ஆங்கிலத்தில் "பைமோசிஸ்" என்றுபெயர் இதற்கு பீச்சு மருந்துகளும் மேகரணக் களிம்புகளுமுண்டு.

மேற்படி வியாதியஸ்த்தர் தன்குறியைத் தொட்டு கைகழுவாமல் தன்கண்ணைத் தொட்டால் கண்களில் வேக்காடும் வலியும் உண்டாவதுமன்றி அவிந்து சீழ்வரவுங் கூடும். இவர்கள் சிலசமயம் பார்வையை இழக்கவேண்டி வரும். ஆகவே இவ்வியாதிக்குரிய சிகிச்சையை விரைவிற்

செய்து குணப்படுத்த வேண்டும் அப்படிச் செய்யாதுவிடில் எலும்புகள் மூட்டுகளையுந்தாக்கி வலியும் வீக்கமுமுண்டாகும் இவைஅன்றி இடைஇடுக்குத் தொடை விரை இவைகளிலுந் தாவும் இதற்கான சிகிச்சையை உடனடியாகச் செய்யாது கவலையீனமாக இருந்துவிட்டாலோ மூன்று வாரஞ் செல்ல ஆபத்தில் முடியவுங்கூடும். சிலசமயம் சடுதி மரணத்தையுங் கொண்டுவரலாம் பெண்களுக்குமிதே போன்ற தொந்தரவுகளுண்டு அத்துடன் கெற்பப்பையின் வாயில் இக்கிருமிகளிருந்து கெற்பமுண்டாகவும் விடா தவறி உண்டுபடினும் கருஅழிவு ஏற்படும். இது சீக்கிரம் மாருத ஒரு கள்ளவியாதி.

**மேற்படி ரோகச் சிகிச்சைகள் — ஆரம்ப வெள்ளைக்கு**

1 ஒன்றுமுதல் ஐந்து துளிவரையில் நாளொன்றுக்கு மூன்றுமணிக் கொருமுறை சந்தனத்தைலம் சர்க்கரையுங் கலந்துசாப்பிட ஆரம்பவெள்ளை குணமாகும்.

2 வெள்ளறுகு சமூலத்தை மூன்றுபல் சிறிதுஉள்ளி சேர்த்தரைத்து நேரம் தேசிக்காயளவு மோரிற்கலக்கி தோய்ந்து மூன்றுநாட்காலை சாப்பிடத் தீரும். உப்பில்லாப்பத்தியம். இதுபோலவே பழம்பாசி, கீழ்க்காய் நெல்லி சிறுஅம்மான் பச்சரிசி, கையாந்தகரை முதலியவைகளாகும்.

**நீர்க்கடுப்புக்கு.**

சந்தனம் பசுவின்வெண்ணெய் தக்கதோர் கலையின்கோடு
முந்திய தேற்ருவித்து அரைத்தெலா மொக்கக்கொண்டல்
சுந்தரஞ் செறிந்ததெங்கின் துலங்கிடு மிளநீர்தன்னில்
நிந்தியாதுள்ளே கொள்ளநிலை கெடுந்நீர்க் கடுப்பே.

**நீர்க்கடுப்பு வெள்ளை தண்டு வீக்கம்தீர.**

இலந்தை, மருது, ஆவரை இவைதுளிர் வகை பிடி ஒன்று இடித்துப் பிளிந்தசாறு சிறங்கையுடன் அதே



அளவு பசுவின்பாலும் ஏழுநாட் தப்பித்தோய்ந்து குடிக்கவும் கூட்டிலிருந்து பிடிசோறு சாப்பிடவும். பின் பசுநெய் பால்கூட்டி பத்தியம் முறிக்கவும்.

**ஷை கஷாயம்.**

ஓரிதழ்த்தாமரை நெரிஞ்சில் வகை பிடிஒன்று வால் மிளகு கள. மூன்று கூட்டி ஒரு படி நீர்வைத்து கால்ப்படி எடுத்து மூன்று நாள் 9 நேரங்குடிக்க நீர்க்கடுப்பு நீரழிவு தீரும்.

**இலிங்க வீக்கத்துக்கு பீச்சுக்கழுவ மருந்து.**

மாயாக்காய், கடுக்காய், நெல்லிக்காய் துத்தம் துரிசு, சீனுக்காரம் வகை. பலம் கால் எல்லாந் தூள் பண்ணி தண்ணீரில் மூன்றுநாள் ஊறவைத்து தெளிந்தநீரை இறுத்துக்கழுவப் பீச்சதுணியிற் தோய்த்துச் சுற்றிவிட இலிங்கவீக்கம், வெள்ளைவடிதல், அரிப்பு, தினவு முதலியன எல்லாந் தீரும். பெண்பாலருக்கும் அப்படியே சீலையிற் தோய்த்து கடிதடத்தின் மேற்போட்டுகழுவப் பீச்ச தீரும்

**உட்டணம் வெள்ளை வெட்டைக்கு பாகு**

கோட்டம் கராம்பு, சாதிக்காய், ஏலம் வகை. கள 2. மிளகு, மஞ்சள், எள்ளு, உழுந்து, சிறுநெல், வேலம்பட்டை, வேங்கைப்பட்டை, சித்திரப்பாலாவி இவை மா. சீனியுஞ்சேர்த்து தேங்காய்ப்பால் விட்டடித்துப் பாகுசேர்த்து மெழுகுபதமாயெடுத்துப் பெலங்கண்டு தூதுளங்காய், நெல்லிக்காய் வீதம் காலைமாலை உட்கொள்ள நாட்பட்ட உட்டணம், வெள்ளைவெட்டை தீரும். கையாட்சி இவையன்றி சீரகச்சூரணம், சீரகத்தைலம், மேகஏலாதிச்சூரணம், அமுதசர்க்கரைச்சூரணம் மேற்படி லேகியம், சந்தனச்சூரணம், சந்தனாதிச்சூரணம் மேகசஞ்சீவிக் குளம்பு, இவைகளில் ஏற்றஒன்றைப் பாவித்தாலும் குணமடையலாம்.

## மேகரோக எண்ணெய்.

கெச்சைக்காய்ப்பருப்பு (களற்சிவிரை) இருசீர்பறங்கிக் கிழங்கு, இரசகர்ப்பூரம், கடுகுரோகனி, வகை. கள. க. ஆமணக்கெண்ணெய் காற்படிவிட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து ஏழுநாட் காலைமாலை உதயத்தில் ஒரு மேசைக் கரண்டி வீதம் உட்கொள்ளத்தீரும்.

## மேக எண்ணெய்.

பூவரசம்பட்டை, கலியாண முருக்கம்பட்டை. மருதாணிப்பட்டை, புங்கம்பட்டை வகை. பல. 5. எடுத்திடித்து 4 படி நீர் வைத்து 2 படியாக காய்ச்சி வடிகட்டி 6 போத்தல் ஆமணக்கெண்ணெய் கூட்டி ஒரு பலம் பூரம் தூள் செய்து கலந்து காய்ச்சி மெழுகுபதம்வடித்துக் காலையில் ஓரவுன்சு பசுப்பால் அல்லது பழையசாதநீருடன் மூன்று நாட் கொடுக்க நீங்கும். இச்சாபத்தியம் அவசியம்.

## மேகரோக எண்ணெய்.

வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், வகை படி அரை கெந்தகம் 5 பலம் வீரம் $\frac{1}{2}$ பலம் லிங்கம் ஒரு பலம் பூரம் ஒரு பலம் எடுத்து நன்ருக ஒருசாமமரைத்து சுடர்த்தைலம் வாங்கிவைத்து ஒன்றுமுதல் 5 துளிவரை காலை மாலை சாப்பிட்டுவர நாட்பட்ட வெள்ளைவெட்டை தீரும்.

## ஆரம்ப மேகரணம் அல்லது கொறுக்கு.

அல்குலில் அதாவது கடிதடம் முதலாம் வெளி உறுப்புகளில் மேகரணங்கள் ஏற்படுவதுண்டு இதைத்தான் கொறுக்கு, மேகரணம், பறங்கிவியாதி எனப் பலபடக் கூறுவர். மேகவெட்டை உள்ளவரின் தகாத கலவியாலே கடிதடத்தின் தோலிலும், உதட்டிலும் அல்லது ஓர் பகுதியில் பருக்கள் தோன்றும் அதுவே ஆரம்ப மேகரணம் இவர்கள் சேர்க்கையின்போது அங்குள்ள மேகரண விஷநீரானது சேர்ந்தவரின் ஆண்குறியில் எந்தஇடத்தில் படுகிறதோ அந்த இடத்தில விரணமேற்படுகிறது. அது புணர்ந்த 3-ம் நாள் முதல் 10-ம் நாட்களுக்குள் விரணந் தோன்றக் கூடும். சிலருக்கு அதன்பின்னும் காணப்படலாம். பெண்பாலாரை இவ்வியாதி அதிகமாய்ப் பாதிப்பதில்லை. உதட்டினுள்ளிருந்தால் தோற்றவும்மாட்டாது ஆனலது விருத்தி அடைந்து சிலதருணம் ரணத்தின் கீழ் நெறிகட்டித் திரண்டு கட்டியாகி (கட்டாக்கி)க் கல்லுப் போலிருப்பதுமுண்டு. நாளடைவில் இதிற் சீழ்பிடித்து வெடித்துப் புண்ணுக்கும் அப்புண் இடிந்து இடிந்து புண்ணுக்கிப் பெரிதாக்கிக் கொண்டேவரும் ரோகியின் தேகம நாற்றமெடுக்கும் ஷை உறுப்பினுணர்ச்சி அற்றுவிடும் பார்ப்பவர்களுக்குப் பயங்கரத்தை உண்டுபண்ணக் கூடிய விகாரத்தோடு காணப்படும் இதேபாங்கில் இலிங்கத்திலும் கட்டிஉண்டாய்ச் சீழ்ப்பிடித்து அழுகத்தொடங்கிவிட்டால் புற்ருகிவிடும். மேற்படிவியாதிகள் சம்பந்தமாகவே யோனிப்புற்று லிங்கப்புற்று ஏற்படுகிறது என்றறிக



## கொறுக்கு.

இது மேகரோகத்தில் வெளிமேகரண வகுப்பைச் சேர்ந்த ஓர் விரணம், மேகரணவிஷநீர் சம்மந்தமாயேற்படுவது. மர்மஸ்தானங்களிலேற்படும் ரணத்தையே கொறுக்கு, மேகரணம், பறங்கிவியாதி எனப் பலபடக் கூறுவர். இதை அசாக்கிரதையாய் விட்டுவிடுவதால் இலிங்கப்புற்று, யோனிப்புற்று, முதலாம் பயங்கரரோகங்களுக்கு ஆளாகவேண்டி நேரிடுகிறது. மேகரணவிஷநீர் மிக மிக ஆபத்தானது அதுபட்டஇடந் தொட்டஇடமெல்லாம் பாழாக்குவது இது பரம்பரை வியாதியல்ல தொற்று வியாதி. இதை ஆரமபநிலையிற் குணப்படுத்தாதுவிடின் புண்புரையேற்பட்டு அழுகி ஒழுகி உறுப்புகள் உணர்ச்சி அற்று விறைத்து மணங்கொண்டு இலிங்கம் துண்டுதுண்டாய் விழவும் யோனி இடிந்திடிந்து புற்ருகியும் விடுகிறது

வெள்ளை நோயின் முதிர்ச்சிகாரணமாய் இலிங்கத்தின் முன்பாகப் பூந்தசை புணபட்டு விடுகிறது இதையே கொளுக்கு என்பர். இதற்கு மர்மஸ்தானப் பீச்சு மருந்து அதாற கழுவி சீலையிற தோய்த்துச் சுற்றிவிடவும் குணமாகும்.

## விருக்கம்-குண்டிக்காய்கள் (Kidneys)

இதுவயிற்றறையின் மேல்பாகத்தில் முள்ளந்தண்டின் இரு பக்கங்களிலும் அவரை விரை ரூபத்தில் பக்கத்துக் கொன்றுயிருக்கிறது. இதன் நிறம் கருஞ்சிவப்பு நீளம் 4 அங். அகலம் 2 அங் தடிப்பு 1 அங்குலமாயுள்ளது. சரீரத்தின் கெபி அதாவது அணுக்கள் மாற்றத்தினால் ஏற்படுங் கழிவுபதார்த்தங்களை வெளியேற்றுவதே இக்குண்டிக்காய்களின்வேலை அதாவது இரத்தங் குண்டிக்காய்களுக்கு வரும்போது அதிலிருக்கும் (*Urea*) "யூறியா" (*Uricacid* "யூறிக்கசிற்" என்னுமுப்பு (*Nitrogen*) "நைற்றொஜன்" என்னும்வாயு முதலிய கழிவுபதார்த்தங்களை மூத்திரக் குழாய்கள்மூலம் மூத்திரப்பைக்கு (*Bladder*) அனுப்புகிறது. இதுபெலவீனப்பட்டு குண்டிக்காய்கள் சிறுநீரைப் பிரிக்கமறுப்பதால் கல்லடைப்புரோகம் உண்டாகிறது. ஆங்கிலத்திற்கு (*Supperession*) என்றுபெயர் இரத்தத்திலிருந்து மூத்திரம்பிரிக்கப்படும் அது மூத்திரப்பையிற் தங்கி வெளிவராமலிருப்பதற்கு நீரடைபபு என்றுபெயர். (*Retention of Urine*) என்று பெயர். சாதாரணமான நீரில் அல்புமின் (*Albumene Uria*) சர்க்கரைச்சத்து (*Glucose*) முதலியவை இருப்பதில்லை ஆனாற் சிலதருணம் இருக்கவுஞ் செய்கிறது. அவைகளிருப்பின் அதுவியாதியினறிகுறி எனப்படலாம். மதுமேகம் ஆரம்பமாகிறது என்று கூறலாம்.

### கல்லடைப்பு. (Grorel of Stonein Urin)

சிலருக்குச் சிறுநீருடன் சிறியகற்கள் போன்ற வஸ்த்து வெளிப்படுவதுண்டு 2. 3. சிறியகற்கள் சேர்ந்து பெரியகற்களாகி சலவாயிலை அடைத்துக் கொண்டால் அடிக்கடி சிறுநீர் சொட்டுச் சொட்டாய் போவதும் போக வருவதுபோலுமிருந்து உபாதைசெய்யும் அடிக்கடி இரத்



தங் கூடவெளிப்படலாம் சலப்பையில் கற்களால் இரணமுமேற்பட்டுச் சிலசமயம் சீளும்வெளிப்படும் இது சிறுநீரிலுள்ள சரீரத்துக்கு வேண்டாத உப்புகள் கரையாமலிருப்பதால் இந்நோயேற்படுகிறது.

### சிகிச்சைக்கிரமம்—கல்லடைப்பு. (Caleuli)

1 சிறுகீரை, சிறுபீளை, சிறுநெரிஞ்சி, நீர்முள்ளி, முன்னை இவை வகை. பிடி. நற்சீரகம், 2. களா. கூட்டி 2 படி நீர் விட்டுக்காய்ச்சி 1. 2. அவுன்சு வீதம் சிறிது தேனுங் கூட்டி குடித்துவர குண்டிக்காயிலுள்ள அடைப்பு நீங்கிச் சுத்தமாகும் குக்கில அழிவு தீரும். சலந்தாராளமாயிறங்கும் குணங்கண்டு சலாசத்துப் பற்பம், கெருடபச்சைக்கற் பற்பம், நண்டுககல் முதலியனவும் சேர்த்துக் கொள்ளலாம்.

2 மேற்படி கஷாயத்துடன் நாயுருவி சுட்டசாம்பல், முள்ளுக்கீரை சுட்டெடுத்தசாம்பல், முதலியனவுஞ் சேர்த்துக் கொடுக்கலாம்.

3 மேற்படி கஷாயத்துடன் சலோதரக்கல், நண்டுக்கல் முதலியனவும் உரைத்துக் கொடுக்கலாம்.

4 இயங்கிலை, வெங்காயம், பச்சைநெல்லுமி இவைகளை ஓர்நிறையாய் இடித்துப்பிளிந்து நாளொன்றிற்குக் காற்படி இருநேரங்கொடுக்க கல்தெறித்து விழும்.

5 ஒருபலம் வெடிஉப்பைச் சட்டியிலிட்டு ஒருபடிநீர் விட்டு அரைப்படியாய்க்காய்ச்சி அதிற் கொவ்வைத்தண்டை இடித்துப்போட்டு நாளொன்றிற்குக் காற்படி இருநேரங் கொடுக்க கல்தெறித்து நீரிறங்கும்.

### மூத்திரப்பையின் எரிச்சலுக்கு (Irritability of Bladder)

கடுக்காய், பச்சிலை, செந்தொட்டி, செப்புநெரிஞ்சி, சிறுபீளை, சிறுகீரை, வகை. களா. 2. எடுத்து நறுக்கி ஒருபடி நீர்விட்டுக் கலாய்க்காய்ச்சி 3 நாட் குடிக்கவும்

நீரெரிச்சல், நீர்க்கடுப்பு நீங்கி சலவிருத்தி உண்டாகும். இத்துடன் சலாசத்து பற்பமும் தேனிற் சாப்பிட்டுக்குடிக்க பெரிது நல்லகுணஞ் செயயும்.

## குண்டிக்காய் ரோகம். (Albumin Urea)

மாசிக்காயுப்புக் கிடையாவிட்டால் மாசிக்காய்ப் பவுடருடன் சமன் அன்னபேதி சேர்த்தரைத்த சூரணம் வேளைக்கு 5 முதல் 10 கிறேயின்வரை நாள் 3 தடவை கொடுக்கவும் இது பிராணவாயுவை நன்குகிரகித்து வைத்துக் கொள்ளுந் தன்மையுள்ளது மூத்திரத்துடன் குண்டிக்காயிலிருந்து வரும். இரத்தப்போக்கைத்தடுக்கும் பொதுவாயிது ஓர்ரத்த தம்பனகாரி.

படிகாரத்தூள் 2 டிரும் ஒருபைண்டு பசுப்பாலிற் போட்டு 10 நிமிஷங்கள் கொதிக்க வைத்துவேளைக்கு 2அவுன்சு வீதம் நாள் 2, 3 தடவை கொடுப்பது நன்று.

மேலே சொல்லிய கஷாயங்கள் சூரணம் குளிகை குளப்பாலை நெய் முதலியன சாலச்சிறந்த விக்கினமில்லா மருந்துகளாகும்

## சலாசயம் (Bladder) மூத்திரப்பை

குண்டிக்காய்களிலிருந்து பிரிக்கப்பட்டு வரும் மூத்திரம் வெளிக்கழியும்வரை மூத்திரப்பையிற்தான் தங்குகிறது. ஒவ்வொரு குண்டிக்காயிலிருந்தும் ஒவ்வொரு மூத்திரக்குழாய் மூத்திரபபைக்கு வருகிறது இதன் வழியாக மூத்திரம் மேற்படி பைக்கு வந்து சேருகிறது. குண்டிக்காயிலிருந்து மூத்திரம் சதாசொட்டுச் சொட்டாய் மேற்படி குழாய்கள் மூலம் மூத்திரப் பைக்குவந்துகொண்டே இருக்கிறது. பைநிரம்பியவுடன் அதன் சுருக்கத்தினுல் (*Urethra*) "யூரித்ரு" வழியாக வெளிக்கழிக்கப்படுகிறது. சைநார்களாலாக்கப்பட்ட வளையமான தசைகளின் இறுக்கத்தினல் மூத்திரமார்க்கம மூடப்பட்டிருக்கிறது. இது சிறுநீர் வெளியாகும்போது இவ்வட்டமான தசைதளர்ந்து கொடுக்கும் இறுக்கியுமிருக்கும்.



## மூத்திரதாரை (Urethra)

இது மூத்திரப்பையின் அடிப்பாகத்தில் நின்று ஆண்குறியின் நுனியில் சிறுநீர் வெளிப்படும் துவாரம்வரையுள்ள குழாயாகும். இக்குழாயின் வழியாக மூத்திரப்பையிலிருந்தும் நீர் வெளிக்கழிகிறது. ஒரு மனிதனின் நீர்த்தாரை சுமார் 8 அல்லது 9 அங்குலம் வரையில் நீளமிருக்கும். ஆண்குறி விறைப்பாய் இருக்கும்போது இந்தநீர்த் தாரை ஒரே வளைவாகவும் சுருங்கும்போது இரட்டைவளைவாகவும் இருக்கும்

நீர்த்தாரை 3 பிரிவுகளையுடையது நீர் பையிலிருந்து ஆரம்பமாகும் முதலாவது பாகத்திற்கு சுக்கிலபாகமென்று பெயர். இது சுமார் ஒரு அங்குல நீளமாக நீர்ப்பையின் அடிப்பாகத்தில் இருக்கிறது. இப்பாகந்தான் அகலமானது. இதைச்சுற்றிலும் சுக்கிலாசயம் (*Praslatic Glands*) என்னும் கோளம் இருக்கிறது. இப்பாகத்தில் ஓர் நரம்புண்டு. அது வெளிப்பட சுக்கிலமுள்ளே செல்லாமற் தடுப்பது அதன் வேலை.

இரண்டாவது பாகத்திற்கு சவ்வுபாகமென்று பெயர் (*Membraneous Portion*) என்றும் மூன்ருவது பஞ்சுபாகம் என்றும் பெயர். நீர்த்தாரையின் பாகம் நீளமானபாகம் இதுவே. இது சுமார் 6 அங்குல நீளம் இருக்கும் இதுசவ்வு பாகத்தின் மூடியில்இருந்து ஆண்குறியின்நுனியில் இருக்கும் பிளவுபோன்ற வெளித்துவாரம் வரையிலும் உண்டு. இந்நுனிப்பிளவை ஆங்கிலத்தில் (*Meatus Urinarious Urethra*) மீடஸ் 'யூறினேறியஸ் யூறித்தா' என்று சொல்வர்.

## சுக்கிலாசயம்.

இதில் மேற்படி மூத்திரதாரையின் முதற்பாகத்தை சுற்றி சுக்கிலகுமிழ் என்னும் கோளம் இருக்கிறது. இக்கோளத்தின் முக்கியவேலை பால்போன்ற ஒருவித

நீரை உற்பத்தி செய்வதாகும். சவ்வுபாகத்தின் முன்பாகத்தின் அடியில் பட்டாணிக்கடலை போல் மஞ்சள்நிறமுள்ள இருகோளங்கள் இருக்கின்றன.

இவைகளுக்கு சுக்கிலகோளங்கள் என்றுபெயர் ஆங்கிலத்தில் (*Cowpers*) என்று பெயர். இந்த இரண்டுவகையான கோளங்களிலும் சுக்கிலத்தின் "ஸ்பைனல்ப்ளுயிட்" (*Spinalfluid*) என்னும் சத்தின் பெரும்பகுதி உற்பத்தி செய்யப்படுகிறது.

## (Semen Fluid) சுக்கிலம்.

மேலே கூறியவற்றில் இருந்து நமதுசரீரத்திற் சுக்கிலம் உற்பத்தி செய்வதற்கு மிகவும் சிக்கலான பலஇயந்திரங்கள் வேலைசெய்கின்றன என்று தெரிகின்றதல்லவா?

சுக்கிலம் தடிப்பான வெள்ளைநிறமுள்ள நீர்போன்ற வஸ்த்து. சுக்கிலத்தை பூதக்கண்ணாடியால் பார்த்தால் முட்டைபோன்ற பருத்ததலையையும் நீண்டவால்களுமுள்ள நூற்றுக்கணக்கான கிருமிகள் ஒருவிதநீரில் முனைநோக்கி நீந்திக்கொண்டிருப்பது போல் தெரியும். இச்சீவராசிகள் தான் சிசுஉற்பத்திக்கு மூலகாரணம் அவை இருக்குமிடத்தைவிட்டு வெளியே கொண்டுவரப்பட்டால் 5 நிமிடங்களுக்குமேல் உயிருடன் இருக்கா குளிர்ந்த அல்லது புளிப்புள்ள பதார்த்தங்கள் இவைகளின் மேல்பட்டாலும் இவை இறந்துவிடும்.

எழுவகைத் தாதுக்களிலும் முக்கியதாது இந்திரியமே அதாவது சுக்கிலமே. சுக்கில அழிவினாலேயே எல்லா மேகரோகங்களும் ஏற்படுகிறது. இதனாலேயே குருநாடியும் செயலற்றுப் போகவேண்டி ஆகிறதெனலாம் மேலும் சுக்கில அழிவினாலேயே வெள்ளைவெட்டை, பிரமியம், புற்று முதலிய பயங்கரரோகங்களும் ஏற்படுவதாய் அறியக்கிடக்கிறது அதுவே புருஷாத்தினம் சீவரத்தினம் அமிர்தம் என்றுங் கூறப்படுகிறது.

# இரத்தாசயம் (The Heart)

இருதயம் இரத்தாசயம் உருத்திரபுரம் எனப்பல நாமங்களாலும் அழைக்கப்படுகிறது. இது மார்புக்கூண்டின் நடுவில் சுவாசகோசங்களுக்கு மத்தியில் சற்று இடப்புறமாய் விரிந்து சுருங்கி ஆடிக்கொண்டிருக்கிறது ஒவ்வொருவருடைய இருதயத்தின் அளவு சுமார் அவர்களின் கைமுஷ்டி அளவே யாகும்.

இது சுருங்கி விரிவதால் சரீரத்தின் சகல பாகங்கட்கும் இரத்தத்தை அனுப்புகிறது இதின் அகன்ற பாகம் (*Base*) இருதயகமலம் இது மேற்புறமாகவும், குறுகிய நுனிப்பாக இருதயம் கீழ்ப்புறமாகவும் இருக்கிறது. இருதயத்தைச் சுற்றி இரட்டை மடிப்புள்ளதும் மெல்லிய பைபோன்றதுமான ஓர் கவசம் இருக்கிறது இதற்கு பெரிகார்டியம் (*Pericardium*) என்று பெயர். இது எப்பொழுதும் ஒரு பசைபோன்ற நீரை உற்பத்தி செய்து இருதயத்தை ஈரப்பசையுள்ளதாய் வைத்துக்கொண்டிருக்கிறது. இதனால் இருதயம் அசைந்து கொண்டிருப்பதற்கு உதவியாய் இருக்கிறது. இருதயத்தின் உட்பாகம் வலது இடது என இரு பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பாகமும் மேல் அறை கீழ் அறை என இவ்விரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மேலறைக்குச் சிரவம் இருதயகமலம் ஆங்கிலத்தில் ஆரிக்கிள் (*Auricle*) என்றும் கீழ் அறைக்கு சடரம் அல்லது வென்றிக்கிள் (*Ventricle*) இருதயம் என்றும் பெயர். வலது ஆரிக்கிளுக்கும் வலது வென்ரிக்கிளுக்கும் இடையில் ஒரு கபாடம் அதாவது பொறிவாயில் இருக்கிறது. அதுபோல் இடது ஆரிக்கிளுக்கும் இடது வென்ரிக்கிளுக்கும் நடுவேயும் ஒரு வழி இருக்கிறது. இவ்வாயில்களில் ஓர்வகைத்தசை மூடி (*Valve*) இருக்கிறது. இதன் உதவியால் ஆரிக்கிளிலுள்ள இரத்தம் வென்ரிக்கிளுக்குப் போகமுடியுமே தவிர வென்ரிக்கிளில் இருந்து ஆரிக்கிளுக்குப் போகமுடியாது.

ஆரிக்கிள்கள் சுருங்கும் போது அவைகளில் உள்ள இரத்தம் வென்ரிக்கிளுக்கு அதாவது இருதய கமலத்துக்கு (*Valve*) வால்வுகளின் வழியே செல்லுகிறது. வென்ரிக்கிள்கள் சுருங்கும்போது அவைகளில் உள்ள இரத்தம் அங்கிருந்து செல்லும் இரத்தக் குழாய்களின் வழியே செல்லுகிறது. வலது வென்ரிக்கிளில் இருந்து செல்லும் இரத்தக்குழாய்க்கு பல்மனரியாட்டரி (*Pulmonary artery*) என்று பெயர். இடது வென்ரிக்கிளில் இருந்து கிளம்பும் இரத்தக் குழாய்க்கு (*aorta*) நாடித்தொடக்கம் ஏஓர்டா அதாவது மகாதமணி என்று பெயர். இந்த இரத்தக் குழாய்களுக்கும் வென்ரிக்கிள்களுக்கும் இடையில் (*Valves*) வால்வுகள் கபாடங்களில் இருக்கின்றன. இவைகள் இரத்தக்குழாய்களுக்கு இரத்தத்தை விடுமே தவிர இரத்தக்குழாய்களிலிருந்து வென்ரிக்கிளுக்கு இரத்தத்தை வரவிடா.

இருதயத்துக்குகார்ரத்தத்தைகொண்டு வரும் குழாய்களுக்கு நாளம் அல்லது அசுத்த ரத்தக்குழாய் ஆங்கிலத்தில் (*Veins*) சிரைகள் என்று பெயர். இருதயகமலம் நாளத்தின் முடிவு. இருதயகமலத்திலிருந்து இரத்தத்தை கொண்டு செல்லும் குழாய்களுக்கு நாடி அல்லது சுத்த இரத்தக்குழாய்கள் (*Arteries*) என்று பெயர். சரீரத்தின் பலபாகங்களிலிருக்கும் அசுத்தஇரத்தத்தை இருதயத்தின் வலது ஆரிக்கிளுக்கு இரண்டு குழாய்கள் கொண்டுவருகின்றன. இருதயகமலத்துக்கு இவைகளுக்கு மேல்பக்க பெருநாளம் ஆங்கிலத்தில் (*Superior vena cava*) மேல்பக்க வீனுகாவா என்றும், கீழ்ப்பக்க பெருநாளம் (*Inferior vena cava*) கீழ்ப்பக்க வீனுகாவா என்றும் பெயர். இவ்வாருக வலது ஆரிக்கிளுக்கு வந்துசேரும் கார்இரத்தத்தை வலது வென்ரிக்கிளுக்கு அனுப்புகிறது. வலது வென்ரிக்கிள் சுருங்குவதால் மேற்படி அசுத்த இரத்தம் பல்மனேறி ஆட்டரி வழியாகச் சென்று அதன் இருபிரிவுகள் வழியாக இருசுவாசகோளங்களையும் அடைகிறது. அங்கே அது சுத்தி



கரிக்கப்பட்டு பல்மனறி வழியாகவே இடது ஆரிக்கிளுக்கு வந்து அங்கே சுத்திகரிக்கப்பட்ட இரத்தம் இடது வென்ரிகிளை அடைகிறது. இடது வென்ரிகிள் சுருங்குவதால் அதிலுளள இரத்தம் 'ஏஓர்டா' என்னும் பெரியமுக்கிய இரத்தக்குழாய்மூலம் சரீரத்தின்பல பாகங்களுக்கும் செல்கிறது. நாடியின் தொடக்கம் இருதயம். நாளத்தின்முடிவு இருதயகமலம். இப்படியே இருதயம் விரிந்து சுருங்குவதால் ஆட்டரிகள் இரத்தத்தை கொண்டுசெல்கின்றன. ஒரேசமயத்தில் ஆரிக்கிள் இரண்டும் சுருங்க வென்ரிக்கிளுக்குப் போகும். வென்ரிக்கிள் இரணடும் சுருங்க ஆட்டரிகளுக்கு இருதயகமலத்துக்கு இரத்தம் செல்கிறது.

இப்படியே வபதுவந்த மனிதனின் இருதயம் ஒரு நிமிடத்திற்கு 72 தடவைகள் சுருங்குகின்றன இடது வென்ரிகிளின் ஒவ்வொரு சுருக்கத்திலும் மகாதமணிக்கு அதிக இரத்தம் செல்கிறது. இப்படியே செல்லும் இரத்தமானது குபீர் குபீர் எனப்போவதால் இரத்தம் நாடிகள் வழியாக அலை அலையாகச் செல்லுகிறது. இவ்வித அலைகளால் ஆட்டரிகளில் (*Artery*) ஏற்படும் துடிப்பையே நாம் நாடி என்கிறேம். எந்த இடத்தில் ஒரு ஆட்டரி தோலின் சமீபத்தில் இருக்கிறதோ அங்கேதான் நாடிப் பதைப்பை பார்த்தறிவது எளிதாய் இருக்கும். சாதாரணமாக மணிக்கட்டுக்களில் நாடிபார்ப்பது எளிதாய் இருக்கிறது. ஆகையால்தான் நம சித்தர்கள்;

தாது முறைகேள் தனித்தகுதிச் சந்தோடு
ஓதுறுகாமியம் உந்தி நெடு மார்பு
காது நெடுமூக்கு கண்டங்கரம் புருவம்
போதுறு முச்சிபுகல் பத்தும் பாத்திடே."

என்ருர்! மேலேகூறிய திருமூலநாயனர் திருவாக்கின் படி குதிச்சந்து, காமியம், உந்தி, மார்பு, காது, மூக்கு, கண்டம், கரம், புருவம், உச்சி என்னும் பத்திடங்களிலும் ஆட்டரி (*Artery*) கள் அதாவது நாடிகள் தோலின் சமீபத்

தில் இருப்பதாகக்கண்டு அவ்விடங்களில் நாடியைப் பார்த்தறியலாம் என்று கூறியுள்ளார். எனினும் கரமேசிறந்ததாகலானும் பெரும்பான்மையும் கரமே நாடிக்குரிய இடமாக வகுத்துள்ளார். ஆகவே "அல்லோபதி" யாராலும் அது அங்கீகரிக்கப் பட்டுவருகிறது. ஆதலின் பெருவிரல் பக்கமாக ஆரையெலும்பின் மேல்தோலுக்கு சமீபமாய் செல்லும் நாடியை மணிக்கட்டுக்கு ஒருவிரல் தள்ளி மூன்றுவிரல்களாலும் சமமாக மெல்லென அமர்த்தியும் தளர்த்தியும் பார்க்க ஆள்காட்டிவிரலில் உணர்த்துவது வாதம் எனவும் நடுவிரலில் உணர்த்துவது பித்தம எனவும் பௌத்திர விரலில் உணர்த்துவது ஐயமெனவும் உணர்க.

## முத்தோஷம்.

மலமது சிக்கிநின்றால் வாதமே அதிகமாகும்
பலமாதஞ் சூடுகொண்டால் பகர்பித்த மதிகமாகும்
சலமென உடல்குளிர்ந்தால் சதிசேட மதிகமாகும்
நலமுறை இதுவேஎன்பர் நரம்பொன்றில் நாடிமூன்றே.

தேகத்தினெல்லா உறுப்புகளிலுஞ் சிறந்தது இருதயமே; இதன் மூலமாகத்தான் பெரும்பான்மையான தாதுக்கள் போஷிக்கப்பட வேண்டும். இதுவே தேகம் சுகநிலையிலிருப்பதற்கும் இல்லாமைக்குங் காரணங்காட்டுவது இதன்தொழில் வேறுபாடுகளை நாடிகளுணர்த்தும் பிரமபுரம், உருத்திரபுரம், விஷ்ணுபுரம் என முப்புரங்களாகவும் இச்சரீரத்தைப் பிரித்துள்ளார். ஆகவே இருதயத்தைப் பற்றிய வாயுக்களைக் குறிக்குமிடத்து உருத்திரவாயு, தமரகவாயு, மாரடைப்பு, நெஞ்சடைவாதம (*Angina Pectoris*) என்று நம்சித்தமுதல்வர்கள் கூறியிருப்பதை அவர்களேடுகளில் பலவிடங்களிலும் காண்கிறோமல்லவா?

ஆகவே வைத்தியத்துறையில் எம்மை எதிர்நோக்கியிருக்கும் மகாமுக்கியமான பிரச்சினைகளில் இரத்தாசயத்தைப் பற்றியவியாதிகளே மிகவும் முக்கியமானதெனலாம்.



இது இருதயக் கோளாறினாலோ இருதயத்தைக் கொழுப்பு மூடுவதாலோ இருதயத்திலிருந்து ஆரம்பிக்கும் "ஆட்டரி" களிலேற்படும் அடைப்பினாலோ இரத்தந் தடித்துவிடுவதினாலோ ஏற்படலாம். இது பொதுவாய் 50 வயதுக்கு மேற்பட்டவர்களையே பிடிப்பது சகசம்.

இவ்வியாதி காரணமாக இறக்கநேரிடும் மக்கள்தொகை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. அதிலும்மிகவும் வருத்தப்படக்கூடியது இளவயதுள்ளோர்களிலும் அனேகர் இவ்வியாதிக்குப் பலியாவதே. ஆகையால் இருதயவியாதி என்னும் ஆட்கொல்லியின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க வைத்தியரனைவரும் முயலவேண்டும். ஆகவே அவ்வியாதி சம்பந்தமாய் நம சித்தவிஞ்ஞானிகளால் கூறப்பட்டுள்ள ஔடதங்களை விஞ்ஞான ரீதியில் ஆய்ந்து தெரிவுசெயது தகுந்தசிகிச்சை செய்ய சித்த வைத்தியராகிய நாமும் முன்வர வேண்டும்.

இவ் வியாதி சம்பந்தமாக ஆராய்ச்சி செய்துவரும் நிபுணர்கள் இரண்டுவழிகளில் இவ்வியாதி ஆராயப்பட வேண்டும் என்கின்றனர். அதாவது இரத்த சம்பந்தமாகவும் இரத்தோட்ட சம்பந்தமாகவும் ஆராய்வதாக அறியப்படுகிறது. உட்கொள்ளுமுணவுகளில் அளவுக்கு மிஞ்சிய கொழுப்புப்பதார்த்த மிருப்பதுபற்றியும் இரத்தநரம்புகளில் இரத்தோட்டத்தின்போது தடையை உண்டாக்கும் வாயுமுதலிய தடையங்கள் பற்றியும் ஆராயப்படுவதாயறிகிறோம்.

## இரத்த ஓட்டம்.

இது விஷயமாய் மேல்நாட்டு வைத்தியர் இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்புதான் "ஹார்வீ" என்பவர் இரத்தம் உடலில் சுற்றுகிறதாகத் தெரிந்து சொன்னார். அவர் மூலம்தான் இரத்த ஓட்டத்தையும் அதன் சுற்றலையும் தெரிந்து கொண்டனர். ஆனால்நமது சாஸ்திரங்களில்

சொல்லியிருப்பதோவென்றால்... சாஸ்திரம் பிறந்த நாளி லிருந்தேயுள்ளது.

நமது சரீரத்திலுள்ள பலபாகங்களின் தசைகளுக்கு வேண்டிய தாதுப்பொருள்களையும் பிராணவாயுவையும் கொண்டு போகவும் அவ்வவ்விடங்களிலிருந்து அசுத்த பதார்த்தங்களை வெளியேற்றவும் இரத்த ஓட்டம் ஏற்பட் டிருக்கிறது. இரத்தம் சுவாசகோசங்களுக்கு வரும்போது அவ்விடமே இரத்தத்திலுள்ள கரியமலவாயு வெளியேற றப்பட்டு அத்துடன் பிராணவாயு சேர்க்கப்படுகின்றது. சுவாசாசயத்திலேயே இரத்தம் பொதுவாய்ச் சுத்திகரிக் கப்படுகிறது.

இரத்தச் சுழற்சி (*Blood Circulation*) இருதயத்தின் வென்றிக்கிளிலிருந்து புறப்படுகிறது. இதிலிருந்து பல கிளைகள் பிரிகின்றன. அம்மாதிரி பிரிந்து செல்லும் ஒவ் வொரு ஆட்டரியும் ஒவ்வொரு அவயவத்துக்குச் சென்று அங்கங்கே பல கிளைகளாகப் பிரிந்து சிறிய சிறிய இரத் தக் குழாய்களாக மாறிக் கடைசியில் பல மிகச் சிறிய இரத்தக் குழாய்களாகி வலைகளாற் பின்னப்பட்டது போலாகி விடுகிறது. இவைகளைத்தான் நுண்குழாய்கள ஆங்கிலத்தில் "காபில்லரிகள்" என்றும் அல்லது மயிர் போன்ற நுண்குழாய்களென்றும் சொல்வது. இவைகளை பூதக்கண்ணுடியின் உதவியினுற்தான் காண முடிகிறது. இவைகளின் வழியே நிணநீரெனப்படும் இரத்தநீர் கசிந்து தசைகளை நனைத்து உணவூட்டுகிறது.

இப்பொழுது கெபிகள் (*Glands*) அதாவது கோளங்கள் இரத்தத்திலுள்ள தாதுப்பொருள்களை நிணநீரிலிருந்து எடுத்துக்கொள்ள எஞ்சியஇரத்தம நாளங்கள் வழியாக இரத்தாசயத்தை அடைகிறது. இது வென்றிக்கிளின் சுருக் கத்திஞல் அவ்விடமுள்ள சுத்தரத்தம் தமணிக்குச் சென்றுகொண்டே இருக்கிறது. தமணிவழிமேலே சென்று



உடனே இடதுபக்கமாக வில்போல்வளைந்து கீழேஇறங்கு கிறது, தமனியின் வளைந்தபாகத்தில் 3 ஆட்டரிகள் கிளம் புகின்றன. இவைகளிலொன்று இருபாகங்களாகப் பிரிந்து வலப்பக்கப் பிரிவு வலதுபக்கத்துத் தலை, கழுத்து இவை களுக்கும் இடப்பக்கப்பிரிவு இடப்பக்கத் தலை, கழுத்து இவைகளுக்குஞ் செல்கின்றன. இவைகளுக்கு (*Corotias Arteries*) "கரோடிஸ் ஆட்டரிஸ்" நாடிகள் என்று பெயர். மற்றஇரு ஆட்டரிகளுக்கும் (*Sub clavion*) "சப்கிளேவியன்" ஆட்டரிஸ் என்றுபெயர். இவைகளில் வலதுபக்கத்து நாடி வலதுகைக்கும் இடதுபக்கத்துநாடி இடதுகைக்குஞ் செல் கிறது. இந்தச் "சப்கிளேவியன்" நாடி முழங்கையில் வந்த வுடன் "ரேடியஸ்" (*Radius*) "அல்லனு" (*Ulna*) எனஇரு பிரிவுகளாகப் பிரிகின்றன. சாதாரணமாய் நாம் நாடி பார்ப்பது இந்த ஆட்டரியிற்தான் இதுவன்றி மேற்படி பெருநாடியிலிருந்து இன்னும் பலநாடிகள் பிரிந்து சரீரத் தின் பலபாகங்களிலுமுள்ள அவயவங்களுக்குஞ் செல்லு கின்றன.

மேற்படி ஆட்டரிகளிலொன்று (*Diaphram*) "டயாப்ரம்" என்னும் படுதாவுக்கூடாக வயிற்றினுள்ளிருக்கும் பல உறுப்புகளுக்குஞ் செல்கின்றன. ஒரு சிறிய கிளை 3 பிரிவு களாகி அன்னகோசத்திற்கும் கல்லீரலுக்கும் மண்ணீர லுக்குஞ் செல்கின்றது.

இரு சிறிய ஆட்டரிகள் குண்டிக்காய்களுக்குச் செல் லுகின்றன. கடைசியில் 'ஏஓர்டா' அதாவது பெருநாடி நரம்பு இரு பெரிய பிரிவுகளாகி வயிற்றின் கீழ்ப்பாகத்திற்கு கிளைகளை விட்டுவிட்டு இருகால்களின் வழியேயும் இளிறங் குகின்றன. அவைகளுக்குக் கால்களில் பலகிளைகள் ஏற் படுகின்றன.

சரீரத்தின் பல பாகங்களுக்குஞ் செல்லும் 'ஆட்டரி' அதாவது நாடி பல கிளைகளாகப்பிரிந்து, முடிவில் காபில்

லரிகளாக மாறிவிடுகின்றன. அவை தசைகளுக்கும் கெபிகளுக்கும் வேண்டிய சத்துப் பொருள்களைக் கொடுத்துவிட்டு, அவற்றிலுள்ள அசுத்த வஸ்த்துக்களையும் கரிய மலவாயுவையும் பெற்று மீளும். அப்போ இரத்தம் சிவப்பிலிருந்து நீலமாக மாறிவிடுகிறது. பல காபில்லரிகள் ஒன்று சேர்ந்து பல சிறிய வெயின்களாகி அவை பெரிய வெயின்களைச் சேருகின்றன. இவ்விதமாகவே சரீரத்திலுள்ள எல்லா அசுத்த இரத்தமும் இருதயத்தின் வலது ஆரிக்கிளுக்கு வந்து சேருகின்றன. இருதய கமலத்தை வந்தடைகின்றன நாளங்களின்முடிவு இருதயகமலம்.

இரத்தாசயம் இரத்த ஓட்டம் ஆகிய இரண்டின் கோளாறுகளாலும் உருத்திரவாயு, மாரடைப்பு தமரகவாயு நெஞ்சடை வாதம் முதலிய ரோகங்கள் ஏற்படுகின்றன என்று கண்டோம். இதில் உருத்திரவாயு அதாவது மாரடைப்பு வாயு மிகவும் ஆபத்தானதென்று அனுபவ மார்க்கமாயும் அறிகிறோம். இதைக் கருவி உலாவுதல் என்றும் சிற்சில இடங்களிற் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

மூளைக்குத் தங்கம் கபத்துக்குத் தாம்பிரம் நரம்புக்கு வெள்ளி (வயிற்றுக்கு) குடலுக்கு இரும்பு முக்கியமாய் வேண்டப்படுகிறதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்க இவைகளை சுருதிகளிற்காண்க.

**இது முன் வரவேண்டும்:——**

### சித்தர்கள் கூறும் இருதயம்.

இதற்கு இரு சுவாசக் குழாய்களுண்டு வலது சுவாசக் குழாயாலிழுக்கப்பட்டு அங்கு சுத்திகரிக்கப்பட்டு இடது சுவாசக்குழாய்மூலம் வெளிவருகிறது இதையே சுவாசம் விட்டுவாங்கல் "றெஸ்ப்பரேசன்"எனக் கூறுவர். இச்செயலால் உயிர்வாழ்வதாலிதனைப் பிராணனென்பர்.



சுவாசக் குழாயாலுட் செல்லுங்காற்றுப் போய்த்தங்குமிடத்தை இருதயமென்பர். இவ்விடமானது பதிநான்கு இதளோடு கூடிய தாமரைப்புஸ்பம் போல்விளங்கும் அங்கு வந்த இரத்தம் சுத்திகரிக்கப்பட்ட கரியமலவாயுவுடன சுத்திகரிக்கப்பட்ட இரத்தமும் வெளிக்கிளம்பி முன்சொன்ன இருதயவாயிலால் வெளிப்போகும் ரத்தம் சுவாசத்தை உள்ளிழுக்கும்போது கீழேஇறங்கமாட்டாது. எனவே இந்தஇடத்தை நம்சித்தர்கள் இருதயம்என்றும் உயிர் வாழ்விற்கு முதன்மை ஸ்தானமென்றும் இரட்சகஸ்தானமென்றுங் கூறுவர். இரு சுவாசக்குழாயின் முடிவும் அசுத்தஇரத்தஞ் சேருமிடமும் தாமரைப்புஸ்பத்தைப் போல் பதிநான்கு இதளோடு கூடியஇடமுமாகியவை சேர்ந்த ஒன்றையே இருதயமெனக்கூறியுள்ளார். இந்தஇடமானது இரத்தக்குழம் போலிருப்பதால் இதை தடாகமெனவும் அத் தடாகத்தை வந்தடையுங்காற்றை இரட்சகனென்றுங் கூறியுள்ளார். நமது சரீரத்தை நிலைபெறச்செய்வது பிராணனென்னுங் காற்றேயாதலால் பிராணவாயு என்னுங் காற்றையே இரட்சகனெனக் கூறியுள்ளார்.

காற்றின் செயலால் இருதயகமலத்தை வந்தடைந்த அசுத்தஇரத்தம் சுத்திகரிக்கப்படுவதாலும் பரிசுத்தஇரத்தம் ஆட்டறியில் செல்லுவதாலுமே சரீரஞ்சுகமாயிருக்கிறது தவறிஇருதயகமலத்தை வந்தடைந்த அசுத்தஇரத்தம் சுத்திசரிக்கப்படாமல்; அசுத்த இரத்தமாகவே மாங்காய்வடிவ இருதயத்துட் சென்று "ஆட்டரி" அதாவது நாடியில் ஓடுமாயின் ஆபத்தாய்முடியும். "காட்பெயிலியர்" நோயினுற் துன்பத்தை அடைந்து சடுதிமரணமுஞ் சம்பவிக்கலாம்.

இதைஅவதானிக்கும்போது மாங்காய்வடிவ இருதயத்திலும்பார்க்க தாமரைக் கமலவடிவ இருதயம் எவ்வளவு முக்கியமானதென்று அறியக்கிடக்கிறதல்லவா? இக்காரணத்தாலே சித்தர்கள் கூறுமிருதயம் முக்கியமானதா

கிறது. வலது சுவாசக் குழாய்மூலம் விடுங்காற்று சரீரத்துக்கு உஷ்ணத்தைத் தருவதால் சூரியநாடிஎனவும் இடதுநாசியின்மூலம் விடுங்காற்று தேகத்துக்குக் குளிர்ச்சியைத் தருவதால் சந்திரநாடி என்றுங்கூறினர்கள். சுவாசத்தை இழுப்பது இடதுநாசியும் விடுவது வலதுநாசியுமானல் அது **சூரியநாடி**. இதேபோல் வலதுநாசியால் இழுத்து இடதுநாசியால் விடுவது **சந்திரநாடி**

இயற்கையிலேயே நமது சுவாசம் $2\frac{1}{2}$ நாளிகை இடது நாசியிலும் இரண்டரைநாளிகை வலது நாசியிலும் போய்க்கொண்டிருப்பதால் நம் சீதோஸ்ணநிலை சமமாய் காணப்படுகிறது.

**சிகிச்சை:-** இருதய வீக்கத்துக்கு வெளிப்பாக வீக்கத்துக்கு அமுக்கிராய்க்கிழங்கும், பச்சரிசியும் அரைத்துப் போட வெளிவீக்கந்தீரும்.

### இருதயகமல வீக்கந்தீர:- அமுக்கிராய் லேகியம்

(10) பத்துப்பலம் அமுக்கிராய்கிழங்கு (2) இரண்டு பலம் பூமிசர்க்கரைகிழங்கு, திரிகடுகு, திரிபலை, ஓமம் வகைக்கு ஒரு பலம் இவைகளைப் பாலில்வேகவைத்து ஒருவீசை சர்க்கரைசேர்த்து நெய்போதுமான அளவு லேகியம் பதத்துக்களவாய் விட்டுக்கிளறிவைத்துக் காலை மாலை கழற்சிக்காயளவு கொடுத்துவர இருதயவீக்கம் தீரும்.

**சோகார்பிளெக்சஸ்—**"இருதயகமலம்" இருதயவீக்கம் பெரும்பாலும் போகம் அதிகரித்தலினுலும் அமிதக்குடியினுலும் உண்டாகிறது.

### இருதயம் சுருங்கல்.

இருதயம் சுருங்கிவிடுமாயின் கல்லீரல் செயலற்று விடும் அதாவது கல்லீரல்வேலை செய்யமாட்டாது இதைக் **'கான்ஜெஷன் ஒவ் தி ஹார்ட்'** என்பர். இவ்வியாதி வந்



தோர்க்கு கால்வீங்கும், வயிறுவீங்கும், நீரிறங்கமறுக்கும் இதைநீக்குவது கஷ்டசாத்தியமாம். இருதயவியாதி எதுவாலும் கல்லீரலையும், மூளையையும் பாதிக்கவே செய்யும் இமூன்றுக்குந் நெருங்கியதொடர்பு இருக்கிறதென்று உணரவேண்டும்.

### மாரடைப்பு நோயின் குணம்

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடியாளோடு மந்தனம் செய்தார்
இடப்புறமே இடைநோகுதென்ருர்
கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே. —திருமூலர்

மார்பு விரிவது போலவும் பிளக்கப்படுவது போலவும் சிதைக்கப்படுவது போலவும் கடுமையான நோவுண்டாகும். அவயவங்கள் நடுங்கும் மனச்சோர்வுண்டாகும். தேகத்தில் வியர்வை, குளிர், இருமல், நெஞ்சில் சளி முதலிய குணங்களுண்டு. கருநிறமாகவும் துர்க்கந்தமாகவும் மஞ்சள் நிறமாகவும் கட்டி கட்டியாகவும் இரத்தக்கலப்புள்ளதாகவும் கபம் வெளியாகும். சிலருக்குச் சிலசமயம் மார்பு மிகக்கடுமையாய் நொந்து இரத்தங்கக்கல், சலம் இரத்தமாய்ப் போதல் முதலிய குணங்களுமுண்டாகும். இது அசாத்தியமானது. இதையே கருவியுலாவுதல் என்பர். இதிற் சடுதிமரணமுமேற்பட்டுவிடுகிறது.

### நெஞ்சடைவாதக் குணம்

நெஞ்சினிலடைத்துக் குத்தி நீண்டதிற் சேடமுண்டாய்
கஞ்சிநீரருந்த விக்கிக் கடினமாய் வணசில்தள்ளி
ஒஞ்சவே அன்னந்தானும் ஒறுத்தொறுத்து வாந்திசெய்யும்
வஞ்சநெஞ் சடைக்கில் வாதகுணமென வகுக்கலாமே.

இதயமேற்கண்ட மட்டும் எதிரிட்டு ஊதைவிம்மி
புதையவே வீங்கிமார்பிற் புண்ணென நோவுமுண்டாம்
பதைபதைத் திடிக்குந்நெஞ்சு பழமலமுலர்ந்து காட்டும்
நிதமலர்க்குழலினளே நெஞ்சடை வாதமென்னே.

### சிகிச்சைக்கிரமம்

இரத்தங்கக்கல், சலம் இரத்தமாய்ப்போதல் முதலியன ஏற்பட்டால் இன்பூறலிலையின் சாற்றை பாலுடன் கலந்து சர்க்கரையும் கூட்டிக் கொடுக்க குணமுண்டாகும்.

"இன்பூறலிருப்பதை அறியாமல் இரத்தங்கக்கிச்
செத்தானும்" என்றோர் முதுமொழியுமுண்டல்லவா? இது ஓர் ரத்ததம்பனகாரி இதன்வேரைக் கஷாயம்பண்ணித் துணைமருந்தாகவும் உபயோகிக்கலாம். எவ்வித இரத்தப் போக்கிலுமிது பயனளிக்கவல்லது. இதுவேயன்றி வெற்றி வேலாயுதம், அருணோதயம், வாதாரி, அக்கினிகுமாரன், உதையாக்கினி, செந்தூரம், ஆறுமுகசெந்தூரம், வான் மெழுகு, நெஞ்சடைவாதக்குளிகை முதலியனவும் குணந் தரத்தக்கவை.

### நெஞ்சடை வாதக்குளிகை

திருகடுகு வசம்புலுவா சீரகமிரண்டு
நறுவிலகில் இஞ்சி வசை நாவிநிறுவிஷமும்
நறை விரிகராம்பு நல்லகாயமரிதாரம்
கறையகல சூதசீலை ஒவ்வொருகளஞ்சே
சேரவரையீர் பழையசீத புளி நீரால்
நேர்குளிகை ஓரளவு நேர்பயறதாக
சீரககஷாயமொடு தேனிலிவை உண்ண
மார்பிலடை வாயுபல வாதமிவைபோமே.

### வாதாரி

இரசங்கெந்தகமே நோய் கட்கினிய சாதிலிங்கமொடு
வருகாந்த மிரும்புத்தாழும் வரன்முறை சுத்திசெய்தே
வருமுறை ஒன்றிரண்டு வழங்குமூன்றொரு நான்கெட்டாய்
தருபங்கு சேர்த்துக் கையான்தகரையின் சாறுதன்னால்

ஆறுநாளரைத்துக் குன்றியளவதா யுருட்டிப் பின்னர்
கூறிடு நோய்கட்கேற்ற குனவனுபானஞ் சேர்த்து
மாறின்றிக்கொடுக்க வாதம் மந்தாரகாசஞ் சூலை
நாறிடுக்குட்டங் குன்மம் நவில்மகோதரமேகோளை



பேசருங் கயமுட்குத்துப் பிறவீச்சுப் பெருவியாதி
ஆசில்காமாலை நாட்செல் ரருஞ்சுரங் குமரகண்டன்
கூசுபீலிகையே மந்தம் கொடு மலசலவடைப்பு
நாசமாம் புடையன்வண்டு நாகத்தின் கடியினேடே

எலி புலிமுகச்சிலந்திக்கடி சேட மிருமல்தானும்
வலி ஒருபன்னிரண்டும் வலுத்திடு மண்டவாதம்
கொலுங்கண்டமாலை வாயு கோதாரிகழிச்சல் தீமை
மலிஉருத்திரமாம் வாயு முறைச்சுரம் மற்றுநோயும்

சுடர்கண்ட பனியேபோலத் தொலைந்தஞ்சி ஓடிப்போகும்
படரும் வாதாரிஎன்று பன்னுமிம் மருந்துதன்னை
மடமலிமகளிர் பிள்ளைப்பெற நொந்து வருந்துவாரேல்
அடைவுறு மனுபானத்தில் அருந்திடப்பெறுவாள் பிள்ளை.

### சுவாசாசயம்-சுவாச உறுப்புகள் (Lungs)

**1. சுவாசக்குழாய் 2. சுவாசகோசம்** என இருபாகங்களாகும். மனிதனுணவின்றிப் பல நாட்கள் சீவிக்கலாம். ஆனால் சுவாசிக்காமல் சில நிமிடங்கள்கூடச் சீவிக்கமுடியாது. ஆகவே சுவாசகோசங்களைப் பற்றி அறியவேண்டியது அத்தியாவசியமாகிறது.

### சுவாசக்குழாய்

இது அன்னக்குழாய்க்கு முன்பக்கத்திற் செல்வது. 5. அங்குல நீளமுள்ளதாயும் கெட்டியான குருத்தெலும்பு வளையங்களைக்கொண்டதாயுமுள்ளது. ஆகாரம் அன்னக் குழாய்க்கு செல்லும்போது அது காற்றுக்குழாழக்கு சென்றுவிடாது காக்கத். தொண்டைக்குளி அதாவது "எபிக்கிளாஸ்டிஸ்" (*Epiglottis*) என்னும் மூடியால் காற்றுக் குழாயின்வாய் மூடப்பட்டுவிடுகிறது. என்றாலும் சிறிது ஆகாரம் தவறுதலாய்க் காற்றுக்குழாய்க்குட் சென்று விட்டால் திக்குமுக்காடித் தொண்டை அடைப்பும் ஏற்படு

கிறது; அப்போது இருமலோ, தும்மலோ ஏற்பட்டு வெளி ஏறியபின்தான் சமனமடைகிறது. இதையே புரைக்கேறுதல் என்றும் சொல்வர் இதை முன்னமே படித்துள்ளோம் மேற்படி குழாய் மார்புப் பக்கத்தில் இரு கிளைகளாகப் பிரிந்து நுரையீரலை அடைகிறது இப்பிரிவுகளுக்கு ஆங்கிலத்தில் 'புரோங்கியல்' (*Bronchial tubes*) குழாய்களென்று பெயர் மேற்படி குழாய்கள் பல சிறு-சிறு நுண்குழாய்கள வழியே சென்று காற்றுக்குழாய்களில் முடிகிறது.

## சுவாசகோசம் (Lungs)

இது நெஞ்சறையில் இருதயத்தினிருபுறமும் அமைந்திருக்கிறது. இது அனேகமடிப்புகளைக் கொண்டதாய் பல்லாயிரக்கணக்கான தேனீகூண்டில் இருப்பதுபோன்றசிறிய தோற்பைகளால் ஆக்கப்பட்ட பஞ்சுபோன்ற அவயவம். நாம் சுவாசிக்கும் காற்று இப்பைகளை வந்தடைகிறது. இக்காற்றிலுள்ள பிராணவாயு இரத்தத்திற் கலப்பதும் இரத்தத்திலுள்ள கரியமலவாயு காற்றுடன் கலப்பதுமாகிய தொழில் இங்கு நடைபெறுகிறது. இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட ரத்தம் நாளங்கள் வழியாக இருதயத்தின் இடது ஆட்டரியை வந்தடைகிறது. ஒவ்வொரு சுவாசகோசத்துக்கும் வெளியே ஈரப்பசையுள்ள இரட்டைத்தசையாலாக்கப்பட்ட பை போன்ற மூடி இருக்கிறது.

இப்பைக்குத்தான் சளிச்சவ்வு Plulura ப்ளுரூரு என்று பெயர். இது சுவாசகோசமசைந்து கொடுக்க உதவுகிறது. இவ்வசைவினால் கரியமலவாயு வெளியேற்றப்படுகிறது. இதற்குச் சுவாசம்விடுவதென்று பெயர். அதை நிரப்ப வெளியே உள்ளகாற்று உள்ளே வருகிறது. இதையே சுவாசமிழுப்பது என்று சொல்லுகிறோம்.

ஒருமுறை உள்ளே இழுப்பதும் வெளியே விடுவதும் சேர்ந்து ஒரு சுவாசமாகும். இப்படியே ஒரு சுகமுள்ள மனிதன் ஒரு நிமிஷத்துக்கு 16 முதல் 18 வரையிற் சுவாசிக்கிறான் குழந்தைகள் 25 தடவை வரையிலும், சிசுக்கள் 40 தடவை வரையிலும் சுவாசிக்கிறார்கள். இதன் மூலம் அசுத்த நிவாரணமும் நடைபெற்றுக் கொண்டே வருகிறது.



## அசுத்த நிவாரணிகள்.

சுவாசாசயம், குண்டிக்காய், வாய், சருமம், அபானம் முதலிய 9 வாயில்களாலும் நிணநீர்க் கோளங்களினாலும் சரீரத்திலுள்ள அசுத்த நிவாரணவேலை சதா நடைபெற்றுக் கொண்டேவருகின்றன. சுவாச அவயவங்கள் நம்முடைய முயற்சி இல்லாமலே இயங்குகின்றன. மூளையில் "மெடுல்லா ஒவ் ப்ளேங்கேற்று" விலுள்ள ஒரு இடத்திலிருந்து நரம்பு உணர்ச்சிகள் அவ்வப்போது கீழேஉள்ள தடுப்புத்தசைக்கும் மார்புத் தசைகளுக்கும் அனுப்பப்படுகின்றன. வயதான ஆண்பிள்ளை ஒவ்வொரு சுவாசமிழுக்கும்போதும் சுமார் 30. கன அங்குலங்கள் கொண்ட காற்றை உட்கொள்ளுகின்றான். மூச்சுவிடும்போதும் அதே அளவு காற்றை வெளிக்கழிக்கிறான். ஒரு சுவாசம் விட்டபின் சுமார் 200 கன அங்குலங்கள் கொண்ட காற்று சுவாசகோசங்களில் இருக்கின்றன, நிரந்தரமாக அங்கு இருக்க வேண்டியதும அவ்வளவேதான்.

## சுவாசாசய சம்பந்தமான வியாதிகள்.

பருவகால மாற்றங்களின் காரணமாகவும் தேகத்திலுள்ள சகிப்புத்தன்மைக் குறைவு காரணமாகவும் T. B. "ஈசிபிலோபயில்" போன்ற வெண்ஜீவ அணுக்கள் சில சில தேகத்தில் அதிகரிப்பதினாலும் சுவாசாசய வியாதிகள் ஏற்படுகின்றன.

ஜலதோஷம் அதாவது தடிமன், சளி, இருமல், தும்மல் முதலியன அவ்வப்போது தோன்றிமறையும் வியாதிகள். ஆனாலிவை சிலசமயம் பெரியவியாதிகளுக்கு ஆரம்பமாயுமிருக்கலாம். தொடக்கத்திலிதற்கு மூக்கினுள்ளிருக்

கும் பூந்தசை அதாவது "மியூகஸ்மென்ப்ரேன்" களிற் குளிர்பிடித்து அழற்சி உண்டாகி இவ்வழற்சி உட்புறஞ் சென்று காற்றுக்குழாய்களைப் பாதிக்கக்கூடுமானால் இதை மார்ச்சளி அதாவது "புரோங்கயில் கற்றரு" (*Bronchial-Catarrh*) என்பர். இதிற் பலவீனம், குளிர்பிடித்தல், அதிக சூடு முதலியவை காரணமாய்த் தலைக்கனம், நாசிஅடைப்பு, மூக்கு, கண், இவைகளால் நீர்வடிதல் முதலிய குணங்களேற்படும். இங்கிலையிற் குணமடையாது அசாக்கிரதையாயிருந்துவிட்டால் நோய்முற்றி வறட்டிருமல், தொண்டைக் கம்மல், தொண்டையில்விரணம், சுரம், பசியில்லாமை முதலிய குணகளுண்டாய்க் கடுமையாக்கி "புரோங்கயிற்றிஸ்" "இன்புளூஅன்சா" 'நியூமோனியா,' சன்னி முதலிய நோய்களாய்ப் பரிணமிக்கவுங் கூடும்.

## சுவாசசய ரோக நிதானம்.

மேற்படி சுவாசாசய ரோகங்களிற் பிரதானமாய் மூன்று வகைகளுண்டு எனலாம்.

அவையாவன:- 1. ஐயரோகம் (*T. B.*) 2. காசரோகம் 3. சுவாசரோகமென்பன. *T. B.* கிருமிகளால் கசமும் காசமும், ஈசினோபயில் போன்ற கிருமிகளால் சுவாசரோகம் அதாவது தொய்வு, உளமாந்தை முதலியனவும் ஏற்படுகிறது. இரத்தத்திற் செஞ்சீவ அணுக்கள் குறைந்து வெண்சீவ அணுக்கள் அளவுக்குமிஞ்சி அதிகரிப்பதால் நெஞ்சிற் கொறகொறப்பு, இளைப்பு, முட்டு ஏற்படுகிறது.

1 இதில்வைத்திய சிந்தாமணிப்படி:-

| | | | |
|---|---|---|---|
| 1 | ஐயரோகம்—கசம | 12 | என்றும் |
| 2 | காசரோகம் | 12 | ,, |
| 3 | சுவாசரோகம் | 5 | ,, |
| 4 | உளமாந்தை | 4 | ,, கூறப்பட்டுள்ளது |

2 சரகத்திற் கூறியபடி ஐயம், காசம், மந்தாரகாசம், பீனசகாசம், ஈளை, இருமல், நெஞ்சடைப்பு, தும்மல் முதலியவைகளை உண்டாக்குவது என்கிறார்.



## ஐயரோகத்தின் குணங்குறிகள்.

சயரோகத்தின் பிரதானகாரணம் இந்திரிய அழிவே. இதில்இந்திரியம் இரவு படுக்கையின்போது சொப்பனத்தில் அவரால் இச்சிக்கப்பட்ட பெண் மோகினிவடிவில்வந்து சல்லாபித்துச் சயனிப்பதுபோற் தோற்றமளிப்பதால் அவரின் விந்து ஸ்கலிதமாகிறது. இப்படியே நித்தம் ஸ்கலிதமாகி காலக்கிரமத்திற் தொடர்ந்து இச்சையைஅடக்கி மனதை கட்டுப்படுத்திக் கொள்ளத் தவறுவதால் பெலவீனப்பட்டு நரம்புத்தழற்சி ஏற்பட்டு, நோயாளியின் உடம்பு மிகவும் மெலிந்துநலிந்து எலும்புக்கூடாகி இருமக் கண்கலங்கிக் கபமும் தண்ணீர் போற்காணப்படும். கோளையோடு இரத்தமுங் கக்கும், தேகங்குளிர்ந்திருக்கும், சிலதருணம் அடிக்கடி இருமலுண்டாகி தலை, நெஞ்சு, விலாப்புறுங்களில் பொறுக்கமுடியாத நோ, வயிறு, இடுப்பு, தொண்டைகளில் நோ, சிலதருணங் தலைவலி, விலா, சந்து, முள்ளந்தண்டு முதலியவைகளிற் கடுப்பும்உண்டாகி மிகவும் வருந்த நேரிடும் இவைக்குத் தகுந்த சிகிச்சை செய்யப்படாவிடில் ஆபத்தாய் முடியும்.

## சயமுண்டாகக் காரணம்.

அகத்தியர் கர்மகாண்டப்படி சயரோகம் வரக் காரணம் மூன்று வகைப்படும். அவையாவன:—

1. இழைத்தல் 2. அடிபடல் 3. உழைப்பு என்பனவாகும்.

இழைத்தல்—விந்துஇழத்தல்; அடிபடல்—தேகத்தின பிரதானபாகங்களில் கடுமையாய் நோகஅடிபடல்; உழைப்பு—அளவுக்குமிஞ்சிய சரீரஉழைப்பு; இழைத்தல், அடிபடல், உழைப்பு இம்மூன்று காரணங்களாலேயும் சயரோகமுண்டாகலாமென்று அகத்தியர் கர்மகாண்டங் கூறுகிறது.

## ஜயரோகம்.

தானான ஜமயமதுவும் பன்னிரண் டேயாகும்
 தாக்கான பிரமனென்ற சயனந்தானென்று
வாகான ராசசயம் வைசிய சயந்தான்
 மருவுசூத்திர சயந்தான் வாதசயமாகும்
பூணான பித்தசயம் சேற்பத் தோடு
 பிரண்டதோர் வாதபித்த சயமுமாகும்
காணானவாத சேட்டும சயந் தான்
 கரும்பபித்த சேடமதின் சயமுமாமே.

## இதற்குச் சிகிச்சை.

இதிற் பலவீனப்பட்டுச் சீணித்து மெலிவடைந்துள்ள தாதுக்கள் பெலமடையக்கூடிய "விற்றமின்" சத்துள்ள ஆகாரங்களையும், தாதுக்களைப் பலப்படுத்தி விருத்திபண்ணக் கூடிய மருந்துகளையும், கிரமமாய்எடுக்கச் செய்வதே (உபயோகிக்கச்) செய்வதேமுக்கிய பரிகரிப்பெனலாம். இதுவன்றி வேறுமருந்துகளான அரிதாரபற்பம், தாளகம் நாகபற்பம், நாகசிந்தூரம், பூரணசந்திரோதயம், அமுதசர்க்கரை, வெள்ளி, தங்கம், தாமிரபற்ப சிந்தூரங்களும், ஜயகுலாந்தகன்மாத்திரை முதலியனவும் வசதிகண்டு காலமறிந்து தேகமறிந்து உபயோகிப்பதால் நற்பலனளிக்குமென்பர். **(காசத்துக்கு வெள்ளியும்—கசத்துக்குத் தங்கமும் நன்று.)**

## ஷை சயரோக நிதானம்.

1 இவ்வியாதி உள்ள சிலருக்கு கபமுண்டாகி இருமல் இளைப்புடன் தேகம்வற்றி முகம்வெழுத்து வாய்நீரூறும் நெஞ்சுவிலா புண்போல் நோகும்.

2 சிலருக்கு இருமலிளைப்புடன் கபஞ்சிவந்துவிழும் வாந்தி பண்ணும், வயிறுகழியும், நீர்கடுக்கும், சாப்பிடமுடியாது.



3 சிலருக்கு இருமலுடன் நெஞ்சிற் புண்ணாக்கிக் கபத்துடன் இரத்தம்விழும் நாசிதணல் போலெரியும், தேகம் வெதுப்பும் வற்றும், கடுக்கும், முறுக்கும் தலைவலிக்கும், வாயு அதிகரித்து வயிறுநோகும்.

4 சிலருக்கு இருமல், இளைப்புடன், நெஞ்சும் விலாவும் வலிக்கும், மந்தாரகாலங்களில் இந்தநோய் அதிகப்படும் பசிமந்திக்கும், வயிறுபொருமும், தேகமதைக்கும், கிறுகிறுக்கும்.

5 சிலருக்கு வளர்பிறைதோறும் கபமதிகரிக்கும், நினைவு தெரியாமலிருமும் அலுப்புக்கண்டு பித்தமதிகரித்தால் செமியாமலிருக்கும் அலுப்புக்கண்டு பித்தம்கொஞ்சம் மட்டுப்பட்டால் வியாதிகொஞ்சம் லேசாகும், கிறுகிறுத்துவரும், சுரம்காயும், தொண்டை, நெஞ்சு, விரை புண்போல் நோகும் அன்னஞ்செல்லாது.

## தொய்வு. (Asthma)

இது சுவாசாசயத்தைப் பற்றிய கொடிய பரிதாபகரமானநோய். தாயானவள் சேடசம்பந்தமான அல்லது மேகம் சம்பந்தமான நோயுற்றிருக்கும்போது கருவுற்றால், அது கிரந்தியா யவிந்து அதுமாறி இழுப்பிருமலாயிருந்து பின் கிரந்தித் தொய்வாகி அது கணைகாலத்திற் கணை இருமல் இழுப்பிரும லாயிருந்து தொய்வாகலாம்.

சிலருக்குச் சிறிது வறட்டிருமலா யிருந்து, 'பொடி இருமல்' தொடரிருமல் (*Hooping Cough*) அதாவது மூச்சுவிடமுடியாது திணறுதல், சுவாசம்முட்டுதல் அதே சமயம நெஞ்சிற்சளி உறைந்துபோவது காரணமாக பூனை கீச்சிடுவது போலவும் சப்தித்து உட்சுவாசம், நிற்சுவாசம் விடத்திணறல், இளைப்புக்களைப்புக் காரணமாய்ப் பேச முடியாது கஷ்டப்படுவர். பசி, ருசியில்லாமை, படுக்கவேமுடியாமை, உட்கார்ந்தபடி நித்திரையின்றி இருத்தல், மலபந்தம் இப்படியே எல்லாமதிகரித்துக் கொண்டுபோய்க்

கொடியதொய்வு (*Asthma*) சுவாசகாசம், சயம்காசம் ஆதியனவாய்ப் பரிணமித்து அவஸ்த்தையில் முடிவடைகிறது.

ஆகவே அதிகசூட்டினுலேற்படும் வறட்டிருமல் ஆரம்பமாகையிலே செய்யவேண்டிய சிகிச்சைகளைக் கீழேகாண்க.

## இருமல் ரோக ஆரம்ப சிகிச்சைகள்

1 **வறட்டிருமலுக்கு:**

அதிமதுரம், கடுக்காய், மிளகு, இவற்றை ஓரளவாயெடுத்து இளவறுப்பாக வறுத்துப் பொடிசெய்து வெருகடி தேனிற்கொடுத்துவர வரட்சிநீங்கி கபமிளகி இருமல் சாந்தியாகும். சித்தரத்தை, அதிமதுரம் திற்பலி, தாளிசபத்திரி இவை வகை களஂ. க. எடுத்து வெண்ணெய் போலரைத்து காற்படி ஜலம்விட்டுப் பொங்கக்காய்ச்சி ஆறவிட்டு வேளைக்கு ஒரு பெரிய கரண்டி வீதம் தேனுங்கூட்டி நாள் 3, 4 வேளை குடித்துவர இருமல், கோளைக்கட்டு, குத்திருமல், தலையிடி, காய்ச்சல், உடம்புவலி இவைதீரும்.

2 **இரைத்த இளைப்பிருமல்:** ஆடாதோடை இலையைச் சிறுதுண்டுகளாய நறுக்கி பிட்டவித்துப்பிளிந்த ரசத்தில் 10, 12 துளிகளைச் சிறிதுதேனுங் கூட்டி 2 முதல் 4 வேளை கொடுத்துவர மேற்படி நோய்கள் தீருவதுடன் குறிப்பாக இரைத்தல், இளைப்பு, சுரங் காமாளை தீரும்.

3 **இரைப்பிருமல்:-** நாலைந்து ஆடாதோடை இலைகளை சிறிது பொடிகளாயரிந்து புதுச்சட்டியிற் சிறிதுதேனும் விட்டு நறுமணம்கொள்ள அத்துடன் மதுரம், தாளிசபத்திரி, சித்தரத்தை வகை களஂ. $\frac{1}{4}$ நறுக்கிப் போட்டு அரைப்படி நீர்விட்டு அரைக்காற்படியாயெடுத்துவடித்துக் காலைமாலை கொடுத்துவர கோளையுடன் கூடிய இருமல், இரைப்பு, சுரந்தீரும். கோளைக் கட்டகலும், எழிதிற் துப்பமுடியும்.



4 **இரத்த வெரிச்சலிருமல்:-** இன்பூறலிலை ஒரு பங்கு அரிசிமா இருபங்கு கூட்டியிடித்து அதை அடைதட்டிச் சுட்டு இரைப்பு, ஈளை, இரத்தளரிச்சலுள்ளவர் சாப்பிட்டுவர இரைப்பு, இரத்தம்போதல் இருமல் குணமாகும்.

5 **தடிமனிருமல்:-** உத்தமாகாணிவேரிலை கொடி இவைகளைக் கஷாயம்பண்ணி தேன் அல்லது கற்கண்டு கூட்டி ஒருமண்டலங் கொண்டால் ஜலதோஷத்தினுல் விளையும் சகல சிக்கல்களுந் திரும்.

6 **இரைப்பிருமல்:-** எருக்கம்பூ ஒருபங்கு, மிளகு இருபங்கு கராம்பு கூட்டி ஆட்டுப்பாலாலரைத்து மிளகளவு மாத்திரைசெய்து வேளைக்கு 3, 4 மாத்திரை வெள்ளாட்டுப் பால் கற்கண்டு கூட்டிக் கொடுக்க இரைப்பு உடனே தணியும்.

7 **தொய்விருமல்:-** ஓமம் 8 பலம், ஆடாதோடைச்சாறு, இஞ்சிச்சாறு எலும்மிச்சம்பழரசம் புதினுரசம் இவை வகை 4 பலம் இந்துப்பு ஒருபலம் இவைகளைச் சேர்த்து ஊறவைத்து உலர்த்தி அரைத்து வேளைக்கு மொச்சை அளவுகொடுக்க இருமல் சுவாசகாசமென்னும் "அஸ்மா" தொய்வு இவற்றுடன் கூடிய அசீரணமாதியன திரும்.

8 **புகைச்சலிருமல்:-** ஏலங், கடுக்காய், திரிகடுகு, சித்தரத்தை, அக்கரு, மோடி அதாவது திற்பலிமூலம் (நறுக்குமூலம்) இவைகளைச் சமஎடை எடுத்துச் சூரணித்து வெருகடிவீதம் கற்கண்டிற் சாப்பிடப் புகைச்சலிருமல் தீரும்.

மஞ்சட்கரிசாலை அல்லது பொற்றலைக் கையான்சாறு நல்லெண்ணெய் வகை படி அரை கூட்டிக் காய்ச்சிய தைலத்தில் ஒரு துட்டிடை காலைமாலை சாப்பிட்டுவர இரு

மல், இரைப்பு, ஈளை முதலியன தீரும கற்பூரவள்ளிச் சாற்றுடன் கற்கண்டும் பொடி கூட்டிக்கொடுக்க குழந்தைகளுக்குண்டாகும் இருமல் கபக்கட்டுந் தீரும்.

காசமிருமல் கதித்த வைசூரி க்ஷயம்
பேசுபிற நீர்க்கோவை பேருங்காண்—வீசுசுரம்
கற்பாறை ஒத்தநெஞ்சிற் கட்டுடனே வாதமும்போம்
கற்பூர வள்ளி தனைக்கண்டு. என்றார் அகத்தியர்.

**"கற்பூரவள்ளியின் கழறிலையைத் தின்றால்**
**நற்பாலர் நோயெலாஞ் நாசமாய்ப் போகுமே"**

என்று தேரையருங் கூறுவதால் துளசியைப் போலவே கற்பூரவள்ளியையும் ஒவ்வொரு வீட்டின்கொல்லையிலும் பயிராக்கிக் கொள்வதுமிகவுந் நன்று.

### அமிர்த சஞ்சீவி மாத்திரை.

தானென்ற அரிதாரம் பலந் தானென்று
சமர்த்தான லிங்கமது அரைக்கால்வீதம்
தேனென்ற சூதமது பாதி சேரு
திறமானசவ்வீரம் கால்தான் கூட்டு
கூட்டியே குமரியுட சாறுதன்னால்
குணமாகக் கல்வத்திலிட்டு நீயும்.

ஆட்டியே குன்றிபோ லுண்டை செய்து
அடைவுடனே அனுபானமறிந்து ஈந்தால்
நாட்டிலே ஈளையோடு சுவாச காசம்
நலமான ரத்தபித்தம் மூலரோகம்
காட்டிலே காணமலோடிப் போச்சு
கனஅமிர்த சச்சீவிக் குளிகைதானே.

இத்துடனே முற்கூறிய கஷாயங்களைத் துணைமருந்தாகவும வேறு கபகர காரிகளை இணைமருந்துகளுக்கு அனுபானமாகவும் பாவிக்கலாம். இவைக்கு வசப்படாத ரோகங்களில் தாம்புராதிமாத்திரை, வாதாரிமாத்திரை, வெற்றிவேலாயுதன் காண்டாபிஷேகம், பெரியபூபதி நவரத்தின பூபதி, தாளகபஸ்பம், அரிதாரபஸ்பம் முதலியவை வெகு மேலான நற்பலனை அளிக்குமென்பதுறுதி. இவைகளேயன்றி அகத்தியர் 7000 ஏழாயிரத்திற் கூறிய அஸ்வகெந்தாலேகியம் போல்வனவும் நற்பலனளிக்கும்.



மேலும் தங்கபஸ்பம் சொர்ணசிந்தூரம், தாம்பிரசிந்தூரம், சந்திரோதயம் முதலியமருந்துகளை தூதுளைக்கிருதம், ஆடாதோடைக் கிருதம், கண்டங்கத்தரிச் சூரணம், மகா ஏலாதிச்சூரணம், மகாஏலாதிக்கடுகம் முதலியவைகளுடன் சேர்த்துண்ணக் கொடுப்பதும் மேலான நற்சிகிச்சை ஆகும். இதில்பிரதானமாய் வாதத்தையுங், கபத்தையும் சமப்படுத்தி அதனதன்நிலைக்குக் கொண்டுவருவதே மேலான நற்சிகிச்சையாகும்.

மேலும் தேரையர் கூற்றுப்படி தாம்பிரசிந்தூரத்தைக் கஸ்தூரி கூட்டி உத்தமாகாணியை வாட்டிப்பிளிந்த சாற்றிலிடச் சுவாசகாசமென்னும் தொய்வு (*Asthma*) நோய்நீங்கிக் குணமடையலாம்.

### சுவாதம் — சளிச்சுரம். (Pneumonia)

இதற்கு ஆரம்பத்தில் நாசியிலுள்ள மென்தசைகளிற் குளிர்பிடித்து ஜலதோஷம், மூக்குத்தடிமன், இருமல், சுரம், முதலியகுணங்கள் ஏற்படுகின்றன. இம்மூன்று குணங்களுஞ் சேர்ந்தநிலைக்கு (*Influenza Fever*) அதாவது சளிச்சுரமென்று பெயர். சளி அழற்சி காரணமாய்ச் சுவாசக் குழாயையும் பற்றினால் நெஞ்சுத்தடிமன், மூச்சுமுட்டு, அதாவது (*Bronchitis*) அத்துடன் வாயுவுஞ்சேரில் சுவாதம் அதாவது (*Broncho Pneumonia*) ஆகிறது. பின் சளி நுரையீரலைத்தாக்கி மூடிக்கொண்டால் ஈரற்சளிக்காய்ச்சல் அதாவது (*Lungs Pneumonia*) ஆகிறது. அப்போ மெல்லிய சுரமுமிருக்கும் நோயாளி மூச்சேவிடக் கஷ்டப்படு

வான் சுவாசப்பையைச் சளிமூடிவிட்டால் மூச்சேவிடமுடியாது நெஞ்சு கடுமையாய் நோகும், குத்தும் இதைஆபத்தான நிலமையெனலாம். சளி இருபக்கச் சுவாசப்பைகளையும் மூடிக்கொண்டால் கபவாதசுரம் அதாவது (*Double*) நியூமோனியா என்றழைக்கப்படுகிறது இதிற சுரம் 101 டிக்கிரிக்கும் 104 டிக்கிரிக்குமிடையிலே ஏறுவது மிறங்குவதுமாயிருந்து கொள்ளும் ஒற்றைப்பட்ட நாட்களிலேற்றமும் இரட்டைப்பட்ட நாட்களிற் இறக்கமுங் காணப்படும் 3, 5, 7 இந்நோயின் கடுமையான காலமெனலாம். சரியான சிகிச்சை செய்யப்பட்டால் 9-திற் படியத்தொடங்கிவிடும் 11 கழிந்தால் அபாயமில்லை. சுவாசயநோய்களிற் சடுதியில் அபாயகரமான நிலையைஉருவாக்கி ஆபத்தை உண்டாக்கக்கூடிய நோய்களிற் சிவாதமுமொன்றே எனலாம். அது பாலியம், வாலிபம், வயோதிபமென்றே பேதமின்றியே எவரையும் பீடிக்கிறது. அதிலும் வாலிபம் பெரிதும் ஆபத்தானதே ஆகையாற்தான் **"பொன்னே அந்தக் காலத்தில் ......? அந்த விரோதம் பொல்லாததே"** என்றும் கூறப்பட்டுள்ளது. இது கபவாதசுரம், சளிச்சுரம், சுவாதம், அபின்னியாசசுரமெனப் பலபடக் கூறப்படுகிறது.

கபம் = நீர். வாதம் = காற்று இரண்டுங்கூட்டிப் பலஞ்செய்தால் பிரளயமே உண்டாகிவிடுகிறது. இரண்டுஞ் சேர்த்து சூறுவழியாகி பூமியில் எவ்விதம் அழிவுசெய்கிறதோ அவ்விதமே தேகத்தினுள் வாயுவும் கபமும் கொந்தளிக்கத் தொடங்கிவிட்டால் பேசவும்வேண்டுமா? பரராசசேகரத்திற் கூறியுள்ளபடி;

> மின்னியர் மருங்குழாய் விளம்பு காற்றுடன்
> பின்னிய சிலேற்பனம் பெலத்து நின்றிடில்
> உன்னி சஞ்சீவி நீஉதவி செய்யினும்
> அன்னவர் பிழைபா ரென்றறிந்து கொள்ளுவாம்.

என்றுகி விடவுங்கூடும். ஆகவே இதற்குடனடியாகச் செய்யவேண்டிய சிகிச்சைக்கிரமங்களை அறிந்துகொள்ள வேண்டியது அத்தியாவசியமாகிறது.



இந்நோய் கண்டாலே பெரிதும் பீதி அடைந்துவந்த மேனாட்டுவைத்தியர்கள் இரசம், கெந்தகம், அரிதாரம், இவைகளின் மகிமைகளைச் சிறிது கண்டபின்தான் சற்றுச்சாந்தி அடைந்துள்ளார் *M & B*-க் களால். ஆனால் நம் சித்த வைத்திய முதல்வர்களோ என்றால் ஏலவே இரசம், கெந்தகம், அரிதாரம், லிங்கம், தாமிரம் இவைகளின் மகத்துவங்களை நன்கறிந்து தாம்புராதி, மூச்சுக்கம்பி, வெற்றிவேலாயுதம், காண்டாபிஷேகம், பெரியபூபதி, நவரத்தினபூபதி, குருராசன், பெரியசிவப்பு, புன்னைவேர்குளிகை முதலிய மருந்துகளை வெகுஅழகாக எழுதிவைத்துப் போயுள்ளார்.

## சிவாதம் பத்து

### காப்பு.

படரொளி கயிலைமீது பரம்பொருளாதி காலம்
இடரொளி நந்திகாண இயம்பிய ஆயுன்வேதம்
அடரிடு சிவாதம்பத்தும் அடுத்திடு குணமும்பேரும்
சுடரொளி கயிலைமீதில் அறிந்திவை சொல்லலுற்றும்.

முற்றிய சிலேற்பனத்தால் முடுகியசிவாதம் பத்தும்
இற்றிட வந்ததாகும் ஏறிடும் மூன்றிலேந்தில்
சுற்றிய ஏழில் ஒன்பான் பதினொன்றில்
சொற்றிடுமின் நாள்விட்டுச் சுகம்பெற மருந்துசெய்மின்.

### சிவாதம் 10 அவற்றின் பெயர்.

சொல்லியமுதற் சிவாதம் உட்டணத்தோர்க் குண்டாம்
புல்லிய சுரமிரண்டாம் பொருந்திய விஷமேமூன்று
கல்லியபித்தம் நாலாம் கதித்திடு கோளைஐந்தாம்
கொல்லிய ஈளைஆறும் கொடும்விஷ காசமேழே.

காசமாஞ் சுவாதமெட்டாம் கதித்திடு சேடமொன்பான்
நேசமாம் நமசிவாதம் நல்கியசருவ சேடம்
நாசமாஞ் தசசிவாதம் நிலைத்திடு சிவாதமாகும்
பாசமாஞ் சிவாதம்பத்தும் அடுத்திடு குணமுஞ்சொல்வாம்.

### சிவாதம் பத்தின் அவகுணம்.

கந்தமார் சிவாதம்பத்தும் கடினமா யிருமினாலும்
சந்தமாய் வருமேழொன்றில் சார்ந்திடு மிரண்டுமூன்றில்
பந்தமார் நாவிலைந்தில் பகர்ந்திடு மாறேழெட்டில்
தொந்தமாய் நவசிவாதம் தொடுத்திடில் மரணமாமே.

### உட்குத்துச் சிவாதம்.

அடுத்தடுத் தெதிர்த்துக்குத்தி அதிகமாய் விறைத்து
படுத்த நாத்தடக்கிப் பேசிபல்லது கிட்டிநெஞ்சில் [வேர்க்க
அடுக்கவே கட்டிச்சீறி அங்கமும் பிறகேவீழில்
இடுக்கிட பிறவீச்சென்று செப்பினார் முனிவர்தானே.

### சுவாதக் குணமும் மருந்தும்.

கொடியதாஞ் சிவாதக்குத்துக் கூற்றுடன் நோக்கமாகி
முடியவே தோன்றுமென்று முனிவர்கள் சொல்வர்பத்தின்
கடியதாங் குணங்கள் குத்துக்கழிச்சல் நாவரட்சிமூச்சு
மடிவதாஞ் சுரமேதாகம் தலைவலி உழலைமற்றும்.

இருமலு மிகவுண்டாகு மியம்பிய சிலகுணத்திற்
குறைசெயும் வீக்கந்தானும் உண்டாகு மதனைநீக்க
மருவிய அவிடதந்தான் வாகுறஉரைப்பக் கேள்மோ
தரியசுக் கரைத்துநல்ல சாராயமதிற் கலக்கி.

இளஞ்சூடாய்க் கொதித்துப்பூசு இதுவன்றி மிளகினோடு
விளம்புதிற்பலி வேர்க்கொம்பு மிகாமலோ ரளவெடுத்து
வளம் பெறுகின்ற வுத்தமாகாணிச் சாறுதன்னால்
தளம்பிடாதரைத் தேபின்புதழலிடை கொதிக்க வைத்தே.

எடுத்ததைப் பொறுத்த சூடாய்ப்பூசவே ஏகுமென்பர்
கொடுத்திடு குடிநீர்கேளு கூவிலை வேரினோடே
அடுத்திடு மிரண்டரத்தை யசமோதகம் மட்டிரெண்டு
விடுத்தவி ரத்திப்பட்டை வாணவர் தாகுவின்னும்



நெற்பொரி விடையமோடு நிகழ்த்து மாம்பழப்பருப்பு
பொற்புறு தேற்றுக்கொட்டை புகலிலவங்கப் பட்டை
சொற்றவோ ரளவாய்க்கூட்டி தொகுத்தி ளவறுப்பதாக
உற்றிட வறுத்துப்பின்னர் உரைபுதுப் பாண்டந்தன்னில்

நீர்விட்டுக் குடிநீர்காய்ச்சி நேர்பெறவடித் தெடுத்து
நேரிட்ட தேனுங்கூட்டி திகள்கோரோசனையின் தாளும்
சீரிட்டமுன் னாளாறு நேரமுஞ் செவ்விதாக
பார்திட்ட மாகவூட்டப பகர்நோய்போம் போகாதாகில்.

மிருதசஞ்சீவினியே மிகுந்த காண்டா பிஷேகம்
பொருவில் சந்திரோதயம் நற்பூரண சந்திராதி
வருகோரோசனை என்றோதும் மாத்திரைகளில் ஒன்றை
தெரியுமுன் குடிநீர்தன்னிற் சேருடன ருந்துவாயே.

### தாம்புராதி மாத்திரை.

மானேகேள் சிவாதத்தின் நிரைசொன்னேன் வகை
சொன்னேன் குணங்கள் சொன்னேன் வயதுசொன் [னேன்
மானேகேள் சூரணமுங் கஷாயம் சொன்னேன்
வகையான ஏறுதிகுடிநீர் சொன்னேன்.
மானேகேள் சிவாதமொரு பத்துக்குத்தான்
வகையான சிவாதமூச்சுக் குளிகை கேளே.
மானேகேள் சூதம் வெங்காரங் கெந்தி
மனோசிலையும் திற்பலியும் உள்ளி தானே.

தானே துரிசு சாதி லிங்கம்
தலைசேர் பற்படாகம் கடுக்காய்
மானே உருத்திராட் சமரிதார மிவை
வகையாங் களஞ்சு ஒவ்வொன்று
தானே தாம்பிர அரைபொடி தான்
சிறக்கக் களஞ்சு பன்னிரண்டே
ஊனே நொச்சிச் சாற தனில்
உறவாய் மூன்றுபொழுது தரையேன்.

அரைப்பாய் சண்டங் கத்தரியின்
ஆன இலையின் சாறதனால்
அரைப்பாய் நல்லிஞ்சிச் சாறு
ஆடாதோடை இலைச்சாறு
அரைப்பாய் சாறு ஒவ்வொன்று
ஆனபொழுது மூன்றாக
அரைத்தே கயிறு போலுருட்டி
ஆனமாத்திரை செப்பிலிடேன்.

வைத்த மாத்திரை தானெடுத்து
வடிதேன் முலைப்பால் வேப்பெண்ணெய்
உற்றநறு நெய் நாலுடனே
உள்ளே கொடுக்கிற் குத்துடனே
மெச்சும் சிவாதமூச்சும் போம்
மீறும் வலிகளொட்டும்போம்
பொருந்துங் கச்சற் றோடையிலை
புகழுமா டாதோடையிலே.

வறுத்து நிலவேர் முயிற்றுமுட்டை
வண்டுகட்டிப் பொட்டணியாய்
இருந்து வேப்பெண்ணெய் முலைப்பாலும்
சேரக்கலந்து குளிகைகொள்ளே
கொள்ளும் பிள்ளைத் தாச்சிக்கு
குலவுஞ் சிவாதமிவைதீரும்
நள்ளும் பூனைக்களர்ச்சி இலை
நறுக்குஞ் சாற்றிற் கொடுத்திடவே.

## சருமம்—தோல் (The Skin)

நமதுசரீரம் முழுமைக்கும் பாதுகாப்பாக சருமம் அல்லது தோல் மூடிக்கொண்டிருக்கிறது. கழிவுப்பொருள் நிவாரணிகளில் இதுவுமொன்றாகும். சரீரத்துக்கு உபயோகமற்ற பொருள்களை வியர்வையாக வெளிக்கழிப்பதும் சரீரத்தின் சீதோஷ்ணநிலையைச் சரிபடுத்தி வைத்துக்கொள்



வதும் இதன் பிரதானதொழில்களாகும் உடம்பின் வெப்பத்தில் ஆறிலொந்துபங்கும் தோல்வழியாகக் கழிகிறது.

## சருமம் — மேல்த்தோல் (Epidermis)
## உள்த்தோள் (Dermis)

என இருவகைத் தோல்களாலாகியது. வெளித்தோல் சீதள தேசத்தவர்க்கு மெல்லியதாகவும் உஸ்ணப்பிரதேசத்தவர்க்கு சற்றுக்கனமானதாகவும் உஷ்ணத்தைத் தாங்கும்சக்தி உள்ளதாகவும் இருக்கிறது. வெளித்தோலில் இரத்தக்குழாய்கள் கிடையாது. ஆனால் உட்தோலிலுள்ள இரத்தக்குழாய்களிலிருந்து வெளியாகும் நிணநீரினால் அது போஷிக்கப்படுகிறது. இதைப் பூதக்கண்ணாடி கொண்டு பார்த்தால் மேற்தோலிற் பலதுவாரங்கள் இருப்பதைக் காணலாம்.

முழுத்தோலிலும் (3½) மூன்றரைக்கோடி துவாரங்களுண்டு எனச்சொல்லப்படுகிறது. ஒரு சதுர அங்குலத்தில் (2000) இரண்டாயிரந் துவாரங்கள் உண்டெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இவைகள் தான் வியர்வைக் கோளங்களிலிருந்து வருந் துவாரங்கள் இவைவழியாகவே வியர்வை வெளிக்கழிகிறது. எல்லா உள் அவயவங்களுக்கும் மேலாக விருக்கும் "மியூகஸ் மெம்ப்ரேன்" அதாவது பூந்தசைகள் இங்கு உதடுகளிலும், கண்களின் ஓரங்களிலும், அபானத்திலும், மர்மஸ்தானங்களிலும், பூந்தசைகள் தோலுடன் சேருகின்றன. தண்ணீர்முதலிய திரவபதார்த்தங்களில் கரைந்திருக்கும் பொருள்களை இவை கிரகித்துக்கொள்கின்றன. ஆகையினால்தான் நம் சித்தர்கள் கழுவு மருந்துகள், பீச்சுமருந்துகள், பூச்சுமருந்துகள் முதலியவைகளாகவும் கூறியுள்ளனர்.

உள்த்தோல் நிசமான தோலாகும் இந்த உள்த்தோலில் அநேக நரம்புகளும் இரத்தக்குழாய்களும் அத்துடன் உணர்ச்சிக் கெபிகளுமிருக்கின்றன. சரீரத்தின் எப்

பாகங்களில் உணர்ச்சி அதிகமாயிருக்கிறதோ அவ்விடங்களில் அதிகமான உணர்ச்சிக் கெபிகளுமிருக்கின்றன அவ்விடமுள்ள மேற்தோலும் மிகமெல்லியதாகவேயிருக்கும். தோலில் மயிர்க்கால்கோளம், வியர்வைக்கோளம் என இருவகைக் கோளங்களிருக்கின்றன. இங்குள்ள காபில்லரிகளில் இரத்தம் வரும்போது அதிலிருந்துதான் வியர்வை பிரிக்கப்படுகின்றது வியர்வை நீரில் 'சோடியங்குளோறயிட்' என்கின்றஉப்பும் "யூறியாவும்" அதாவது சிறுநீரும் வெளிக்கழிகிறதுவியர்வையின் முக்கிய உபயோகம்நமது சரீரத்தின்சீதோஸ்ணத்தைச் சமநிலையில் வைத்திருப்பதே.

### சரீரத்தின் சீதோஸ்ணம்.

சரீரத்தில் உஷ்ணமேற்படுவது முக்கியமாகத் தசைகளிலும் நீர்களை உற்பத்திசெய்யுங் கோளங்களிலும் நரம்புஸ்தானங்களிலும் உண்டாகும் பௌதிக சக்தியினாலேற்படுகிறது. அதாவது கெபிகளில் பிராணவாயுவைக் கிரகித்துக் கொண்டு கரியமலவாயுவை வெளியே விடும்போது அதிகஉஸ்ணம் உண்டாகிறது தசைகள் எவ்வளவுக் கெவ்வளவு கூடுதலாய் வேலைசெய்கின்றனவோ! அவ்வளவுக் கவ்வளவாய் உஸ்ணமும் அதிகரிக்கிறது. இப்படியே உஸ்ணமுண்டாகிக் கொண்டிருப்பது போலவே உஷ்ண சாந்தியும் உண்டாகிக் கொண்டேயிருக்கிறது இம்மாதிரியாக உஸ்ணஉற்பத்தியும் நஸ்டமுமாகிக் கொண்டே இருப்பதால் உள்வெப்பநிலை ஒரு சுகதேகிக்கு நிரந்தரமாயிருப்பது 98. 4 டிககிரியாகும் சரீரத்திலுள்ள உஷ்ணங் குறைவடைவதற்கு இருவழிகளுண்டு.

ஒன்று குளிர்காற்றின் பரிசம் மற்றது தேகத்தில் வியர்வை உண்டாவது. இப்படியே சரீரத்தின சீதோஷ்ண சமநிலை நம்முடைய முயற்சி இல்லாமலே இயற்கையாய் நடைபெறுகிறது. சருமத்தில் இரத்த ஓட்டத்தை உண்டாக்க மூளையினொரு பாகத்திலிருந்து உத்தரவுண்டாகிச்



சரீரமதிக உஷ்ணமானல் இரத்த ஓட்டத்தை விருத்தி செய்து வியர்வையினால் உஷ்ணசாந்தி ஏற்படும்படி செய்து சரீரஞ் சீதோஷ்ண சமநிலை அடையும்படி செய்து இரத்தஓட்டத்ஂதை கட்டுப்படுத்துமிடம் மூளையின் "மெடுல்லா ஒப்ளங்கேற்ரு" அதாவது மூளையின் மைய விளயத்திலிருக்கிறது. அதிக உஸ்ணத்தின் தாக்குதலினால் இந்த இடம் சரியாக வேலைசெய்யாவிடின் உடனே 108 டிகிரி வரை உஷ்ணமதிகமாகி சடுதிமரணமு மேற்படலாம். இதைத்தான் சூரியஇடி அதாவது (*Sunstroke*) "சன்ஸ்ரோக்" என்கிறோம்.

சரீரத்தின் உஷ்ணத்தை "தேமாமீற்றர்" என்னும் கருவியால் அளந்தறிகிறோம் இம்மீற்றருக்கு உஷ்ணமானி என்றுபெயர் தேமாமீற்றர்களில் பலவகைகளுண்டு ஆனாற் சரீரத்தின் உஷ்ணத்தை அளக்கும் உஷ்ணமானிக்கு "க்கிளினிக்கல் தேமாமீற்றர்" (*Clenical Thermometer*) இதனுதவியைக் கொண்டு 95% டிக்கிரிமுதல் 110% டிக்கிரி வரை தேகஉஷ்ணத்தை அளக்கலாம் சுகசரீரமாயிருக்கும்போது ஒருமனிதனின் சராசரி உஷ்ணம் 98· 4 டிக்கிரி.

# சுரம். (Fever)

**"சுரமென்ப வியாதிக்கெல்லாம் தோற்றிய வித்ததாகும்**
**சுரமென்ப மானிடர்க்குத் துயர்மிகவே யுண்டாக்கும்"**

என்றும் எமக்கு வரும்நோய்கட்கெல்லாம் ஆதிநோய் சுரம் என்றும "வியாதிக்கு அரசு வெப்பு" என்றும் சித்தர்கள் தம் ஏடுகளில் கூறியிருப்பதைக் காணலாம்.

### சுரம் வருவதற்குக் காரணம்.

பண்டையின் மலத்தினாலும் பழகிய சீதத்தாலும்
உண்டியிற் பொல்லாங்காலு மொண்டடி வருத்தத்தாலும்
கண் துயிலாமையும் கடுகிய நடையினாலும்
மிண்டிய சுமையினாலும் வெதுப்பு வந்தணுகுமென்றே.

கடுவெயில் மழையினாலும் கதறிய குரலினாலும
விடமது படிதலாலும வெருவிய வேகத்தாலும்
முடிமுசை எண்ணெய்தேய்த்து முழுகியும் போகாதாலும்
தடிஅடி படுக்கையாலும் வெதுப்பது சாகுங்காணே.

### சுரத்தினாலாகக் கூடிய ரோகங்கள்.

சுரமதே கனலதாகும் சுரமதே தோஷமாகும்
சுரமதே சோகமாகும் சுரமதே வேகமாகும்
சுரமதே ரத்தமாகும் சுரமதே கபமுமாகும்
சுரமதே நீரதாகும் சுரமதி சாரமாமே.

சுரமதே வரட்சியாகும் சுரமதே பிரேதமாகும்
சுரமதே நீருமாகும் சுரமதே சீயுமாகும்
சுரமதே மச்சையாகும் சுரமதே கணமதாகும்
சுரமதே சீதமாகும் சுரமதே இருமலாமே.

சுரமதே ஐயமாகும் சுரமதே பொருமலாகும்
சுரமதே சூலையாகும் சுரமதே இளைப்புமாகும்
சுரமதே விரணமாகும் சுரமதே சூறையாமே
சுரமதே வாதமாகும் சுரமதே கபமுமாகும்.

சுரமதே நடுக்காலத்தில் சுரமதே நாளுமத்தி
சுரநடு நாடியாகும் சுரஞ்சுமை சுமப்போன்மத்தி
சுரமதே வாதபித்தம் தோன்றிய சேற்பனத்துக்
குரமதா மென்று முன்னோர் கூறியதுண்மைதானே.

### சுரத்தினால் உண்டாகக் கூடிய நோய் எவ்வளவு?

சுரம் (64) அறுபத்திநான்கென்று ஆசிரியர் கூறுகின்றார்.

சொல்லிய வாதபித்த சேற்பனத் தொந்திப்பாலே
அல்லல் செய்வியாதி நாலாயிரத்துக்கு மப்பால்
எல்லைஆயுறு வேதந்தான் 448 வியாதிக்கு மிறையேவெப்பு
நல்லியல் பாகமுன்னோர் நாடியே யுரைத்ததாமே



ஆகுமிச் சுரந்தான் வாதபித்தஐயத் தொந்தத்தாலே
மேவியஎட் டொன்றாகி விரிந்திடு மொன்பாநூலோர்
வாகடமமைத்து சாத்யம் அசாத்தியம் மறுகுணங்கள்
வாகென மருந்துதானும் பகர்ந்தனர் பரிந்துதானே.

தானமாம் வாதந்தன்னில் இருபதுதளர் சேர்பித்தம்
தன்னிலறு நான்காகும் உறும்ஐயத்திலிரு பதாகும்
பானலங்கண்ணாய் முன்னோர் பரிந்துறு வாதந்தன்னில்
ஈனமாமெட்டு வெப்புள் அசாத்திய மென்னலாமே.

ஏற்றிடும் பித்தந்தன்னில் இயற்றிருபத்து நாலில்
வெற்றியாம் பத்துவெப்பு மேவிய சேற்பனத்தில்
ஒன்றுமோர் பதுவுந்தானே சாத்தியமுண்மை யென்று
மன்றலங் குழலார்க்கீசன் வகுத்துரை செய்தவாறே.

| | | |
|---|---|---|
| வாதசுரங்கள் | 20 இல் 12 | சாத்தியம் |
| பித்தசுரங்கள் | 24 லில் 10 | சாத்தியம் |
| ஐயசுரங்கள் | 20 இல் 10 | சாத்தியம் |

64 சுரங்களையு மெழுதவிரிவடையு மாகையால் அவற்றிற் சிலதைமட்டும் இங்கு கூறுவாம்.

### 1. வாதசுரகுணம்.

வாதசுரத்தின் குணங்கேளாய் மயிர்கூச்செறிதல் உடல்குளிர்தல்
போதநடுங்குங் கைகால்கள் பொருத்துந் தோறுமுளைவாகும்
பேதமுக மினுமினுக்கும் பிறந்தாழுதைத்து வெழுத்திருக்கும்
ஊதைமிகுமே மலம்வறழும் உடனேதீரு முறுத்திடுமே.

### 2. வாதபித்த சுரம்

வாதபித்த சுரமானால் வருத்துங்குணத்தை மானேகேள்
நாதமிகுந்தே இரைச்சலுமாய் நாவுங்கண்ணும மஞ்சனிக்கும்
ஊதைமிகவே விடாச்சுரமாய் ஓங்காளித்துக் கண்தூங்கும்
சீதமிகுந்தே பிரமையுமாய்ச் செய்யுங்குணத்தைத் தேர்ந்
[தறியே.

### 3. வாதசேட சுரம்.

ஊதையுங் கபமும்பொங்கி உவாந்தியுள் மூச்சுமுண்டாய்
பாதமும் கரமும்வீங்கி இருமலோ டிளைப்பும்பற்றி

நாதமுமடைத்துக் காய்ந்து நடுக்கமும் சுரமும்மாரு
வாதை செய்வாத சேற்பசுரமென வகுக்கலாமே.

## 4. பித்தசுரம்.

பித்தசுரத்தின் குணங்கேளாய் பிதற்றும்பேசும்வாய் வெரு
ஒத்தநயனஞ்சிவந்துவரும் உடனேவயிறு கழிந்துவரும் [வும்
மெத்தத் தண்ணீர்தாகிக்கும் வெதுப்பிநாவுந் தடுமாறும்
சுத்தி அடங்கி முகங்கறுக்கும் சொல்லுமிடறும் புண்ணுமே.

## 5. பித்தவாத சுரம்.

அந்தப்பித்த மதிரண்டும வாதமொன்றுஞ் சுரமானல்
முந்தக்காயும் முகமவேர்க்கும் மொழிதடுமாற்றம் கண்மஞ்சல்
நொந்தங்குளையும் உவாந்திபண்ணும் நோக்குங்கண்ணும்
[வெளுத்திருக்கும்
மந்தம்பற்றி ஊதைமிகும் வழுத்துங்குணங்க ளறிவீரே.

## 6. பித்த சேடசுரம்.

பித்த சேடசுரந்தன்னை பேசக்கேளாய் மனமுழன்று
புத்திமாருட்டம் பண்ணும்புகைந்தே இருமும் மென்மேலும்
சத்தியும் விடாமற்காயும் சலமலம் மஞ்சணிக்கும்
நித்திரைதானும் வாரா துழலையும் நெருக்குந் தானே.

## 7. சிலேற்பன சுரம்.

அறயக்கேள் சிலேற்பனத் தினடைவை உடம்பு நொந்
நெறியஇருமலிழைப் புண்டாய் நெஞ்சுமிறுகி மன [துழன்று
நிறைவுநினைவு கெடாதுமயங்கி உடனே உழலும் [ந்தழரும்
உறையும் சலந்தானும் உரைக்கில் விரிகுழலே.

விரைவிலே துயில்வதாகும் வழிதுஞ்சாது மிகக்காயும்
பிரைசேருடம்பு குமைந்திருக்கும் புகுந்துட் குளிருமுடல்தோகும்
சிரையோர்புவியிற் சிவனடியார் சிந்தைகலங்குமவர் மனைவிட்
டுரையோர் விழலிவனத் துழன்றுதிரியுமவர் போலுழலையுண்டே.

## 8, சிலேற்பன பித்தம்.

செப்பாரும் முலைமடவீர் சேற்பபித்தசுரத்தின் செய்கைகே
[ளாய்
வெப்பாகி வேகமுமாய் வெந்தூறுந்நாவு வெழுத்திருக்கும்



துப்பாதடைத் திருமும் தொண்டைகட்டி நாக்கசக்கும்
மெய்பார் சடைமுடியான் உமையாட் குரைத்தமொழியாமே.

## 9. சிலேற்பன வாதசுரம்

ஊதைக் கபசுரந்தான் செய்குணத்தை ஓதிடுவேன்
மோதித் தலைவலிக்கும் மோகித்துடன் விரைந்து
காதித்திருமல் கரம்பாதம் மெய் குளிர்தல்
பேதித்திடுங் குணங்கள் பேணீ அறிந்துகொள்ளே.

10 ஆவது வாதஅத்திசுரம்
11. ,, வாதகணசுரம்
12 ,, வாதநாளை மாறற்சுரம்
13. ,, மந்தசுரம்
14 ,, வாதசோகசுரம்

## 15. சன்னிபாத சுரம்.

சிரமிடிக்கும் பற்கடிக்கும் சீறுமிருமும் வாந்திக்கும்
கரமுங்காலு மெடுத்தடிக்கும் கண்ணுமடையாதே வெதுப்
உரமுந்துடிக்கும் நாவரழும் ஓயாச்சுரமும் பிரமையுமாய் [பும்
சரீரங்கடுங்கும் தழற்சியுமாம் சந்நிவாத சுரமிதுவே.

## 15. ஷை சன்னிபாத சுரம். (வேறு)

உடல்சேர் சன்னிவாத சுரத்துண்டாங்குணத்தை உரைத்திடுகில்
பிடர்நோம் தலைநோம் அறிவுகெடும் பிதற்றுமிரும லிளைப்புண்டாம்
அடரும்புண்போலுடல் நோவாம் தண்ணீர்த்தாகம் மிகவுண்டாம்
விடமேபோல் வாய்கைப்பாகும் மிகவும்வெதுப்ப முழலையுண்டே.

உண்டேகழிச்சல் நாவரட்சி ஓதுமிதற்கு வாய்நாசி
விண்டேபுண்ணும் நாக்கறுக்கும் மிகவும்மூச்சுத் தொய்வுண்டாம்
தண்டேன்மொழியாய் சக்தியுண்டாம் தள்ளிப்பரிகாரஞ் செய்யில்
கண்டேவணங்கும் கணபதி கண்களிக்கப் பூகனிந்திடுமே.

16. ஆவது சீதவாத சுரம் (சன்னி)
17. ,, குருதிவாத சுரம்
18. ,, பித்தஅதிசார சுரம்
19. ,, இரத்ததாக சுரம்
20. ,, பித்தவிஷ சுரம்

21 ஆவது பித்தஅதி சுரம்
22. ,, பித்தமாறற் சுரம்
23. ,, பித்தஅசீரண சுரம்
24. ,, பித்தஉதிரச் சுரம்
25. ,, பித்தசீத சுரம்
26 ,, பித்தசன்னி சுரம்
27. ,, மந்தபித்த சுரம்

## 28. இரத்த பித்த சுரம்.

நெஞ்சின் மேலுடம்பு காய்ந்துநீறிடும் நீர்சிவக்கும்
பஞ்சதில் முகமுங்கண்ணும் பாண்டமும் மஞ்சல்போலாம்
எஞ்சவேரத்தம மென்மேலு வாந்தியுமிளைப்பு முண்டாம்
பஞ்சடிநல்லாய் ரத்தபித்தத்தின் சுரமாம் பாரே.

29. பித்தமேக சுரம் 30 இரத்தகணபித்த சுரம்
31. பித்தபிரதாப சுரம் 32. விரணபித்த சுரம்
33. இரத்தப்பிரமேக சுரம் 34. கபாலப்பித்த சுரம்
35. தாக சுரம் 36. மந்த சுரம்

## 37. விஷசுரம்.

அவஞ்சேர் விஷசுரத்தின் அடைவைக்கேளுங் கைகாயும்
நலஞ்சேருங் கால்காயாது நாவுவறளும் உவற்றுவிக்கும்
வந்தபேரைக் கட்டியழும் ஐயேபிழையே யென்றலறும்
வருந்தச்சந்து மொழிகழறும் வந்துகாயும் மாந்தமாந்த.

அமரும்விட்டு விட்டெழும் அதிகமாகவே வெதுப்பும்
தமரும்விசன முறமயங்கும் தானேதெளியக் குத்தகலும்
பொருந்தும்வெப்பம் கடுக்காய்த்தோல் சீந்தில்புடோலும் வேற்கொம்பு
திருந்துமருந் தோடேநில வேம்புஇங்கிவை ஒவ்வொன்றேருகளஞ்சு.

## 38. இரத்தசுரம்.

பார்மேலிரத்த சுரந்தன்னை பகரக்கேளுந் தலைசுழற்றும்
சீர்வாய்கைக்கும் பற்கடிக்கும் சிவக்கும்விழியுஞ் சிறுநீரும்
நீர்தாளமூக்கில் வருமூறி நிமிர்க்குஞ் சரீரந்தானுழற்றும்
கார்சேர்கண்ணிற் பீளையுண்டாம கலையைமறைக்கும் வேர்
39. அந்திசுரம 40. ஆமசுரம [வெழுமே.



## 41. பூதசுரம்.

பூதசுரத்தின் குணங்கேளாய் புலம்புங் கோபித்தேபேசும்
சீதத்துடனே சுரங்காயும் சீறும்முகமும் உடல்கனக்கும்
பேதப்படவே வார்த்தையுமாம் பெருமூச்சார்தல் தலைநடுக்
ஊமைதமிருந்து சிரமிடிக்கும உணர்வுமின்றி மயங்கிடுமே. [கல்

42 பிரேதசுரம் 43 அதிமாங்கிஷஇரத்த சுரம்
44 விரணவாத சுரம் 45 சலசயசுரம்
46 சேற்பமாங்கிஷ உதிரசுரம் 47 சேற்பசலகண சுரம்
48 சேற்பநீர்த் தோஷசுரம் 49 சிலந்திகாரமாஞ் சுரம்
50 சேற்பஅதிசார சுரம் 51 சேற்பபிறமேக சுரம்
52 சேற்பசன்னி சுரம் 53 மாங்கிஷசய சுரம்
54 மச்சிய சுரம் 55 நிசிசுரம்
56 சலப்பிரதாப சுரம் 57 சேற்பசலகண சுரம்
58 சேற்பசோக சுரம் 59 சேற்பதொந்தசோகசுரம்
60 திறிவிதமாறற் சுரம் 61 இரத்தசய சுரம்
62 அசீரண சுரம 63 இரத்தஅதிசார சுரம்

## 64. நாலா முறைச்சுரம்.

சுரம்வரும் நடுங்குங்கூதல் சுறுக்குடன் குலைப்பன்வெப்பு
சிரம்வநன்டிருக்கும் குத்துண்டாய் தியங்கிடும் மயங்கிவேற்கும்
உரம்பெறத் தாகம்மிஞ்சி உடல்முட்டாய் வலித்துவாங்கும்
திறமபெற எரியும்மேனி தீயென அழறுண்டாமே.

உண்டிடுமன்னஞ் செல்லா உள்மூச்சுத் தொய்வுண்டாகும்
கண்டிடுங்கணம் போறகாயும் கடினமாயிரும லுண்டாம்
மிண்டிடும் வயிறுகைகால் வீங்கிடும் நாலுமாதம
கொண்டிடு மெட்டுமாதம் குறித்தனர் வருடமொன்றே.

ஒன்றிடுந் நாலுநாளைச் சுரமது கடினமாமே
நின்றிடுந் நாலுநாளைக் கொருதினந் நெருபபாய்க்காயும
கொளறிடா நீழநிற்கும் குறித்ததேவதையு முண்டாம்
சென்றிடுந் நாலுநாளைச் சுரமிது செப்பினரே.

### அதிசார சுரம்.

வாட்டதி சாரக்காய்ச்சல் வன்குணமும் மருந்தும்
காட்டுவன்கழிச்சல் நீங்காக் காச்சலோடிருமல் வேர்வை

மூட்டுநா வரட்சியோடு முதிர்ந்திடுங் கையில்நாடி
சேட்டுமமிரட்டிப் பித்தம் ஒன்றதாய்ச் சேர்ந்துநிற்கும்.

## முழுத்தசுரம்.

பார்மேல் முழுத்தசுரந்தன்னைப் பகரக்கேளாய் தலைசுழற்றும்
சீர்வாய்கைக்கும் பற்கடிக்கும் சிவக்கும்விழியுஞ் சிறுநீரும்
நீர்தான் மூக்கில்வருமூறி நிமிர்க்குஞ் சரீரமுள்ளுளற்றும்
கார்சேர்கண்ணிற் பீளை உண்டாம் கலையைமறைக்கும் வேர்வெழுமே

வேர்க்கும்முறுக்கும் வயிறழியும் வீணைபகருந் தலைநோகும்
பார்க்கும் வெறிபோலேமயக்கும் பகர்நாப்புண்ணும் சிவாதமுண்டாம்
ஏர்க்கும்இளநீர் உலையிற்சேர்த்து ஏழுநாளளவு மனைதஉண்ணே.

## நாடிப் பரீட்சை.

தடையிலா தூன்றிப்பாரு தற்சனி விரலில்வாதம்
அடையு மத்திமையிற் பித்தமனுதிகை தன்னிற்சேடம்
வடுவிலா நடையதாகும் மைந்தற்கு வலக்கைபாரு
இடுகிடை அரிவைமார்க்கு இடக்கையில் நாடிபாரே.

வாதம்வைகறையிற் தோன்றும் மத்தியானத்திற் பித்தம்
சீதமார் மாலைதன்னிற் சேடமே பிரவேசிக்கும
ஓதுநன் மூறையதாகும் உறுமுறைபிறழ்ந்து தோன்றில்
காதுநோய் சேர்ந்ததென்னக் கருதியே அறிந்துகொள்ளே.

புரந்தனில் மூவர்வீடும் புகலுதும் பாதந்தொட்டு
வரம்பெறு முந்திமட்டும் வாதத்தினிருக் கைமேலே
பொருந்திய மார்புமட்டும் பித்தத்தினிருக்கை அப்பால்
சிரமுடிவாக எங்கும்சேட்டுமத் திருக்கை யாமே.

மண்ணிற் கொடியதாக வளர்சன்னி சுரமேயாதி
திண்ணமாய நோய்கள்தம்மைச் செப்புங் கைநாடியாதி
பண்ணிடுங் குணங்கள்தம்மாற் பார்த்தறிவதி லும்பார்க்க
நண்ணிடு மரியநாவின் குணத்தினு லறிதல்நன்றே.

நாவுள்ளே பலாமுட்போல நண்ணுநாமற் றிடத்தில்
தாவில் பாலாடை போலச்சார்ந்து செந்நிறத்தினோடு
மேவிடிற் கருமைபீதம் விளங்கிடு மதனுக்கேற்ற
ஆய்வுலார் மருந்தால்மாறும் அக்குறி விளப்பக்கேளே.



நாக்கினில் நுனிசிவப்பு நண்ணியே புள்ளிதோன்றும்
தாக்குநாள் வரையிற்றானே தான்சிவந்திருக்கும் நாக்கு
தேக்குநல் வைத்தியத்தைத் திருத்தமாய்க் கற்றமேலோர்
ஊக்குமிக்குறிகள் தம்மைஉறுதியாய்ப் பார்ப்பர் நாளும்.

## சுரரோகத்தின் சிகிச்சைக் கிரமம்.

### முச்சுரக் குடிநீர்.

வாதத்திற் பித்தந்தன்னில் வளர்தரு கபத்திலுற்ற
தீதுறுசுரங்கள் தீரச் சீரகமிரண்டு சுக்கு
மேதகு கொத்தமல்லி வெந்தய மீரரத்தை
சீதமார் கடுக்காயெட்டும் சேரொவ்வொன் றுருகளஞ்சாய்.

இடித்ததைத் தூளதாக்கி யின்புதுப்பாண்டத் திட்டு
வடித்தநீர்படி நான்கிட்டு வற்றவோர படியாய்க்காய்ச்சி
வடித்தெவ்வோர் சிறங்கைநீர்தான் வளமுட நந்திசந்தி
கொடுத்திட மூன்றுநாளும் குலைந்திடுஞ் சுரங்களெல்லாம்.

### வாதசுரத்தின் குணம்.

வாதசுரத்தின் குணங்கேளீர் மலநீர்க்கட்டும் தேகமுடல்
பாதம்பாணி பொருத்துக்கள் நோகுஞ்சோம்புந் தினவுண்
[டாம்
வேலைதயாக உடல்பொங்கும் மிகவேதுத்துமுடல் புரட்டும்
சீதமுண்டாய் உடல்பதறும் இத்திமறுக்கும் நாப்புளிக்கும்

### இதற்குக் குடிநீர்

வாதமாஞ் சுரத்துக்குச் செய்மருந்து நற்கராம்புநோயை
காதுமுக் கடுகினோடு கருஞ்சீருங் கொத்தமல்லி
ஓதுமிவ் வாறுந்தானே யோரள வுறத்தூளாக்கி
ஓதநீர்படி நான்கிட்டுச் செப்புமோர் படியாய்க்காச்சேன்.

காச்சியே மூன்றுநாளுங் களவின்றி அந்திசந்தி
பாச்சுவாய் சிறங்கையாக பகர்வாத சுரந்தான்தீரும்
இச்சுரம் நீங்காதாகில் செப்பிய சரக்கினோடு
கூச்சமில் சுத்திசெய்த கொடிவேலிவேரும் பின்னர்.

விட்டிணு கிராந்திவேரும் விளம்புமோ ரளவாய்க்கூட்டி
திட்டமாய்க் காய்ச்சி முன்போல்செப்பிய மூன்றுநாளும்
நட்டமில் லாறுநேர முண்டிடநாடா தோடும்
கெட்டிடா தாகிலூட்டு மருந்தினைக் கிழற்றக்கேளே.

நல்ல சாதிலிங்கக் கட்டுநவில் சறுவாங்க மாத்திரை
சொல்லுமிவ் விரண்டிலொன்றைதோற்றுமுற்குடிநீர்தன்னில்
செவ்வனேஉரைத்தருந்தத் தீர்ந்திடு மிவையேயல்லால்
எல்லையில் வாதக்காய்ச்சற் கிசைந்தநன் மருந்துகேளே.

தொந்த மாமிந்தவாத சுரத்தினற் தோஷஞ்சன்னி
வந்திடில் முன்னுரைத்த மருந்து வாதரிநோயை
சிந்தருணோ தயப்பேர் சூரண மாத்திரையாதி
நந்தலிலனு பானத்தி லருந்திட நாடாதோடும்.

## பித்த சுரத்தின் குணம்.

பித்தசுரத்தின் குணங்கேளீர் பிதற்றிப்பேசுங் கிறுகிறுக்கும்
சத்திதலைக்குத் துண்டாகும் சாதம்வெறுக்கும் தாகமுறும்
மெத்தவற்றி வெளுவெளுத்து விரணத்தோடு மெய்நடுங்
புத்திபோம் வாய்நீரூறும் பொறைபோம் வாய்கைப்பாமே.(கும்

## சிகிச்சை.

கரியசீரகம் வேற்கொம்பு கடுக்காய் முப்பிணிதீர்தேவர்
தருசதகுபபை நற்சீர் சரிவரஎடுத் திடித்து
புரிபுன லெட்டொன்ருக்கி புகட்டினற் பித்தக்காய்ச்சல்
வெருவியே யோடுங்நிற்கில் வேர்வகை கூட்டிக்காய்ச்சே

சீந்தில் பேய்ப்புடலை சித்தமட்டியும் பேரமட்டி
காந்திநன்னாரி எல்லாங் கருதி ஓரளவதாக
ஆய்ந்த நற்புதிய பாண்டத்திட்டதை அந்திசந்தி
மாந்தம்போம் போகாதாகில் மன்னுமிக் குடிநீர்தன்னில்.

பூரணசந்திராதி பொருவில் சந்திரோ தயத்தோ
பேர்காண்டா அவிள்தமென்ன இயம்புமாத்திரைகள் தன்னில்
சார்வுறு மொன்றையூட்டத் தணிந்திடும் பித்தக்காய்ச்சல்
பாரிய சடைமுடித்த படிகர்செய் முறையிதாமே.



## சேடசுரத்தின் குணம்.

சேடசுரத்தின் குணங்கேளீர் சிரஞ்நெஞ்சுடனே விலாநோகும்
வாடும்சோம்பு மிருமலுண்டாம் மன்னும்வியர்வை நாவினிப்பாம்
கூட்டிக்குறைத்து வருங்குணங்கள் கூட்டிக்குறைத்துச்செய்மருந்து
நாட்டினற்கு முகக்குறிகள் நாடித்திறந்தோ டினிதிருந்தே.

## சிகிச்சைக் கிரமம்.

சேற்பன சுரத்துக்கேற்ற குடிநீர்கேள் தேவதாரு
வேற்றிலாக் கடுக்காய்சுக்கு விளம்புமீரத்தை யோடு
தேற்றமாய்க் கருமையுள்ள சீரகம்வகை ஒவ்வொன்று
ஏற்றொரு களஞ்செடுத்தே இடித்ததைத் தூளதாக்கி.

ஆக்குநீர் படிநான்கிட்டே யரிதொரு படியதாக்கி
தாக்குவாய் சிறங்கைநீர்தான் தவறின்றி அந்திசந்தி
நீக்கமிம் மூன்றுநாளும் சென்றபின் நீங்காதாகில்
மாக்கிளர் முன்புசொன்ன சரக்குடன் வட்டுவேரே.

இத்துட னாடாதோடை யிலாமிச்சு இனியகண்டங்
கத்தரி சிறுகாஞ்சொன்றி தூதளைகாட்டும் வேர்கேள்
ஒத்திடு மளவெடுத்தே உறுதூளாய் நறுக்கிமுன்போல்
சித்தமாய்க் காய்ச்சிஉண்ணத் தீர்ந்திடாதெனிலின் நீரில்.

சந்திரோ தயமே கோரோசனையின் மாத்திரை
அந்தமில் லாதகாண்டா அவுடத மற்றுமேற்ற
நந்தலில் குளிகையூட்ட கழுவிடுஞ் சேடக்காய்ச்சல்
இந்தவாறு ரைத்தாரம்மா தெனமலையிருக்கு மேலோன்.

சொல்லுமிப் பித்தசேட சுரங்களிற் தோஷங்கண்டால்
வல்லதா மிருதசஞ்சீவி கோரோசனையின் மாத்திரை
நல்லதாமிரண்டி லொன்றை நவில்தோஷஞ் சன்னிதன்னை
வெல்லுநல்லனு பானத்தில் கொடுத்திட மீழுமன்றே.

## அதிசார சுரத்தின் குணமும் மருந்தும்.

வாட்டதி சாரக்காய்ச்சல் வன்குணமும் மருந்தும்
காட்டுவன்கழிச்சல் நீங்காக் காய்ச்சலோடிருமல் வேர்வை
மூட்டிடு நாவரட்சி முதிர்ந்திடு வகையினடி
சேட்டும மிரட்டிப்பித்த மொன்றுதாய்ச் சேர்ந்துநிற்கும்.

அடிநாவிற் பலாமுட்போ மன்றிமற்றிடம் பாலாடை
வடிவதாமதற்குச் சுக்கு மன்னிலவங்கப் பட்டை
விடையமே தேவதாரு மிகுகுரு சாணிதேற்றா
படுவிரை அசமதாகம் பகர்சிறுதேக்கிவ் வெட்டும்.

இடைசம னாயெடுத்தே இடித்து வெவ்வேறதாக
வடிவுறு மிளவறுப்பாய் வறுத்துச்சேர்த்தொன்றாய்நான்கு
படிசலம் விட்டுக்காய்ச்சி பகரொரு படியாய்வற்ற
இடமுடனிறுத்த நீரிற்றேன் கோரோசனையின் தூளும்.

சிறுகவே விட்டருந்தத் தீர்ந்திடும் தீராதாகில்
மறுவில் கோரைக்கிழங்கு மாதுளம்பழத் தோல்மாவின்
வெளியுறு பழப்பருப்பு மேலத்திப் பட்டையோடு
அறையிரு மட்டிவேரோடா வரைவேரின் பட்டை.

விட்டுஞு கிராந்தியெல்லாம் மிகாமலோ ரளவாய்க்கூட்டி
இட்டுமுற் சரக்கினோடு ஈரிருபடி நீர்விட்டே
மட்டொரு படியாய் வற்றிவந்திட வழுத்தக்கேளே
விட்டொரு சிறங்கைவீதம் விரைந்தெடு மாசில்லாமல்.

மாசிலாப் பூரணசந்திராதி மாத்திரையாதல் நற்கோரோ
சனையின்மாத்திரையே யாதல் உரைகாண்டா அவின்தமா
ஓசைமிக்குலவு சந்திரோதய மாதலொன் றுரைத்து [தல்
கூசிடாதந்தி சந்திகொடுத்திட வொழியு மன்றே.

### சுரத்தில் வீங்கினால்.

மண்டிய சுரத்தில்வீங்கி வாயுவும் மலமுங்கட்டில்
கண்டதிற்பலி மரீசம்கடுகு ரோகணி கடுக்காய்
எண்டருஞ் சிற்றரத்தையே கருஞ் சீரகத்தோ
டண்டுநீர்முளரி வீளியருநில பாகல் தானும்

சாற்றுநா யுருவிவேரும் சரியதா யெடுத்திடித்து
வேற்றுமையில் லாமுச்சேர் வெள்ளாட்டுச் சலத்தைவிட்டு
ஏற்றநற் பாண்டத்திட்டே இயம்பொரு படியாய்க்காய்ச்சி
போற்றியே வடித்தநீரில் பொரிகாரம் பொரித்ததூளும்.



மேற்பொடியாக விட்டேமேலு நற்சறுவாங்கந் நோய்
ஆற்றுவாதாரிளன்ன அறையு மாத்திரை இரண்டில்
ஏற்றமாத்திரை கொடுக்கில் ஏகிடும் வீக்கமெல்லாம்
மாற்படு சுரமேவாயு மலசலந் தானும்போமே.

### மந்தசுரத்தின் குணம்.

மந்தசுரத்தின் குணந்தாகம் மருவும்பொருமல் தலைக்குத்து
பந்தஞ்சோம்பர் முழங்கால் கூர்பாதத்தளவுஞ் சூடின்றி
எந்தவிடமுஞ் சூடுண்டாம் இதற்குமருந்து திரிகடுகோ
டந்தக்கடுக்காயுடன் கடுஞ்சீரகமே கடுகு ரோகணியும்

இஞ்சிஅரத்தை சாறணை வேரிவைகள் சமனாய்நறுக்கியதில்
மிஞ்சாதளவாய்ப் புனல்விட்டுவேக வெட்டொன்றாய் காய்ச்சி
அஞ்சாதருந்த வெருண்டோடும் அகலாதேலக் குடிநீரில்
கொஞ்சமருணோதயக்குளிகை கொடுக்கவகலுங் கொடுஞ்
[சுரமே.

### பித்த சிலேற்பன சுரம்,

பூவின்மேல் கொடியதாகப் புகல்பித்த சேடமென்று
மேவியசுரத்தின் தன்மை விளங்கிடிற் சேடமோர்பங்
கோவிலாப் பித்தந்தானு மோரிரண்டான பங்காய்
நாவினிலடியிடத்தில் நண்ணிடும் பலாமுட்போல.

நாவினில் மற்றமற்ற விடந்தோறும் நல்லபாலியின்
மேவிய ஆடைபோல விளங்கிடும் வேர்வைகாணும்
ஓய்வில் நாவரட்சிதாகம் உழலையே தலைக்குத்துண்டாம்
தாவுநாவதிலரோசி சார்குண மின்னு முண்டே.

இடையின்றி மெதுவாய்க் காய்ச்சலிருந்திடு மிருமலுண்டாம்
தடையின்றிக் காதிரைச்சல் தங்கிடுஞ் சரீரதாக்கம்
அடையுமே மருந்திதற்கு வெட்பாலை அரிசிசுக்கு
நடைபெறு மரத்தைரண்டு நவிலு சீரகமிரண்டு.

தேவர்கள் தாருவோடு சிறுதேக்குக் கறுவாவெல்லாம்
மேல்வோரளவாய்க் கொண்டு மிருதுவாய் நறுக்கிப்பின்னர்

தாவிலாப்புதுப் பாண்டத்தில் சலமெட்டுப்படி விட்டப்பால்
ஆவலாய்க் காய்ச்சிநேரம் ஆறொரு மூன்றுநாளும்.

குடித்திட மாறுவிட்டால் கோரையின் கிழங்குநோயை
அடக்கிய விலாமிச்சம்வேர் அரியநன் மட்டிரண்டு
கிடைக்குநெற் பொரியுநன்மை கிளர்ந்தபேப்பு டோலின்வே
[ரும்
அடுத்தியாய் முன்னர்சொன்ன அருஞ்சரக் கவைகள் தாமும்

கூட்டிஎண் படிநீர்விட்டு கூறுநாலொன்றாய்க் காய்ச்சி
மாட்டினலன் நோய்மாறும் மாறாதே வருந்தவத்தை
கூட்டிய முனிவர் யாருந்நன்றெனச் சொல்லுகின்ற
கோட்டமில் மருந்துதன்னைக் கொடுத்திட நன்றதாமே.

அந்நல் மருந்து சந்திராதி பூரணசந்திராதி
நந்தில்காண்டா அவிள்தம் நவில்கோரோசனை என்றென்
[னும்
இந்தமாத்திரைகள் நன்றாமின்னு நோய்க் கேற்றமற்றும்
தந்திடப் போகுமிதே தவறிலா முறையதாமே.

### சுரவகை எதற்கும்.

சுரவகை எதற்கும் மேற்படி மருந்துகளேயன்றி
சின்னச்சிவப்பு பெரியசிவப்புப் புன்னை வேர்
ஏலாதி வகை தங்கஏலாதி மகாஏலாதி
இராசசேகர வடிவு குருக்கள் பூபதிசந்தனாதி.

மிருத்தியாதி வகைபோன்றவை மிகவுஞ் சிறந்தவை. இவைகளிற் சில வருமாறு:-

### குருக்கள் குளிகை.

மாயாக்காய், இருசீரகம், திற்பலி, அக்கரா, சுக்கு, பூடு, காந்தம், சீனக்காரம், மதுரம், இந்துப்பு, பொரிகாரம், காவிமண், சிறுதேக்கு, கராம்பு வசுவாசி, சாதிக்காய், அரிதாரம், காயம், கோட்டம், துத்தம், துரிசு, பொன்னரிதாரம், முருங்கைக்கொட்டை, கடுகு, ரோகணி, வெங்காரம், கார்போகி,



வெள்ளைபாஷாணம், நாவிசந்தனம், இவை வகை களங்க லிங்கம், செஞ்சந்தனம், வகை கள. 3. தோடம்பழரசம் முலைப்பால் விட்டரைத்து மிளகளவுருட்டி வேளைக்கு 2, 3 குளிகை வீதம்; சுரத்துக்கு இஞ்சிச்சாறு கற்கண்டு சுவாதத்துக்கு முருங்கைப்பட்டை, இஞ்சி, வெற்றிலை, கற்கண்டு கடுமையாய் வாயுசுரமிருமலிருப்பின் இஞ்சி, உள்ளி, முருங்கைப்பட்டை, வெற்றிலை, சித்தரத்தை ஓமங்கூட்டி அரைத்துப் பிழிந்து கற்கண்டுப் பொடியுங்கூட்டிக் கொடுக்க எவ்வித குத்துக்கொழுவல் காய்ச்சலிருமல் யாவும் தீரும்.

வலிசன்னி இவைகளுக்கு இஞ்சி, உள்ளி, தயிர்வளை, முருங்கைப்பட்டை கூட்டிக் கொடுக்கவும் குணமாகும். மேல் மூச்சுக்கழிச்சல் குத்துக்கு:- முலைப்பால், தோடம்புளி, கரும்பு, தேன், நெய் கூட்டிக்கொடுக்கவும். வயிற்றுவலிக்கு வசம்புத்தண்ணி நெஞ்சடைவாதத்துக்கு:- வெற்றிலைச் சாறு, சன்னிக்கு:- வேப்பெண்ணெய், வேப்பம்பட்டை. பக்கவாயுவுக்கு:- கொடிக்களர்ச்சிப் பருப்பும் பெருங்காயம் அவித்தநீரிலும். அண்டவாயுவுக்கு:- முடிதும்பை, நொச்சி, வசம்பு, உள்ளி சுக்கு கூளாயரைத்துப் பிழிந்தநீரில் கொம்புத்தேன் கூட்டி உண்ணக் குணமதாகும். சேட்டுமவாயுவுக்கு:- உள்ளிச்சாறு. நாலாமுறைச் சுரத்துக்கு:- இஞ்சி, மல்லி, திடீர் வயிற்றுப் பொருமலுக்கு:- மிளகவித்தநீர். காதுக்குத்துக்கு:- எருக்கலமிலை வாட்டிப்பிழிந்த நீரிற் குளிகை இரண்டுரைத்துக் காதில்விடத் தீரும்.

### தோஷரத்னதி.

அக்கரா காரந்நாவி அரிதாரஞ் சாதிலிங்கம்
சுக்குடன் கெந்தகம்தான் திற்பலி மிளகுகூதம்
ஒக்கமேனசிலை இவைதான் ஓரொரு களஞ்சதாக
இக்கண மிஞ்சிச்சாற்றில் இருசாமமரைத்த பின்பு.

எடுத்ததை இளவறுப்பாய் வறுத்துப்பின் பழச்சாற்றுலே
ஆட்டுவா யிரண்டுசாமம் மிளகளவிரண்டு உண்டை
மிக்கதோர் நோய்கட்கெல்லாம் வாசமாந்திரி கடுகுஅரைத்த
வளராடா தோடை சீதுளாயிவை தான்வேடிட் [இஞ்சி
டவித்துப் பிழிந்து கொடுக்கவும்

திரிகடு கிஞ்சிச்சாற்றில் மாத்திரை மூன்றுநாளும்
வகைபட இடுவீராகில் நாசமாஞ் சன்னிதோஷம்
நால்வகைச் சுரமும்தீரும் தோஷரத்ஞதி என்று
சொல்லுவார் வைய மீதே.

### புன்னைவேர் குளிகை.

காந்தஞ் சுக்குமிளகுஉள்ளி கருதுங் காயந்திற்பலியும்
ஏந்தும் முத்தற்காகிரதம் இசையுங்கல்நார் சந்தணமும்
போந்தோர் புகழுமிந்துப்பு பொற்பாங்கோட்டம் கல்மதமும்
மாந்த கோரோசனை இலிங்கம்மருவுங் குங்குமப்பூச்சேரேன்.

சேர்த்தோர் நிறையாய்த் தானெடுத்து செய்யபுன்னை வேர்ச்சாறு
வார்த்தே இரண்டுசாமமுற வாகாயரைத்து மிளகளவாய்
பாத்தேசுக்கு முலைப்பால் தேன்பரிந்தே குளிகை இடுவீரேல்
போர்ந்தேகிடந்த சிலேற்பனமும் போகும்சிவாதம் பின்
[னிடுமே.

பின்னிட்டோடு முட்குத்து பெருத்தஇருமல் தெண்டலும்
[போம்
மன்னும்பித்த சேற்பனத்தில் வந்தசுரமும் மாண்டுவிடும்
துன்னும் பெரியகோளையுடன் தொய்வுமுட்டு மூச்சகலும்
மின்னும்கொடிய நேரிழையாய் மிக்கபுன்னைவேர்க் குளிகை
யிதுவே.



### குத்துக் குளிகை.
### (பெரிய புன்னை வேர்)

ஆதிபரனுமைக் குரைக்க கும்பமுனி
அன்பாகவே கேட்டு இன்பமுறவே
ஓதுகிறேன் குத்துக் குளிகைதன்னை
உலகத்து மானிடற்கு உறுதுயரால்
காந்தமொடு திற்பலியும் வெண்காரம்
கனத்தமிளகுடனே முத்தற் காசு
வீசுமணமுடைய நல்ல பெருங்காயம்
மிகுத்த இரதங்கல்நார் வகுத்தெடுத்தே

கோலமுறு சந்தனமும் இந்துப்பு
சூலவுறு கோட்டம் கல்மதம்பெரிய
ஆனதோர் சரக்கைஎல்லாம் புன்னைவேர்சாற்றில்
அரைத்துப் பருத்திவிரை அளவுருட்டேன்
உருட்டிடுங் குளிகைதன்னை ஒன்றெடுத்து
உபாயமதாய் மேதிச்சிமிளில் வைத்து
வைத்திடுங் குளிகைதன்னை மூன்றெடுத்து
மங்கையர் முலைப்பால் தேன் இஞ்சிச்சாற்றில்

கொடுத்திடத் தீரும் நோய்தன்னை
கூறுகின்றே னிந்தக் குவலயத்தில்
குத்திருமல் சிவாதமுடன் பிறவீச்சு
கொடிய உட்குத்துவகை உணர்வரிய
ஆகமிடுங் கொழுவல்தெண்டல் தொய்விளைப்பு
அடர்ந்து படர்ந்து நாவறண்டதெல்லாம்
தேகமதிலே எழுந்த கோளையும்
தீருமென்றோதினர் சிவமுனிவர்.

### சின்னச் சிவப்பு.

பொன்பொலி கோட்டன் நாவிபொருந்து சாதிலிங்கம்சுக்கு
மின்பொலி சித்தரத்தை விளங்கு திற்பலிகராம்பு

தென்பொலி ஓமம் நல்லசீரகம் வசம்பினேடு
நன்பொரி காரந்தானும் நயந்தொரு நிறையிற்கூட்டே.

கூட்டியே இஞ்சிச்சாற்றூற் குணம்பெற அரைத்துளுந்தின்
நீட்டிய பருமனுக இலங்கவேயுருட்டி நெஞ்சின்
பூட்டியே யடைவதாகப் பொருந்து வெற்றிலையிலுள்ள
தீட்டிய இஞ்சிச்சாற்றிற் சிறந்துண்ணத் தீருந்தானே.

தீருமே இருமல்குத்து சேர்த்திடுங் கொழுவல்நோவும்
சேருமேல் மூச்சுக்காய்ச்சல்திகழ் சுரஞ்சன்னி பித்தம்
ஆறுமே சொறிவுவாத கரப்பனுங் கெற்பவாய்வும்
ஆறுமே கெற்பக்கிரந்தி பாலகர்கிறுகை போமே.

போகுமே பயங்கரங்கள் பொலிசூலை மாதராகில்
வாகுசேர் திங்களைந்தி வருந்தும் நீர்க்கடுப்புமாறும்
மாகொடு யோனிச்சூலை வருத்திடு யோனிக்குத்து
ஓகைநீரழிவு தீருமுண்மை யென்றுரைத்தார் மேலோர்.

## நோய்களின் ஒடுக்கம்.

1. சுரம்:- 64 அறுபத்திநாலுவகை
2. தோஷம்:- சுரம் வாயுவும் கூடியது
3. திரிதோஷம்:- சுரம், வாயு, கபம் ,,
4. மகாதோஷம்:- வாயு, கபம், குளிர் ,,
5. சன்னி.- சளியோடுஉட்குளிர் ,,
6. மகாசன்னி:- ஆங்கிலத்தில் கோமா என்பது குளிர், கபம், வாயுவும் பிரஞ்ஞை இன்மை அதாவது அறிவுகேடு இவைகளோடு ,,
7. சீதாங்கசன்னி:- அடங்கலுங்குளிர் ,,
8. கண்டகுச்சம்:- கண்டவீக்கத்தோடு ,,
9. பக்கநேத்திரம்:- கண்கள் பக்கம்சாய்தல் ,,



### காய்ச்சல் விடும் நாடி,

சென்றுதான் பிடித்த கைக்குள்
சீதமாய்ப் பித்தம் நிற்கில்
அன்று போயடுத்த நாளில்
அகன்றிடுஞ் சுரங்க ளென்க.

## மண்ணீரல். (Spleen)

இது ஆமாசயத்தின் இடதுபக்கத்தில் கோழிமுட்டை வடிவமான ஓர் ஆசவம். நிறம் கருஞ்சிவப்பு. இது 5 அங்குல நீளமும் 3 அங்குல அகலமும் ஒன்றரை அங்குலத் தடிப்பும் 6 முதல் 8 அவுன்சு நிறையுமுடையது. இதைச் சூடடக்கி என்றுஞ் சொல்லப்படுகிறது தேகத்துக்கு நாளாந்த தேவைக்கு மிஞ்சியசூட்டை ஏற்றுவைத்துக் கொள்வதால் மேற்படி பெயரை அடைகிறது. காய்ச்சற்கட்டி அது பெருத்துவீங்கிக் காய்ச்சற்கட்டி, வெப்புக்கட்டி, வெப்புப்பாவை முதலாம் பெயர்களைப் பெறுகிறது. இது உண்ட உணவு செமிக்குமுன் ஸ்நானஞ் செய்வதாலும் இராக்காய்ச்சல்களை சம்பந்தமாகவும் தாபிதங்கொண்டு பெருத்து வீங்குவதுண்டு. இதைச் செஞ்ஜீவ அணுக்களின் சுடலைஎன்றும் சொல்லப்படுகிறது. இது காரணமாய் இரத்தம்கெட்டு சுயநிறம் மாறிக் கண், நாக்கு, தேகம் முதலியன வெளுத்து மூச்சுமுட்டு, இளைப்புக்களைப்பு அசீரணமிவைகளுமேற்பட்டு வயிறுபருத்து விம்மிமுட்டி காய்ச்சலுமுண்டாய்வருந்துவர். நினைத்தநேரம் ஒழுங்கற்ற காய்ச்சலுமேற்பட்டு வருந்துவர். இங்கேசெஞ்ஜீவ அணுக்கள் அழிக்கப்படுகிறது. வெண்ஜீவ அணுக்கள உற்பத்தியாகிறது.

### இதன் சிகிச்சைக் கிரமம்.

ஷை ரோகிகளுக்கு மூன்று நாட்களுக்கு கொம்மட்டிக்காய் பற்பமோ மேற்படி குளம்போ கொடுத்துச் சுத்தம் செய்து கொண்டு பின் சிறுசந்தனுதிக் குளிகையை 7 நாட் கொடுத்துப் பின் மண்டூரசெந்தூரம், அயசெந்தூரம் முதலியன கொடுத்துவரக் குணமாகும்.

# இரத்த அமுக்கம் (Blood Pressure)

நம் சித்த வைத்தியர்களிடையே பிளட்பிறசரையிட்ட அபிப்பிராய பேதங்களடிபடுவதைக் காண்கிறோம். சிலரிதை இரத்தபித்த மென்றும் சிலர் இரத்தவாத மென்றும் வேறுசிலர் மரணவாதமென்றும் கூறுகின்றனர். இதிலிருந்து இன்றையவரை "பிளட்பிறசர்" எதுவென்று திட்டமாயறியாது தவிக்கின்றனரென்றே கூறவேண்டிய நிற்பந்தமேற்படுகிறது.

இது இப்படி இருக்க பொதுமக்களிடையேயும் ஓர் தப்பபிப்பிராயம் மண்டியிருப்பதையுங் காண்கிறோம். தமிழ் வைத்தியருக்குப் பிளட்பிறசரென்ற வருத்தந் தெரியாது. அது இப்போ சமீபகாலத்திற்றான் விஞ்ஞானிகளாற் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது என்ற ஓர் தப்பபிராயமும் அடிபடுகிறது. இதற்கோர் நிவிர்த்தி காணுமுகமாகவே இதை ஓர் கட்டுரையாக எழுதலானேன்.

### பிளட்பிறசரின் பூர்வரூபம்,

கடவுளாற் சிருட்டிக்கப்பட்ட மனிதயந்திரத்தின் இராசகருவிகளான இரத்தாசயம், சுவாசாசயம் என்னுமிரு உறுப்புகளையுமனுசரித்தே பிளட்பிறசர் உண்டாகிறது. முன்பு கூறியுள்ள இரு உறுப்புகளும் சம்பந்தப்பட்ட ரோகமே பிளட்பிறசர்.

அங்காதி பாதத்திற் கூறியபடி மனிதயந்திரத்திலுள்ள நிலையானரத்தம் 86 பலம் அதாவது முன்பின் 14 றாத்தல் அல்லது 3 போத்தல் அப்படியிருந்தும் இரத்தாசயமோ வென்றால் நாளொன்றுக்கு 18 தொன் ரத்தத்தை சுவாசாயத்துக்கு சுத்திகரிப்பிற்கு அனுப்பிக் கொண்டே இருக்கிறது. அதிற் (*Carbon*) காபனுஞ் சேருமானால் அது எப்படி வேலைநிறுத்தம் செய்யாதிருக்கமுடியும். அது காரணமாகவே அது தன்வேலையைச் சரிவரச் செய்யமுடியாத நிலையேற்படுகிறது.



அப்போ சாதாரண அளவிலுங் குறைந்த அளவு துடிப்பிருக்குமாயின் அதுவே (*Low Blood Pressure*) எனப்படும். கூடுதலாயிருப்பின் (*High Blood Pressure*) "கைபிளட்பிறசர்" எனப்படும். ஆகையால் ரத்தத்திலுள்ள (*Carbon*) அதாவது கரியமலவாயுவின் அதிகரிப்புக் காரணமாகவே பிளட்பிறசர் ஏற்படுகிறது. ஆகையாற் கரியமலவாயுவை நம் தேகத்திலதிகரிக்காது பாதுகாக்க வேண்டும், பாதுகாக்கலாம்.

நாமுண்ணுமுணவுகளில் எண்ணெய் அதாவது கொழுப்புச்சத்தில் நிறையக் காபனிருப்பதை அறிவோம் உப்பு இரத்தநரம்புகளில் அரிப்பையுண்டாக்கி விடுகிறதென்பதுந் தெரிந்ததே! ஆதலாலதற்கு எண்ணெய்ச் சத்து அதிகமில்லாமலும் உப்பைக் குறைத்துங் கொள்வதால் இரத்தத்திலேற்படும் அசுத்தங் குறைவடைகிறது. அதனால் இருத்தாசயத்துக்கும் சுவாசாசயத்துக்கும் சுத்திகரிப்புத் தொழில் குறைந்து இலகுவாகிறது. மேற்படி இரு உறுப்புகளின் வேலையும் குறைய பிறசரின் வேகங்களும் குறைந்து சமனமடையும் அல்லவா?

பிளட்பிறசர் எல்லார்க்கும் உண்டு. அது இன்றேல் நாடித்துடிப்பே நின்றுவிடும் ஆனால் அது கொதிப்பதாகவும் அமுக்கமாகவும் பிறசராகி வாதிக்கும் போதுதான் மேற்படி ரோகமென்று அவதானிக்கப்படுகிறது. இதை என்னரோகமென்று அறியாமையாலே பிரசவஸ்திரீகட்குங் கூட இரத்தோட்ட மதிகரிப்பதைக்கண்டு அதையும் பிறசரென்று கூறி அச்சமுண்டாக்கிவிடுவது விசனிக்கத்தக்கதே. ஆனாலிதையிட்டு நம் சித்த விஞ்ஞானிகள் செய்துள்ள ஆராய்ச்சி மிகவு மெளிதாகவும் தெளிவாகவும் விரிவாகவுமிருப்பதைக் காண்கின்றோம். அவர்களதை இரத்தபித்தம், இரத்தவாதமென இருவகைகளாகப் பிரித்து இரத்தபித்தம் கைபிளட்பிறசர், இரத்தவாதம், லோபிளட்பிறசர் எனவுமவதானித்து அதற்குச் சிகிச்சைகளுங்கூறி இருப்

பதை அவர்கள் செப்பேடுகளின் வாயிலாகக் காணக்கூடிய தாயிருப்பது பெரிதும் பாராட்டற்குரியதே.

### இரத்தபித்தம்—இரத்தவாதம் (Blood Pressure)

| | | |
|---|---|---|
| இரத்தபித்தம்<br>இரத்தக்கொதி | — | கைபிளட்பிறசர்<br>*High Blood Pressure* |
| இரத்தவாதம்<br>இரத்தஅமுக்கம் | — | லோபிளட்பிறசர்<br>*Low Blood Pressure* |

ஆகவே இரத்தக்கொதி இரத்தஅமுக்கமென இருவகைகளுண்டென்பது புலனாகிறதல்லவா?

### பிளட்பிறசர் உண்டாகக் காரணம்.

தூக்கங்கெடுதல், பசிஇருத்தல், போதியளவு உறக்கமில்லாமை, குறித்தநேரத்துக்குச் சாப்பிடாமை, பித்தம் வாதம் அதிகரித்தல், ஈரல் சரிவர வேலை செய்யாமை, அசீரணம், கோபம், பயம் முதலியகாரணங்களாலும் இரத்தக்குறைவு இரத்தத்தின் அமைப்பில் ஏற்படும் மாறுதல் இரத்த அமுக்கத்திலேற்படும் மாறுதல் முதலிய காரணங்களாலேயும் பிளட்பிறசரேற்படுவதாயறியக் கிடக்கிறது.

### இரத்தபித்தம். (High Blood Pressure)

பித்தம்மிஞ்சி பித்தவாயுவுமதிகரித்து இரத்தக்குழாய்களில் துடிப்புமதிகரிப்பதால் ஏற்படுவது. இவ்வதிர்ச்சி காரணமாக குண்டிக்காய்களிலுண்டாகுஞ் சூட்டினல் இரத்தம் லேசாகிவிரிவடைந்து இரத்தஓட்டம் துரிதமடைகிறது. இதுவே கைபிளட்பிறசர்.

இதனற் தலைசுழற்றல், தலைஅம்மல், மயக்கம், தலைவலி, வாந்தி முதலியகுணங்கள் ஏற்படுகின்றன. இது பித்தக்கொதி, ரத்தக்கொதி எனவுங் கூறப்படுகிறது. இதைப் பித்தசாந்திக்குச் செய்யும் சிகிச்சைகளிலேயே நிறுத்திவிடலாம். இது தற்காலிகமானதே! அது ரத்தக்



கொதியானல் இரத்தமாகவே சத்திக்கவுஞ் செய்யும். அது உடனடியாக நிற்பாட்டப்பட வேண்டும்.

### "இன்பூற லிருப்பதை அறியாமல் இரத்தங் கக்கிச் செத்தானும்"

இன்பூறலென்னும்மூலி ஓர் ரத்த தம்பனகாரி இதை அரைத்தோ பிழிந்தோ வேறுமருந்துகளோடு துணைமருந்தாகவோ கொடுப்பதால் இரத்தவாந்தியை நிற்பாட்டிவிடலாம். இதன்சாற்றுடன் பசுப்பாலுஞ் சர்க்கரையுங் கூட்டி 3 தடவைகள் கொடுக்கவும் குணமாகும்.

### இரத்தவாதம். (Low Blood Pressure)

இதுவே இரத்த அமுக்கமென்பது இதிலிரத்தம் வாதகுளிரினற் சிறிது சுருங்கித்தடித்து இரத்தஓட்டஞ் சிறிது கெதிகுறைந்து நாடித்துடிப்புஞ் சிறிது மந்தகதி அடைவதால் இரத்த அமுக்கமேற்படுகிறது. இதில் இரத்தங் கூடுதலாய்த் தடிக்கநேரிட்டால் மாரடைப்பு ரோகமுண்டாகலாம்.

இதன் குணங் குறிகள் வருமாறு:- தலைச்சுழற்றல் மயக்கம், தலைவலி, நெஞ்சுவலி, தூக்கமின்மை சோர்வு நடைதள்ளாடல், வாய், மூக்கு, முதலாம் அவயவங்களிலிருந்தும் இரத்தம்வருதல் முதலிய குணங்களுடன் நாடித்துடிப்பும் மந்தகதி அடைந்து அதில் அமுக்கமுந் தோன்றும். இதுவே பிளட்பிறசரென அறியக்கிடக்கிறது. அதுவன்றி மூளைநரம்புகளில் இரத்தந்தடித்து இரத்தஓட்டம் தடைப்பட்டு நரம்புகளில் வெடிப்பேற்படுமாயின் பாரிசவாதம், முகவாதம், மரணவாதம் முதலியவுமேற்படலாம். இத்துடன் சேடகுளிருஞ்சேர்ந்து திரிதொஷ தொந்தமாகி இரத்தந்தடித்து இரத்தஓட்டமும் தடைப்படுமாயின் சடுதி மரணமுமேற்படலாம்.

# புற்று - வல்மீகம் (Cancer)

இது மனிதவர்க்கத்தைப் பீடித்து வதை செய்யுமோர் கொடியவியாதி. இதற்கு மேற்படி பெயர்களிட்டு வழங்கப் பட்டு வருவதை நாமறிந்துள்ளோம். பஞ்சபூதங்களிற் பிருதுவி என்பது மண். மண்ணிற் சில இடங்களில் கறையான் முதலிய பூச்சிகளின் சேர்க்கையால் புற்றுவளர்வது போல் நம் தேகத்திலுள்ள பிருதுவியிலும் சில வெண்ஜீவ அணுக்களின் சேர்க்கையால் புற்று ஏற்படுகிறது.

**புற்று நோயெனக் காரணம்:** இது ஒரு காரண இடு குறிப்பெயரே தான். ஏனெனில் மேற்படி விரணங்கள் புற்றுப் போல் வளர்வதாலும் நிலக்கறையான் புற்றும்பழ அறைகள்போலும் உட்புகுந்து அரித்துக்கொண்டு போவதாலும் அயற்பக்கங்கள் நெகிழ்ந்து புற்றுபோற் பல துவாரங்களை யுடையதாதலாலும் இடிந்திடிந்து காணப்படுவதாலும் சிகிச்சையின்போது மாறி மீண்டும் மீண்டும் அதே இடத்திற் துர்மாமிச சதைகள் புற்றுபோல் வளர்வதாலும் புற்றுநோயென்னும் பெயரைப் பெற்றிருக்கிறது.

### புற்று நோய் வரக் காரணம்

1 அசுத்தம்:- அசுத்தவாயு, அசுத்தநீர், அசுத்தஉணவு முதலியவைகளை மிகுதியுமுட் கொள்வதாலும்

2 அழுக்கு:- பலவித அழுக்குகளையும் உடம்பிற் படவிடுவதாலும்

3 கொழுப்பு மிகுதமுள்ள மாமிசங்களை விரும்பியுண்பதாலும்

4 மிதமிஞ்சிய தாம்பத்தியஉறவு காரணமாகவும்

5 சூலை விற்புருதி முதலியரோகங்களின் சார்பாகவும் இந்நோயுண்டாகலாம்.



### இந் நோயின் பூர்வரூபம்.

புற்றுரோகத்துக்கு முக்கிய ஏது மேகரோகமே (*Veneral Diseases*) காரணமென்பதை இந்திய சித்த ஆயுள் வேதயூனானி, கோமியோபதி முதலிய வைத்திய சாஸ்த்திரங்களும் வற்புறுத்திக் கூறுகின்றன.

இதுவே நம் சித்தவைத்திய முதல்வர்களான மேதைகளின் முடிவுமாகும். பின்னுமிக்கொடிய புற்றுநோய் தொடங்குவது எப்படிஎன்று ஆராயுமிடத்து பொதுவாகப் பெண்கள் பூக்குங்காலத்தில் அதிலும் மேகவிரணமுள்ள பெண்கள் பூக்குங்காலத்தில் ஆண்களின் அதர்மசேர்க்கையால் அங்குண்டாகிற ரத்தசுரோணிதங்கள் ஆண்குறியின் நுனியிலுள்ள பூந்தசைகளால் அப்சோவாகி (*Absorb*) அதாவது உறிஞ்சப்பட்டு அது காரணமாய் மனிதனுடைய ரத்தங் கட்டியாவது இயற்கைநியதி = (நேச்சர்) இயலுகை இது காரணமாய்ச் சரீரத்தில் எங்காவது ஒரு பகுதியில் தடித்துவிறைத்து தொடக்கத்தில் நோவற்ற கட்டியாகிறது. அது தடித்துப் பரிணமித்துச் சூலைஎனப்படுகிறது. அது முற்றிச்சிலந்தி, பவுந்திரம், பிளவை, கொறுக்கு பறங்கிவியாதி முதலிய பெயர்களைச் சிலசில இடங்களில் பெற்று அவைகளிற் புண்புரைகள் ஏற்படின் விற்புருதி என்றழைக்கப்படும்

அது முற்றிப் பல துவாரங்களையுடையதாய் வீங்கி விறைத்து அழுகி ஒழுகி வேதனைமிகின் புற்று அல்லது வல்மீகம் அல்லது (*Cancer*) என்றழைக்கப் படுகிறது. இது மிகவும் பயங்கரமானவியாதி புற்றுரோகமானது கர்மரோகமென்றும் கர்மநிவிர்த்திசெய்து மருந்தும்செய்தாற் தீர்க்கலாம் என்றும அகத்தியர் கர்மகாண்டங் கூறுகிறது.

### சிகிச்சை ஆரம்ப உரை.

இதை கர்மரோகமென்றும் தீராதநோயென்றும் சொல்வர். இதற்குப் பிரதானகாரணம் நோயாளிகளே! ஏனெனில்

ஆரம்பநிலையிலேயே இதற்கு அதாவது கொடுநோய்களுக்கு வைத்திய உதவியை நாடவேண்டுமென்பது விதி. ஆனாலவர்கள் நிவிர்த்தி செய்யமுடியாதநிலையில் வைத்திய உதவியை நாடுவதுதான் பிரதான காரணமென்பதை நாமெவரும் மறந்துவிடக்கூடாது. ஆகையாற்றான் 'கறன்ற்' "றேடியம்" "டீப்றே" ஒப்பிறேசன் என்று நீட்டிக்கொண்டே போகவேண்டி ஏற்படுகிறது.

ஆகையால் வியாதியைத் தாமதமின்றி இயன்றஅளவு விரைவில் தெரிவிக்க வேண்டியது நோயாளியின் முக்கிய கடமை. நோயின் மூலகாரணத்தைக் கண்டுபிடித்து வியாதியை முற்றவிடாது பாதுகாவல்செய்து சிகிச்சைசெய்ய வேண்டியது வைத்தியரின் முக்கியகடமை. ஆரம்பத்திற் சரியானமுறையிற் சிகிச்சை செய்யப்பட்டால் நூற்றுக்கு 80% வீதமானோர் நிரந்தர குணத்தை அடையலாமென்பது எனது அபிப்பிராயம்.

ஏனெனில் ஆரம்பத்திற் குறித்த ரோகத்தை நிதானித்துச் சரியான சிகிச்சை பெற்றபலர் சுகப்படுவதையும் காண்கிறோம். அனுபவத்திற் காண்கிறோம். நோய்முற்றுமுன் ஆரம்பத்தில் இப்புற்றுரோகத்தைச் சரியானபடி நிதானம் பண்ணுவதிலேயே (டயக்கனோசிஸ்) குணப்படுத்துவதின் மூலகாரணம் அடங்கியிருப்பதாய் தெரிகிறது.

## புற்றின் வகை.

புற்றின்வகையும் சிலவற்றின் குணங்களும் பிரதானமாய்ப் புற்று நான்குவகைகளென்றும் அவை வன்புற்று, மென்புற்று, நுங்குப்புற்று, கரும்புற்று என்பவைகளென்றும் உறுப்புகளின் பேதத்தினால் பலபெயர்கள் பெற்று 32 உறுப்புகளையும் பற்றி வருவதால் விரிவடைகிறதாகவும் அறியப்படுகிறது. அவை மண்டைப்புற்று, நேத்திரப் புற்று,நாசிப்புற்று, கன்னப்புற்று, (கொடுப்புப்பிறி) உதட்



டுப்புற்று, தந்தப்புற்று, நாக்குப்புற்று, தொண்டைப் புற்று. அறிஞர் அண்ணாவுக்கு வந்தது நெஞ்சுப்புற்று.

பரோதயப்புற்று, (தனப்புற்று) குடற்புற்று, சலப்புற்று, யோனிப்புற்று, லிங்கப்புற்று, மூலப்புற்று, அபானப் புற்று, முதலியவைகளே. இவைகளேயன்றிக் கண்டமாலை, அபசிகண்டமாலைகளும் புற்றுடன் சேர்க்கப்படலாம். இவைகளைமட்டுமிங்கு விபரிப்போம். முன்னைய நான்குவகைகளையும் அவைகளின் பதார்த்த மூலம் அறிக.

1 **மண்டைப்புற்று:-** இது மூளையை மூடியிருக்கும் சவ்விலுண்டாவது. இந்தரோகிக்குத் தலைபாரமாயிருக்கும். சிலருக்குத் தலைவலியும் நோவுங்காணும். மனமாற்றம், குணபேதம், தேகச்சோர்வு இவை படிப்படியே அதிகரித்துச் சடுதியில் உயிருக்கே உலை வைத்துவிடும்.

2 **நேத்திரப்புற்று:-** இது கண்ணின் கோளையிலுள்ள சவ்விற் பெரும்பாலும் உண்டாகிறது. தொடக்கத்திலோர் முளை போலுண்டாகி பின் பல துவாரங்களை யுடையதாய் அதிலிருந்து நீருஞ் சீழும் வடிந்துகொண்டிருக்கும். கழுத்தில் நெறிகட்டிவீங்கும். அதில் நோவுண்டாய்த் தலைவலி காணப்படும். பின் அயல்உறுப்புகளையுந்தாக்கி உயிருக்கே ஆபத்து விளைவிக்கும்.

3 **நாசிப்புற்று:-** இதை உடையவர்களின் நாசிஅடியிடத்தில் ஓர் பருவளர்ந்து மூச்சுவிடக் கஸ்டமாயிருக்கும். இடையிடையே அதில்நின்று உதிரம் வடியும். இதைச்சிலர் இரத்தபீனிசமென்றும் நாசிகாபீடமென்றும் தவறுதலாகவுஞ் சொல்லக்கூடும். ஆகையால் ஆராய்ந்து அறியக்கூடிய வைத்தியரை நாடிச்சிகிச்சைபெற வேண்டியதவசியம். இதற்குச் சத்திரசிகிச்சையும் காரமருந்துகளும் நசியங்களுஞ் சுகஞ் செய்யக் கூடியவை.

4 **கன்னப்புற்று:** தாடை, பற்குழி, சொக்கு அதாவது கன்னத்தசை முதலிய இடங்களிலுண்டாகிப் பரவுகிறது. இது தொடக்கத்தில் நாசியிற்கனமும் அடைப்புமுண்டாகி சில சமயம் நாசியால் இரத்தமும்வடிந்து அது தடைப்படுவதால் அல்லது தடைப்படுத்தப்படுவதால் கன்னத்திற் தடிப்புண்டாகி வீங்கிச் சிறிதுகாலத்தால் மெதுமெதுப்படைந்து கன்னத்திலாவது வாய்க்குள்ளாவது சிறுசிறு முளைகளுண்டாகி நோயாளிக்கு வேதனையை உண்டுபண்ணும் விரணத்திலிருந்து துர்நாற்றமுள்ள நீரும் மிகுதியாய்ப்பாயும் கண்விழிபிதுங்கும். நோயதிகரித்துவரின் இரண்டுமூன்று வருடத்துக்குள் நோயாளி மரணத்துக்குள்ளாவான். நமது தமிழ்வைத்திய முறைகளில் அனேகமருந்துகள் இந்நோயை ஆரம்பத்திற் குணப்படுத்தியிருப்பதை அனுபவவாயிலாக அறிந்துள்ளோம்.

5 **உதட்டுப்புற்று:-** இது தொடங்கும்போது உதட்டில் வெண்ணிறக் கட்டிகளுண்டாய் உதடுவெடித்துப்பிளக்கும். அது நாளடைவிற் புண்பட்டு அழுகல்தாவி வேதனையுண்டாகும். சிலருக்குக் கீழுதடு முழுவதும்பரந்து புண்விருத்தி அடைந்து புற்றுண்டாய் பார்ப்பவர் பயங்கரப்படக்கூடிய நிலையை உண்டுபடுத்திவிடும். இதற்குக் காரமருந்துகளும் சத்திரசிகிச்சையுமேற்றவை.

6 **தந்தப்புற்று:-** இது ஆரம்பத்தில் கீழுதட்டிற்கும் பல்லுக்கும் இடையிலுள்ள முரசுகளிலிருந்து புற்றுவெளிப்படும். இது உண்டானவர்க்கு நீடித்ததடிமன், மூக்கடைப்பு, மெல்லியகாய்ச்சல் முதலிய குணங்களுண்டுபடும். புற்று வளர்ச்சி அடைய பல்நோ, பல்வலி, மண்டையிடி முதலியன உண்டாகி வருத்தும். சிலருக்கு நாசியால் இரத்தம்போவதுமுண்டு.

7 **நாக்குப்புற்று.-** நாக்கிலோரங்களிற் தடித்துப் பின் நாக்கிலருகுகளிற் கட்டிஏற்பட்டு நாக்கிலருகுகள ஒழுங்கீனபபட்டுமிருக்கும். பின்னது வெளுத்து அழுக்குப்பிடித்துப்



புண்பட்டு அழற்சியுங் குத்துமுண்டாகி அன்னபானாதிகளையுமருந்த முடியாது செய்து அவஸ்தைப்படுத்தி மரணதிசையை அடையவுஞ் செய்யும்.

8 **தொண்டைப்புற்று:-** இது உண்டாகும்போது தொண்டையினுட் புறத்திலுள்ள சவ்வுகள் வீங்கி அவிச்சலுண்டாகும். உணவுகளை விழுங்கமுடியாது வேதனைசெய்யும் காய்ச்சலுண்டாம். தொண்டையுட்கட்டி நெறிகளைப் பற்றி கழுத்தின் வெளிப்புறத்திலுள்ள சருமத்தை அரித்து விரணமுண்டாக்கி சீழும் நீரும் வடியப்பெறின் அதைக் கண்டப்புற்று என்பர். இது பார்ப்பவரே வருந்தத்தக்க கொடியரோகம்.

9 **நெஞ்சுப்புற்று:-** இது இரைக்குழலிலுண்டாகிப் பரவுகிறது. இரைக்குழல் தாபிதங்கொண்டு தடித்து குழாயொடுங்கி அடைப்பாயிருக்கும். உணவு முதலியவைகளை விழுங்குவது மிகவும்பிரயாசமாகும். இது நாளுக்குநாள் மேற்புறமாய்ப்பருத்து நெஞ்செலும்பின் மேற்பாகத்திற் பரவி அதிலோர் துவாரமுண்டாகி அதில் நின்றும் சீழ் முதலியன வெளிப்பட்டு மிகவும் வேதனை செய்யும். சிலசமயமோங்காளமுண்டாகி வாய்வழியாகவும் வருவதுண்டு. இது மிகவுங் கொடியது.

10 **பரோதயப்புற்று:-** இது ஆரம்பத்தில் நோவற்றகட்டியாய் வட்டித்து அசைவுள்ளதிரட்சியாயும் முலையிற்றொடங்கும். சிறிது காலஞ்செல்ல அது வளர்ந்து மேற்பக்கத்திற் கட்டிக் கட்டாவது முண்டு முலைக்கண்களால் இரத்தநிறநீர் வரும் அதாவது பொசியும். இடைஇடை அதிற்சுள்ளெனக் குத்தும். மாதவிடாய் காலத்தில் அக்குத்துக் கூடுதலாய் இருக்கும். சிலதருணம் முலையிலுள்ள நிணமும் அரைப்புச்சவ்வுங் குறைந்து சுகமானது போலிருக்கும். ஆனால் நாளடைவில் இம்முலைசிறுத்துவிடும். அதைச் சுற்றிலுமுள்ள தசை

பதிந்து பள்ளமாகும். சிலசமயம் முலைக்காம்பு உள்ளுக்கிழுபடவுங் கூடும். இதற்கு முன்பே அதற்குகந்த சிகிச்சை அடையாவிட்டால் ஆபத்திலே முடியும்.

11 **குடற்புற்று:-** இது தொடக்கத்தில் கடைக்குடலின் பக்கங்களில் ஒரு திரட்சியாகவோ அல்லது பரவியோ உண்டாகும். இது அபானத்துக்கு இரண்டு மூன்றங்குலம் மேலாகத்தோன்றும் இந்நோய் தொடங்குஞ் சமயத்தில் அவ்விடத்தில் அழற்சிஉண்டாகும் வியாதிஅதிகரிக்கும் போது குடலடைப்பட்டிருப்பது போலத்தோன்றும் மலங்கட்டும். உதரம்ஊதும் கடைக்குடலுக்கருகில் விற்புருதிஉண்டாகிச் சிலசமயம சலப்பைக்குள்ளாவது யோனிக்குள்ளாவது பரவிஉடைக்கவுங்கூடும். அவ்விடத்திலிருந்து உதிரங்கலந்த துர்நாற்றமுள்ளசீழ் அபானவாயிலால் வெளிப்படும். குடற்தாபிதத்திலாவது குடல் வெடிப்பிலாவது ஈற்றில் மரணமேற்படும்.

12 **சலப்புற்று:-** இது ஆரம்பத்தில் மூத்திரப்பையின் கழுத்திலுள்ள சளிச்சவ்வில் வீக்கந்தொடங்கும். அது காரணமாய் அடிக்கடி கொஞ்சமாய் சலஞ்சொட்டும். அக்குழாய் தடித்துப் புண்பட்டுவிடுவதால் மூத்திரம் வெளியான பின் வேதனை இருக்கும். மூத்திரம் நிறம்மாறிக் கலங்கலாய்ப் போகும் அதையொருகிளாசிலெடுத்து இரண்டு மூன்று மணி நேரம் கழித்துப் பார்த்தால் சளி அடைந்திருப்பதை காணலாம். உடனே அதில் (*Liq potash*) ஐ ஊற்றிப்பார்த்தால் சளி கட்டியாயிருப்பதைக் காணலாம். இதற்கு தற்கால சாந்தி செய்யலாமொழிய முற்றாய்மாற்றி நிரந்தர சிகிச்சையை அளிக்கமுடியாதென்பர்.

13 **கருப்பைப்புற்று:-** சில பெண்களுக்கு அடிக்கடி பெரும்பாடுண்டாகிக் குடலவிந்து புண்பட்டு அழற்சிஅதிகரிக்கும். கருப்பையின்வாயில் சவ்வுவளர்ந்து தடித்து அது காரணமாகச் சிலசமயம் திட்டுக்கட்டுப்பட்டு வயிற்றில்வலி



யுண்டாய் அசுத்தமான கூழ்போன்ற தடிப்புவெள்ளைநீர் வடியும். அதுமிகவுந் துர்நாற்றமாயிருக்கும். குடலிற்புண்கள் வளர்ந்து நோவும்வலியுமதிகரித்து முட்டுண்டாகும் அதைத்தொடக்கத்திற் கவனித்து ஏற்றசிகிச்சைசெய்தாற் குணமடையலாம். அன்றேல் ஆபத்துக்குள்ளாக்கும்.

14 **யோனிப்புற்று:-** இந்நோயாரம்பத்தில் மேகவெட்டை உள்ளவர்களின் தகாத கலவியால் அல்குலில் அதாவது கடிதடத்தின் தோலிலும் உதட்டிலும் பருக்களுண்டாகும். அது சொறிவெடுத்து வீங்கி அழற்சியுந் தினவுமேற்பட்டு வருந்துவர். இதையே மேகரணம், கொறுக்கு, குய்யரணம், பறங்கிவியாதி எனப்பலபடக்கூறுவர். இதற்கு ஆரம்பத்திலேயே தகுந்த சிகிச்சைசெய்யத் தவறுவதால் இது விருத்தி அடைந்து சிலதருணம் விரணத்தின்கீழ் நெறிகட்டித் திரண்டு கட்டியாக்கிக் கல்லுப்போற் கெட்டியாயிருந்து நாளடைவில் இதிற் சீழ்பிடித்து வெடித்துப் புண்ணாக்கி அபபுண் இடிந்து இடிந்து பெரிதாகிக் கொண்டேவரும். உறுப்பேஅற்று விழுந்துவிடவுங்கூடும். ரோகியின்தேகம் நாற்றமெடுக்கும். மேற்படி உறுப்பின்உணர்ச்சி அற்றுவிடும். பார்ப்பவர் பயப்படக்கூடியநிலையில் ஆகிவிடுகிறது. இதுவே யோனிப்புற்று எனப்படுகிறது.

15 **இலிங்கப்புற்று:-** இந்நோயாரம்பத்தில் ஆண்குறியின் மணிக்கும் தோலுக்குமிடையிற் சிறுசிறு பருக்களுண்டாய்ப் பரவுகிறது. சிலதருணம் மணிமுழுவதும நீர்பற்றி வைரித்து மேற்படி உதட்டைச் சுருங்கவோ விரிக்கவோ முடியாது கடினமாயிருந்து கட்டாகிஉணர்ச்சி அற்றுவிடும். மணமுள்ள வெள்ளைஒழுகும். அசாக்கிரதையாயிருந்துவிட்டால் யோனிப்புற்றுக்கு நேர்ந்த கதிதானிதறகு மேற்படலாம். உறுப்பு இற்றுத் துண்டுதுண்டாய் விழுந்து குறிஇருந்தவிடமே தெரியாது அற்றுவிடவேண்டி நேரிடும். இதற்கு ஏலவே உடனடியாகத் தகுந்தசிகிச்சை

செய்து குணப்படுத்திக்கொள்ள வெட்கப்படுவோர் அல்லது பயப்படுவோர் அகாலகதி அடைவது திண்ணம்.

16 **முகசிங்கிப்புற்று:-** மேற்படி லிங்கத்தின் பருக்கள் மணியின்முகப்பில் பலபல துவாரங்களேற்பட்டு அது நுங்குபோற் பளபளத்துக் காட்சிஅளிக்கிறது. பார்க்கமிகவும் பயங்கரமாயிருக்கும். அதுவே நுங்குப்புற்று, முகசிங்கி, வல்மீகம் என்றழைக்கப்படுகிறது. இதிற் சிழ்பிடித்து அழுகத் தொடங்கிவிட்டால் மேற்படி உறுப்புத் துண்டு துண்டாய் புற்றாகி இற்றுவிழுந்து ஆணோ பெண்ணோ என்ற உருவமே தெரியாது பெரியபயங்கர விளைவுகளை ஏற்படுத்திவிடுகிறது இதற்கு உடனடியாகச் சத்திரசிகிச்சை செய்து குணப்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்கு இராமபாணம், இராசகெந்தி, வல்லாதி தாம்பிரபற்பம் மேற்படி சிந்தூரங்களையே உபயோகித்துக் குணப்படுத்தியுள்ளார் சித்தவைத்திய வல்லுனர் என அறியக்கிடக்கிறது.

17 **கண்டமாலை:-** இதில் இருவகைகளுண்டு அவை கண்டமாலை, அபசிகண்டமாலை, இவை இரண்டும் மாமிசம் மேதஸ் என்னுந் தாதுக்களிலுண்டாகும் பிழைகள் காரணமாய் ஏற்படுகிறது. இவை கழுத்துப் புறத்திலேற்படும் கிரந்திகளின் வீக்கம் எனப்படுகிறது. அபசி என்பது "காய்டர்" கிரந்தி வீங்கிப் புடைத்தல் என்பது. இது வாழைக்காய்போல் ஓரளவுக்குப் பருத்துவிடுமாயின் கழுத்தை அசைக்கவே முடியாது. அன்னபானம் விழுங்கமுடியாது. தொட்டுப்பார்த்தாற் கல்லுப் போற் கெட்டியாயிருக்கும். முதலிதற்கு நோ, எரிச்சல், குத்துவலி, எரிவு, அழற்சி எதுவுமிருக்காது. ஆனாற் போகப்போக விருத்தி அடைந்து மேற்படி குணங்களேற்படும்.



18 **கண்டமாலை:-** இது கண்டத்தைச்சுற்றி கழுத்துக்கும் மார்புக்குமிடையே ஓர் சரப்பணிபோல் கட்டிமுஸ்டியாயேற்படுமோர் கிரந்தி, இதில் 5. 7. 9. க்கு முன்பின்னான திரட்சிகளைக் காணலாம். இது சாதாரணமாய்ப் பெண்பாலருக்கே பலதிரட்சிகளுண்டாய் மாலைபோற் காட்சி அளித்ததைப் பார்த்ததுண்டு. இதைத்தொடக்கத்திற் கவனியாது அசாக்கிரதையாயிருந்து விடுவதால் மார்பகம் முழுவதுமே வெட்டி அழிக்கவேண்டிஆகிவிடுகிறது இவகைளு மிருபுற்றுகளே.

## புற்று ரோக நிவாரணம்

மேல்நாட்டு விஞ்ஞான மேதைகளோ! இன்றுமிதற்கேற்ற நிரந்தரசிகிச்சையைக் கண்டுகொள்ள வெகுபிரயாசை எடுத்துக் கொண்டே வருகின்றனர். ஆனாலுமவர்கள் தற்போது (*Current*) மின அலைச்சக்தி (*Radio graphed Energey*), ஒப்பிரேசன், (*Operation*) றேடியம், (*Radium*) டீப்றே (*Deepray*) முதலாம் சிகிச்சை முறைகளாற் சிகிச்சை அளித்துக் குணப்படுத்தியும் வருகின்றனர். ஆனாலுஞ் சிகிச்சையின்போது மாறி மீண்டும் மீண்டும் அதேஇடத்தில் துர்மாமிசச் சதைகள்வளர்ந்து வாதைகள்செய்து வருவதையுங் காண்கிறோம்.

ஆனால் நாம் முன்னர் கூறியபடி நம் சித்த வைத்திய முதல்வர்களான விஞ்ஞான மேதைகளோவென்றால் ஒலியும், ஒளியுமொன்றுசேர ஓங்காரத்துள் நின்றவர்களே நம் சித்தவைத்திய முதல்வர்கள். அவர்களே தெய்வஅருள் பெற்று இப்புற்றுரோக நிவாரணங்களைத் திறம்பட அமைத்தும வெளிப்படுத்தியுள்ளார். இப்பெரியார்கள் எதையும் யந்திரசாதனங்களோ எதுவுமின்றித் தம் ஞான திருஷ்டியால் ஆராய்ந்தறிந்து எதையும ஊடுருவிப்பார்க்கக்கூடிய ஞானக்கண்ணான சொந்த இயற்கை (எக்ஸ்றே) யினாற் தாமே தம்ஞானக் கண்களாற கண்டு காயகற்பங்களுண்டு, காயசித்தி அடைந்து வச்சிரகாயம்பெற வழி கண்டு வாழ்ந்தவர்கள்.

அவர்களே இந்நோய் (சிவம் = ஆண்) (சத்தி = பெண்) அவ்விருபாலாரின் சேர்க்கை வேறுபாடுகளால் உற்பவித்ததெனக்கண்டு இதன் சிகிச்சையும் சிவத்திலும் சத்தியிலுந் தான் தங்கிஉள்ளதென அறிந்து அதில் பிந்துநாதமே மூலப்பொருள் பிந்துநாதத்தை அனுபவிப்பதே காயசித்தி எனக் கண்டனா. இலைச்சாறுகளும் பழச்சாறுகளுமே உலகிலுள்ள லோகப் பொருள்களையும், பாஷாணங்களையும மாரணம் பண்ணி வேறொன்றாய் மாற்றுந்திறமையுடையன எனக் கண்டு செப்பியுள்ளார். (செப்பினர்)

இவ்விரண்டையும் மூலப்பொருளாகக் கொண்டு தான் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சிகளும் நடைபெறுகின்றன பிந்துஎன்றால் இரதம். நாதமென்றாற் கெந்தகம். இவ்விரண்டையுந் தொந்தித்து சம்பந்தப்படுத்தி பலவித செந்தூரங்களையும் பஸ்பசுண்ணங்களையும் பதங்கம் மெழுகு முதலாய காயகற்பங்களையும் செய்து காண்பித்து வைத்துப் போயுள்ளார்.

ஆனாற் தற்போது இவைகளைத் தகுந்தமுறைப்படி அறிந்து செய்து கண்டு நடைமுறைக்குக் கொண்டுவாத் தவறிய காரணத்தால் அவைவாழா விருக்கின்றன. ஆனாற் சிற்சிலர் மறைமுகமாயிவைகளைச் செய்து அனுபவியாமலுமில்லை. ஆனாலவைகள் பகிரங்கமாய் நடைமுறைக்கு வெளிவர முடியாதிருப்பதே தற்போதுள்ள குறைபாடாகும்.

### ௩. சிகிச்சை.

நம் சித்தவைத்திய முதல்வர்களாலருளப்பட்ட இரசகெந்திமெழுகு, புற்றுப்பதங்கம், இராமபாணம், இராசாங்கம், தாமிரபற்பம் முதலியவைகளும், விசேஷமாய் இரசம், கெந்தகம், பாஷாணம், தாளகம், வீரம், பூரம், தாமிரம், வங்கம், நாகம் இவைகளை நன்கு சுத்தி செய்து சேர்த்த மருந்துகளுமே சிறந்தவை. முதற் ஜெயநீர்



வகைகளாலரைத்து உலர்த்தி ஏழுமுறை மடக்கிமடக்கிப்
பதங்கமாயெரித்த மருந்துகளும் மேகத்தைப் போக்கும் படி
யான சின்னி, கிரந்தியள்நாயன், இயங்குகொடிவேலி, பூவர
சம்பட்டை, வேப்பம்பட்டை, வேங்கைப்பட்டை ஆத்திப்
பட்டை முதலாம் மூலிகைப்பட்டை ரசங்களாலரைத்துப்
பலமுறை புடமிட்ட மருந்துகளும் அத்துடன் தங்கம், காந்
தம், அப்பிரகம், அயசெந்தூரங்களும் சேர்த்துக்கொடுக்
கும் மருந்துகளாலும் சுகமடையலாம். இவை அன்றிச்
சிவன்வேம்பு, நீர்வெட்டிமுத்து, கார்போகி, செயங்கொட்
டை, எட்டி, ஐங்கோலம் முதலியவைகள் சேர்த்துக் குளித்
தைலமெடுத்துச் செய்யப்பட்ட ரசகெந்திமெழுகு, வான்மெ
ழுகு, சித்திரவல்லாதி, சீனப்பாற்பற்மம் கார்போகிச்சூர
ணம், இவைகளும் மேகரோகங்களுக்குத் தகுந்தவை, என்
பதையும் முன்னரே ஏற்படுத்திவைத்துள்ள அன்பும், அற
னும், அகிம்சையும், ஜீவகாருண்யமும் முற்றறிவும் ஒருங்கே
அமைந்த அருளாளரான நம்சித்தர்களின் சிகிச்சைமுறை
களை அலக்ஷியஞ்செய்து எள்ளிநகையாடி ஒதுக்கிவிட்டு
ஆங்கில விஞ்ஞானிகளின் மோகத்திற் சிக்கி பயங்கரமான
இராட்க்ஷத சிகிச்சையிலகப்பட்டுத் தம் ஆவியையும் உயி
ரையு மற்பணிப்பதையுங் கண்டு ஆழ்ந்த மனவருத்தத்தில்
அமலனை வேண்டி அமிழவேண்டியதுதான்.

இப்படியான வன்முறைச் சிகிச்சைகளால் குணப்பட்ட
போதிலும் அதால் இயற்கைகெட்டு அவர்களறிவுஞ் சுபாவ
மும் குணமும் இயற்கைக்கு மாறாய் மாறுதலடையவுங்
கூடும். ஆகவே வெகுஜாக்கிரதையுடன் இம்மனிதயந்திரத்
துடன விளையாடப்படல் அவசியம்.

### இரசகெந்தி மெழுகு

சுத்திசெய்த இரசம், கெந்தகம், பறங்கிக்கிழங்கு, செயங்
கொட்டை வகை, பல. ஒன்று; பூரம், தாளகம், காந்தம்,
துரிசுதுத்தம், மிருதாரசிங்கி, சுக்கு, ஓமம், மஞ்சள், திற்பலி,

சித்தரத்தை, கோட்டம், வாலுளுவை, சோம்பு, ஏலம் சாதிக்காய், மிளகு, சீரகம், கார்போகி, மாசிக்காய், தேசவரம, வாய்விளங்கம், வசம்பு, கராம்பு, கடுக்காய், கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், சிறுதேக்கு, தாளிசபத்திரி, பிரப்பன்கிழங்கு, எட்டிவித்து, தேற்றாவித்து, நீர்வெட்டிமுத்து, எள்ளுக்கொள்ளு, கொப்பரு, சின்னிவேர், இயங்கம்வேர், அமுக்கிராய், கெல்லன்கோவை, கொடிவேலிவேர், முந்திரிவற்றல், வகை. களா. ஒன்று கோழிமுட்டைக்கரு இரண்டு, பனைவெல்லம், பலம். ஒன்பது. செய்பாகமுறை:- முதன்முதல் கெந்தகத்தைக் கல்லத்திலிட்டரைத்து அத்துடன் இரசத்தைவிட்டுக் கறுக்கும்வரை நன்கரைத்து பின்னர் பூரம், தாளகம், காந்தம், துத்தந்துரிசு, மிருதாரசிங்கி, முதலிய கற்சரக்குகளை முறையே ஒன்றனபின் ஒன்றாய்ச் சேர்த்து அரைத்து எல்லாம் உறவானபின் சமபச்சரக்குகளையெல்லாஞ் சூரணித்துச் சேர்த்து பின் செயங்கொட்டையிலுள்ள கட்டை கவிந்துகளை நீக்கி முன்சித்தப்படுத்திய சரக்குகளுடன் கலந்து மீண்டுங் கல்லுரலிலிட்டுப் பூணில்லாஉலக்கையாலிடித்து அத்துடன் பனைவெல்லத்தையும் முட்டைக்கருவையுமசேர்த்து முன்போற பூணில்லா உலக்கையாற சுமார் மூன்றுதினங்கட்குக் குறையாமற புரட்டிப்புரட்டி இடித்து எல்லாமுறவாகும்படி செய்து பின் அதை எடுத்து ஒரு பாண்டத்திலிட்டு மூடிச் சீலமண் செய்து பூமியிற புதைத்து இருமாதஞ் சென்றெடுத்து உபயோகிக்கவும, வேளைக்குத் தேற்றாக்கொட்டைப் பிரமாணம் 7; 10; 20 நாட்கள் சாப்பிட்டுவர புற்றுரோகம், குஸ்டம், கண்டமாலை, திமிர்மேகசூலை, கிரந்தி. அரையாப்பு குளிப்புண், பவுந்திரம், தொடைவாழை, அழுகண்ணி, ஆலங்காய்க்கிரந்தி, இலிங்கப்புற்று, யோனிப்புற்று இவையாவுந் தீரும்.

## இராசாங்கம் = புற்றுப் பதங்கம்

சுத்திசெய்த இரசம், கெந்தகம், இலிங்கம், தாளகம், மனோசிலை, வெண்பாஷாணம், பூரம், காந்தம், சாதிக்காய், இவ்வொன்பதும் வகைக்குச்சமனெடை குப்பைமேனிசாற்றாலரைத்து அதை மெல்லியதுணியிற் தடவிக்காயவைத்து ஈரமில்லாத இரண்டுபடி உப்பை வறுத்தரைத்துப் பாதியை ஒருசட்டியிலிட்டு அதன்மேல் சித்தப்படுத்திய மருந்துச்சீலையைச் சுருட்டிவைத்து மேலேயுமுப்பிட்டு மூடிச் சீலமண் செய்து அடுப்பேற்றி முத்தீயால் மூன்றுசாமமெரித்து ஆறவிட்டு மேலேயுள்ள பதங்கத்தை எடுத்துப் பத்திரப்படுத்தி அதில் வேளைக்கு கால் அரைக்குன்றி காலைவேளைமட்டும் தேவைப்படிற் காலை மாலை இருவேளையும் கொடுக்க கன்னப்புற்று, மார்ப்புற்று, வாய்ப்புற்று, இலிங்கப்புற்று, யோனிப்புற்று, கபாலப்புற்று, கண்டமாலை, வெண்குஸ்டம், பறங்கிபுண், சூலை, கை கால் முடக்கு, புடைகரப்பன், முகசிங்கி, குடற்புற்று, அரையாப்பு சகல புற்றுகளும் தீரும.



## மேற்படி புற்றுகளுக்குப் பூச்சு

வேப்பம்பட்டை, பூவரசம்பட்டை, முள்ளிலகம்பட்டை, பீநாறி, செஞ்சந்தனம், சமன் இடித்துத்தூள் பண்ணி வெந்நீரிலரைத்து எலுமிச்சம்புளிவிட்டு குழைத்துப்பூசவும். தொடக்கப்புற்று, வீக்கம், கனதி, முதலிய எல்லாந் தீரும். எவ்வித மேகரணக்கட்டியும் சாந்தமாகும்.

## விற்புருதி கண்டமாலை இவைக்குப் பற்று

மருதோன்றி, நீலி கார்த்திகைக்கிழங்கு, குன்றுமணி எட்டி, கஞ்சா, வசம்பு, காயம், உள்ளி, பெருமருந்துப்பட்டை, இவைகளை வெந்நீரிலரைத்துப் பற்றிடுக. மேற்படி கட்டிகள கரையும். நோ, வீக்கம், கனதி, விறைப்பு முதலியன தீர்ந்து குணமடையும்

## விற்புருதிக்குச் சிதழ் வெளிவர

வேப்பம்பிசினைப் பொரித்துத் தூள்பண்ணி முடிதும்பைச் சாற்றாலரைத்து கட்டுவாயை விட்டு வீக்கமுள்ள இடங்களிற் பூச சிதழ் வெளிவரும்.

## இராமபாணம் இடிமருந்து

இடிமருந்து அரிதாரம் காந்தம் யெள்ளு
எட்டிவிரை செயங்கொட்டை சித்ரமூலம்
வடிமருந்து ரசம்கெந்தி மஞ்சள் ஓமம்
மாசில்லாச் சாதிக்காய் வசம் பீருள்ளி
குடிமருந்து கொளளுக்காய் துரிசுதுத்தம்
கோழிமுட்டை இந்துப்பு கோட்டங்கார் கோல்
அடிமருந்து தற்கோலம் அக்கராகாரம்
அமைத்திடித்துக் கலசமிட்டு அறையக்கேளு.

அறையக்கேள் யோனிதனில் லிங்கந் தன்னில்
அண்டத்தின் புடைகரப்பன் புரையின்புண்கள்
விரையக்கேள் மூக்கெரித்தல் கரப்பான் சூலை
வெடிப்புற்று சூலைப்புற்று ஈரல்புற்று
விறையக்கேள வெண்குட்டம் குறைநோய்க் குட்டம்
விழித்திருப்பன் வீணைத்தண்டின் விஷநீர்ப்புற்று
முறையக்கேள் முடியாத முடக்குசூலை
மூட்டோடே வியாதிஎல்லாம் போமுண்பீரே.

உண்பீரே பத்தியந் தானிதற் கேயில்லை
உயிரான இடிமருந்து ராமபாணம்
உண்பீரே சிறுசுண்டை அளவிலேதான்
உற்றதொரு மோருஞ்சோறுண்டு முன்னே
உண்பீரேல் அடுத்தடுத்து மூழ்கி மூழ்கி
உள்ளபடி மண்டலமே செல்லுமட்டும்
உண்பீரேல் தேகமது பொன் போலாகும்
உள்ளபடி பூவையரைப் புணர்ந்திடாதே.

புருஷருக்கும் பூவையர்க்கும் சொல்லுவேன் கேள்
புணர்ச்சி தள்ளியிருக்கட்டும் மூன்றுமாதம்
இருடருக்கும் பிணி ஏது இராமபாணம்
எந்தெந்த நோய்களிலும் எமன்வந்தாலும்



திருடருக்கும் பலிக்குமது ராமபாணம்
சித்துவிளையாடு மடாசிவன் தன்னாணை
குருடருக்குஞ் செய்முறையால் ஜெயமே யாகும்
கோதண்ட ரெகுராம பாணந்தானே.

## சித்திர வல்லாதி

சித்திரமூலம் வெள்ளறுகு நல்ல
சிவனார்வேம்புட னியங்கம் வேர்
முற்றிய தேங்காயின் வித்துநல்ல
மூலமாங்கெருடன் அமுக்கிராய் கிழங்கு
புற்றில்விளைந்த நன்னாரி நல்ல
போதவே சின்னிகிளா அத்திகுமிழ்வேர்
சத்தி மிளகறணை வேருமநல்ல
சாதமாஞ் செங்கத்தாரி நெய்ச்சுண்டி.

உச்சித வெட்பாலை வித்துநல்ல
உறவான நீர்வெட்டி பிரப்பங்கிழங்கு
சித்திரமூலங் கருஞ்சீர் நல்ல
சிறப்பான கானகச் சீரகந்தானும்
முற்றிய பூதவிருட்சம் நல்ல
மூலமாம் வாதகரப்பனும் பட்டை
சத்தியாங் கந்தகந் துரிசுநல்ல
சுதியான சூதமும் முத்தமுஞ்சேர்த்து.

சித்திரமாக எடுத்து நல்ல
சிறப்பான வகைகண்டு பலமாய்நிறுத்து
வித்தாரமான பனைவெல்லம் நல்ல
விளக்கிய தோரெள்ளுவகை சேரிரண்டு
முற்றிய செயங்கொட்டை நூறுநல்ல
முதிர்பறங்கிப் பட்டைஐந்து கண்டிரே.

தேத்தளவுஉண்டை மண்டலங்கொள்
　　சூலைகிரந்தி திகழ்சூலை தீருங்கிரந்தி
முரட்டுப் பிடிப்பு திமிர்ப்புக்கடுப்பு
　　மேக வாதங்களொடு மேனிவெழுப்பு.
உடல் வற்றல் சிரங்கொடு
　　புண் வெட்டுக் குட்டம்
அத்திக் கிரந்தி ஆருக்கிரந்தி
　　அழுகுங்கிரந்தி இவை அகலும் பொருந்தி.

**பத்தியம்:-** பாசிப்பயறு, துவரம்பருப்பு, கத்தரிப்பிஞ்சு முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, பசுப்பால், மோர், தயிர் வெள்ளாட்டிறைச்சி, விரால், சுறுமீன் கருவாடு முதலியன கூட்டவும். கைப்பு, புளிப்பு, இனிப்பு இவை நீக்கவும்.

### வான்மெழுகு — நாதகுருதைலம் (Pill Mass)

பரநாதம் பலம்பூதம் சுவையா தீதம்
　　பாங்கான வெடியுப்பு வினையேசேரு
கிரகசாரங் களஞ்சு சேவியே வாங்கு
　　கிருபையுள்ள மால்தேவி களஞ்சுமூன்று
இரசாதி சூரனுமவ்விடையே நட்சத்
　　திரங் களஞ்சு நவநீதந் திக்குமாகும்
உரமான சரக்கதனை நவநீதத்தோடு
　　உண்மையாக் கல்வமதில் மைபோலாட்டே.

உண்மை யாயரைத்த பின்பு கலசத்திட்டு
　　உத்தமனே குளித்தைலம் வாங்கிக்கொள்ளு
கன்னியாம் நாதகுரு தைல மாச்சு
　　கருவான தைலமிது கிடையாதப்பா
பண்ணுகிற மருந்து வகைக்கெல்லா மாகும்
　　பண்பான இதிற் கொஞ்சமிட்டுப் பார்த்தால்
மண்ணில்வருங் குருமுப்பு இதற் கொவ்வாது
　　மானிலத்தோர் பிழைப்பதற்காய் விளம்பினேனே.



### அரும்பதவுரை

பரநாதம்—கெந்தகம், பலம் பூதம்—ஐந்துபலம் சுவை யாதீதப் பாங்கான வெடியுப்பு—வெடியுப்பு வினையேசேரு (நல்வினை தீவினை) இரண்டுசேரு கிரகசாரம் — (நவக்கிரகமா கையால்) நவச்சாரம். செவி என்பது — இரண்டாகும். மால்தேவி — அரிதாரம். இரசாசூரன் — வீரம், நட்சத்திரம்—பூரம், நவனீதம் — வெண்ணெய், திக்கு — எட்டு என்பது.

### செய்பாகம்

கெந்தகம் பலம் 5. வெடியுப்பு பலம் 2. தாரம் களா 3 வீரம் களா. 3. பூரம், களா. 1. பசுவின் வெண்ணெய் பலம் 8 ஆகிய இந்த ஆறுசரக்குகளையும் கல்வத்திட்டு பசுவெண்ணெய் சேர்த்தரைத்துக் கலசத்திலிட்டுச் சீலைமண்செய்து குளித்தைலமிறக்குக. அத்தைலமே நாதகுருதைலமா மென்றறிக.

### வான்மெழுகு (Pill Mass)

விந்துவிந்து செந்தூர நாதமிகு
　　வீரதார சிவ காமியும்
வெள்ளைசிங்கி நட்சத்திரம் புசர்
　　வீறு மாண்குறியு வெட்டுபின்
தொந்த மாரமுருகன் புராணமொடு
　　தூபதீப பரி சமனிடை
சுத்தியாவதிலையிலை பாருபாரு பரி
　　சுத்தமான கலுவத்திலே.

சிந்தை கொண்டு பதிறைறு மொன்றுபடச்
　　சேர்த்தரைத்து விடு தூளதாய்
சீக்கிரத்தி லெடு நாத மாமதனை
　　சேரு நாதகுரு தைலமே

முந்திவிட்டு மொருசாமங் நாலு மரை
முற்றுமே மெழு குழுந்ததாய்
மோச மின்றிப் பனைவெல்ல தன்னிலிடு
முறிவு பத்தியமு மில்லையே.

இல்லை இல்லைக் கபவாத சன்னிசுர
மெட்டுக் காசமுடன் குட்டமும்
ஏறுகின்ற விரைவாத சூலை ரணம்
மீளாதோஷ மட்ட குன்மமும்
சொல்லு குன்மவலி மாரடைப் பிணொடு
சூதகத் தொடு மகோதரம்
சோகை மஞ்சட் காமாலை சத்தியும்
வயிற்றுப் போக்கொடு பவுந்திரம்.

கல்லடைப்புச் சூலை வளர்கிரந்தி புரை
கண்டமாலை சல தாரையிற்
காணுங் நீரழிவு குத்தலான மூகில்
காச ரோக முதலானதும்
எல்லை விட்டு எழுகடல் கடந்துபிணி
என்ன பாடுபடு மறிகிலோம்
இந்த வான்மெழுகு எந்தநாழு முயிர்
ரென்னலாகு மிது திண்ணமே.

## அரும்பத வுரை

விந்து — இரசம், விந்துசெந்தூரம் — இரசசெந்தூரம், நாதம் — கெந்தகம், சிகாமி — கௌரி, வெள்ளை — வெண் பாஷாணம், சிங்கி — மிருதாரசிங்கி, நட்சத்திரம் — பூரம், புகர் — வெள்ளி, வீறுமாண்குறி — லிங்கம் எட்டு, பின் — அபின், முருகன்புராணம் — காந்தம், தூபம — சாம்பிருணி, தீபம் — பச்சைக்கர்ப்பூரம், பரி — தங்கம்,



## செய்பாகம்

இரசம், இரசசெந்தூரம், கெந்தி, வீரம், தாரமகெவுரி, வெள்ளைப்பாஷாணம், மிருதாரசிங்கி, பூரம், வெள்ளிலிங்கம், அபின், காந்தம், சாம்பிருணி, சூடன், தங்கம் ஆகிய இச் சரக்குகள் பதினாறும் சமனிடை வீதம் வெற்றிலைச் சாற்றதினால் சுத்திசெய்து முற்கூறிய நாதகுருவை தலம் விட்டு நான்கு சாமமரைத்து மெழுகுபதத்திலெடுத்து உழுந்து பிரமாணமுருட்டி பனைவெல்லத்திற் கொடுக்க மேற்கூறிய படி கடைசி இருபாட்டுகளிலும் கூறியபடி சகலரோகளுந் தீர்ந்து குணமடைவர்.

## கிரந்தி சூலைப் புகை ஒளிச் சிகிச்சை

வெள்ளைக்குங்கிலியம், இலிங்கம் வகை. பலம். 1. வெள்ளிக் காடிக்காரம் அதாவது (Silver Nitrate) சில்வர் நயிற்றேற் வராகனிடை ஒன்று. பசுவின்வெண்ணெய் பலம் இரண்டு. இவைகளைப் பசுவெண்ணெய் சேர்த்தரைத்து சுத்தமான வெள்ளைத்துணியிற் பூசித்திரியுருட்டி அதாவது திரிசெய்து பசுநெய்விட்டுத் தீபமேற்றி நோயாளியை மூடிமுக்காடிட்டு மேற்படி தீபத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்படி செய்ய தேகமடங்கலும் வியர்வையுண்டாகும். பின்முக்காட்டை நீக்கி வியர்வையை துடைத்து மூக்கிலும் புகைபிடித்து காய்ச்சாத பசும்பால் காற்படி கொடுக்க போகாத நோய்களெல்லாம் புலம்பிப்போமே.

பார்த்தபின்பு தீருகின்ற ரோகங் கேளு
பரவுகின்ற ரணங்கிரந்தி பாண்டுசோகை
சீர்த்தியுள்ள கால்தடிப்பு வற்றிப் போகும்
திறமான சூலையெல்லாங் காணாதோடும்
நேர்த்தியுடன் பிளவை கண்டமாலை நீங்கும்
நீங்காத சொறிசிரங்கு நிலைகெட்டோடும்
ஆர்த்தியுடன் கூற்றுவன் போல்வந்த நோய்கள்
அகன்றோடுங் கல்லாட மொழியீதாமே.

## மேக விரண மலம்ப

பெருங்கடுக்காய் பத்து இரண்டுபடி நீர்வைத்து ஒரு படி எடுத்து அதிற் துரிசு விளைவுகர்ப்பூரம் வகை. களா. இரண்டெடுத்து மேற்படி கஷாயத்திலரைத்துக் கரைத்து வைத்து ஒரு நாளைக்கு 3 வேளை 7 நாட்கழுவிவரக் கிருமி களுள்ள, நாற்றமெடுத்த, எலும்பைப்பற்றிய புண்கள்யாவும குணமாகும்.

## சீனப்பாச்சூரணம் புற்றுக்கு

சீனப்பா மூன்று பலம். மிளகு, சுக்கு, இருசீர்கோட்டம், சென்னகரம்பழம், கராம்பு, விடையம், வசுவாசி, மதுரம், வகை. களா. இரண்டு. சாதிக்காய், இயங்கு, சிறுகுறிஞ்சா, சிந்தில், நத்தைச்சூரி, இவை வகை. களா. நாலு உரலி லிட்டிடித்து வஸ்த்திரகாயஞ் செய்து காலைமாலை வெருகடி வெந்நீரிலொரு மண்டலங் கொள்ள செங்கிரந்தி முதற் சகல கிரந்திகளும் மேகஊறல், வெட்டை, கைகால்கடுப்பு, புண்புரைகள், புற்று இவை தீரும்.

வேறுமுறையில் வெண்பசுப்பால்நெய் முருங்கை தாதுவளை, சிறுநெல்லரிசி, பத்தியங்கொள்ளத் தீரும்நோய், மேகவகை பதினெட்டும் குட்டவகை பலதும் செங்கிரந்தி நாக்கிற்புற்று, நாக்கறணை, நெற்பகுலை எட்டும் சொறிபடர் தாமரை, பவுந்திரம, உட்டணம், அழுகுசொறி, அரிபிளவை, கன்னத்தில் வரும்புற்று, கைகால்பிடிப்புளைவு, புடைவெடிகரப்பன், காதுநோய்கிருமிகள், அழுகுமுகசிங்கி, புருடாகிராந்திகளும ஆருதகரப்பன் புண் மாறுமென்று சொல்லப்படுகிறது. நாலுநாட்களுக்கொருக்கால் ஆமணக்கெண்ணெய் வைத்து முழுகவும்.

## கார்போகிச் சூரணம்

**சுவித்திரம் தீர:-** சுவித்ரமென்பது இவ்வியாதியாற் சருமத்திலுள்ளசுயநிறம்மாறி வெண்மை நிறமாகிவிடுவது. அதையே சுவித்ரம் என்று சொல்லப்படுகிறது. மேற்படி



சூரணத்திற்கு கார்போகி அரிசி ஒரு ருத்தல் வாங்கி வேங்கைவைரம் ஒரு ருத்தலை அவித்த கஷாயத்தில் ஊறவைத்துக் காயவைத்துப் பின் கருங்காலி வைரத்தில் ஒரு ருத்தலை அவித்த கஷாயத்திலு மூறவைத்துக் காய வைத்திடித்து ஒரு வருடஞ்சாப்பிட முற்றுந்நீங்கிக் குண மடையலாம். ஆனல் ஒரு மாதஞ்சாப்பிடக் குணந் தெரியும் (கையாட்சி)

## கெந்தக ரசாயனம்

ஆதிபரனையே தினமும் மிகஅன்பாகவே போற்றி அடி பணிந்து மேதினியிலுள்ளபேர்கள் வெகுமேன்மை அடைந் திடவே நானும்......

நெல்லிக்காய்க் கெந்தகமாம் நல்ல
நிதியான ரசாயனஞ் சொல்லுகிறேன்
அந்தமுடன் பணிப்பார் ஒளி
வாங்கிக் கெந்தக மிரண்டுபலம்
வாங்கியே ஆவின்நெய் விட்டுஅதி
பாங்கா யுருக்கியே ஏழுதரம்
வெங்காயச் சாறுதனில் அதை
மீளவு மேழுதரஞ் சாய்த்து
பசுப்பால் படிவார்த்து வேடு
பாங்காகக் கட்டிஅது மேலே
உசும்பாமற் சுத்திசெய்த கெந்தி
யை வைத்து மேற்சட்டிமூடி.

பானையின் வாய்மூடி அதைப்
பாரினிற் புதைத்துவைத்துப் புடம்போடு
தீயாறித் தானெடுத்து அங்கு
சேர்ந்து கிடக்கும் மருந்தையெல்லாம்

நேர்மை யதைநானும் வெகு
நேரில் நிதானமாய்ச் சொல்லுகிறேன்
குக்கில் விராகனிடை எட்டு
கூசாமற் றூக்கி முடிந்துகொண்டு.

சர்க்கரை கொள்ளுடனே நீயும்
குக்கிலைப் போட்டு அவித்தெடுத்து
இரசம் பூரமது மூன்று
காணும் விராகனிடை தான்தூக்கி
திற்பலி மிளகுசுக்கு நல்ல
சேருங் கராம்பு ஏலமுடன்
சாதிக்காய் சாதிபத்திரி யுடனே
சரிகிகரில வங்க பத்திரியும்.

மானே நற்சீரகமும் மணஞ்
சேர்கார் போக அரிசியதுவும்
கோனே நெய்படி வீசம்அதிற்
கூட்டிடு தேனும் படிவீசம்
சிறுகச் சிறுகவிட்டு அதைச்
சேர்த்து அரைத்து மெழுகாக்கி
உறுதியாய்த் தானெடுத்து அதை
உண்பது நேரம் அரைக்களஞ்சு.

கொள்ளச் சடத்திலுள்ள பிணி
கூறுவேன் சூலைகள் மூவாறும்
கள்ளமாய் வருமேகம் அதைக்
காணவே மூவேழும் போய்விடுமே
அரிகருங் கிரந்திமுதல் சொறி
ஆன கிரந்திகள் தானோடும்
வருகள்ளிப் பூக்கிரந்தி அதுவும்
வாடாத காலிற் கிரதிகளும்.



வம்புசெறி கிரந்திகளும் அதை
வாங்கியே ஊரை விட்டோடிவிடும்
மூடர்க்குந் திமிர்பிடிப்பு முக
வாதக் கோளோடு படர்தாமரை
கால்க்கடுவன் கைக்கடுவன் இந்நுங்
கழுத்தடி விஷமுமோடி விடும்.

## விற்புருதி கண்டமாலை புற்றுக்குப் பற்று

மருதோன்றி, நீலிகார்த்திகைக்கிழங்கு, குன்றுமணி, எட்டி, கஞ்சா, வசம்பு, காயம், உள்ளி, பீனுறிப்பட்டை, இவைகளைத் தூள்செய்து துவைத்து அளவாயெடுத்து வெந்நீரிலரைத்துப்பூச மேற்படி கட்டிகள்கரைந்து நோ வீக்கம், கனதி இவையாவுந் தீர்ந்து குணமடையலாம்.

## மேகரணக் கழிம்பு

வெள்ளைக்குங்கிலியம் தேன்மெழுகு வகைக்குப் பலம 3 இரண்டையும் சிறுதீயிற் காய்ச்சி ஒருபடி நல்லெண்ணெய் கூட்டிப் புகையுஞ்சூடாக இருக்கும்போதே இறக்கிச் சடுதியில் வடித்து ஆறியதுங் களிம்பாகும். இதைப்பூசிவர குணமாகும்.

## மெழுகுவர்த்திக் கழிம்பு

அரைப்படி தேங்காயெண்ணெயில் இருபெரிய மெழுகு திரியை இட்டுச்சூடாக்கிக் கரைந்ததும் வெள்ளைக்குங்கிலியம் அவல் அரக்கு வகை கள. ஒன்று தூள்செய்து தூவிக் கலக்கக் கழிம்பாகும அதைப் பூசவும. சீலையிற் தடவியும் போடலாம்.

## மேகரணத்துக்கு லேகியம்

சாதிக்காய், ஏலம, வால்மிளகு, இலவங்கம் வகைக்கு ஒரு பலம். சீரகம் அக்கரு வகை. பலம். 6. பறங்கிக் கிழங்கு பலம் 12. மாச்சீனி பலம் 20. மேற்படி சரக்குகளைச்

சூரணித்து வைத்து ஒருபடி எலுமிச்சம் பழரசத்தில் சீனியைக் கரைத்து வடிகட்டி ஓர் சட்டியிலிட்டுப் பாகுபதமாய்க் காய்ச்சி மேற்படி சரக்குகளைக் கொஞ்சங் கொஞ்சமாய்த் தூவிப் போதிய அளவு நெய்விட்டுக்கிண்டிப் பதமாயிறக்கி அதிற் குங்குமப்பூ பலம். கால். கோரோசனை பலமரை பொடித்துத் தூவிககிளறிச் சிறிதளவு தேனும்விட்டுப் பிசைந்து வைத்துக்கொள்ளவும். அதிற்கழற்சி விதைப்பிரமாணம் காலைமாலை சாப்பிட்டுவர வெள்ளைவெட்டை, பிரமியம், மேகரணம் முதலிய சகலமேகமுந் தீர்ந்து குணமடையலாம்.

## மேக சஞ்சீவிக் குழம்பு

கற்றாளை சிந்தில் சாத்தாவாரி கவலரிய சிற்றமட்டி
சிதேவியாரிவை சாறு கவல்கின்ற படிஅரையதாம்
சித்தான கற்கவகை வேர்வகைகள் தன்னைத்திறமாகச்
சொல்லுவேன் கேளுமயிலே சீரான வட்டுவேர்.

சிறுகுறிஞ்சாவின் வேர்செய்ய லாமிச்சு வேரும்
அழகான முந்திரிகை பேரிந்து சாம்பல்வாழைப்பழம்
முந்துபுணரையின் பழங்கேள் வித்தான நற்சீர்கருஞ்சீர்
வறலான ஓமம் வெண்கோட்டம் வால்மிளகோடு.

வரும்பிய குருசாணியும் சீர்மேவு சதகுப்பை
கற்கடக சிஙகியொடு செப்பிய பெருங்காயமும்
திறமான கல்மதம் கூகைநீறக்கரு சீரானதேவதாரு
பார்மேவு நற்கடுக்காய் நெல்லி தாண்டியும்

பகருஞ்சடா மாஞ்சிலும் பரிவான அரவின்பூ
ஓரொன்று சேரவே பரிவாக இருகளஞ்சாய்
ஏர்மேவு நற்சரக்கெல்லாம் நிறுத்தரலிலிட்டு கொண்டுவடி
கொண்டபின இயைவாயரைதது முன் சொன்ன.



சாகத்திற் கூட்டியே அடுப்பில் வைத்துத்
தார்மேவு கற்கண்டு சீனி பனைவெல்லமும்
சமனுக ஓர்பலமதாய் தானிட்டு நெய்பசுப்பாலி
னொடு தேனிவைகள் சமனுக ஒருபடிவிடேன்.

விட்டேஎரித்துக் குழம்பாய்த்திரட்டி விரைவாய் யிறக்கி
வைத்து வீரமுடனே காலைமாலை தனிலனுதினம்
வெருகடி அருந்திவரவே தொட்டெழு மகோதரம்
பிறமியம் வாதமொடு சொல்லரிய பிறமேகமும்.

கஷ்டமிகவேசெய்யும் மூலக்கடுப்புடன் கனஅத்தி மூலவெட்
நல்குமூலக் கொதிகள் நாறியமலச்சிக்கு நளிர் [டை
குளிர் முறைக்காய்ச்சலும் குட்டமொடு சொறிகருங்
குட்டம் வெண்குட்டமும் கூறவரு சூலையுடனே.

குத்திருமலீளையுங் கொடிய கயரோகமும் கொடிய
கயரோகமும் காயசிவாதம் கூறரிய மருத்தீடுகள்
குக்கலொடு நெஞ்சுநோ கொடியதொரு மூத்திரக்கிரியை
நற்பிரமியம் பகரரியமுகசிங்கியும் மருவுதல் மிகுத்திடு.

வருபிளவையொடு பறங்கியும் பற்றுச்சூலை முதலாய்
வடிவு நீர்ப்பிரமியம் இருதலைமணியன் கல்லடைப்புப்
படுவன் பவுந்திரம் பருதசை வளர்ச்சியுங்
குடிகொண்ட எய்ப்பிளைப்பு கூறரிய பக்கசூலை
நீட்ட முடக்கம்பிடிப்பு ஆகவே பருதிமுன்பனி
என அகற்றிடும் அழகான சஞ்சீவியே.

## முறிகிரந்தி வெட்டை பவுந்திரந் தீரமெழுகு

காந்தமொடு கோட்ட மரிதாரமேலம்
கல்நார்கல்மதம் வசுவாசி கராம்புதுத்தம்
போந்த சாதிலிங்கமொடு துரிசு உப்பு
புளியிவை யோரொருகளஞ்சு சேரக்கொண்டு

சொன்னபடி சூத மொன்றரைக்களஞ்சு
செயங்கொட்டை பத்துடனே செருப்படிவெற்றிலை
நேர்ந்தபடி கூட்டாதே வெள்ளறுகு மாவிலங்கை[முருக்கிலை
நீம்பிரமி ஓரேபிடி நிதானங்கொள்ளே.

கொண்டிவைக ளிடித்தபின்பு குழம்புபோலாம்
கூட்டுபனை வெல்லமது மூன்றுக்கொன்று
அண்டர்பிரான் சொன்னபடி பத்துநாளும்
அந்திசந்தி தூதுளங்காயளவு கொள்ள
மிண்டிஎழுகிரந்தி முறிகிரந்தி வெட்டை
மேலெழுந்த குட்டம்புண் பவுந்திரங்கள்
கண்டித்த பழம்புண்கள் ஒடுவுபுற்று
காலொழுகும் பறங்கிமுதற் கலந்துபோமே.

**குறிப்பு:-** உப்பு — கறியுப்பு; புளி — பழப்புளி; சரக்குகள் வகை. களஞ்சு க. இலைகள் காய்ந்தது வகை. கள. 2 பச்சையானல் வகை. கள 4 சேர்க்கவும்.

## வாதம்

**மிகினுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வழிமுதலா யெண்ணிய மூன்று.**

— திருவள்ளுவர்

தேகம், தேசம், காலம், வயது, முதலியபேதங்களுக்கு ஏற்றபடி அளவு, சுவை, குணம், வீரியம் முதலியவைகளுக்கு பொருந்தாத உணவுகளும் அப்பேதங்களுக்குப் பொருந்தாமல் மனம் வாக்குத்தேகஞ் செய்யும் தொழில்களும் கூடிக்குறைறவதனல் (ஆயுள்வேத) சித்தவைத்தியர் வாதம், பித்தம், சிலேற்பனமென்று கருதும்நோய்களுண்டாகும். இதில் வழியென்பது காற்று, வாயு, வாதமெனப் பொருள்படும் ஈண்டுமேலே கூறியுள்ள வாதபித்த கபமாகிய மூன்றுதோஷங்களில் வாததோஷத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்.



### வாதரோகங்கள் [அகத்தியனுர்]

வாதமே கதித்தபோது வாயுவுமெழும்புங் கண்டீர்
வாதமே கதித்தபோது வந்திடுஞ் சன்னிதோஷம்
வாதமே கதித்தபோது வந்திடும் வியாதிமேலும்
வாதமே கதித்தபோது வல்லுடல் மெலிந்துகொல்லும்.

வாதமே கதித்தபோது வருந்திமிருளைவு குத்து
வாதமே கதித்தபோது வாய்கயந் தினித்திருக்கும்
வாதமே கதித்தபோது வலிப்புடன் முடக்குவீச்சு
வாதமே கதித்தபோது வதைரோகங் களுண்டாம்.

வாதமே கதித்தபோது வாங்கலுந் திமிருமுண்டாம்
வாதமே கதித்தபோது வரும்பிற வீச்சுக்குத்து
வாதமே கதித்தபோது வரும்பெருவயிறு சூலை
வாதமே கதித்தபோது வரும்பெருங்கிருணி குன்மம்.

வாதமே கதித்தபோது வரும்மகோதரம் நீராமை
வாதமே கதித்தபோது வருந்திமிர் வாதசன்னி
வாதமே கதித்தபோது வந்திடுங் குத்துக்கட்டு
வாதமே கதித்தபோது வந்திடும் பெருவியாதி.

வாதமே கதித்தபோது வயிற்றினி லடசிக்குத்தும்
வாதமே கதித்தபோது வயிற்றினிற் பசியுண்டாகா
வாதமே கதித்தபோது வரும்பக்கவாத சூலை
வாதமே கதித்தபோது வரும்வாதகரப்பன் குட்டம்

வாதமே கதித்தபோது வரும்முகவாத ரோகம்
வாதமே கதித்தபோது வருங்குடல் வாதம்வீக்கம்
வாதமே கதித்தபோது வந்திடுங் கபாலசன்னி
வாதமே கதித்தபோது வாதபித்த சேற்பம்.

வாதமே கதித்தபோது வசமறக் காதுகேளா
வாதமே கதித்தபோது வரக்ஷி நாவிறைப்புத்தாகம
வாதமே கதித்தபோது மலம்சலம் கறுப்புண்டாகும்
வாதமே கதித்தபோது வந்திடும்பல வாதங்கள்.

வாதமே கதித்தபோது வரும்புத்தி கேடதாகும்
வாதமே கதித்தபோது வருந்நாரி வாதசூலே
வாதமே கதித்தபோது வலியதத்துவங்கள் கேடாம்
வாதமே கதித்தபோது வந்திடும வருத்தந்தானே.

வாதமே விறுமாவிண்டு மண்ணுடன் நீருமாகும்
வாதமே கதித்தபோது வரும்பிணி எல்லாமுண்டாம்
வாதமே கதித்தபோது வரும்பிணி வீடாங்காயம்
வாதமே கதித்தபோது வருந்துய ரனேகமுண்டாம்.

வலித்திடு மிடுப்புநாரி வாங்கலும் பிடிப்புமுண்டாம்
நலித்திடுஞ் சரீரந்தன்னை நாடொறுந் துயரஞ்செய்யும்
சலித்திட வோயுங்கால்கை சலமலங் கடுத்துவீழும்
மெலித்திடும் வாதஞ்செய்யும் விக்கின மனேகமுண்டே.

பிடித்திடுங் கடுக்குந் நாரிபெலந்திடக் குத்திவீங்கும்
கெடுத்திடும் பொருத்திற் குத்திக்கிடத்திடும் முடக்கிவாங்கும்
அடுக்கிட நடுக்கிவீழ்ந்தும் அவலமாய் கடுத்துக்குத்தும்
படுத்திடும் வாதஞ்செய்யும் படுகுணம் பகரோனுதே.

சொல்லவே வாதமது மீறிற்ருனல்
சோர்வடைந்து வாயுவிறை தேகமெங்கும்
மெல்லவே கைகால்க ளசதியுண்டாம்
மெய்முடங்கும் திமிரவொண்ணுத் திமிருண்டாகும்
வெல்லவே யுடல்பொருமும் வயிறுளைக்கும்
விரும்பி அன்னஞ்செல்லாது விந்துநஷ்டம்
கொல்லவே நாப்புளிக்கும் கழிச்சலுண்டாம்
கூறினர் மல்லயமுனி கூறினரே.



### திருமூலநாயனர்

அறியவிம் மூன்றின தாண்மை சொன்னுரென்நந்தி
எறிய நல்வாத மெறிக்குங் குணங்களே
குறிஎனக் கைகால் குழச்சு விலாச்சந்து
பறிஎன நொந்துடல் பச்சைப் புண்ணுகுமே.

புண்ணய் வலிக்கும் பொருமுங் குடலோடி
தண்ணய் மலத்தை தம்பிக்கும் போக்காது
ஒண்ணுன ஆசனம் உறவே சுருங்கிடும்
பண்ணுர் குளிர்சீதம் பருத்திடும் வாதமே.

### தசவாயு பத்தில்

அபானன் வாதத்திலும், பிராணன் பித்தத்திலும் சமானன் சிலேபனத்திலும, வியானன் இரத்தத்திலும் சமானன் சப்ததாதுக்களிலும் இருக்கும்.

வாதமானது அபானவாயுவைச் சேர்த்து இருப்பிடமாகக் கீளிறங்கி காமக்கொடிகளைப்பற்றி அங்கேஒடுங்கிப் பின்னும் வியாபித்து என்புகளுக்கு மேலேயுள்ள எழுபத்திராயிரம் நரம்புகளின் வழியாய் ரோமத்துவாரங்கள் தோறும் புகுந்து மாங்கிஷத்திற் படர்ந்து விந்துநீர் மலம், வியர்வை முதலியவற்றைக் கழியச்செய்கிறது. இதனிருப்பிடம் உந்தி.

### முத்தோஷங்களின் இருப்பிடம்

புரந்தனில் மூவர்வீடும் புகலுதும் பாதந்தொட்டு
வரம்பெறு முந்திமட்டும் வாதத்தினிருக்கை மேலே
பொருந்திய மார்புமட்டும் பித்தத்தினிருக்கை அப்பால்
சிரமுடிவாக எங்கும் சேட்டுமத் திருக்கையாமே

### வாதகுணம்

வாதமென்பது நரம்பைப்பற்றிய (ரோகம்) வருத்தம் மனித யந்திரத்திலுள்ள சிரை அதாவது நரம்புகளின்

நீளம் 2 மைல் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தசவாயுக்களின் பிரதான பகுதிகளான பிராணாதி பஞ்சவாயுக்களின் கோளாறுகளே வாதமென்று வடநூலார் கூறுவர். ஆனால் நம சித்த விஞ்ஞானிகள் தசவாயுக்களுங் கோளாறடைந்து அனிலந் தன் சலனமிழந்து குளிர்ந்து மந்தசலனமடைவதே வாதமென்பர். **"அனிலத்தா லெழுந்த நோய் ஐம்பத்தாறு"** பஞ்சவாயுக்களின் (கோளாறினால்) விகற்பத்தால் ஏற்படுவது 56 வாதமென்று கூறியுள்ளார். ஆனால் அவர்கள் வாதம் எண்பது என்று பிரித்து வகுத்துள்ளார். நரம்புகளின் நீளம் 2 மைல் என்றுங் கூறியுள்ளார்.

வாயு, கீல்வாயு, முட்டுவாயு என்னுமிந்நோயில் பொருத்து அல்லது பூட்டுக்குப்பூட்டு வீக்கம், வலி, தொட்டாலும்வலி, தொடாவிட்டாலும்வலி, தெறிப்பு, எரிச்சல் முதலியன. நீட்டவோ, முடக்கவோ, அசைக்கவோ முடியாதநிலை சும்மா இருந்தாலும் வலி, எரிச்சல், குத்தல், சுரம், இப்படி பலவித உபாதைகளின் சேர்க்கையை இந்நோயிற் காணலாம். இவ்வாதைகளுக்கு முக்கியகாரணம் மனிதஇயந்திரத்தின் இரத்தவோட்டமானது இயல்பான வேகத்தை இழந்து தாமதகதியை அடைவதினால் ஏற்படுகின்றதென அறியக்கிடக்கிறது.

(மேல்நாட்டு விஞ்ஞானிகளின் பிளட்பிறசர்) இரத்த அமுக்கம் லோபிளட்பிறசர் என்பதுமிதுவே. வாதம் எண்பது என்று நம சித்தவைத்திய நூல்கள் தெளிவுபடுத்திக் கூறுகின்றன. எனவே ஒவ்வொன்றுக்கும் தனித்தனி சிகிச்சை செய்வது கஷ்டசாத்தியமாகையால் நம்சித்தவைத்திய விஞ்ஞானிகள் சிறப்பாக ஒவ்வொனறுக்கும் சிகிச்சை செய்வதோடு விட்டுவிடாது எண்பது வாதங்களுககும் பொதுவான கஷாயங்களோ, சூரணங்களோ, ஒத்தணங்களோ, மாத்திரைகளோ, பூச்சுக்களோ, பற்பசெந்தூரங்



களோ, மெழுகுதைல வர்க்கங்களோ பலதெளிவுபடக் கூறியிருப்பதையுங் காணகிறோம். அவை வீரியத்திற் குறைந்தும் படிப்படி மிகுந்தும் இருப்பதையுங் காண்கின்றோம். எந்தெந்த நிலைபரத்திலும் நோயின்வன்மை மென்மைக்குத் தக்கதாய் மருந்துகளை உபயோகிக்கவும் மார்க்கங்காண்பித்துள்ளார்.

வேறு கல்கி பத்திரிகையிற் கண்டபடி பண்டித மணி *DR.* ஸ்ரீ ஹரி தாமெழுதிய கட்டுரையில் வாதரோகங்களைப் பிரதானமாய் இரண்டுவகைகளாகப் பிரித்து அறிவதுதான் சிகிச்சை விஷயத்தில் செளகரியமானது. அதாவது லேசானது எனக்கூறி அவை ஆமவாதம், ரத்தவாதம், என்றும் அதில் இரத்தவாதத்துக்குச் சிகிச்சை செய்வது சற்று லேசானதென்றும் ஆமவாதம் அவ்வளவு எளிதல்லவென்றும் கூறியுளளார். அதன் விபரம் சிகிச்சை முதலியவற்றைக் கீழேகாண்க.

## இரத்தவாத குணம்

இதற்கு முதனமுதல் கால் அல்லது கையில் ஓர் பூட்டிற்றான் வலி, வீக்கந் தொடங்கும். சிலருக்குச் சுரமுமிருக்கும். பிறகு ஒவ்வொரு பொருத்துக்களுக்கும் இந்த வீக்கமும் வலியும் ஏற்படும். சிலசமயம் பூட்டல்லாத தொடைபோன்ற சதைப்பற்றுள்ள இடங்களிலும் இவ்வீக்கமேற்படலாம். வீக்கமுள்ள இடத்தில் இரத்தவோட்டம் ஓரளவு ஸ்தம்பிப்பதுதான் அதன் எரிச்சல். அதிற் சிவப்புநிறந் தொட்டால் சூடு தொடமுடியாத வலி முதலியன ஏற்படும். இது சிகிச்சைக்கு வசப்படாமற் போகுமானால் கட்டாக்கிப் பழுத்து சீழுமிரத்தமும் வெளிப்பட நேரிடும். இது நேரிடாமல் சிகிச்சை செய்யவேண்டியது அவசியம். இந்நோயாளிக்கு நாக் கூசக்கும்.

## ஆமவாத குணம்

இது இரத்தவாதத்துக்கு மிகவும்மாறானது. இதன் வீக்கம் வெழுத்தோ, கறுத்தோ இருக்கும். ஆனால் இரத்தவாதத்தில் இருப்பதுபோல் சிவப்பாயிராது கை காலை மடக்கி நீட்டும் போதுதான் வலி இருக்கும், பசிஇராது, மலபந்தம் உண்டு. வாயில் இனிப்பு அல்லது உப்புச்சுவை இருக்கும்.

## சிகிச்சைமுறை

ஆமவாதத்தில் நெய்ப்புள்ள தைலங்கள் ஒத்தணங்கள் இளஞ்சூடுள்ள நிலையில் மேலுக்கு உபயோகிக்கலாம; அதாவது உபயோகிக்கவேண்டும. ஆனால் இரத்தவாதத்தில் சூடு காட்டக்கூடாது தன்மைக் குணமுள்ள மருந்துகளாற் தயாரித்த பூச்சோ தைலங்களோ தான் பாவிக்கப்படவேண்டும். ஒத்தணம் வேது போன்ற சூடானசிகிச்சை கூடவே கூடாது ஆகவே இருவாதங்களுக்கும் இடையே சிகிச்சை விஷயத்தில் நேர்விரோதங்கள் உண்டென்பது வெளிப்படையாகிறதல்லவா?

## ஆமவாதப் பூச்சு (Paint)

அகத்தி, ஊமத்தின்வேர் இரண்டையும் வெந்நீரிலரைத்துப் பூசலாம். இத்துடன் காயமும், வசம்பும், அகத்திக்கீரையுடன் அரைத்துப் பூசலாம். கீல்வாதந் தீரும்.

## இரத்தவாதப் பூச்சு

அகத்தியிலையைப் புளித்தகாடியிலேனும் எலுமிச்சம புளியிலேனும் அரைத்துப் பற்றிட வீக்கந் தீரும். இத்துடன் காயமும், வசம்பும அரைத்துப்பூசவும் வீக்கந் தீரும்.

## ஆமவாதத்துக்கு ஒத்தணம்

ஆமணக்கமிலையைச் சிறுகநறுக்கி மேற்படி எண்ணெயிட்டு வதக்கிச் சூட்டுடன் வலிப்போடுகூடிய பொருத்து



வாயுக்களுக்கும், வீக்கங்களுக்கும் ஒத்தணமிடலாம். அதிற் செவ்வாமணக்கு நன்று (வேறு) இரண்டு உத்தமாகாணி வாதமடக்கி நொச்சி இவைகளை அவித்துக் கழுவலாம் 3 உத்தமாகாணியும் சுண்ணும்பும் இளைத்துக் கால்வீக்கங்களுக்குப் பூசலாம்.

## ஒத்தணம்

எட்டி இலையை இடித்து நீர்விட்டவித்து ஒத்தணம் இடலாம்.

## பூச்சு

எலுமிச்சமிலையை வெந்நீர் விட்டரைத்துப் பூசினாலும் கீல்வாயுவின் வீக்கம் வலி முதலியன குறையும்.

## வாதத்துக்கு எண்ணெய்

கருமத்தைச்சாறு அரைப்படி தேங்காயெண்ணெய் ஒருபடி சேர்த்துக்காய்ச்சி ரசஞ்சுண்டும்போது ஆறுகளஞ்சு ஓமப்பொடியை இட்டுக் கிளறி மெழுகுபதமானதும் 6 களஞ்சு கற்பூரப் பொடியை இட்டுக் கரைத்துக் கொள்ளவும் இத்தைலத்தை மேலுக்குத் தடவி வெந்நீர் விட்டுவர குத்தல் குடைச்சல், வலி, வீக்கம் ஆகியவை தீரும்.

## சிகிச்சைக் கிரமம்

வெளிப் பிரயோகங்களாகிய ஒத்தணம் பூச்சுவேது தைலங்கள் முதலியன. தோஷங்கள் சாந்திஅடையத் துணை புரிகின்றன. ஆனால் அததற்கேற்ப உள்மருந்துகளும் கொடுபடவேண்டும். அவசியமான போதெல்லாம் பேதிக்கக் கொடுக்க வேண்டும்.

## வாததைலம் — (இரத்தவாதத்துக்கு)

நன்னாரி, மஞ்சிட்டி வகை. பல. அரை. சீந்திற்கொடி, புளியமிலை, நல்லெண்ணெய் வகை. சாறு படி அரை கூட்டி மெழுகுபதமாயிறக்கி ஒரு பாத்திரத்தில் வெள்ளைக்குங்கிலியம், விளைவுகற்பூரம் சிறுசிறு துண்டுகளாக்கி தேன்

மெழுகும் அரைப்பலம் போட்டு அதற்குள்ளே எண்ணெயை வடித்துச் சூடாயிருக்கும்போதே கறண்டியாற் கரைத்துவிட வேண்டும். இதுதான் **இரத்தவாத பிண்ட தைலம்.** இதைத் தினமும் உடம்புக்குத் தடவி அந்திக்குக் குளிக்கலாம். வாதம், நோ, உழைவு முதலியன தீரும்.

### சிற்றாமுட்டித் தைலம்

சிற்றாமுட்டிவேர் அரைறாத்தலுக்கு 8 படி ஜலம்விட்டு 2 படி எடுத்து அத்துடன் 2 படி நல்லெண்ணெயுங் கூட்டி கால்றாத்தல் சிற்றாமுட்டிவேரை வெண்ணெய் போலரைத்து அத்துடன் நாலுபடி பசும்பால் சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதம்வடித்து இதைமறுபடியும் கஷாயம், கற்கம்பால் கூட்டிக் காய்ச்சினால் மடக்கிக் காய்ச்சிய சிற்றாமுட்டித் தைலமாகும். இப்படி நூற்றொருதரம் மடக்கி மடக்கிக் காய்ச்சினால் சிலதுளிகள் வீதம் உள்ளுக்குக் கொடுத்து நசியமுஞ் செய்யச் சகல வாதங்களுந் தீரும்.

### உழுந்து தைலம்

இரண்டு றாத்தலுழுந்தை எட்டுப்படி நீர்விட்டு 2 படியாக்கவும். இப்படியே சிற்றாமுட்டி இரண்டு இறாத்தலையும் கஷாயமாக்கி வடித்து நாலுபடியுடன் ஒருபடி நல்லெண்ணெய் சேர்த்து அத்துடன் நிலப்பூசினிக்கிழங்கு, சாத்தாவாரி, நிலப்பனை, அமுக்கிராய், நாய்வேளை, நல்லவேளை, சதகுப்பை, சித்தரத்தை, இந்துப்பு, பூனைக்காலிவிரை, திரிகடுகு, நெரிஞ்சிமுள்ளாகிய 15 சரக்குகளும் வகைக்கு அரைப்பலம் எடுத்தரைத்து ஒருபடி பசுப்பாலும் விட்டுக் கற்கம் மணற்பாகம்வர இறக்கிப் பூசவும். சகலவாதமுந் தீரும்.

### வாதரோக சிகிச்சைக்கிரமம்

மேற்படி வாதரோகத்துக்கு நம் குடும்பபரம்பரை வைத்தியமுறைப்படி எனது ஐம்பதுவருட அனுபவத்தை யொட்டிய சிகிச்சைக்கிரமத்தை இங்கே காண்க.



"மலமதுசிக்கிநின்றால் வாதமே யதிகமாகும்"

என்றபடி இந்நோயிற் பெரும்பாலும் மலச்சிக்கல், மலவரட்சி இருக்கவே செய்யுமாகையால் முதலாவது சட்டம்பியார்குளிகை, பூலோகசஞ்சீவி, வாதராட்சதன், வாதசிந்தாமணி (வாதாரி) இவைகளில் ஏற்றஒன்றாற் பேதிக்கவும். அல்லது தாளங்காய்க்கிரந்தி எண்ணெயை மட்டும் 3 நாட்காலை கொடுத்து விரேசனஞ் செய்ய வேண்டியதவசியம் பின் வாதகஷாயங் கொடுத்துச் சமப்படுத்திவிட்டு மேகாதி என்று சொல்லப்பட்ட மேகவாதராசசூரணம் ஏழு நாட் கொடுத்து எட்டாம் நாள் ஓமத்தைப் பசுப்பாலிலரைத்துத் தலையிற்றப்பித் தோயவேண்டியது. அடுத்தநாட் குளிப்பு இப்படியே ஏழுநாட் தோய்ச்சலும் ஏழுநாட் குளிப்பும் மாறி மாறிச் செய்துமுடித்ததும். அஸ்வகெந்திச்சூரணம் 48 நாள் (ஒரு மண்டலஞ்) சாப்பிட்டுவர மேகவாதம், உஷ்ணவாதம், நாரிப்பிடிப்பு, கைகால்பிடிப்பு, பிரமியகாந்தி முதலிய சாதாரண வாதமெல்லாந் தீரும்.

இவையேயன்றி பாரிசவாதம் அல்லது சோர்வாதம், முகவாதம், ஐப்புவாதம், பிடிப்புவாதம், இடுப்புவாதம், நடுக்குவாதம், மௌனவாதம் போல்வனவும் சிறப்பாகவுண்டு என்பதுங் கவனத்துக்குரியதே.

### பூலோக சஞ்சீவிக் குளிகை

இரதம், சாதிலிங்கம், காந்தம், துரிசு, காவிக்கல் நாவி இவை வகை. கள. 1 வாளம் கள. 2 வேப்பிலைச் சாற்றாலரைத்துக் குன்றியளவுருட்டி திரிகடுகுக் கஷாயத்திலிடப் பக்கவாதம், திமிர்வாதம், இளம்பிள்ளைவாதம், இடுப்புவாதம், முடக்குவாதம், முகவாதம், களல்வாதம், குடல்வாதம், அனல்வாதம், காமாலை, சோகை, பாண்டு, சூலை, கிளைக்கசிவு, மேலைக்கசிவு, விஷவாதகரப்பன், பெருவயிறு, நீராமை, பேராமை, பித்தகுன்மம், வாயுகுன்மம் இவையாவும் தீரும்.

## வாதகஷாயம் (*D*ecoction)

பேய்ப்புடல், இலாமிச்சு, நன்னாரி, செந்தொட்டி, சீந்தில், கோரை, சுக்கு, கடுகுரோகணி, நெல்லிவற்றல், இந்துப்பு, காயம், வகை. கள. க. 2· வெள்ளரசந்துளிர் ஒரு சிறுபிடி இஞ்சி 1 தேறுகூட்டி 2 படி நீர்வைத்து அரைப்படி எடுத்து மூன்று நாட்காலை மட்டுங்குடிக்கவும் இந்துப்பு காயம்வறுத்துப் பொடிபண்ணிப் போடவும். அல்லது முடிச்சுக்கட்டிப் போடவும். வயிற்றாலே போகாவிட்டால் ஒரு தேக்கரண்டி ஆமணக்கெண்ணெயுங் கூட்டிக் கொடுக்கவும் பேதியாகும். முகவாதம், பிடரிவாதம், முடக்குவாதம், முதலிய பலவாதங்களுஞ் சமனமடையும். பலவாதங்களும் குணமடையும்.

## வாதப் பூச்சு

குமரிகத்தாழையை வாட்டிப்பிளிந்து சாற்றில் புளியம் பொருக்குச் சுட்டசாம்பல், கரியபவளம், புற்றாம்பழம், இவைகளை மேற்படி சாற்றாலரைத்துச் சுடவைத்துப் பூசவும் முழங்கால்வாதம் வீக்கம், உளைவு, குத்து, முதலியன தீரும்

## பூச்சு (வேறு)

சதகுப்பை, கடுகு பூடு, முத்தாமணக்கம்முத்து, நீர்வத்தற்றேங்காய் வகை கள 4. இவைகளை ஒன்றாயிடித்துத் திரட்டி எடுத்துத் தேவைக்குப் போதிய அளவு எடுத்துப் பசுப்பாலிலரைத்துப் பூசவும் உளைவு, குத்து வீக்கம், முகவாதம், இரத்தவாதம், கழுத்துவாதம், முதலியபலவுந் தீரும்.

## ஷை வேது

வேப்பிலை ஒருபிடியும் எலுமிச்சமிலைபிடியும் ஒருதேறு இஞ்சியும் ஒரு குடுவையிற்போட்டு நீர்விட்டவித்து வேது பிடிக்கத் தலைக்கனம், முகக்கனம் முகவாதம் இவைதீரும்.



## கெண்டை வாதப்பூச்சு

திருகுகள்ளியை வாட்டிப்பிளிந்தசாறு பூசவுந் தீரும். இத்துடன் கரியபவளமும் புத்தாம்பழமும் சேர்த்துப் பூசலாம்.

## ஆமவாதப் பூச்சு

வாதமடக்கி, நொச்சி, உத்தமாகாணி, எருக்கம்பூ, இவை சமன் வகை. பிடி. 1 கூட்டி இடித்துப் பிளிந்தசாற்றில் அமுக்கிராய்பறங்கி, கடுகு, உள்ளி, பெருங்காயம், கரியபவளம் வளையலுப்பு சமன்கூட்டி அரைத்துக் காய்ச்சிப் பூசவும். கடுமையானகுத்து, உளைவு, வீக்கம் தீரும். (வேறு) ஷை பூ இலைகளையிடித்து வேப்பெண்ணெய், தேங்காயெண்ணெய் இலுப்பெண்ணெய் கிடைப்பதில் ஒவ்வொரு தேக்கரண்டி விட்டுப் பிசறிவேடுகட்டி அவித்து ஒத்தணம் போடலாம். எவ்வித வாதஉளைவு, பிடிப்புக்கடுப்பு, வீக்கம் முதலியன தீரும்.

## வாதத்துக்கு ஒத்தணம் (Fomentation)

நொச்சி, ஆடாதோடை, களற்சி பற்பாடகம் வகை. பிடி. 1 திரிகடுகு, இருவேலிலாமிச்சு இவைகளை இடித்துத் தேவைகண்டு எண்ணெய்கள் விட்டுப்பிசறி வேடுகட்டி அவித்து ஒத்திடவும். சகல வாதஉளைவு, பிடிப்பு, குத்து, வீக்கம் முதலியன தீரும்.

## வாதராச சூரணம் (Powder)

கடுகு, மதுரம, குருசாணி, கோட்டம், சாதிக்காய், பொன்னரிதாரம், அதிவிடையம், சாளியாவெட்பாலை ஏலம், காயம், கடுக்காய், இந்துப்பு, பொரிகாரம், உலுவா தண்டி· பூலாகாவி, செவ்வள்ளி, கல்மதம், கல்நார், சுக்கு, அகில், நெல்லி, ஓமம், கறுவா, அக்கரு, கைப்பு இருசீர், சோம்பு, மல்லி, தே தாரு, மிளகு, இஞ்சி, துத்தம், துரிசு, காபுகா,

வாய்விளங்கம், திற்பலி, சீனக்காரம், லிங்கம், வகை. கள. 1 சீனப்பா பலம். க. பூவரசு, இயங்கு, முத்தற்காசு, நன்னாரி, முருங்கை, இவை வேர்வகை கள. 1½ கூட்டி இடித்து வெருகடிப்பிரமாணம் 1-ம் நாள் சீனி 2-ம் நாள் வாழைப்பழம் 3-ம் நாள் தேன், 4-ம் நாள் தித்திப்பனங்கட்டி, 5-ம் நாள் குறுணலரிசிப்புக்கை, 6-ம் நாள் கரும்பு, 7-ம் நாள் மாதுளம் பழரசம் இப்படி 7 நாட் காலைமாலை சாப்பிட்டு 8-ம் நாள் ஓமம் பாலிலரைத்துப் பாலிற்கரைத்துத் தலைக்குவைத்துத் தோயவும், அடுத்தநாட் குளிக்கவும். இப்படியே 7 நாட் தோய்ந்து 7 நாட்குளித்துவரத் தீரும் நோய். வாதம் 80-ம் மேகம் 21-ம் கிரந்திகள் 18-ம் இவைபோற் பலவியாதிகளும் தீரும்.

**பத்தியம்:-** முருங்கைஇலை, முருங்கைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, புடல், துவரம்பருப்பு, வறுத்துக்குத்திய பாசிப்பயறு, விரால்கருவாடு, முதலியன ஆகும். உப்புவறுத்துக் கூட்டவும். புளி, புகையிலை நீக்கவும். இச்சாபத்தியங் காக்கவும்.

## அஸ்வகெந்திச் சூரணம்

கொள்ளவே அஸ்வகெந்திச் சூரணங்கேள்
கூறுகராம் பொன்று நாகம்ரெண்டு
தெள்ளவே ஏலம்நால் மிளகோரெட்டு
திறமான திற்பலி ஈரெட்டுச்சுக்கு
விள்ளவே முப்பதோடிரண்டு கூட்டி
வயன சுவகெந்தி அறுபத்திநான்கே.

வேறு சிலமுறையில் இவைகளோடு இயங்கும்
சீனப்பாவும் வகைக்குக் கால்ருத்தல் சேர்ந்துள்ளது

நள்ளவே சுத்தி செய்திடித்துக் கொண்டு [யே
நண்ணு மிளவறுப்பாய்ச் சூரணத்தைச் செய்



செய்யப்பா சர்க்கரையைச் சமனாய்க்கூட்டி
திறமான ஆவின்பால் நெய்யிற்கொள்ள
கையப்பா அளவுவெருகடியே யாகும்
கனமான மேகவகை எல்லாந்தீரும்
மெய்யப்பா அஸ்திசுரம் அஸ்திவெட்டை
மேலான சுவாசமொடு ஈளைபோகும்
செய்யப்பா மேகத்தின் பாண்டுபோகும்
தளமான ஊறலெல்லாஞ் சாந்தமாமே.

## நவநாச மெழுகு

இலிங்கம், தாளகம், மிருதாரசிங்கி, மனோசிலை, கெவுரி வெள்ளை, சூதம், கெந்திவீரம், பூரம், துரிசு வகை. கள. 1 வாளங் கள. 11. மேற்படி சரக்குகளை அன்னக்காடியாலரைத்துச் சீலையிற்பூசி இரும்புக்கம்பியிற்சுற்றி ஒருபடி நெய்யில் மடக்கிமடக்கி மூன்றுமுறை எரித்தபின் அத்தைலத்தை எடுத்து அதில் ஒரு களஞ்சுக்கு வேற்கொம்பு,பனங்கட்டி வகைக்குப் பலம். மூன்று. சூடன் கள. க. கூட்டி மெழுகாயரைத்து சுண்டக்காய் வீதம் 7 நாள் 10 நாள்ச் சாப்பிட எண்பது வாதமும் தீரும்.

## வீரமெழுகு (PillMass)

சுத்திசெய்த ஒரு பலம். வீரத்தை புதுமண்ணோட்டில் வைத்து கரிஅடுப்பின்மீது ஓட்டைவைத்து ஓட்டிலிடப்பட்ட வீரத்துக்கு கொட்டைபிடியாத வேப்பம்பிஞ்சை இடித்துப்பிளிந்த பால்படி ஒன்று இதை வீரம் புகையாமல் சிறுகச் சிறுகப் பால் முழுவதையும் சுருக்குக்கொடுக்க முடிவில் வீரம்மலர்ந்து மெழுகாகிவிடும். பின் ஓட்டினை நெருப்பை விட்டிறக்கி நன்றாயாறியபின் மெழுகை வழித்தெடுத்துக் கல்வத்திலிட்டு நல்லதேன் சேர்த்து இரண்டுமணி நேரமரைத்து வழித்துச்சிமிளில் வைத்துக்கொள்ளவும். இம் மெழுகைச் செய்துமுடித்து மூன்றுமாதங்கள் சென்ற

பின் தான் கொடுக்கலாம். அப்போமிகவும் நல்ல பலனைக் கொடுக்கும்.

எவ்வித குற்றமுமின்றிச் சுகஞ்செய்கிறது. இதை நோயுள்ளோருக்குக் கொடுக்குமுன் நோயின்பலம் நோயுற்ற ஆளின்பெலம் முதலியவைகளைக் கவனித்துக் கொடுத்தால் இதன்செயல் வியப்புக்குரியதாயிருக்கும். இம் மெழுகுக்கு சகலவாதமும், பட்ஷவாதமும், குன்மரோகம், அண்டவாதம், விரைவீக்கம், வலி முதலியன ஆச்சரிய யப்படத்தக்க முறையில் குணமாகும்.

### நசியம் — ஆக்ராணம் (Insufthation)

நிம்பம்பருப்பு முதலிவித்து நெகிழ்ந்தமிளகு பெருங்காயம்
அன்புற்றிருக்கும் பெருமருந்து அதில்வேற்கொம்பு சரிசமனுய்
இன்புற்றிருக்கும் எருக்கலம்பால் இசையஅரைத்து நசியமிட
கும்பிட்டோடுஞ் சன்னிஎல்லாம் கொடியவாத மெண்பதுமே.

### சேர்வாதத்திற்கு எரிதைலம்

துத்தந்துரிசு மனேசிலையும் துய்யநாவி ரசத்துடனே
தத்துங்குதிரைப் பாஷாணம் தாரங்கெந்தி கௌரியதும்
முற்றுமோரோர் விராகனிடை முதியமேனிச் சாறரைத்து
மற்றும்பாதி உண்டைசெய்து மறுபாதி சீலையிற்பரப்பேன்.

பரப்பிஉருட்டித் திரியாக்கிப் பகரைந்தெண்ணெய் தனிற்தோய்த்து
எரித்ததைலந்தனை எடுத்து இதமாயுடம்பு தனிற்பூச
மரித்தேகைகால் விழுந்ததுவும் வளரும் வாதமெண்பதுவும்
தெரித்தே பருதிமுன்பனிபோல் சேராக்குலைந்து போய்விடுமே.

### காளமேக நாராயண செந்தூரம்

வித்தகற்கு வேதமுனிசெப்பிய காளமேக நாராயணசெந்தூ
கெந்தகமெண்பது விராகனிடை அதுநேர் சூதம் [ரம்
கெடிதான சாதிலிங்கம் விராகனிடை மூன்று
அந்தமுள்ள மால்தேவி வராகனிடை எட்டு.



ஆனமனேசிலையு மிரண்டரை யதாகும்
பந்தமுடன் சுத்திசெய்தரைத்துக் கொண்டு
பாங்காகக் கலவத்தி லேத்துவாயே
ஏத்துவாய் எருக்கலம்பால் பொற்றலையின் சாறு.

இனிய தும்பைச்சாறு காணிச் சாறு
பூத்தமாதுளையின் சாறுபுகள்முருக்கம்பூச்சாறு புனிதமாக
ஏத்தியே சாமமொன்று அரைத்துப் பின்பு
நினைவாகக் குப்பிக்கு மண்ணேள் செய்து
வாய்த்தர விதனிலு லர்த்திமருந்தை யூட்டி
வளமாகக் கலவை கொண்டுமண் செய்வாயே
செய்தபின்பு தளலைவாய்ச் சட்டி தன்னில்
சேரவே நால்விரற்கு மண்ணைக் கொட்டி.

பையவே குப்பிதனை நடுவே வைத்து
பரிவாகக் கொண்டமட்டும் மண்ணைக் கொட்டி
ஐயமற அடுப்பேற்றி ஏழ்சாம மெரித்துத்தீர்ந்து
பையவே வயிரவற்குப் பூசை செய்து
வேண்டியே குப்பிதனை எடுத்து டைத்தால்
ஒப்பிலா முருக்கம் பூ நிறமேயாகும்
இடித்த திரிகடுகுத்தூள் கண்டங்கத்திரி ஆடாதோடை
திடமுடனே பிட்டவித்துப் பிளிந்து தேனில்.

சிந்தூரம் பணம்பாதி திவசம் பத்து
பரிந்து ரெண்டுநேர முண்ணத்திரும் நோய்கேள்
பெருவேன் காசமென்ற தெல்லாம் போகும்
பாங்கான எலிக்கடி தான் சுவாசகாசம்.
பொருளான மனிதற்கு மூர்ச்சை தாகம்
மோகமென் நின்றுகொல்லு மிளைப்புச் சன்னி
மூர்ச்சையுடன் சயகாசம் முறிந்து போகும்
வாய்ப்புள்ள திற்பலி தேனிற் கொள்ள.

வண்டுகடி பொன்பூசல் பதினெண் குட்டம்
தேகமெல்லாம் புள்ளி தோன்றல் நோவுவீக்கம்
செவ்வண்டு கடிவிஷமும் சிதறிப் போகும்
சிதறிவிடு மரையாப்பு நெஞ்சு நோவு
தீராதகண் நோவு கபால சூலை
உதிரமுடன் கடி சிரங்கு முன்னிட்டோடும்
உத்தமனே பீனசங்கள் ஓடும் பாரே
மூசுறுமுட்டை வெள்ளுள்ளித் தைலந் தன்னில்.

முகியாமற் பணவிடைதான் பத்துநாட் கொள்
பற்றுசன்னி தொண்ணூற்றாறும் வாத மெண்பதும்
பக்கவலி தனுர்வாதம் போகும் பாரே.
பாருமிந்த மிளகுசுக்கு பாங்கான வெங்காரஞ்சமனதாக
சேருமிந்தச் செந்தூரம் முருங்கைப்பட்டைச் சாற்றில்
நினைவாக லோகசெந்தூரம் பணவிடை தான்
கூட்டிச்சேர்த்து இருபோ துண்ணத் தீரும்
சந்நின்வாதம் பக்கவாதம் தீருமிந்த முகவாதம்
குத்துவாதம் மந்தவாத மகலுந் தானே.

## வாலைமெழுகு (பிரசண்டவாலை)

வாலைரசமும் கண்டங்கத்தரிப் பழமுந்தான் வாலைரசத் துக்குச் சுத்திஇல்லை இரண்டு களஞ்சு. வாலைரசத்தை 24 அவுன்சு கண்டங்கத்திரிப் பழச்சாற்றாலரைத்து மெழு காக்கிக் கல்க்கார்க்குப்புட்டியில் வைத்திருந்து சுண்டைக் காயளவு 5. 7 நாட்கள் உண்டுவர குட்டம், மேகம், கிரந்தி பவுந்திரம், அண்டவாதம், மூலவியாதி, குன்மம், ஐயம், சன்னி, மாற்சுரம், முயற்கண்டன் முதலிய எல்லாந் தீரும். விடத்தல் வேர்ப்பட்டையை மெழுகுபோலரைத்து அதற் குள் வைத்துக் கொடுக்கவும் இதுவே பொது அனுபானம்

பத்தியம்:- மாமிசமாகாது, குளிப்பாகாது, இச்சாபத் தியம். நீரழிவுக்குப் பொன்னுவரைப் பூவை மெழுகுபோல ரைத்து அதனுள் வைத்துக்கொடுக்கவும் தனியேயுங்



கொடுக்கலாம். மேற்படி வியாதிகள் கருடனைக் கண்டபாம்பு போலோடும் இது போகர் சப்தகாண்டம் அகத்தியர் 4000 த்திலும் பரிபூரணத்திலுமுண்டு. வாயிறு அவியாது.

## தாளங்காய்க்கிரந்தி எண்ணெய்

கேளப்பா தாளங்கா யெண்ணெ யொன்று
  கெட்டியாய்ச் சொல்லுகிறேன் கிரந்திக்கெல்லாம்
வாளப்பா தாளங்காய்ச் சாறு நாழி
  வாகானமுருக் கினிலைச்சாறு நாழி
சூழப்பா இயங்கினுடைய சாறு நாழி
  சுழலான குக்கிடத்தி னிலையுந்நாழி
வீழப்பா பீச்சு விழாச்சாறு நாழி
  விரவியதோர் குன்றுமணிச்சாறு நாழி.

சொல்லக்கேள் துரிசுடனே துத்தந் தானும்
  துடியான கெந்தகமுஞ் சாதிலிங்கம்
அல்லக்கேள் ரசத்துடனே நீரின் வெட்டி
  ஆனதோர் சரக்காறுங் களஞ்சுநாலு
வெல்லக்கேள் இரு சீரகங்கள் ரெண்டும்
  விதமாக ஒரொன்று பலமோபாதி
மெல்லக் கேள் செயங்கொட்டை நாற்பத்தைந்து
  மேலான நேர்வாளம் நூறுகொட்டை.

தானான திற்பலியுங் களஞ்சு ஐந்து
  தழராதே கிருமிசத்துருவு மைந்து
தேனான வெள்ளைப் பாஷாணம் ரெண்டு
  தெளிவான வேப்பெண்ணெய் தேங்காயெண்
மேமேகேள் வகை வகைக்கு நாழிகூட்டி [ணெய்
  மெழுகுபதமாய் வடித்துஉள்ளே கொண்டால்
தோணுதகிரந்தி முதற்குட்ட மெல்லாம்
  தொலைந்துவிட வெகு சுருக்கிற் சொல்லிவிட் [டேன்.

சொன்னதொரு எண்ணெய் காசிடையே கொண்டால்
சோராமல் நாலுதரம் பேதியாகும்
அன்னமொடு பால்கூட்டிக் கொண்டாயானால்
அளவற்ற நோய்களெல்லாம் மகன்று போமே
நன்நயமாய் நாள்மூன்று கொள்வாயானால்
நாடிவரு கிரந்தி பதினெட்டு மோடும்
வன்னமொழி மடமயிலே சொல்லக் கேளாய்
வலிமைமிகு மெண்ணெயுடை பெருமைதானே.

பெருமையுடனே உண்ணக் கண்ட மாலை
போகாத குரலடைப்புக் காதிரைச்சல்
அருமையுறு செவ்வாப்புக் கருவாப் போடு
ஆனதொரு கெற்பணியின் வீக்கந்தீரும்
கருமமாம் முடக்குடனே பிடிப்புத் தீரும்
கால்கையிலுள்ள விறைப்பகலுந் தானே.

## உதிரி வாதங்கள்

### (சிறப்பாக கவனிக்க வேண்டியவை)

வாதரோக மெண்பதிலும் சில வாதங்கள் நீடித்தவையாயும் மிகவும் ஆபத்தானவை யாயுமுள்ளன- அதாவது பாரிசவாதம், அல்லது பீசார்வாதம், நடுக்குவாதம், முகவாதம், பிடரிவாதம், தோள்ப்பட்டைவாதம், இடுப்புவாதம், விறைப்புவாதம், அடிஎடுத்து வைக்கமுடியாது நோகும் வாதம் அல்லது குதிவாதம்,, கெண்டைவாதம், மௌனவாதம், அழல்வாதம், ஆனைக்கால்வாதம் போல்வன,

### பாரிசவாதம்

இது முன்னரே மூலையிற் கூறப்பட்டிருப்பதால் கூறியது கூறல் என்னுங் குற்றத்துக்கஞ்சி விடப்படுகிறது.

### முகவாதம்

சூட்டினால் மலச்சிக்கலேற்பட்டு சாப்பாட்டை ஏற்க ஏலாது. பெலவீனமுற்றவர்களுக்கு குளிரான வேளைகளில் ஒரு பக்கத்துக்குமட்டும் குளிர்கடுமையாய்த் தாக்குவதால் இந்நோய் ஆரம்பமாகி முகத்தில் ஒருபக்கம் வீங்கி



விறைத்து கண், வாய், நாக்கு, மூக்கு முதலிய உறுப்புகள் கோணி விகாரமடைந்து தலைநோ, தலைக்கனம் முதலிய குணங்களோடு சிலசமயங் காய்ச்சலுங்கண்டு வருந்துவர். இதை உடனடியாகக் கவனித்து ஏற்றசிகிச்சை பெருது அசாக்கிரதை யாயிருந்துவிட்டால் முகத்திலொருபக்கம் கோணலாகத்திறங்கும், பேசமுடியாது, கொன்னிக்கும், ஒருகண் மூடமுடியாமல் சதாஓரளவு நீர்வடிந்து கொண்டிருக்கும், நாவைப் புரட்டிக் கொன்னிப்பாயன்றிப் பேசமுடியாது, சாப்பிட்டால் ஒருபுறக் கடைவாய்வழியாய் ஒழுகும் எச்சியைச்சரியாய் விழுங்கவோ துப்பவோமுடியாது அவஸ்தைபட நேரிடும். இது (*Half Face Paralysis*) "காவ் பேஸ் பரலிசிஸ்" என்று சொல்லப்படுகிறது. இதற்குப் பஞ்சகர்ம சிகிச்சைகளுமவசியம் கையாளப்பட வேண்டும்.

### பஞ்சகர்மங்களாவன

1. உவாந்தி 2. பேதி சலபேதி மலபேதி 3. நசியம் ஆக்ராணம் 4. கலிங்கம் அல்லது கலிக்கம் 5 வஸ்த்தி ஒத்தணம் பூச்சு மலசலப்பீச்சு.

### இதற்கு ஆரம்ப சிகிச்சை

முதல் தயிர்வளை, முருங்கைப்பட்டை, இஞ்சி வெற்றிலை முதலியவைகளைச் சமமாயெடுத்து வெதுப்பி அரைத்துப் பிளிந்து வாதசிந்தாமணி, வாதாரி, குருராசன் போன்ற வாய்வையுங் குளிரையும் பெலமாய்க் கண்டிக்கக் கூடிய மருந்துகளிலொன்றை 3 நேரங் கொடுத்து வாத கஷாயம் முகவாதப்பூச்சு இவைகளை 3 நாட் காலைமாலை பாவிக்கவும் தலைக்கனம் தலைநோ அல்லது விறைப்பு இருப்பின் ஒருபிடி வேப்பிலையும் ஒருதேறு இஞ்சியும் அவித்து வேதுபிடிக்கக் குணமாகும். பின் பேதி கொடுக்கவும். முன்னையே பூலோகசஞ்சீவி, வாதராட்சதன், வாதாரி போன்ற மருந்து எதையுங்கொடுத்து மலசுத்திசெய்து கொள்வதுந் நன்று. முன்னேபின்னே வசதிகண்டு செய்

யவும் தவறின் பாரிசவாதத்துக்குச் சொல்லப்பட்ட மருந்துகள் பாவிக்க வேண்டியும் நேரிடலாம்.

## பிடரிவாதம்

இது கழுத்து நரம்பைப்பற்றியது கழுத்தை ஒருபக்கமுந் திருப்பமுடியாது அண்ணாந்து பார்க்கவும்முடியாது பக்கத்திலுள்ளவர்களை பார்க்கவும் முடியாது நிமிர்ந்துநிற்பதும் நடப்பதும் மணவறையிலிருக்கும் புதுமாப்பிள்ளையைப் போலத்தானிருக்கும். ஆகையாலிதை மாப்பிள்ளை வாதம் என்றும் சொல்வர். இது மாமிசம் மேதஸ் இவைகளிலேற்படும் மாறுபட்டாற் கிரந்திகள் தடித்து வாழைக்காய் போல் வீங்கி தொட்டுப்பார்த்தாற் கல்லுபோற் கெட்டியாயிருக்கும் போகப்போகக் குத்து, வலி, எரிவு, அழற்சி முதலிய குணங்களேற்பட்டு வேதனை செய்யும். இதற்கு மூலகாரணம் மேகநோய் தானென்று சித்த ஆயுள்வேத யூனானி சாஸ்த்திரங்கள் கூறுகின்றன. இது முகவாத ஆரம்பசிகிச்சைகளுக்கு வசப்படாவிடில் ஆறுமுகசெந்தூரம் இரசகெந்திமெழுகு, நந்திமெழுகு, பிரசண்டவாலை, நீலகண்டவாலை இவற்றில் ஏற்ற ஒன்றை 3, 5, 7 நாட் கொடுத்து மேலே பற்றிடவும்.

### ஷெ. பூச்சு

1 வேப்பம்பட்டை, பூவரசம்பட்டை, பீநாறி, செஞ்சந்தனம் சமனிடித்துத் தூள்பண்ணி வெந்நீரிலரைத்து எலுமிச்சம்புளி விட்டுக் குழைத்துப்பூசவும். பிடரிவாதம், வீக்கம், உளைவுகுத்து, விற்புருதி தொடக்க வீக்கம் இவை தீரும்.

2 சதகுப்பை, கடுகு, பூடு, எள்ளு, முத்தாமணக்கம்முத்து நீர்வத்தற்தேங்காய் இவை சமனெடுத்துச் சேர்த்திடித்து பசுப்பாலிலரைத்துப் பூச மேற்படி குணங்கள் சாந்தியாகும்.



3 மருதோன்றி, நீலிகார்த்திகைக்கிழங்கு, குன்றுமணி, எட்டி, கஞ்சா, வசம்பு, காயம், உள்ளி, பீநாறிப்பட்டை இவைகளை வெந்நீரிலரைத்துப் பூச மேற்படி கட்டிகள் கரையும் நோ, வீக்கம், கனதி குணமாகும்.

## தோள்ப்பட்டை வாதம்

இந் நோய் ஒரு தோள்ப்பட்டையில் குறிப்பிட்ட இடத்தில் சிறிது வலியுண்டாகும் தொடக்கத்தில் கையை அசைத்தால் மட்டும்வலிக்கும். பின் சும்மாயிருந்தாலும் வலிஏற்படும் மறுபடி இந்தவலி அதிகமாகி தோள்முழுவதும் பரவி கைமுழுவதுமே வியாபித்துக் கையை ஆட்டவோ அசைக்கவோ முடியாதநிலையில் வந்துவிடும் காலக்கிரமத்தில் தோள்பட்டை மெலிவடைந்து பூட்டுத்தளர்ந்து நெகிழ்ந்துவிட்டதுபோற் தோன்றும். இது மிகவுமாபத்தான வாதரோகம். ஆரம்பத்திற் தக்கசிகிச்சை செய்யாவிட்டால் முகவாதத்தைப்போல் அங்கவீனம் மேற்படவுங் கூடும்.

## இடுப்புவாதம் அல்லது இடுப்புப்பிடிப்பு

இடுப்பிற் பிடித்துக்கொள்ளும் இப்படி அப்படி திரும்பமுடியாது படுக்கமுடியாது தவறிச்சிறிது அசைந்தால் ஒரு மின்னால் மின்னுவதுபோல் சகிக்கமுடியாது இடுப்புக்குந் தொடைக்குமுள்ள பூட்டில் ஏற்படுமிந்த வாதத்தினால் நடத்தல், இருத்தல், நிற்றல், கிடத்தல் முதலியன செய்ய முடியாமல் அவஸ்த்தைப்படநேரிடும். இது சிலசமயம் நாரிவாதசூலையாகி முள்ளந்தண்டு நேரேதிரண்டு சூலையாவதுமுண்டு அதிற்சீழ்பிடிக்க நேரிடில் அதுமிகவுமபாயகரமானது அது சிலசமயம் கூனலையும் உண்டாக்கிவிடுவதுமன்றி முள்ளந்தண்டு மெடுக புற்றுக்கிப் (Cancer) பரிணமிக்கவுங் கூடும்.

## எண்பது வாதத்திற்கும் சிகிச்சை

1 முன் கூறியபடி தாளங்காயெண்ணெய் கொடுத்து,

2 பின்வாத சமனகஷாயம் பிரம்புமூலக்கஷாயம் ஏதேனு மொன்றைக் கொடுத்துச் சமப்படுத்திவிட்டு,

3 ரோகத்தின் வன்மைமென்மைக்குத்தக்கபடி சூரணமோ பற்பமோ செந்தூரமோ மெழுகோ தகுதிகண்டு கொடுக்க வேண்டியது,

4 பாரிசவாதத்துக்கு; 1. லிங்கசெந்தூரம் 2. ஆறுமுகசெந்தூரம் 3. பஞ்சசூதம் 4. பிரசண்டவாலை 5. கனகலிங்க மெழுகு 6. வான்மெழுகு 7. மகாவல்லாதி 8. வீரமெழுகு 9. நாராயணசெந்தூரம் 10. வாலைமெழுகு 11. ரசகெந்தி மெழுகு முதலியன எவ்வித வாதங்களையுந் தீர்க்கக் கூடியவை.

அவைஅன்றி வாதசூரணம், வாதராக்ஷதசூரணம், வாதராசாங்கம், மேகாதி, அஸ்வகெந்திச்சூரணம், பறங்கிக் கிழங்குச் சூரணங்களும் நடைமருந்துகளாய்ப் (பாவிக்கத் தகுந்தவை) என்பது நம் சித்தவித்ஞானிகளின் தீர்ப்பு அதை நம் அனுபவத்திலுங் காணமுடிகிறது.

1 லிங்கசெந்தூரம் வெகுவிரைவிற் சுகங் கொடுக்கக் கூடியது.

2 ஆறுமுக செந்தூரம்: ஒரு நாளைக் கொருநேரம் 12 நாட்களுக்குத் தேனிற்கொடுக்கத் தீரும் இது நரம்பைத் தளர்ச்சி அடையாமற் செய்யும் நரம்பைப் பெலப்படுத் தவுமுதவுகிறது.

3 பஞ்சசூதம்: இதிலும் வேளைக்கு அரிசி எடை 12 நாட்களுக்கு வெண்ணெய் வெல்லம் இவற்றிற் கொடுக்கத் தீரும்.



4 கனகலிங்கமெழுகு: இம்மெழுகை 15 நாட்களுக்குக் கொள்ள 80 வாதமுந் தீரும்.

5 வான்மெழுகு: இதில் வேளைக்கு உழுந்தளவு 5, 6 வேளை கொடுக்கக் குணமாகும்.

6 வாலைமெழுகு: இதை வேளைக்குச் சுண்டைக்காய் வீதம் 5, 7. 16 நாட்கள் கொள்ளக் குணமாகும்.

7 வீர மெழுகு. இதில் வேளைக்குக் குன்றி அளவு 7நாள் உட்கொள்ளத் தீரும். நோயின் பெலம், ஆளின்பெலம் முதலியன கவனித்துக் கொடுத்தால் இதன் குணம் வியப்புக்குரியதாயிருக்கும்.

8 நாராயண செந்தூரம்: 10 நாட் காலை, மாலை நெற்பொரி, ஓமம், சுக்கு, மிளகு இவைகளை வெதுப்பிப் பொடித்த சூரணம் வெருகடியுடன் $\frac{1}{2}$ 1 குன்றி செந்தூரம் கூட்டி முருங்கைப்பட்டைச் சுரசம் சேர்த்துண்ணச் சகல வாதமுந் தீரும்.

9 நீலகண்டவாலை, விடத்தல் வேர்ப்பட்டையை மெழுகு போலரைத்து சுண்டைக்காயளவு அதனுடன் வைத்துண்ண 5, 7, 16 நாட்களுண்ண சகல வாதம், குட்டம், மேகம் முதற் சகலதும் தீரும்.

## நடுக்குவாதம்

கடுப்புட னுளைந்துகுத்தி கையினை நடுக்கும்மேனி
துடித்துடல் நடுநடுங்கித் துணிந்தொன்றை எடுக்கொணாது
வடுப்புற வளையுங்கண்கள் வகிர்மருப் புரவுமின்னே
இருப்பிற் கைநடுக்குவாத குணமிது புகலலாமே.

## மவுனவாதம்

பேச்சில்லைக் காதுங்கேளா பெலத்திடு மௌனவாதம்
மூச்சில்லைப் பசாசுபோல முகையா யிந்துசோம்பும்
வீச்சில்லை உழைந்து குத்திவெருகுண வீனஞ்செய்யும்
காச்சில்லை மௌன வாதக்கடுங்குணங் களறுங்காலே.

## மகாவல்லாதி

**நாக்கு வழங்காத வாதத்துக்கு:-** திரிகடுகு, கடுகு காயம், ஓமம், இந்துப்பு, உள்ளி, வசம்பு, கருஞ் சீரகம் வெளுத்தற்பிகிள், கடுகுரோகணி, சன்னியள்நாயன் இவை சமன் பொடிசெய்து நாரத்தம்பழ ரசத்தில் அல்லது தேனிற் குழைத்து நாக்கிற் தடவவும். தடவிச் சாப்பிடவும்.

## குதிவாதம்

குதிக்காலை நிலத்திலூன்றி நடக்கமுடியாது நோகும் வாதம் குதிவாதமெனப்படும். இதில் குதிக்கால், கெண்டை, முழங்காற்பூட்டு, இடுப்புவரை நோ, உளைவு, விறைப்பு, வலி முதலிய குணங்களுண்டாய் வருத்தஞ்செய்யும்.

**கால்மிதிக்க முடியாது நொந்தால் பூச்சு:-** ஆனைவணங்கி தயிர்வளை, உத்தமாகாணி, மொசுமொசுக்கை ஓரளவு எடுத்து இடித்துப்பிழிந்து அச்சாற்றுடன் நிலப்பனை உள்ளிகூட்டி அரைத்துச் சூடாக்கிப்பூச படம்அடிஎடுத்து வைக்கமுடியாமல் நோகும். வாதம் அழல்வாதம் முதலியன தீரும்.

### ஷ சிகிச்சை

மலசுத்திசெய்து சமப்படுத்தற் கஷாயங் கொடுத்து பின் அஸ்வகெந்திச் சூரணத்தை பால் கற்கண்டிற் காலை மாலை சாப்பிட்டுவரக் குணமாகும். மேற்படி பூச்சு இதற்கு முக்கியமான பூச்சென்பது.



## அழல்வாதம்

விரலினிரண்டு காலும்மிகுந்த வுள்ளடியுந் நொந்து
எரியினில் வைத்தாற்போலே யெலும்புற யுலர்த்தியங்கம்
புரைதனிற் புழுக்களூர்தல் போலவே நடைகொடாது
கருதிடு மெரிவாதத்திற் கண்டிடு குணங்கள்தாமே.

கால் கை பாதத்தின் உள் அடி இவைநொந்து நெருப்புப் போலெரியும் சொறிவுமிருக்கும். இது பெரும்பாலும் பெண்களுக்கு வருவதை நாம் காணலாம். சிலருக்குப் பெற்றவீட்டில் கால்எரிவு, குத்துவலி முதலிய குணங்களோடு வருவதுண்டு குழந்தையைத் தூக்கவோ அணைக்கவோ வருந்துவர். எரிவு, அழற்சி அதிகம், கால் நடக்கமுடியாது, கை எடுக்கமுடியாது சிலதருணம் கைவிரல் கால்விரல்களை முடக்கி விடவும் கூடும்.

## விறைப்பு வாதம்

இது மேகச் சூடு காரணமாய் ஏற்படுவது. இதில் உணர்ச்சி நரம்புகள் செயலற்றுப் போகிறது.

## கை கால் எரிவிற்கு

அமுக்கிராய் பலம 3, சீனப்பா பலம் 4 இடித்துச் சூரணித்து பசுப்பால் அல்லது நெய்யில் 40 நாட் சாப்பிட்டு வர வயிற்றெரிவு, கை கால் எரிவு, விறைப்பு முதலியன தீரும்.

## மகா வாத தைலம்

வேலிற் பருத்திச் சாறு படி ½, எருக்கிலை, குப்பைமேனி, தயிர்வளை, வீளி, நொச்சி, நாயுருவி, தூதுளை, கண்டங்கத்தரி, இயங்கு, கொடிவேலி, துளசி, ஊமத்தை, மருதோன்றி, கழற்சி, மிழகறணை, திருகுகள்ளி இவைகளின் சாறு வகை படி ¼, வேப்பெண்ணெய் படி 1¼, ஒன்றேகால், சரக்கு திற்பரி, திற்பலி மூலம், ஆனைத்திற்பலி, ஓமம், அரத்தை, தாளிசபத்திரி, சுக்குக் கண்ட

திற்பலி, சிறுநாகம்பூ, கடாமாஞ்சில், குருசாணி, வசம்பு உள்ளி, இஞ்சி, வெழுத்தற்பிசின் இவை வகை. பலம். ½ வெள்ளைப்பூடு ஒரு வீசை, மயிலிறகு சுட்டசாம்பல் பலம். 1

**செய்பாகம்:-** ஒரு தைல பாத்திரத்தில் சாறுவகை எண்ணெய் இவைகளை முற்றும்விட்டு கலந்துஅதிற் கற்க வகைகளை இடித்தரித்து வெள்ளாட்டுச் சலத்தில் அரைத்துப் போட்டு வெள்ளைப்பூட்டையு முடைத்து அரைத்துப் போடவும். மயிலிறகு சுட்டகரியுமத்துடன் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாலெரித்து வண்டல்மணற் பதத்தில் வடித்து ஆறவைத்து 25 கோழிமுட்டை மஞ்சட்கருவிலிருந்தெடுத்த தைலத்தையும்விட்டு யாவையும்நன்று உறவாக்கிக் கொள்ளவும். இதுவே மகாவாததைல மெனப்படும். இதை வாதரோகங்கள், சூலை, முடக்கம், பிடிப்பு, சன்னி, மரணவாதசன்னி, மீறிய கபம் இவையாவுந் தீரும்.

### பொசிநேயப் பொட்டளி

அணிஞ்சில்விரை, சணல்விரை, கொள்ளு, கடுகு, முருங்கைவிரை, பூனைக்களர்ச்சி ஆமணக்கு, புங்கம்விரை, சதகுப்பை,வெள்ளுள்ளி,வாலுளுவை ,கருஞ்சீரகம், வேப்பம் விரை வசம்பு, சுக்கு, எள்ளு, நீர்வத்தற்தேங்காய், உழுந்து, வகை. களா. 3. எல்லாங்கூட்டி இடித்து பழத்தேங்காய் ஒரு பாதி திருவி சேர்த்திடித்து கடுகெண்ணெய், புங்கெண்ணெய், இலுப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய், வேப்பெண்ணெய் ஆகிய ஐந்தெண்ணெயும் ஒவ்வொரு தேக்கரண்டி வீதம் சேர்த்துப்பிசறி ஒத்திடவும்.

இவைகளுடன் எட்டுக்கோழிமுட்டை மஞ்சட்கருவும் வறுத்து அத்தைலமுங் கூட்டவும். உச்சி, பிடரி, கழுத்து நரம்புகளுக்கும் வழங்காத பக்கநரம்புகளுக்கும் ஒத்திடவும். பாரிசவாயு முதலாஞ் சகலவாதமுந் தீரும் (கை கண்டது)

## கண்

### (நயனவிதி)

காண உதவுவது கண் உடலின் தலைசிறந்த ஒண்பொருள் அவனிதனிற் சீவன்கள் எதையும் பார்க்கவோ, படிக்கவோ சிந்திக்கவோ உதவியாயிருப்பது கண். கண் கெட்டுப்போனல் இவைகளொன்றும் செய்யமுடியாது. ஊனக்கண் ஒழியாயிருந்தாற்தான் ஞானக்கண்ணைப் பற்றிய சிந்தனைகளு முண்டாகலாம். கண்தெரியாவிடில் எல்லா மொரே இருள்மயமாகவே இருக்கும். இதுவே மனிதயந்திரத்தின் "கெற்லைற்" (*Head Light*) எனலாம். கண்ணே உடலுக்கு ஒளியைக்கொடுப்பது "கண்ணிலான் என்னுளான்" என்று தமிழிலோர் பழமொழியுமுண்டு. "கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம்வாங்கினால் கைகொட்டி நகையாரோ" என்று ஓர் தமிழ்ப்பாடலுமுண்டு.

### நேத்திரரோக நிதானம்

நாம் உட்கொள்ளும் ஆகாரங்களில் அதிகக்கசப்பு, காரம், புளிப்புள்ள ஆகாரங்களை உட்கொள்வதால் தோஷங்கள் கோபமடைந்து பித்தத்தை அனுசரித்து "இஸ்ரோதஸ்" அதாவது கண்ணுக்குச் செல்லும் நரம்புக் குழாய்கள் வழியாக மேல்நோக்கிச் சென்று கண்ணில் வியாபித்து அநேக வியாதிகளை உண்டுபண்ணுகின்றன. அதிற் "கற்றூர்" காசரோகமென்பது இருட்டடிப்புச் செய்வதில் முதன்மைபெற்றது. அதற்கு "சுஸ்ருதர்" ஒப்பிரேசனும் அதற்காக வேண்டிய கருவிகளும் அதன் படங்களும் தாமெழுதிய ஏட்டில் பொறித்துள்ளார்.

### நல்ல கண்ணின் இலட்சணம்

வெள்ளைவிழியில் எவ்வித நிறமுமில்லாமல் நல்ல படிகம் போன்ற வெண்ணிறத்தோடும் சோதி என்று சொல்லப்படும். தாரையானது கருநிறத்தோடும் பார்ப்பவர் முக

மானது அதில்நன்கு தெரியக்கூடிய தாயுமிருந்தால் அந்தக் கண் நல்லகண்ணென்று தெரிந்துகொள்வாயாக.

## விழியின் அளவு

கண் விழியின்நீளம் இரண்டங்குலம் அகலம் அரை அங்குலம், ஆழம் ஓரங்குலமென அறிந்துகொள்வாயாக. கண்ணிலுள்ள கருவிழியானது முழுக்கண்ணின் மூன்றிலொருபங்காகும் சோதி எனப்படும் தாரையானது கருவிழியின் ஏழிலொரு பங்குமாகும்.

## கண் வேறுபாடடையுங் காலம்

மனிதனுக்கு முப்பத்தைந்து வயதுவரை கண்ணில் ஒருவகையான பார்வைவித்தியாசமும் உண்டாகமாட்டாது அதற்குமேல் பார்வை சிறிது புகைச்சலாயிருந்து நாற்பத்தைந்து வயதுக்குமேல் விலகிவிடுவதுமுண்டு அதற்குமேல் தூரத்துப்பார்வை ஐம்பத்தேழு வயதுவரை புகைச்சலோடிருந்து அதற்குமேல் பார்வை கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைவுபட்டுக் கொண்டேவந்து நூறுவயதான பிறகு பார்வை இருண்டுவிடும்.

## கண்ணின் வியாதித் தொகுப்பு

திரிதோஷங்களின் கெடுதியால் நால்வகைக் காசரோகங்கள் ஏற்படுவதா லறியக்கிடக்கிறது. அவற்றில் வாததோஷத்தால் நாற்பத்தைந்தும் கபதோஷத்தா லிருபதும் பித்தகோபத்தால் முப்பத்தொன்றுமாக தொண்ணூற்றாறு வியாதிகளுண்டென்றும் வேறு சோதி என்று சொல்லப்பட்ட பாவையில் இருபத்தேழும், கறுப்புவிழியிற் பத்தும், வெள்ளைவிழியிற் பதின்மூன்றுமாக மொத்தம் தொண்ணூற்றாறு வியாதிகளுண்டென்று அகத்தியர் நயனவிதி 500-ல் சொல்லப்படுகிறது. இருண்டகண்களுக்கு அவைகளின்



மாசுநீக்கி சுகமடைவதற்கேற்ற சிகிச்சை கிரியைகளையும் நம்சித்த புருஷர்கள் ஏற்கனவே கூறியிருப்பது வியத்தற்குரியதே. அதில் அகத்தியரும், நாகமுனிவரும் நயம்படக் கூறியிருப்பது மேல்.

## மருந்திடுங் காலம்

ஆனி, ஐப்பசி, கார்த்திகை இம்மாதங்களில் காலையிலும் மார்கழி, தை, மாசி, பங்குனி இம் மாதங்களில் மத்தியான நேரங்களிலும் மற்றச் சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, புரட்டாதி இம் மாதங்களில் பதினெட்டு நாழிகைக்குள்ளும் மேலோர் கண்ணில் மருந்திடுவர். மருந்துகுத்தல் சஸ்திரஞ் செய்தல் இவைகட்கு காலைநேரமும் கொம்பு வைத்து இரத்தம் வாங்குதற்கு மத்தியான நேரமும் அட்டைவிட்டு இரத்தம் வாங்குதற்குச் சாயங்கால நேரமும் ஏற்றவை என்று கூறப்பட்டுள்ளது.

## சிகிச்சை முறைகள் சில

### (ஓர் புற வளையம்)

இரும்பது வேகக்காய்ச்சி எலுமிச்சம்பழ நீர்விட்டு
உரம்பெறு கடுக்காய்சுக்கு இவை அந் நீராலுரைத்து
நிரம்பவே நெற்றிகண் சுற்றுமதனால் நீர்வளையம்பூசி
லரம்படு மருவிநீரும் அனலுறுசிவப்பும் போமே.

இரும்பை வேகும்படிகாய்ச்சி எலுமிச்சம்பழ நீர்விட்டுக் கடுக்காய், சுக்கு இரண்டாலு முரைத்து கண்ணைச் சுற்றியும்நெற்றியிலும் பூச கண்ணில்„உண்டாகும் பரு கண்ணில் நீர்வடிதல் கண்ணிலுண்டாகுஞ் சிவப்பு இவை நீங்கும். சொறியிருந்தால் சீனக்காரமும் கடுக்காயும் உரைத்துப் புறவளையமிடவும். கண்ணுள்ளுஞ் சற்றுத் தடவிவிடலாம்.

## கண் காசத்துக்கு

சங்கு, சுக்கு, மிளகு, திற்பலி, அரிதாரம், அதிமதுரம், புங்கங்கொட்டை, பீதரோகணி, துத்தம், மனோசிலை

இவை வகை. சமன். நந்தியாவட்டம் பூச்சாற்றால் அரைத்து தேனிற் சேர்த்துவைத்து விழிகளிற் பூசிவரக் கண்காசந் தீரும்.

### கருடப் பிரகாசம் வர

புங்கின்விதையை நெல்லிக்காய் ரசம் ஜாதிப்பூ ரசம், இவைகளாலரைத்துக் கண்ணிலிடக் கருடனைப்போற் கண் பிரகாசிக்கும்.

### சூரிய பிரபை

சந்தனம், இந்துப்பூ, லோத்திரப்பட்டை அரிதாரம், மனோசிலை இவைகளைக் குளிகை செய்துபோட 96 எல்லா வியாதியுந் தீரும்.

பனைமட்டைரசம், பற்படக கஷாயம், சிறிது பச்சைக் கர்ப்பூரமுஞ் சேர்த்துத் தாரைசெய்ய எல்லா வியாதியுந் தீரும்.

### கண்ணிற் பூவுக்கு

சங்கு, கடல்நுரை, இவைகளை ஆட்டுமூத்திரத்தில் அரைத்துக் குளிகைசெய்து கண்ணில்இட நூறுவருடத்துப் பூக்கூட மாறும்.

### கண் காசந் தீர

வெல்லம், கடல்நுரை, அஞ்சனக்கல், திற்பலி, மிளகு குங்குமப்பூ, இவைகளைச் சமமாகஎடுத்து பொடித்து தேன் விட்டரைத்து மைபோலச் செய்து கண்ணிலிட காசந் தீரும்.

### துத்தாஞ்சனம்

கோமூத்திரம், ஆட்டின்மூத்திரம், காடி, தாய்ப்பால், நெய், ஜலம், தேன் இவை ஒவ்வொன்றிலும் ஏழுதடவை, காய்ச்சித் தோய்த்துச் சுத்தமாக்கிய துத்தத்தைப் பொடி செய்து தேனிற்குழைத்துக் கண்ணிற்போட எல்லாவித கண் வியாதிகளும் தீரும். இதை உபயோகிப்பதால் கருடனைப் போலக் கண்பார்வை ஏற்படும்.



### அருந்ததி காண

சுழல்வண்டு சுட்டசாம்பல், வெள்ளுள்ளி, மிளகு, இவைகளை ஓர் நிறைபாய்க் கல்வத்திலிட்டு வெற்றிலைச் சாறும் நீர்முள்ளிச்சாறும் அரைத்து நல்லெண்ணெய் விட்டுக் களிமபுபோலரைத்து அந்திசந்தி மூன்றுநாள் கண்ணிற்தீட்டி விளக்கெண்ணெயைத் தலைக்குத் தேய்த்து நாலைந்துநாள் முழுகிவர அருந்ததி கண்ணிற் தோன்றும்.

### நேத்திரபேதி

ஈனாத எருமைச்சாணிப் பாலில் சிற்றாமணக்கம் பருப்பை இழைத்துக் கண்ணிற்தடவ நீர்வடிந்து மாசுநீங்கி நேத்திரஞ் சுத்தியாகும்.

### கண் மாசு நீங்க

நவச்சாரத்தை முலைப்பாலிலிழைத்து கண் இரைப்பைகளிற் தடவினால் கண்ணீர் வடிந்து கண் மாசுகளை அறுக்கும்.

### கண் சிவப்புக்கு

படிகாரம் காலணஎடை, சுகர்வெட்டு அதே அளவையும் ஆறுஅவுன்சு சுத்தசலத்திற் கரைத்து மெல்லிய துணியில் நனைத்து கண்களை துடைத்துவர கண்சிவப்பு, கண்களில் நீர்வடிதல், கண் அருவருப்பு இவை தீரும்.

### குருடனும் பார்வைபெற

(சுஸ்ருதம்)

பதினாறு லிட்டர் அல்லது 24 போத்தல் பசுப்பாலில் இறந்த ஒரு கிருஷ்ண சர்ப்பத்தையும் நான்கு தேள்களையும் போட்டு இருபத்தொருநாள் வைத்திருந்து அதைக் கடைந்து வெண்ணெயை எடுத்து ஒரு கோழிக்கு அதை மாத்திரம் உணவாகக் கொடுத்து அக்கோழியின் மலத்தை எடுத்துக் கண்களிலிடக் குருடனுக்கும் பார்வைஉண்டாகும்.

(16 லிட்டர் = 24 போத்தல்)

## படலம், அரிப்பு, குத்து இவை தீர

மிளகு 12 கிராம், நெல்லிக்காய் 24 கிராம், புங்கம் விரை 36 கிராம் இவைகளை எலுமிச்சம் பழரசத்தாலும் கரிசலாங் கண்ணிச் சாற்றாலும் அரைத்துப்போட படலம், அரிப்பு, குத்துவலி, அற்புதம் முதலியன எல்லாந் தீரும். ஒரு கிராம் 8½ குன்றி. மேலும் மிளகுசந்தனாதி, கர்ப்பூரசந்தனாதி, குருந்தோலைச்சந்தனாதி, இளநீரெண்ணெய், நயனவிதியெண்ணெய், சிரரோகசஞ்சீவி, நெல்லிக்காய்த்தைலம், கீழ்காய்நெல்லித்தைலம் முதலாம் தைலங்களும் சிறந்தவை. இவைகளைத் தொடக்ககாலத்தில் உபயோகித்து வருவதால் கண்ணிலுண்டாகும் கொடுநோய்கள் வாராது தப்பித்துக் கொள்ளலாம்.

## அறுசுவைப் பயன்கள்

| | | |
|---|---|---|
| தித்திப்பினால் | — | அதிக சுக்கிலமுண்டாம் |
| கரிப்பினால் | — | மேதையுண்டாம் |
| துவர்ப்பினால் | — | உதிரம்பெருகும் |
| கசப்பினால் | — | எலும்புவலுக்கும் |
| உறைப்பினால் | — | மாமிசம்வளரும் |
| புளிப்பினால் | — | எலும்பு நரம்புகள் தசை [வளரும். |

உண்ணுமாகாரங்களில் உப்பு அதிகமானால் பித்தமும் புளிப்புத்துவர்ப்பு அதிகமானால் வாதமும், தித்திப்புக் கசப்பு அதிகமானால் கபமும் அதிகரிக்கும்.

**கண்ணொளிக்கு வலிமை கொடுக்கும் ஆகாரங்கள்:-** நெல்லிக்காய், குங்குமப்பூ, வெள்ளி, தங்கம், கடுக்காய், வாதுமைப் பருப்பு, கஸ்த்தூரி முதலியன என்பர்.

**கண்விழிக்கு வலிமை கொடுக்கும் பதார்த்தங்கள்:** நெல்லிக்காய், குங்குமப்பூ, வெள்ளி, தங்கம், கடுக்காய், வாதுமைப் பருப்பு, கஸ்த்தூரி முதலியன.



## நோயணுகாதிருக்க

நிலமிசைமாந்தர் நோய்கள் நீங்கிடத் திங்களாறில்
சலமறச் சுத்திசெய்க தக்கதாம் இருமாதத்தில்
மலமறப் பேதிசெய்க மாதமொன்றினில் நசியம்
பலமுற மூன்றுநாள் அஞ்சனமிடப் பகர்ந்ததாமால்.

ஆறுமாதத்துக் கொருமுறை வாந்திமருந்தும், இரண்டு மாதத்துக் கொருமுறை பேதிமருந்தும், மாதத்துக்கொருமுறை மூக்கிலே நசியமும் மூன்று நாட்களுக் கொருமுறை கண் மருந்தும் உபயோகிக்க வேண்டும்.

மேற்படி நான்கு உபாயங்களிலும் பேதி செய்வதால் வாதமும், வாந்திசெய்வதாற் பித்தமும், நசியஞ் செய்வதால் கபமும் குறைவடையும். கண்ணில் மருந்திடுவதால் கண்களில் ஒப்பற்ற ஒளியுமுண்டாகிறது.

**முதலாம் பாகம் முற்றிற்று.**

## சித்த வைத்திய சிகிச்சைக் கிரமம்
[2-ம் பாகத்தில்]
**கீழ்க்காணும் தலையங்கங்களை உள்ளடக்கிய நூல் விரைவில் வெளிவருகின்றது.**

1. **கெற்பாசயம்:** *கெற்பரோகம், விவாகம், கரு உற்பத்தி பிரசவ நிர்வாகம்.*
2. **பாலவாகடம்:** *பார்ரோகம், கிரந்தி, தோசம், மாந்தம் கணம்.*
3. **உதிரிப்பாகங்கள்:** *மருத்தீடு, மனநோய், முறிவு, தறிவு நோ.*
4. **தலைப்பொடுகு:** *முகமினுக்கு, இஸ்நானப்பொடி, கூந்தல் உதிர்தல், வளர்தல், நரை, வழுக்கை தீர, முடி வளர, இளநரை தீர.*
5. **புடவகை:** *பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயப்புடம் முதலியன.*
6. **எரிப்புத்திட்டம்:** *விறகுப்புடம், எருப்புடம், கரிப்புடம் திரிப்புடம்.*
7. *சாதாரண அளவுகள்*
8. *சர்ப்ப சாஸ்த்திரம்*
9. *மூலிகை மர்மம்*

## அட்டவணை


| பெயர் | | | பக்கம் |
|---|---|---|---|
| **அ** | | | |
| அண்டபிண்ட அமைப்பு | ... | ... | 12 |
| அன்னாசயம் | ... | ... | 50 |
| அயகெந்தி பஸ்பம் | ... | ... | 53 |
| அன்னக்குழாய் | ... | ... | 49 |
| அட்டசூரணம் | ... | ... | 62 |
| ஷை | ... | ... | 63 |
| அகுவையின் குணம் | ... | ... | 66 |
| அண்டவாயு | ... | ... | 86-88 |
| அண்டவாயுவின் ஆரம்பசிகிச்சை | ... | ... | 88 |
| அண்டவாயுவுக்குக் குளிகை | ... | ... | 89 |
| அமிர்தசஞ்சிவி மாத்திரை | ... | ... | 136 |
| அமுதசர்க்கரைச் சூரணம் | ... | ... | 103 |
| அஸ்வகெந்திச் சூரணம் | ... | ... | 206 |
| அமுதசர்க்கரைலேகியம் | ... | ... | 124 |
| அமுக்கிராய்லேகியம் | ... | ... | 124 |
| அசுத்தநிவாரணிகள் | ... | ... | 129 |
| அதிசாரசுரத்தின் குணம் | ... | ... | 155 |
| அருந்ததிகாண | ... | ... | 225 |
| அறுசுவைப்பயன்கள் | ... | ... | 226 |
| அழல்வாதம் | ... | ... | 219 |
| அதிசாரசுரம் | ... | ... | 151 |
| **ஆ** | | | |
| ஆத்மசுத்தி | ... | ... | 6 |
| ஆயுள்வேதம் 8 பிரிவுகள் | ... | ... | 15 |
| ஆரம்பவெள்ளைக்கு | ... | ... | 106 |
| ஆரம்பமேகரணம் அல்லது கொறுக்கு | ... | ... | 108 |
| ஆமவாதகுணம் | ... | ... | 200 |
| ஆமவாதபூச்சு ஒத்தணம் | ... | ... | 200-205 |

## இ

இரண்டாம் நாலாம் நூற்றாண்டு ... ... 15
இந்துப்புப்பற்பம் ... ... 55
இரத்தக்கிருணி வயிற்றுளைவுத்தூள் ... ... 63
இரத்தாசயம் ... ... 115
இரத்த அமுக்கம் ... ... 164
இரத்தபித்தம் இரத்தவாதம் ... ... 165
இரத்தபித்தம் ... ... 166
இரத்தவாதம் ... ... 167
இரத்தஓட்டம் ... ... 119
இரத்தச்சுழற்சி ... ... 120
இருதயகமலவீக்கந்தீர ... ... 124
இருமல் ரோக ஆரம்பசிகிச்சை ... ... 134
இரத்தவாதப்பூச்சு ... ... 220
இரத்தஇளைப்பிருமல் ... ... 134
இரைப்பிருமல் ... ... 134
இரத்தவெரிச்சலிருமல் ... ... 135
இரத்தபித்தசுரம் ... ... 150
இரத்தசுரம் ... ... 150
இருதயஞ்சுருங்கல் ... ... 124
இலிங்கவீக்கத்துக்குப்பீச்சு ... ... 107
இலிங்கப்புற்று ... ... 175
இரசகெந்திமெழுகு ... ... 179
இராசாங்கம் புற்றுப்பதங்கம் ... ... 180
இராமபாணப் இடிமருந்து ... ... 182
இரத்தவாதகுணம் ... ... 199
இடுப்புவாதம் அல்லது இடுப்புப்பிடிப்ட ... 215
இரத்தவாதம் ... ... 167
இரத்தவாத குணம் ... ... 199

## ஈ

ஈறுகரைதல் ... ... 44



ஈரல் (*Liver*) ... ... 65
ஈரல்வியாதியின் குணங்குறி ... ... 66
ஈரலின் தொழில் ... ... 65

## உ

உயிரைநிலைக்கச்செய்ய ... ... 5
உடலமைப்பு ... ... 24
உடற்கூறுகள் ... ... [illegible]2
உபஅங்கம் ... ... 80
உட்டணம் வெள்ளைவெட்டை ... ... 107
உட்குத்துச்சிவாதம் ... ... 140
உதட்டுப்புற்று ... ... 172
உழுந்தெண்ணெய் ... ... 202
உதிரிவாதங்கள் ... ... 212

## எ

எலும்புக்கூடு ... ... 30
எகுத்து ... ... 66
எண்பதுவாதத்துக்கும்சிகிச்சை ... ... 216

## ஒ

ஒளிச்சிகிச்சை கிரந்திசூலை ... ... 187
கிரந்திசூலைப்புகை ... ... 187

## க

கருணிகள் ... ... 20
கண்டக்கிரந்திக்குணம் ... ... 46
கண்டமாலை மிடற்றுநோவு ... ... 48
கன்னக்கட்டு ... ... 49
கல்லீரலின்தொழில் ... ... 65
கவுசியின்குணம் ... ... 67
கணையம் (*Pancreas*) ... ... 89
கல்லடைப்பு ... ... 110
கன்னப்புற்று ... ... 172

கருப்பைப்புற்று ... ... 174
கண்டமாலை ... ... 176
கண் (படும்காலம்) ... ... 221
கண் வேறுபாடடையுங் காலம் ... ... 222
கண்ணின் வியாதித் தொகுப்பு ... ... 222
கண்காசத்துக்கு ... ... 223
கருடப்பிரகாசம்வர ... ... 224
கண்ணிற்பூவுக்கு ... ... 224
கண்காசந்தீர ... ... 224
கண்மாசுநீங்க ... ... 225
கண்சிவப்புக்கு ... ... 225
கண்விழிக்குவலிமைகொடுக்கும் ... ... 226
கழற்சிச்சூரணம் ... ... 88
கழற்சிமாத்திரை ... ... 86
கருஉற்பத்தி இயல் ... ... 28

**கா**

காப்பு காயசித்தி ... ... 6
கார்போகிச்சூரணம் ... ... 188
காளமேக நாராயணசெந்தூரம் ... ... 208
காய்ச்சல்விடும்நாடி ... ... 163
காய்ச்சலோடுகூடிய செங்கமாரிக்கு ... ... 70
கால்மிதிக்கமுடியாது நொந்தால் ... ... 218

**கி**

கிருணி ... ... 61
கிருணிக்கு வெற்றிவேலாயுதன் ... ... 64
கீழ்க்காய் நெல்லித்தைலம் ... ... 73

**கு**

குன்மம் ... ... 50
குன்மம்வரக்காரணம் ... ... 50
குன்மத்துக்கு ... ... 53
குருபஸ்ப்பம் ... ... 55





குன்மமெட்டுந்தீரச்சூரணம் ... ... 54
குடகிரி ... ... 83
குடகிரியின் பூர்வ ரூபம் ... ... 83
குடகிரியின் குணம் ... ... 83
குடகிரியின்சிகிச்சைக்கிரமம் ... ... 84
குடல்வர்தம் ... ... 85
குண்டிக்காய்ரோகம் ... ... 112
குருக்கள்குளிகை ... ... 158
குடற்புற்று ... ... 174
குத்துக்குளிகை ... ... 161
குருடனும்பார்வைபெற ... ... 225
குதிவாதம் ... ... 219
குடற்பிதுக்கம் (*Herneya*) ... ... 86

**கூ**

கூவைக்கட்டு (*Mumps*) ... ... 40
கூவைக்கட்டுகஷாயம் ... ... 41
கூவைக்கட்டுப்பூச்சு ... ... 40

**கெ**

கெபிகள் அல்லது கோளங்கள் ... ... 120
கெந்தகரசாயனம் ... ... 189
கெண்டைவாதப்பூச்சு ... ... 205

**கை**

கைகால்எரிவுக்கு ... ... 219

**கொ**

கொடுப்புப்பீறி பல்லீடிவியாதி ... 49
கொத்தமல்லிச்சூரணம் ... ... 76
கொறுக்கு ... ... 108-109
கொலைகுன்மம் ... ... 52
கொமட்டிஉப்பு ... ... 57

**கோ**

கோரோசனை மாத்திரை ... ... 58

### ச


சய ரோகத்தின் குணங்குறி ... ... 131
சயமுண்டாகக் காரணம் ... ... 131
சஞ்சீவித்தைதலம் ... ... 64
சலாசத்துபஸ்பம் ... ... 95
சலக்கழிச்சற் குளிகை ... ... 96
சலாசயம் (*Bladder*) ... ... 112
சந்தனச்சூரணம் ... ... 103
சந்தூதிச்சூரணம் ... ... 103
சயரோகம் ... ... 132
சயரோகநிதானம் ... ... 132
சருமம் தோல் (*The Skin*) ... ... 142
சருமமேற்தோல் ... ... 143
சருமஉட்தோல் ... ... 143
சன்னிபாதசுரம் ... ... 149
சரீரத்தின் சீதோஸ்ணம் ... ... 144
சலப்புற்று ... ... 174
சலங்கழிய ... ... 94
சலரோக கஷாயம் ... ... 94


### சி


சித்தர்கள் ... ... 1
சிறுமூளை ... ... 34
சிங்கைநகரிற் சித்தவைத்தியம் ... ... 10
சிலாசத்துப்பற்பம் ... ... 65
சித்தர்கள் கூறும் இருதயம் ... ... 122
சின்னச்சிவப்பு ... ... 161
சித்திரவல்லாதி ... ... 183
சிறுகுடல் ... ... 58
சிற்றுமுட்டித்தைதலம் ... ... 282
சிலேற்பனவாதசுரம் ... ... 149




### சீ


சீரண உறுப்புகளும் அவைகளின் தொழிலும் ... ... 38
சீவ அணுக்கள் ... ... 59
சீனப்பாச்சூரணம் புற்றுக்கு ... ... 188


### சு


சுக்கிலாசயம் ... ... 113
சுக்கிலம் ... ... 114
சுவாசாசயம் (*Lungs*) ... ... 127
சுவாசஉறுப்புகள் ... ... 127
சுவாசக்குழாய் ... ... 127
சுவாசகோசம் ... ... 128
சுவாசாசய சம்பந்தமான வியாதிகள் ... ... 129
சுவாசாசய ரோகநிதானம் ... ... 130
சுவாதம் பத்தும் ... ... 139
சுவாதம் 10-ம் அவற்றின் பெயரும் ... ... 139
சுவாதம்பத்தின் அவகுணம் ... ... 140
சுவாதக்குணமும் மருந்தும் ... ... 140
சுவாதத்துக்கு தாம்புராதி மாத்திரை ... ... 141
சுரம் 145 ... ... 145
சுரம்வரக்காரணம் ... ... 145
சுரத்தினலாகக்கூடிய ரோகங்கள் ... ... 146
சுரத்தினுலுண்டாகக்கூடிய 64 நோய் எவ்வளவென்பது ... ... 14
சுரரோகத்தின் சிகிச்சைக்கிரமம் ... ... 153
சுரத்தில்வீங்கினல் ... ... 156
சுரவகை எதற்கும் ... ... 158
சுவாதம் சளிச்சுரம் (*pneumonia*) ... ... 137


### சூ


சூரியகபாலம் ... ... 77
சூரியப்பிரபைக்கு ... ... 224

### செ


செங்கமாரி (*Jaundice*) ... ... 68
செங்கமாரித்தூள ... ... 72
செங்கமாரிக்கு அயகாந்தபற்பம் ... ... 73
செங்கமாரிச் சிகிச்சைக்கிரமம் ... ... 71


### சே


சேடகூரத்தின் சூரணம் ... ... 155


### சோ


சோர்வாதத்துக்கு எரிதைலம் ... ... 208
சோகார்பிளக்சர் ... ... 124


### த


தலை (*The Head*) ... ... 32
தமிழ்வைத்திய முதல்வர் ... ... 17
தந்தசூலை (பற்பேத்தை) ... ... 44
தலைவலி பல காரணங்களாலும் ... ... 77
தலைவலி (கபாலக்குத்து) ... ... 77
ஷை சிகிச்சைக்கிரமம் ... ... 79
தந்தப்புற்று ... ... 172
தமிழ் சிறப்புற்றகாலம் ... ...
தடிமனிருமல் ... ... 135


### தா


தாம்புராதி மாத்திரை ... ... 141
தாளங்காய்க் கிரந்திஎண்ணெய் ... ... 211


### தி


திருமூலர் தமிழ் செய்தமை ... ... 22
திரிதோஷம் ... ... 4


### து


துத்தாஞ்சனம் ... ... 224




### தொ


தொண்டைநோய் ... ... 45
தொண்டை நோநெய் ... ... 47
தொண்டை நோ நெய் ... ... 48
தொய்வு (*Asthma*) ... ... 133
தொண்டைப்புற்று ... ... 173


### தோ


தோஷாத்ஞதி ... ... 159
தோள்பட்டைவாதம் ... ... 215


### ந


நவஒளிகள் ... ... 29
நவநாசமெழுகு ... ... 207
நசியம் வாதம் எண்பதுக்கும் ... ... 208
நடுக்குவாதம் ... ... 217
நல்லகண்ணின் இலட்சணம் ... ... 221


### நா


நாலாமுறைச்சுரம் .. ... 151
நாடிப்பரீட்சை ... ... 152
நாசிப்புற்று ... ... 172
நாதகுருதைலம் ... ... 184
நாக்குவழங்கா வாதத்துக்கு ... ... 218


### நீ


நீரழிவு (*Diabetes*) ... ... 92
நீரழிவிற்கு ஆரம்பசிகிச்சை ... ... 92
நீர்க்கடுப்பு நீரழிவுதீர ... ... 94
நீரழிவுக்கு குடிநீர் ... ... 94
நீர்க்கடுப்புச்சூரணம் ... ... 96
நீர்க்கடுப்புக்கு ... ... 106
நீர்க்கடுப்புத் தண்டுவீக்கம் ... ... 106
நீர்க்கடுப்பு வெள்ளை தண்டுவீக்கம் ... ... 106

நாக்குப்புற்று ... ... 172

**நெ**

நெஞ்சடைவாதகுணம் ... ... 125
நெஞ்சடைவாதக்குளிகை ... ... 126
நெஞ்சுப்புற்று ... ... 173

**நே**

நேத்திரப்புற்று ... ... 171
நேத்திரரோகிதானம் ... ... 221
நேத்திரபேதி ... ... 225

**நோ**

நோய்களின்ஒடுக்கம் ... ... 162
நோயணுகா திருக்க ... ... 227

**ப**

பரகாயப்பிரவேசம் ... ... 20
பஞ்சசக்திகள் ... ... 29
பட்சவாதம் ... ... 39
பற்கள் ... ... 42
பல்வலிக்கு ... ... 42
பழமை அறிவிப்பது ... ... 12
பயறியா ... ... 45
பஞ்சகர்மங்களாவன ... ... 213
படலம்அரிப்பு குத்துத்தீர ... ... 226
பரோதயப்புற்று ... ... 173

**பா**

பாரிசவாதம் ... ... 212

**பி**

பித்தகுன்மம் ... ... 52
பித்தாசயம் ... ... 65
பித்தப்பை ... ... 67
பித்தரோகங்கள் ... ... 67





பித்தரோகங்களுண்டாகக் காரணம் ... ... 68
பித்தப்பேதி ... ... 71
பித்தவாயு ... ... 74
பித்தவாயு தலைக்கேறினால் ... ... 74
பித்தவாயு சிகிச்சைக்கிரமம் ... ... 74
பித்தவாயு தீரக் கஷாயம ... ... 75
பித்தவாயுக் கஷாயம் ... ... 75
பித்தவாயுமாருட்டம் பிதற்றல்தீர ... ... 75
பித்தசாந்திச்சூரணம் ... ... 75
பித்தக்கொதி ... ... 80
பித்தசுரத்தின்குணம் ... ... 154
பித்தசிலேற்பனசுரம் ... ... 157
பிடரிவாதம் ... ... 214
பித்தசுரம் ... ... 148
பித்த வாத பித்த சிலேற்பனசுரம் ... ... 148
பிளட்பிறசர் (Blood pressure) ... ... 164
பிளட்பிறசரின் பூர்வரூபம் ... ... 164
பிளட்பிறசர் உண்டாகக் காரணம் ... ... 196

**பு**

புன்னைவேர்க்குளிகை ... ... 160
புன்னைவேர்க்குளிகை (பெரிது ... ... 161
புற்று வல்மீகம் (Cancer) ... ... 168
புற்றுநோயெனக் காரணம் ... ... 168
புற்றுநோய் வரக்காரணம் ... ... 168
புற்றின்வகைகள் ... ... 170
புற்றுரோக நிவாரணம் ... ... 177
புற்றுப்பதங்கம் ... ... 180

**பூ**

பூநீறு செய்யும்விதம் ... ... 55
பூலோகசஞ்சீவி மாத்திரை ... ...
பூதசுரம் ... ... 151

**பெ**

பெருமிதம் ... ... 9
பெருமூளை ... ... 33
பெருங்குடல் ... ... 81
பெண்களின் ஜனனேந்திரியம் ... ... 100

**பொ**

பொசினேகப் பொட்டளி ... ... 220

**ம**

மயில்த்துத்தபஸ்பம் ... ... 54
மதுமேகம் அல்லது நீரழிவு ... ... 91
மந்தசுரத்தின்குணம் ... ... 157
மண்டைப்புற்று ... ... 171
மவுனவாதம் ... ... 218
மகாவல்லாதி ... ... 218
மகாவாததைலம் ... ... 219
மண்ணீரல் (Spleen) ... ... 163
மருந்திடுங்காலம் ... ... 223

**மா**

மாரடைப்பு நோயின்குணம் ... ... 125

**மி**

மிடற்றுநோப்புக்கை ... ... 47
மிடற்றுநோவுக்கு வேப்பெண்ணை ... ... 48

**மு**

முத்தோஷங்களின் இருப்பிடம் ... ... 197
முரசுவளரப்பொடி ... ... 45
முக்கியமான ஈரல்வியாதி ... ... 66
முத்தோஷம் ... ... 118
முகசிங்கிபபுற்று ... ... 176
முகவாதம் ஆரம்பசிகிச்சை ... ... 212
முப்பமல[illegible] ... ... 28





முழுத்தசுரம் ... ... 152
முச்சரக்கு குடிநீர் ... ... 153
முறிகிரந்தி வெட்டை பவுந்திரந்தீர ... ... 193

**மூ**

மூளை ... ... 33
மூத்திரப்பையின் எரிச்சலுக்கு ... ... 111
மூத்திர தாரை ... ... 113

**மெ**

மெழுகுவர்த்திக் கழிம்பு ... ... 191

**மே**

மேகம் ... ... 97
மேகம்எத்தனை (யூகிமுனி) ... ... 99
மேகமுண்டாகக் காரணம் ... ... 100
மேகவெட்டை ... ... 104
மேகவியாதி ... ... 104
மேகரோக எண்ணெய்கள் ... ... 108
மேகரணம் (கொறுக்கு) ... ... 108
மேகரணக் கழிம்பு ... ... 161
மேகரண லேகியம் ... ... 191
மேகசஞ்சீவிக்குளம்பு ... ... 192
மேகரணமலம்ப ... ... 188

**மோ**

மோர்மேகம் ... ... 102

**யோ**

யோனிப்புற்று ... ... 175

**வா**

வாய் ... ... 39
வாயவிரணம் ... ... 41
வாய்க்குள் சொக்கில் தடிப்புக்கு ... ... 49
வாதாரிமாத்திரை ... ... 126
வான்மெழுகு ... ...184–185

| | | | |
|---|---|---|---|
| வாதசுரகுணம் பித்தசேடம் | ... | ... | 147 |
| வாதசுரத்தின்குணம் | ... | ... | 153 |
| வாதம் | ... | ... | 194 |
| வாதம் (அகத்தியர்) | ... | ... | 195 |
| திருமூலர் | ... | ... | 197 |
| வாதகுணம் | ... | ... | 197 |
| வாதத்துக்கு எண்ணெய் | ... | ... | 201 |
| வாததைலம் (இரத்தவாத தைலம்) | ... | ... | 201 |
| வாதரோக சிகிச்சைக்கிரமம் | ... | ... | 202 |
| வாதகஷாயம் | ... | ... | 204 |
| வாதப்பூச்சு | ... | ... | 204 |
| வாதத்துக்கு ஒத்தணம் | ... | ... | 205 |
| வாதராசசூரணம் | ... | ... | 205 |
| வாலைமெழுகு | ... | ... | 210 |
| **வி** | | | |
| விற்புருதி கண்டமாலை | ... | ... | 181 |
| விற்புருதி கண்டமாலை புற்று | ... | ... | 191 |
| விழியின் அளவு | ... | ... | 222 |
| விருக்கம் குண்டிக்காய் (*Kidneys*) | ... | ... | 110 |
| விஷசுரம் | ... | ... | 150 |
| விறைப்புவாதம் | ... | ... | 219 |
| **வீ** | | | |
| வீரமெழுகு | ... | ... | 207 |
| **வெ** | | | |
| வெட்டைவியாதி | ... | ... | 104 |
| வெள்ளைவெட்டை | ... | ... | 101 |


# பொருளடக்கம் 2ம்- பாகம்


1. கெற்பாசயம்: கெற்பரோகம், விவாகம், கற்பு, கருஉற்பத்தி, பிரசவநிர்வாகம்
2. பாலவகடம்: பாலர்ரோகம், கிரந்திதோஷம், மாந்தம், கணம்.
3 உதிரிப்பாகங்கள், வைத்தியம், பிணி, சிகிச்சை.
   நோயென்பதென்ன?
   சிகிச்சை என்பதென்ன?
   சுகமென்பதென்ன?
4. ஆராய்ச்சியின் விளைவு என்ன?
5. சுகமாக்குவது எது?
6. ஓர் அபூர்வ முறை வாலையாக
7. மருத்தீடு, மனநோய், முறிவுதறிவு, நோ.
8. தலைப்பொடுகு, முகமினுக்கு, இஸ்னானப்பொடி, கூந்தல் உதிர்தல், வளர்தல், நரை, வழுக்கைதீர, முடிவளர, இளநரை தீர
9. புடவகை: பிருதுவிப்புடம், அப்பு தேயுவாயு ஆகாயப்புடம் முதலியன.
10. எரிப்புத்திட்டம்: விறகுப்புடம், எருப்புடம், கரிப்புடம், திரிப்புடம்.
11. சாதாரண அளவுகள்
12. சர்ப்பசாஸ்த்திரம்
13. மூலிகை மர்மம் விஷமுறிவு.

# ஆசிரியர் அறிமுகம்

இவர் சிங்கை நகராங் கற்கோவளத்தில் பிறந்து கலைகள் பல பயின்று தலைமை ஆசிரியராகவும்; பதியப் பெற்ற சிறந்த சித்த வைத்தியராகவும் பணிபுரிந்தவர். கற்கை நகரிற் கால் கொண்டு விளங்கிய சித்த வைத்திய சாலைத் தலைவர். பலரும் அறிந்த பரம்பரை வைத்தியர். சிவகாருண்யம், பொதுநல சேவை, பரோபகாரசிந்தை, முதலாம் சீரிய குணங்களைத் தாரகமாகக் கொண்டவர். தற்போது **சித்த வைத்திய சிகிச்சைக் கிரமம்** என்னும் இத் தமிழ வைத்திய நூலையும் எழுதித் தமது லோகோபகாரத் தொண்டையும் முடித்து இரு துறையிலும் மிக்க சிறப்புற்றவர். இத் தள்ளாமையான காலத்திலும் இதை ஆக்கியதற்கும் இன்னுமொரு நூலை வெளிட முனைவதற்கும் தளராத ஊக்கத்தையும், உறுதியையும் திறனையும தந்துதவும் எம்பெருமானுக்கே தோத்திர மலர்களை அர்ப்பணிப்போமாக.



டாக்டர் V. முத்தையா ஜோன்
பதிவுபெற்ற வைத்தியர்

தம்பசெட்டி,
பருத்தித்துறை.

திரு. சி. சின்னத்துரை
பிரபல வைததியர்